# திராவிடநாடு

பொங்கல் மலர் 1963



விலை 1-50

# வாழ்த்து.

பொலிவு பொங்கிடும்
பொங்கற் புதுநாளில்
மகிழ்வு பொங்கிடுமே, நின்
மனையுளோர் அனைவர்க்கும்;
என் வாழ்த்துதனை அதற்கு
தேனாக்கிக் கொடுப்பதற்கு
வழங்கி மகிழ்கின்றேன்,
வாழிய நீ என்றென்றும்.
வாழ்வும் வளமும் மங்காத
தமிழ் என்பார்
தமிழ் வாழ நாம் வாழ்வோம்
அறிவாய் நன்றாய்.
நாம் வாழ்வில் பெறும் இன்பம்
இசைம்பாகிடல் வேண்டும்
நாட்டினோர்க்கு.
'தை' தனில் காணும் செல்வம்
தமக்கென்றே கொண்டனரோ
உழவர், மேலோர்!
நாளைக்கு நாம் அனைத்துச்
செல்வம் காண்போம்;
நல்லறம் இஃதெனக் கண்ட நம்பி!
நான் வாழ்த்துகின்றேன், உன்
வெற்றிக்காக!

அண்ணாதுரை.

# இரவு



தாரிட்ட திசையாகும் தலைமீது விரிவான்!
தழைமரத்தில் பகலெல்லாம் ஒளிந்திருந்த பறவை
கூரிட்ட வாய்திறந்து குரல்கூட்டிக் குளிர்நீர்க்
குளம் நோக்கி இணைஇணையாய் இறகடித்துக் குறுகும்!
வேரிட்ட குண்டுபலா வெடித்திட்ட வகைபோல்
விண்மீன்கள் கருவானில் அங்குமிங்கும் கிளம்பும்!
ஊரிட்ட இருள்கிழிக்கும் விளக்கெல்லாம் அறிஞர்
உரையொக்கும்! ஊரடங்கும்; ஓடிவரும் இரவே!

மலையருவி முழவார்க்கும்! வட்டமிடும் வௌவால்!
வாயிலிலே மணம்பரப்பி வந்தடையும் குளிர்கால்!
இலையுதிரும்; கொடிமுல்லை நுணுப்புக்கள் மலரும்!
இல்லத்து நீள்வாழை படபடக்கும்! அழைக்கும்!
குலையுதிரும் முதிர்ந்தபழம்; குளம்கூம்பும் மலர்கள்!
கொட்டகையில் கால்நீட்டி வைக்கோலை எருமை
தலைநீட்டி இழுக்கின்ற மெல்லோசை இரவில்
தனிஇனிமை! தனிஇனிமை! தடித்துவரும் இரவே!

கடைந்தெடுத்த தந்தக்கால் கட்டிலின்மென் அணையில்
கட்டவிழ முல்லைமலர்ப் பாயலின்மேற் பரப்பில்
அடைந்திருந்தே உணமறந்தே அன்பாற்றில் மிதந்தே
அகமகிழ்ந்த காதலர்கள் கண்டிருப்பாய் இரவே'
உடைந்தமனத் துயருற்றோர் உறக்கமின்றிப் புரள
ஊமையைப்போல் இருப்பாயோ? விளக்குவையோ
அடைஇருளே நீஇன்றேல் உயிரினங்கள் அமைதி
அடையாதே நல்வாழ்வும் அடையாஇவ் வுலகே!

கோட்டான்கள் உன்படையோ? குளிர்காற்று கொடியோ?
குன்றங்கள் உன்னரசின் நீண்டநிலப் பரப்போ?
காட்டாறு மும்முரசோ? கருவான உடுக்கள்
கருவூலப் பொன்னுமோ? முளைத்துவரும் நிலவு
தீட்டரசு கூர்வாளோ? வெள்ளிமுடி மணியோ?
செங்கோலோ முல்லைமலர்! செவ்வல்லி குடையோ?
நாட்டரசும் உன்னரசின் கீழ்ப்பட்ட அரசே!
நல்லிரவே! நீவாழி! நீவாழி நிலத்தே!!



வாணிதாசன்

# காஞ்சீபுரம்

14—1—'63.

## தம்பி!

என்ன? பொங்கலோ பொங்கல் எனும் மகிழ்ச்சிக் குரலொலி எழுச்சியூட்டத்தக்க முறையிலே கேட்டிடக் காணோம். ஆண்டுக்கோர் நாள் ஈண்டு எழும் அந்த இன்னிசையைக் காணோமே! மாறாக, பொங்கலா? பொங்கல்! என்று ஒலி கேட்கிறது. என் செவி பழுதானதால் ஏற்பட்ட விளைவா, அல்லது உன் மொழியிலேயே ஏற்பட்டிருக்கிறதா இந்த மாற்றம்? உன் விழியிலும், வழக்கமான விழா நாள் களிப்பொளி காணோம்; உருவமே தூசு படிந்த மாமணி போன்று,காணப்படுகிறது.புதுப்பொலிவு காட்டிடுவாய், போக்கிடுவாய் கவலையெலாம், முன்பெலாம். இப்போது கவலையை வெகு பாடுபட்டு மறைக்கப் பார்த்திடும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறாய் என்று எண்ணிடத் தோன்றுகிறதே...... என் நினைப்புத்தான் தவறா, அல்லது உன் நிலைதான் அதுபோலிருக்கிறதா! இயற்கையாக இன்முகம் காட்டிடுவாய், இந்நாள். பொன்னாள் அண்ணா இன்று! புகழ் மணம் கமழ்ந்திடு நிலையில் முன்னோர் வாழ்ந்தனர் என்ற நினைப்பு நெஞ்சுக்குத் தேனாகி நம்மைக் களிப்பிக்கும் திருநாள்! உழைப்பின் பெருமைக்கு ஈடு வேறெதும் இல்லை என்பதனை உணரும் நந்நாள்! —என்றெல்லாம் பேசிக் கொள்வோமே, முன்பு, இன்று? கோலம் இருக்கிறது விழா நாள் என்பதற்கு அடையாளமாக, ஆனால், உள்ளபடி விழாவுக்கான மகிழ்ச்சியும் காணோம், மகிழ்ச்சி பெறவேண்டும் என்ற விழைவும் மிகக் குறைந்து காணப்படுகிறது. ஏன்? காரணம் என்ன? இதழ் விரியா மலர் போல, இசை பயிலாக் குயில்போல, வளைந்தோடா அருவிபோல, சுவை தாராக் கன்னல் போல, துள்ளிடாத மான் கன்றுபோலக் காணப்படுகிறாய்—விழாக்கோலம் காண வருகிறேன் வினாக்கள் விட வைக்கிறாய்! மனை மாட்சி காண வருகிறேன், மதுரமொழி கேட்க வருகிறேன், இல்லத்தரசி தரு செல்லக் குழவியுடன் குலவி பாலும் பழச்சாறும்பாகும் பருப்பும்பக்குவமாய்ச்

# "ஞாயிறு போற்றுதும்!"

சமைத்த சோறும் பிறவும் உண்டு சொகுசாகத்தான் இருப்பாய், செக்கச் சிவந்திருக்கும் கன்னத்தாள் என் அத்தான்! என்று அழைத்திடுவாள் ஏன் என்று கேட்டபடி இருந்த இடமதனில் இருந்திடாமல் நீ பறந்திடுவாய் விருந்து பெற! இத்தனை கேள்விகளை இவ்வளவு வேகமுடன் தொடுத்திட்டால் என் செய்வேன்! சற்றே பொறுமையுடன் சாற்றிடுவீர் உம் எண்ணம்! என்றே

அம் மயில் கூற, வெட்கித் தலையதனை வேறுபக்கம் நீ திருப்ப, வேல் விழியாள் விடுத்திடுமோர் கெக்கலியை நான் கேட்டு, வேண்டும்! இதுவேண்டும்! இன்னும் அதிகம் வேண்டும்! என்றெல்லாம் வேடிக்கை எழுப்பிடுவேன்— இது வாடிக்கை. ஆனால் இவ்வாண்டு — அழகு நிலாக் கண்டும் அல்லி மலராமல் இருப்பதுண்டோ! — பொங்கற் புதுநாள் வந்துற்றதென்றாலும், மென் காற்றில் அசைந்தாடும் பூங்கொடி அருகிருந்தும் எங்கு உள்ளோம் என்பதுவும் எந்நாள் இந்நாள் என்பதுவும் அறவே மறந்த நிலை கொண்டதுபோல் இருக்கின்றாய், பொங்கற் புது நாளப்பா! பொன்னாள் நமக்கெல்லாம்! போக்கு பல காட்டி விடும் புரட்டர்க்கு வாழ்வளிக்கும் புராண நாள் அல்ல, ஞாயிறு போற்றதும்! எனும் நன்னெறி நடப்பவர் நாம் என்பதனை உலகறியக் கொண்டாடும் உயர் தனிச் சிறப்புள்ள உவகை பெறுநாள்! இந்நாளில் இவ்விதம் இருந்திட வேண்டுமென ஒருவர் மற்றவர்க்கு உரைத்திடவும் தேவையில்லை, அவரவரும் தத்தமது அன்பகத்தில் அகமகிழ்ந்து விழா நடத்திப், புனலாடி அணிந்திட்ட புத்தாடை அழகளிக்கப், பூங்காவிலாடிடும் புள்ளினமாய்த்தான் திகழ்ந்து, பாங்காக மற்றவர்க்கும் பரிந்தளிப்பர் விழாச் சிறப்பை; பண்பு அது. வீடெல்லாம் நாட்டியுள்ளார் விழாக்கோலம், காண்கின்றேன்; என்றாலும் நரம்பிருந்தும் நாதம் எழுப்பாத யாழாக உள்ளதுவே! ஆம், தம்பி! மறுத்திடாதே, அறுத்திடுது உன் நெஞ்சை ஆழமாக ஓர் கவலை; ஒப்புக்கொள்; தவறில்லை; உள்ளத்தில் உள்ளதனை ஒருவர்க்கொருவர் கூறிக்கொளல் நன்று; கவலைதனைப் போக்கிடும் ஓர் மாமருந்தும் அஃதாகும். ஆகவே அன்பால் எனைவென்ற அருமைத் திருநாட! உற்ற குறை யாதுனக்கு, உரைத்திடுவாய் — அகற்றிட வல்லோன் யான் என்னும் அகந்தை கொண்டல்ல உன்னை நான் கேட்டிடுதல்; கொட்டாமல் உள்ளத்தில் கவலை பல குவித்திடல் நன்றல்ல, குமுறல் கேடன்றோ? எனவேதான் உரையாடி நாம் நமது உள்ளமதில் இடம் கொண்ட கவலை எலாம் போக்க வழி காண்போம், வா, தம்பி!

ஒன்றல்ல என் கவலை, பல ண்டு கூறுதற்கு — கூறத் தயக்கமில்லை, "கூறிடு அண்ணா! நீ! கொட்டும் குளிர் தாங்கிக், கொடியோர் பகை தாங்கி, எல்லையிலே உள்ளாரே உடன் பிறந்தார், உயிர் கொடுத்து உரிமைதனைக் காத்திடும் உயர் குணத்தார்; அவர்க்கு அங்கு இன்னல்! கன்னல் சுவைபெற, இங்கு நாமா? ஓங்கி வளர்ந்துள்ள மாமலையின் அருகிருந்து மாற்றார் நுழையாமல், மானம் அழியாமல் காத்து நிற்கின்றார்; கடும் போர் எதிர்பார்த்து; நாம் இங்கு முக்கனிச் சுவை தேடல் முறையாமோ, நெறியாமோ! என்னென்ன இடுக்கண்கள் கண்டிடுவர் அவர் அங்கு. நமக்கிங்கு விழாவும் ஒரு கேடா, வீணாட்டம் போடுவதா? மாடுமனை மறந்து மறவர்கள்



போயுள்ளார், மாற்றாரை எதிர்த்தடிக்க; நாம் இங்கு மகிழ்ந்திருத்தல்சரியாமோ?

தம்பி! அதுதானே, உன் கவலை? அந்தக் கவலை உனை வாட்டுகிறது நான் அறிவேன்; அறிந்ததுடன் அகமகிழ்ந்தேன்; ஆம், தம்பி! மகிழ்ச்சிதான்; பெருமையும் கொண்டிட்டேன். வீடு தனிலேயே விரும்பும் இன்பமெலாம் உண்டு எனக்கொண்டு, நாட்டு நிலை மறப்போர் நாட்டிலுள்ள காட்டினர் காண்! நாடு வாழ்ந்திடவே, வீடுகளில் நாம் உள்ளோம்; நாடு நாடாக, நாடு நமதாக இருப்பதனால்தான் தம்பி! வீடு வீடாக, வீடு விருந்தளிக்கவிளங்கி வருகிறது கேடொன்று நாட்டுக்கு வந்திட்டால், வீடெல்லாம் வீழத்தான் வேண்டி வரும், படகதனில் ஓட்டை விழின், மூழ்கிடுவர், பிணமாவர்; வீடெல்லாம், நாடு காக்க வீறுகொள்வோர் இருந்து வரும் பாசறைதான், ஐயமென்ன! நாட்டின் நிலை மறப்போர், நாமல்ல, மறவரல்ல. வீட்டிலே இருக்கின்றோம், நாடு மறந்தல்ல! நாட்டின்மீது நாட்டம் காட்டிடும் பகைக் கூட்டத்தை ஓட்டிடச்சென்றிருக்கும் உடன்பிறந்தார் தமை மறந்து, உயிர்

பிழைத்துக்கொண்டு விட்டோம் உயிர் கொடுக்கும் படை அமைத்து என்றெண்ணும் உலுத்தர் அல நாம் யாரும்! களம் சென்ருர் நம் தோழர். அவர் கால்பட்ட மண் மணக்கும்; மாண்பறிவோம்; அழைப்பு வரப் பெற்ருல், அவரவர்க்கியன்றதனைச் செய்திடுவோம், அட்டியிலே! ஆனல், உருட்டி மிரட்டி வரும் ஊர் அழிப்போர் கண்களுக்கு, நாடு நடுங்கிற்று, வீடெல்லாம் பேச்சு மூச்சில்லே, சிரிப்பில்லே சீர் இல்லே, செய்தொழிலும் நடக்கவில்லே, எல்லோரும் ஏக்கத்தால் தாக்குண்டு, என்ன நேரிடுமோ எனப் பேசிப், பீதி மிகக்கொண்டு பாதி உயிராயினர் காண்! எல்லேயில் நாம் வந்து எக்காளமிட்டவுடன், அச்சம் மிகக்கொண்டு அம்மக்கள், கிடக்கின்ருர். மங்கையரும் பூச்சூடார், மருட்சி மிக அதிகம்' ஆடவர், நீராடார், நிலவாடார், உரையாடார்,—ஒவ்வோர் கணமும் இறுதி வரும் உறுதி என எண்ணிச் சாகின்ருர்! நாட்டிலே, பாட்டு இல்லே! பாதி வெற்றி இப்போதே நாம் பெற்ருேம்—பயம் ஊட்டிச் சாகடித்தோம் அவர் களிப்பை!! என்று பேசிடவும் ஏளனங்கள் வீசிடவுமான ஓர் நிலே இங்கு இருந்திடுதல் ஆகாது; அது தீது. அங்ஙனமாயின், அக்கரை துளியுமற்று அகத்தில் பொறுப்பற்று, ஆவது ஆகட்டும், அனுபவிப்போம் உள்ள மட்டும், எனும் போக்கா, ஏற்புடைத்து? எனக் கேட்பர்; நீ அல்ல, தம்பி! கேட்கப் பிறந்து விட்டோம், கேட்டிடுவோம், வாட்டிடுவோம்! என்றே எண்ணிடும் எதிர்ப்பாளர் உண்டன்ருே; அவர் கேட்பர். பொறுப்பற்ற போக்கல்ல; அகத்தில் அக்கரை கொளல் வேண்டும், ஆனல் முகம் வெளுத்துப் போவானேன்! உறுதியுடன் போரிடுவோம் எதிரியுடன்; என்ருலும் போருக்கு நாமே போய்ப் பொறுப்பேற்கும் நிலேக்கு முன்பே, நடுக்கமுற்ருேம் என்று பலர் நையாண்டி செயும் முறையில், நெய்யிழந்த கூந்தலினர் போலாகி, நிற்பதுவா தேவை! அந்நிலேதான், மாற்ருர்க்கு இறுமாப்புப் பெற்றளிக்கும். அழிவுவருகிறது என்றஞ்சி அம்மக்கள் இப்போதே சாகின்ருர் என்றுரைப்பர்; ஆதலாலே, விழா நடாத்த விருப்பமது குறைந்திருக்கும் நிலேயிலேயும், மாற்ருர் கண்டு மருளாமல், வெற்றி எமதே என்ற வீரம் நெஞ்சில் கொண்டு, விழாவும் மறவாமல் நடாத்துகிருர் இம்மக்கள். ஓஹோஹோ! நாம் நினைத்தபடி அல்ல! நமைவிரட்டும் வலிவெல்லாம் கூட்டி வைத்துள்ளார் இம்மக்கள், அதனுல்தான், குலே நடுக்கம் எமக்கில்லே, நிலே தடுமாறவில்லே, முன்பு நடந்த விழா இன்றும் முறுவலுடன் இனிதே நடக்கும் எனக் கூறி நமை எச்சரித்துக் காட்டுகின்ருர், என்று உணர்ந்திடுவர் எதிர்த்து வரும் மாற்ருர்கள். ஆகவேதான் தம்பி! ஆண்டுக்கோர் நாளாக அமைந்த இத்திருநாளேக், கொண்டாடி மகிழ்ந்திடுதல், குற்றமல, என்று கொண்டோம். நாட்டுக்கு ஆபத்து நேரிட்டுவிடும்போது, நடுக்கம் கூடாது; அது மட்டுமல; மாற்ருரை நாம் ஒன்றும், அண்டம் அழிக்கவல்ல அசகாயச் சூரரெனக் கொள்ளவில்லே, அவர் பெற்ற சில வெற்றி, வெற்றியல! அதுகொண்டு அவர் தமது ஆற்றல் மிகப் பெரிது என்றெண்ணி அகம்பாவம் கொளல் வேண்டாம்; ஆள் துடிக்கக் கொட்டும் தேள் ஆற்றலிலே ஆனேவிடப் பெரிதல்ல, அவன் காலணியால் கூழாகும்!—என்பதறிந்துள்ளோம், எனவே, இறுதி வெற்றி நமதே எனும் நம்பிக்கை கொண்டுள்ளோம் முழு அளவு! அந்நிலேயில், விசாரம் கொளப் போமோ? விழாவினேக் கொண்டாடாமல் விட்டுவிடத்தான் போமோ?—என்பதனுல்தான் தம்பி! இவ்வாண்டும் வழக்கம்போல், மங்காத புகழ் படைத்த சிங்கம் நிகர் நம் முன்னேர், அளித்த பெருமை மிகு பண்பாட்டு வழி நின்று பொங்கற் புது நாளேப் போற்றுகிருேம்; அறிவிப்பாய்!!

தம்பி! இந்நாள், வாழும் நாளெல்லாம் வீணுளே, பாழ்நாளே! வையகமே நிலேக்காது! மெய்யகமாம் மேலகம் போய், நிலேயும் நினேப்புமற்று நிம்மதியாய்வாழ்ந்திடவே இறந்துபடவேண்டும் இன்றே; இப்போதே—என்று இறைஞ்சுவதற்காக அல்ல. அதற்கான நாட்கள் அநேகம் உள! நமக்கன்று!! திறந்தார் காண் திருக்கதவு, தீர்ந்தது காண் உம் வாழ்வு. செத்திடுவீர், வாழ்ந்திடலாம்!—என்று செப்பும் நாளுண்டு — அதற்குச் சிவனே ஏற்றவர் காண் என்றுரைத்து போட்டி நாள் காட்டுவார்போல், வேருேர் நாள் உரைப்பர், அறிவாய் நீ. யாகம் செய்திடுவீர், சாலோகம் சென்றிடுவீர்! என்றுகூறும் நாளல்ல. பொங்கற் புதுநாள் அஃது அல்ல. நாடு சிறந்திடவும், நம்வாழ்வு சிறந்திடவும், ஆட்சி முறை தன்னில், அரசு அமைப்பதனில், தொழில் அமைப்பில் திட்டத்தில், கல்வித்துறை தன்னில், இன்னபிறவற்றில் என்னென்ன மாற்றங்கள் வேண்டுமெனக்கூறி, இந்நிலேயை யாம் அடைய, எமக்கென்று ஓர் அரசு அமைத்தளிக்க ஒப்பிடுவீர், திராவிடநாடதனைத் திராவிடர் ஆண்டுவர ஏற்ற முறைதன்னில் ஏற்பாடு செய்தளிப்பீர் என்று கேட்டுவருகின்ற, கழகத்தார், தேர்ந்தெடுத்துக் கொண்டாடும் தேனின் இனிமைதரும், தெளிவளிக்கும் நாளாகும் ஆகையினுல், மாற்ருரை வீழ்த்திடத் தீட்டிடும் திட்டம் தனக்கு தட்டாமல் தயங்காமல், ஆவிதனேக்கூட அளித்து ஆதரவு தர முனேந்து நிற்கின்ற, முன்னேற்றக் கழகத்தார். முதறிஞர் போற்றிய பொங்கற் புது நாளே விழாவாக்கி மகிழ்கின்ருர்.



நாட்டுக்கு வந்துற்ற ஆபத்தை நீக்கிடும் ஓர் திட்டத்துக்கு ஆக்கம்தரும், மேலும் உற்சாகம், ஊக்கம், உறுதி பெற, விழா, உணர்வளிக்கும், தம்பி! இது விளக்கம் தர மட்டும் தொடுத்திடும் சொல்மாலை அல்ல; உண்மை.

கார்கண்டு களிகொண்டு கழனி செழிக்குமென ஊர் வாழ உழைத்திடும் நல் உழவன் உரைக்கின்றான்—உண்மை — ஆனல், களியாட்டம் காட்டிக் காசுபெற விழையும் 'கூத்தர், கார் கண்டால் கலங்கிப்போய், கை பிசைந்து நிற்கின்றார். மாமழையும், சிற்சிலர்க்குக் கசப்பளிக்கக் காண்கின்றோம், அஃதே போல், நம் கழகம் மேற்கொண்ட நற்போக்குதனைக்கண்டு, எல்லோரும் பாராட்டி, ஏற்புடைய செயலென்று வியந்துரைத்தும், சிற்சிலர்க்குக் கசப்பு உளது; நாமறிவோம்; அவர்க்கெல்லாம் இது உரைப்போம், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றனர் தமிழர், கொற்றம் தனித்தான் அந்நாளில். உலகழிக்க ஒருபோதும் ஒப்பார்கள், உலகு மெச்ச வாழ்ந்தோர் வழிவந்தோர். இன்று முளைத்துள்ள எதிர்ப்புதனை முறியடிக்க மட்டும், புதுப்போக்கு நாம் கொண்டோம் என்று எண்ணல் சரியல்ல; என்றென்றும் எதிரிகளின் கொட்டம் அடக்கிடவும், எதிர்ப்பை முறித்திடவும் ஏற்றவிதமான போக்கும், நோக்கும்கொள்வோம், அதற்கேற்ற முறைபற்றி அறிவாளர் ஆய்வாளர் எடுத்துரைக்கும் கருத்துகளைத். துச்சமெனக்கூறும் நச்சு நினைப்பினர் அல்ல நாம், அதுபோன்றே, வந்துள்ள போர் தன்னல், எழுந்துள்ள புது நிலையும், புது நினைப்பும், ஆராய்ந்து பார்த்திடவும், அன்புரை நடாத்திடவும் அறநெறியில் நிற்பவர்கள் முனைவார்கள் என எண்ணுகிறோம். அறவோர் வழிகாட்டட்டும் என்று அதனை விடுக்கின்றோம்.

அண்ணா! அதுபோல, நாமிருந்தோம், அருவருக்கத்தக்கபடி சிலர் போக்குக்காட்டுகின்றார் நமக்கெதிராய், காண்கிலேயோ, என்கின்றாய். காண்கின்றேன்! குன்மமொடு குடல்வாதம், குட்டம் குமுட்டலெனும் பல்வேறு நோய்கொண்டோர் பாரிலுண்டு, பண்டுமுதல்! சொரி சிரங்கு கொண்ட உடல், காண்கின்றோம்; அவர்போல எமக்கும் ஆகவேண்டுமென எண்ணப்போமா! அஃதே போல, உள்ளம் சிலருக்கு, நோய்க்கூடு, என் செய்ய. மாமருந்து அறிந்துரைக்க நேரமில்லை, மாமலை ஏறுதல் போல், வேலையுளது, அதில் ஈடுபட்டிருக்கின்றோம்—நாட்டுக்கு வந்துற்ற ஆபத்தை எதிர்த்து அழித்திடத் திரண்டு நிற்கும் வீரப்போரணியில் நாம் உள்ளோம், கடமை உணர்ச்சியுடன். இந்நிலையில், கருத்து வேற்றுமை எழத்தக்க பேச்சதனில் கலந்துகொள்வதில்லை என்ற **'விரதம்'** பூண்டுள்ளோம். அதனைக் கலைத்திடவும் குலைத்திடவும் முயற்சி சிலர் மேற்கொண்டபோதினிலும், நாம் நமது உறுதிதளராமல், நெறியிற் பிறழாமல்; நேர்மையுடன் கடமையினைச் செய்தபடி இருப்போம்.

மஞ்சளும் இஞ்சியும், பிஞ்சாகக் கத்திரியும் அவரையும் காண்கின்றேன் உன் மனையில், மாவும் பலாவும் வாழையுடன் இருந்திடும் ஐயமில்லை. ஈங்கு இதுபோல இருந்திடும் நிலைமை, இன்று ஏங்கித் தவிக்கும் நிலையுள்ளார்க்கெல்லாம் கிட்டவேண்டும்; நம் ஆட்சி: நல்லாட்சி, புதுமை நிறை ஆட்சி, புரட்சி ஆட்சி, என்று பல்வேறு பெயரிட்டுக் கூறுகின்றார்; நோக்கம் இஃதன்றி வேறென்ன இருந்திடும்.

இயற்கை வளம் உண்டு, செய்பொருளை நேர்த்தியுடன் ஆக்கித்தர உழைக்கும் திண்தோளர், வகை காட்டும் நுண்ணறிவினர், மிக உண்டு, எனினும், இங்கு, காய்க்காத மாவாக, கறக்காத பசுவாக, வாழ்வு கொண்டோர் தொகையே மிகுந்திருத்தல் காண்கின்றோம்.

இன்றுள்ள இந்த நிலை பண்டு இங்கு இருந்ததில்லை என்றுணர, இலக்கியமே சான்றளிக்கக் காண்கின்றோம். எழுத்தறிவே பல நாடு, பெற்றிராத காலத்தே, தமிழில் உதித்தெழுந்த மொழிகளால் வெவ்வேறான ஆந்திரமும் கேரளமும் கருநாடகமும், அழகு தமிழகமாக இருந்தகாலை, இலக்கியச் சிறப்பினை ஓர் அணியாய்க்கொண்டு திகழ்ந்திருந்ததென்றால் பொருளும் என்ன? வாழ்க்கையிலே வளம் நிரம்பி, மக்கள் மனவளமும் நிரம்பப் பெற்று இருந்தார், ஆங்கு, புலவர் குழாம் அரசோச்சி அரசர்க்கெல்லாம் அறவழியைக் காட்டித் துணை நின்றதெனும், உண்மையன்றோ விளங்குகிறது.

எனவே, திட்டமிட்டுச் செயலாற்றி, இயற்கை வளத்தினையே தக்கபடி பயன்படுத்திடுவோமேல், செல்வம் வளரும் என்பதும், அதற்கேற்ற கருப்பொருள் உண்டு இங்கு நிரம்ப என்பதும் புலப்படுகிறதன்றோ.

வளரும் செல்வம் ஏதோ ஓரிடம் சென்று முடக்கிக் கொண்டுவிடாமல் இருக்க, துணிவும் தெளிவும், விரைவும் அறிவும் கொண்ட முறையில் பணியாற்றிடு நல் அரசு முறை வேண்டும்.

இவ்விரண்டும் கிடைக்கப்பெற்று இருந்ததால், முன்பு இங்கு, எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் இருந்தது—அக்காலத்திருந்த அண்டை அயல் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது.

போர்க்காலமானதால், இன்று ஓரளவு, போர்க் கருவிகள் பற்றிப் பொதுமக்கள் படித்தறிந்துகொள்ளவும், கேட்டுத் தெரிந்துகொள்ளவும் வாய்ப்புப் பெற்றுள்ளனர். ஆனல் அவர்களிலே பெருப்பாலோர்கூட, பிற நாடுகள் 'வில் அம்பு' மட்டுமே கொண்டிருந்த நாட்களிலேயே, இங்கு (அக்காலத்துக்குப்) புதுமுறைப் போர்க்கருவிகள் இருந்தன என்பதனை அறியார்கள். புலவர் பெருமக்கள் அவை குறித்து எடுத்துரைக்கும்போது, நம் மக்களிலே மிகப்பலருக்கு, நம்பமுடியவில்லை. காரணம் தெரியுமே,

தம்பி! பண்டையப் போர்க்கருவிகள்பற்றி புலவர்கள் பேசும்போது, புராணீகர்கள் அதனைவிட விந்தைமிகுந்த 'ஆயுதங்கள்'பற்றிச், சுவை சொட்டச் சொட்டப் பேசுகிறார்கள்—கேட்கும் மக்கள் அவை முற்றிலும் கற்பனை, புலவர் கூறுவதோ முற்றிலும் உண்மை என்பதை உணர முடிவதில்லை.

படிக்க எளிதான முறையில் புராணக் கதைகள் உள்ளன—எனவே, மக்கள் அவைகளையே அதிகமாகப் படித்துப் படித்து அந்தக் கற்பனைகளிலே மனதைப் பறிகொடுத்துவிடுகிறார்கள்.

தமிழர்கள், அந்த நாட்களிலேயே நால்வகைப் படைகளைக் கொண்டிருந்தது மட்டும் அல்ல,

**கடலரண்**
**காட்டரண்**
**மலையரண்**
**மதிலரண்**

எனும் பாதுகாப்புகளையும் பெற்றிருந்தனர். போர்முறைகளிலேயும் புதுக் கருத்துகள் கொண்டதனால், அற்றை நாளில் தமிழர் பெற்ற வெற்றிகள், இன்றும் எண்ணி வியக்கத்தக்கனவாக உள்ளன. நெடுந்தொலைவு படையுடன் சென்று போரிட்டு வெற்றிபெற்ற வீரக்காதைகள் பலப்பல. போரிலே வெற்றிகாண வீரம், அடிப்படை என்பது மறுக்கொணாத உண்மை என்றாலும், போர்க் கருவிகளின் தன்மையும் மிகவும் முக்கியமானது என்பதை ஆய்ந்தறிந்து உணர்ந்திருந்ததால், பிறநாட்டாரிடம் இல்லாத பல்வேறு வகையான போர்க்கருவிகளைக் கொண்டிருந்தனர்.

| | |
|---|---|
| **வளைவிற்பொறி** | **தள்ளிவெட்டி** |
| **கருவிரலூகம்** | **களிற்றுப்பொறி** |
| **கல்லுமிழ் கவண்** | **விழுங்கும் பாம்பு** |
| **கல்லிடு கூடை** | **கழுகுப்பொறி** |
| **இடங்கணி** | **புலிப்பொறி** |
| **தூண்டில்** | **குடப்பாம்பு** |
| **ஆண்டலையடுப்பு** | **சகடப்பொறி** |
| **கவை** | **தகர்ப்பொறி** |
| **கழு** | **அரிநூற்பொறி** |
| **புதை** | **குருவித்தலை** |
| **ஐயவித்துலாம்** | **பிண்டிபாலம்** |
| **கைப்பெயர் ஊசி** | **தோமரம்** |
| **எரிசிரல்** | **நாராசம்** |
| **பன்றி** | **சுழல்படை** |
| **பனை** | **சிறுசவளம்** |
| **எழு** | **பெருஞ்சவளம்** |
| **மழு** | **தாமணி** |
| **சிப்பு** | **முசுண்டி** |
| **கணையம்** | **முசலம்** |
| **சதக்களி** | |

தம்பி! இத்தனைவிதமான, புதுமுறைப் போர்க் கருவிகள் இருந்தன, இத்துடன் தமிழரிடம்; தனியாக வீரர் தமதாற்



றலை விளக்க போர்வாளும் கேடயமும் ஈட்டியும் உண்டு. தமிழரை எதிர்த்தமாற்றார்களிடமும் பிற நாட்டவரிடமும் வேல், வில் அம்பு, சிறுவாள், கொடுவாள், அரிவாள், ஈர்வாள், உடைவாள், கைவாள், கோடரி, ஈட்டி, குறுந்தடி, என்பனமட்டுமே இருந்த நாட்களில்.

இன்று விஞ்ஞான அறிவுப் பெருக்கத்தின் காரணமாகக் கிடைக்கப் பெற்றுள்ள போர்க் கருவிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழர் பெற்றிருந்தவைகள், மிக மிகச் சாதாரணம்; இப்போதைக்குப் பயன் தருவன அல்ல. அந்தப் போர்க் கருவிகளை ஏந்திக்கொண்டு, களம் சென்றால், இன்று கைகொட்டிச் சிரிப்பர், மறுக்கவில்லை. ஆனால் இவை என்று இருந்தன—இவை தமிழரிடம் இருந்த நாட்களில் மற்ற நாட்டவரிடம் இருந்தன யாவை என்பதனை ஒப்பிடும்போதுதான் சிறப்பு விளங்கும்.

களமே சென்று பார்ப்போம், வா, தம்பி!

அதோ பார்த்தனையா; பகைக் கூட்டம் உடைவாளை உருவிக்கொண்டு பாய்ந்துவருகின்றனர் தமிழரைத் தாக்க! தமிழர்களும் உடைவாளை உருவிக்கொண்டு போரிடப்போகிறார்கள் என்று எண்ணுகிறாய்; இரு பிரிவினரிடமும் உடைவாள் இருப்பினும், வாள் வீச்சு முறையின் நேர்த்தியாலேயும், களத்திலே காட்டிடும் துணிவாலும், போரிடும்போது எழும் துரிதத் தன்மையாலும், தமிழரே வெற்றிபெறப் போகின்றனர் என்று நினைக்கிறாய் — தவறல்ல! இயலும். ஆனால், இதோ கவனி......பாய்ந்து

வருகிற பகைப் படைமீது, மழை பொழிவதுபோல அம்புகள் பாய்கின்றன—அலறித் துடிப்பதைப் பார்! இவ்வளவு அம்புகளைவிட வேண்டுமானால் ஒரு பெரும்படை, களத்திலே எதிர்ப்புறம் நிற்கவேண்டுமே, தெரிகிறதா? இல்லை! அங்ஙனமெனின் எப்படி இது முடிகிறது?

தம்பி! புராண கால நாடாக இருப்பின், இவ்வளவு அம்புகளும், மகாராஜா செய்த 'மகா யாக பலனாக, பிரசன்னமான பரமேஸ்வரன் தந்த வரத்தின் பயனாக, அந்தரத்திலிருந்து அஸ்திரங்கள் சரமாரியாகக் கிளம்பி சத்ருவைத் துவம்சம் செய்கின்றன என்று கூறுவர்; நம்புவர்.

ஆனால் இது தமிழகக் களம்; தமிழ் வீரர்கள் போரிடுகின்றனர்; அவர்கள் கடவுளர்க்கு இத்தனை தொல்லை தருவதில்லை!

உற்றுக் கவனித்தால் தெரியும், தம்பி! அவ்வளவு அம்புகளும், தமிழர்களின் கோட்டையிலிருந்து கிளம்புகின்றன. கோட்டை மதிற்சுவரின் மீது நின்றுகொண்டல்லவா, இதனைச் செய்யமுடியும்? ஆமாம், என்கிறாய்; ஆனால் கோட்டை மதிற்சுவரிலே ஒருவரும் இல்லையே!



விந்தைதான் என்கிறாய்! விந்தை விளக்கப்படுகிறது பாரேன்.

நிறைய அம்புகளைக் கோர்த்துவிட்டால், தானே வளைந்து மிக வேகமாக எதிரிகள்மீது பாயும் முறைகொண்டது, வளைவிற்பொறி! அந்தப் பொறிதான் இந்தப் போடு போடுகிறது!

வளைவிற் பொறி ஒன்று செய்து முடிக்கும் செயலைச் செய்திட பலப்பல வீரர்கள் வேண்டும்.

இந்தப் போர்க் கருவி இருப்பதனால், சிறிய அளவுள்ள படை, கோட்டைக்குள் இருந்துகொண்டே, தாக்கவரும் பகைப் படையைச் சிதைத்திட முடிகிறது.

துணிச்சல் மிக்க அப் பகைவர்களிலே சிலர், அம்புக்குத் தப்பிவிடுவதுடன், கோட்டை நோக்கிப் பாய்கிறார்கள்; மதில்மீது ஏறுகிறார்கள் -- அடடா! உள்ளே குதித்துவிட்டால்......!!

பார்த்தனையா, தம்பி! எத்தனை பெரிய கருங் கற்கள் வீசப்படுகின்றன, பகைவர்மீது' மதிலிலே ஏறினவர்களின் கதியைப் பார்த்தனையா? உருண்டை வடிவமான கருங் கற்கள் மேலே விழுந்ததால் மண்டை நசுக்குண்டு, கீழே விழுகிறார்கள்—அசையக் காணோம் — எங்ஙனம் அசைய முடியும்! பிணமாயினர்!!

அது சரி, இத்தனை பெரிய உருண்டையான கருங் கற்களைத் தூக்கி எறிய முடியாதே, ஆட்களால்? என்று கேட்கின்றாய், ஆமாம், முடியாது! ஆனால் ஆட்களா தூக்கி வீசினார்கள் அந்தக் கற்களை!! இல்லை, தம்பி, இல்லை. அவ்வளவும் கல்லுமிழ் கவண்—கல்லிடுகூடை—இடங்கணி—இந்தப் பொறிகள் செய்த வேலையன்றோ!! பகைவர் பீதி அடையாமலிருக்க முடியுமா?

அகழியிலேயே குதித்து விட்டான்—அசகாயச் சூரன் போல் இருக்கிறது! ஆனால், அதோ! ஏன் அலறுகிறான்! மேலே போகிறான்! மேலே தூக்கிச் செல்லப்படுகிறான்; தூண்டில் போடப்பட்டிருக்கிறது! தூண்டில் தண்ணீரிலேயே இருந்திருக்கிறது, அவன் அறிவானா அதனை! அகப்பட்டுக் கொண்டான், மீன் தூண்டிலிற் சிக்குவதுபோல்!

தம்பி! களத்திலே இருக்கும் படைமீது, வேகமாகப் பறந்துவரும் வெடி விமானங்கள் தாக்கி, படையை நாசமாக்கும் என்று இன்று படிக்கிறோமல்லவா? படையுடன் படை போரிட்டால், வீரம் காட்டலாம். விண்ணேறி வரும் விமானம், மின்னல் தாக்குதல் நடத்தும்போது, திருப்பித் தாக்க முடியுமா, துரத்திக்கொண்டு போய் அடித்து நொறுக்க முடியுமா? முடியாது.

தம்பி! அதோ பார், மேலே சேவல்கள்! சேவல்களா இத்தனை உயரமாகப் பறக்கின்றன என்று கேட்கிறாய்; இந்தச் சேவல்கள் பறந்திட இயலும், உயிர்ச் சேவல்கள் அல்லவே! பகைவரின் உயிர் குடிக்கும் சேவல் பொறி! எப்படி உயிர் குடிக்கிறது என்பதனைக் கவனித்துப் பார்! மேலே பறந்து, வேகமாகக் கீழே பாய்கிறது, பகைவன் தலைமீது உட்காருகிறது, மீண்டும் கிளம்புகிறது, பகைவனுடைய தலையைக் காணோம்! ஆமாம், தம்பி! சேவல், அவனுடைய தலையை வெட்டி வீழ்த்திவிட்டது.

இந்த வேலை செய்யவல்ல பொறி, சேவல் வடிவத்தில்; அதன் பெயர்தான், ஆண்டலையடுப்பு.

ஓஹோ! எரிசிரல் தன் வேலையைச் செய்கிறது; அதனால்தான், பகைப்படை சிதறி ஓடுகிறது, அலறியபடி. புரியவில்லையா, தம்பி! பதறி ஓடும் பகைவர்களின் கண்களைப் பறவைகள் கொத்திக்கொண்டு போய்விட்டன தெரிகிறதா, மீன் கொத்திப் பறவை! பொறி, உயிர்ப் பறவை அல்ல! அந்தப் பொறியின் வேலை இதுதான், மேலே கிளம்பும், பகைவன் எதிரே பாய்ந்து வரும், கண்

களைக் கொத்தும்; உடனே மீண்டும் மேலே போய்விடும், எவர் கரத்துக்கும் சிக்காமல்' மீன்கொத்திப் பறவை வடிவத்தில் உள்ள இந்தப் பொறியின் பெயர்தான் **எரிசிரல்.**

அதோ மதிலின்மீது அமைக்கப்பட்டுள்ளது குரங்கு போன்ற பொறி; பெயர் கருவிரலூகம். வேலை? நெருங்கி வருபவர்களைப் பிடித்துக் கட்டிக்கொள்ளும் — உயிர் போன பிறகுதான் பிடிதளரும்—பிணம் கீழே விழும்.

இதே விதமான அழிப்பு வேலைக்காகத்தான், பன்றி நிற்கிறது' கிட்டே வருபவர்களைக் கிழித்தெறிந்து போடும், பொறி அது.

வையகம் வாழ்ந்திட வழங்குவோம் எதனையும் என்று கூறிடுவர், நேச நோக்குக்கொண்டோர்க்கு; பகை எனிலோ, உரிமை பறித்திட எவரேனும் கிளம்பிடினே, இழிமொழி புகன்றிட எவரேனும் துணிகுவரேல், முழக்கம் எழுப்புவர்:

**ஈட்டியாற் சிரங்களை வீட்டிட எழுமின்!**
**நீட்டிய வேல்களை நேரிருந்து எறிமின்!**
**வாளுடை முனையினும் வயந்திகழ் சூலினும்**
**ஆளுடைக் கால்கள் அடியினும்**
**தேர்களின் உருளையினிடையினும்**
**மாற்றவர் தலைகள் உருளையிற் கண்டு**
**நெஞ்சு உவப்புற வம்மின்!**

என்று அழைப்பு விடுப்பர்; அடலேறுகள் அணி திரண்டெழுவர், போரிட, வாகை சூடிட!

போதும், தம்பி! களக்காட்சி; மேலும் காண விரும்பினுல் பதிற்றுப் பத்து, தகடூர் யாத்திரை இவற்றைப் படித்திட வேண்டும். **பன்மொழிப் புலவர் அப்பாதுரையார்** தந்துள்ள **''தென்னாட்டுப் போர்க் களங்கள்''** எனும் ஏடு, படித்திடுவோர், அடலேறெனத் தமிழர் வாழ்ந்து பெற்ற வெற்றிகள்பற்றிய வீரக் காதையை அறிவர்.

**''காந்தளூர்ச் சாலைகல மறுத்தருளி,**
**வேங்கை நாடும், கங்கை பாடியும்**
**தடிகை பாடியும், நுளம்ப பாடியும்**
**குடமலை நாடும், கொல்லமும், கலிங்கமும்,**
**முரண் தொழில் சிங்களர் ஈழ மண்டலமும்,**
**இரட்டபாடி ஏழரை இலக்கமும்**
**முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டு,**

வெற்றிப் பெருவீரனக, இராஜேந்திர சோழன் விளங்கினுன் என்பது வரலாறு.

மன்னர்கள், மாமன்னர்கள் காலத்துக் கருத்துக்கள், குடியாட்சிக் காலத்துக்கு ஒவ்வுமோ? ஒவ்வா என்பதற்கு விளக்கமும் வேண்டுமோ! எனினும் பன்னிப்பன்னி அந்த நாட்சிறப்பினை எடுத்துக் கூறிடல், சுவைதரும் எனினும் பயனும் உண்டோ என்று கேட்போர் சிலர் உளர். அந்நாள் சிறப்பினை இந்நாள் கூறிடல், அன்றிருந்ததனைத்தும் இன்றும் இருந்திடல்வேண்டும் என்பதற்கன்று; அஃது முறையுமாகாது. எனினும், அந்தச் சிறப்புதனை எடுத்துரைப்பதனுல் நாம் பெற்றிருந்த ஏற்றமிகு நல்வாழ்வும், அஃது அமையத் துணைநின்ற நல் அரசும், அந்த அரசு கொண்ட அன்புமுறை அறநெறியும் என்றும், எந்நாடும், காலத்துக்கேற்ற வடிவந்தனைப்பெற்று, ஞாலம் உள்ளளவும் இருந்திடலாம் எனும் உண்மை, ஊரறியச் செய்வதற்கே; வீண் பேச்சுக்காக அல்ல,

பொங்கற் புதுநாளில் விழா நடாத்தி விருந்துண்டு, களைத்துத் துயில்கொண்டால் போதாதோ, என்பாயோ, என் தம்பி! எவரேனும் அதுபோலக் கூறிவரின் கூறிடு நீ, பாற் பொங்கல், பாகுப்பொங்கல், பருப்புள்ள சுவைப் பொங்கல் மட்டுமல்ல நம் நோக்கம், களிப்புப் பொங்கலிது, கருத்துப் பொங்கலிது, என்பதனை. இதனுல்தானே, எந்த விழாவினுக்கும் நாம் காட்டாப் பெருவிழைவு இந்த விழாவினுக்கு நாம் காட்டி மகிழ்கின்ருேம்.

**''வண்ணமலர் தாமரைக்கு நிகராய், வேறோர்**
**வாசமலர் நாம் வாழும் நாட்டில் இல்லை.**
**கண்ணைப்போல் சிறப்பான உறுப்பே இல்லை**
**கடல்போலும் ஆழமுள்ள பள்ளம் இல்லை.**
**வண்ணங்கள் பலபாடி, வார்த்தையாடி**
**வரிவண்டு மொய்ப்பதுபோல் ஒன்றுகூடிக்**
**கொண்டாடும் விழாக்களிலே தைமாதத்தில்**
**குதிக்கின்ற பொங்கலைப்போல் பொன்னுளில்லை.**

என்று இனிய கவி அளிக்கும் சுரதா தீட்டியுள்ளார்.

பொன்னுளே பொங்கற் புதுநாள், ஐயமில்லை!! எத்துணை இருளையும் ஓட்டிடவல்லோன், எழு ஞாயிறு எனும் செம்மல், வாழ்வு வழங்கிடும் பான்மைக்கு வணக்கமும், உண்டிகொடுத்து உயிர் கொடுத்துதவும் உழவர்தம் செயலுக்கு நன்றியும், கூறிட இந்நாள், திருநாளாகும். பொன்னுள் இஃது என்றதுடன், கூறிய இஃதும், கேளாய்:

**''சோலைதனில் உதிர்கின்ற பூவைப்போன்று**
**சோர்ந்தபடி உறங்கிக்கொண்டிருந்த நம்மைக்**
**காலையிலே எழுப்பிவிட்ட சேவலுக்கும்;**
**கனிகொடுத்த மரங்களுக்கும், பசுக்களுக்கும்**
**நிலமணிக் கடலுக்கும், கதிரோனுக்கும்**
**நெல்லுக்கும், கரும்புக்கும். நிலங்களுக்கும்**
**மூலபலம் குறையாமல் இருக்கும் கொத்து**
**முத்தமிழால் நம் வாழ்த்தை வழங்குவோமே!**

இத்துணைச் சிறப்புடன் இலங்கிடும் திருநாளில், நம்முடன் பிறந்தவர், மறவர், நாம்வாழ, மனையினில் தங்கி நல் மகிழ்ச்சிபெறும் நிலையின்றி, களத்திலே நிற்கின்ருர், கண்போன்ற உரிமைக்கு 'இமை'யானுர்! அதுகண்டு, நாமும் நாடாளும் பொறுப்பேற்ருேர் பொறுப்பற்ருேர் போலாகி நாடு கெடும் செயலதனில் ஈடுபடாது தடுக்கும் நோக்குடனே, எதிர்ப்பு, மறுப்பு இவற்றுடனே, கிளர்ச்சிகளையும் நடாத்தி வந்தோம், ஆட்சி பயனளிக்க. அவை யாவும் இதுபோது மக்களிடை கசப்புணர்ச்சி ஊட்டி

விடும், கட்டுப்பாட்டுடனே காரியமாற்றுகின்ற நிலை குலையும், அதுகண்டு, மாற்றார் மனமகிழ்வர் நாட்டுக்குக் கேடு செய்வர் என்று உள்ளூர நாம் உணர்ந்து, ஒதுக்கி விட்டோம் அவை தம்மை. நெருக்கமானேம் ஆளும் பொறுப்பேற்றார் தம்மோடு, கூடிப் பணிபுரிந்து வருகின்றோம்.

கொற்றம் ஆள்பவர்கள் இன்னொருவர், பிறகொருவர் என்று நிலை பிறக்கும் நெறியதுதான், குடியாட்சி. கொற்றம், நடாத்துபவர், ஒவ்வோர் கொடிக்குடையோர். நாடறியும். எந்தக் கொடியுடையார் கொற்றம் நடத்திவர, உரிமை பெற்றனரோ, அவர் ஆணை வழி நடக்கும் அரசு—எனினும் அக் கொடியுடையார் கொடியோராளுல், மக்கள் தமக்காக வாதாட, மமதை கொண்டோர் மண் கவ்வ, கொற்றம் மக்கள் உயிர் குடிக்கும் கொடுமையாகிவிடாமல், தடுத்து நிறுத்திடவே, மற்றக் கட்சியினர் விழிப்புடனே இருந்திடுவர். ஒரு கொடிக்கு உடையார்கள் உயர்வதுண்டு, தாழ்வதுண்டு; அவரிடம் போய் 'கொற்றம்' இருந்திடினும், அதன் வலிவு மிகப் பெரிது.

கொற்றந்தனை விடவே நாடு மிகப் பெரிது. நாட்டுக்கே ஆபத்து என்ற நிலை வெடித்ததுமே, கொற்றத்தின் எதிர்காலம் என்னவெனப் பேசுதற்கோ, எவர் பெறுவர் அடுத்தமுறை, கொற்றம் நடாத்திடும் ஓர் உரிமை எனப் பேசி வருதற்கோ நேரமில்லை, நேர்மையல்ல அப் போக்கு. எனவே நாமும், நாடு நனிபெரிது நம் கட்சிக்கான நடவடிக்கை நிறுத்தியேனும், நாடு காத்திடும் நல்ல தொண்டருக்குத் துணையாவோம் என்று துடித்தெழுந்தோம், துணை நின்றோம்.

துணையாக உள்ளவர்கள் தோழர்களே ஆவதற்கு, இணையில்லாப் பெருநோக்கம் கொளல் வேண்டும் ஆள்வோர்கள்; கொண்டாரில்லை; குறை இது என்றுரைத்து குறுக்குச் சால் ஓட்டிட நாம் முனையமாட்டோம், நமது பணி, நாடு காக்க, நாடாள்வோர் போக்கினை மாற்றிடுவதன்று; இன்று.

விழாவினைக் கொண்டாட ஏற்ற நிலைதானே என்று விழிதனிலே நீர் தேக்கி நின்ற தம்பி! விளக்கம் இது; உணர்ந்திடுவாய்; உதிர்த்திடுவாய் புன்னகையை, என்றும்போல.

சிரிப்பு என்பதன்மீது நினைப்பு சென்றதுமே, இடுக்கண் வருங்கால் நகுக! என்று ஈடற்ற பெரும்புலவர், நானிலத்துள்ளார்க்கே வழிகாட்ட வல்லாராம் வள்ளுவப் பெருந்தகையார் செப்பியது சிந்தையினில் சேர்ந்திடுது.

இயற்கையே சிரித்தபடி இருக்கின்ற திருநாடு, நம் நாடு; நெருப்புக் கக்கும் எரிமலைகள் இல்லை இங்கு; இன்னல் கண்டு நடுக்கமில்லை, இல்லை இங்கு நிலநடுக்கம்; எல்லாம் சீராய் அமைந்துளது; புன்னகையைப் பூண்ட தளிர்மேனியாள்போல் பூமியது இருக்கக் காண்பாய்.

எங்கும் சிரிப்பொலிதான்! எங்கும் மகிழ்ச்சி மயம்! பாளையே தென்னை காட்டும் பாங்கான சிரிப்புமாகும்! பற்பல சிரிப்புப் பற்றி படித்த ஓர் பாட்டை (மதிஒளி என்பாருடையது) உன் பார்வைக்கு வைக்கும் எண்ணம் அடக்கிட இயலவில்லை; ஆகவே அதனைக் கேளாய்,

"மொட்டு முதல் இதழ் விரித்து
முல்லை சிரித்ததாம்! அதில்
மொண்டு மொண்டு தேன் குடித்து
வண்டு சிரித்ததாம்!
சொட்டுச் சொட்டு மழைத் துளியைச்
சொந்தம் என்றதாம்—அந்தச்
சொந்தம் கொண்ட இந்த மண்ணும்
துவண்டு நின்றதாம்!

✲

நீலவானில் வந்த நிலவு
நீந்திச் சிரித்ததாம்! அதை
நின்றுபார்த்து விண்ணின் மீனும்
நெகிழ்ந்து சிரித்ததாம்!
பாலை அள்ளித் தெளித்ததுல்
பாரும் சிரித்ததாம்! இதைப்
பார்த்து மகிழ்ந்து சோற்றையுண்டு
பிள்ளை சிரித்ததாம்.

வளமிக்க நாடு, திறமிக்க உழைப்பு, பொறுப் புணர்ந்த ஆட்சி, அறமறிந்த சான்றோர், அஞ்சாநெஞ்சுடைப் புலவோர், வினைபொருளின் மிகுதி, செய்பொருளின் நேர்த்தி, வாணிபத் திறம் யாவும் மிகுந்திருந்த நாட்கள்-புன்னகை பூத்தபடிதானே இருந்திருக்கும்.

கவிஞர் முடியரசன் — அன்று இங்கு இருந்துவந்த வாணிப வளம்பற்றி அழகுபடக் கூறியுள்ளார்;

"முத்திருக்கும் தண்கடலில் முத்தெடுத்து
முகில்முட்டும் மலையகத்துச் சந்தனத்தின்
எத்திசையும் மணக்கின்ற மரமெடுத்து
மிளகெடுத்து மயில்தோகை இறகெடுத்துப்
பத்தி பத்தியாய்க் கலங்கள் விற்கச் சென்ற"

அருமையினைக் காட்டியுள்ளார். அத்தகைய எழில் உள்ள தமிழகம் தமிழ்மொழி அழிந்துபடாதிருந்தால் மட்டுமே காண இயலும்.

தமிழ்மொழி பாதுகாப்புப் பிரச்சினையில் காட்டிய அளவு அக்கரை வேறெந்தப் பிரச்சினையிலும் தொடர்ந்தும் வேகத்துடனும், உள்ளக் கொதிப்போடும் கட்சிக் கட்டுகளைக் கடந்திடும் போக்குடனும், தமிழர்கள் காட்டியதில்லை. எத்தனையோ பிரச்சினைகள் சிற்சில கட்சிகட்கே உரித்தானவை என்ற நிலை காண்கிறோம். தமிழ் மொழி பற்றிய பிரச்சினை ஒன்றே, நாட்டுப் பிரச்சினை எனும் மேலிடம் பெற முடிந்தது. ஏனெனில், தமிழ் மொழி காக்கப்படுவதனைப் பொறுத்தே, தமிழரில் பல்வேறு கட்சியினரும் தத்தமது கொள்கை வெற்றிபெற, இன்றில்லாவிட்டால் ஓர்நாள் வாய்ப்புக் கிடைக்க முடியும் என்பதிலே உள்ள அழுத்தமான நம்பிக்கையே யாகும்.

ஆட்சியாளர்கட்கு அறிவு கொளுத்த அவ்வப்போது கிளர்ச்சிகள் நடாத்துகின்றன பல்வேறு அரசியல் கட்சிகள்; ஆனால் ஒரு கட்சி துவக்கிடும் கிளர்ச்சியில் மற்றக் கட்சிகள் பெரிதும் பங்கேற்பதில்லை; பகை காட்டாமலும் இருப்பதில்லை. ஆனால் தமிழ் மொழி குறித்த பிரச்சினையிலே மட்டும் கட்சிகளைக் கடந்ததோர் ஒன்றுபட்ட உணர்ச்சி மேலெழுந்திடக் காண்கிறோம். காரணம் இஃதே! தமிழர்க்குத் தமிழ் மொழி, அவர் விரும்பும் ஓர் தனிச் சிறப்புள்ள வாழ்க்கை முறைக்கு வழிகாட்டி நிற்கிறது—எண்ணத்தை வெளியிடும் வெறும் கருவியாக மட்டும் இல்லை.

கிளர்ச்சிகள் பலவும், நெஞ்சத்து அடிவாரத்தில் ஆழப் பதிந்துள்ள அடிப்படைக் கொள்கைக்கு உடனடியான வெற்றியைத் தந்திடுவதில்லை — பெரும்பாலும். ஆனால் அவை யாவும் நாட்டு மக்களை, கிளர்ச்சி நடத்துவோர் காட்டிடும் அடிப்படைக் கொள்கையிடம் ஈர்த்திடும் வெற்றியை—மறைமுக வெற்றியைப் பெற்றளிக்கிறது.

மேய்ச்சல் வரி எதிர்ப்புக் கிளர்ச்சி, உப்பு வரி ஒழிப்புக் கிளர்ச்சி, மேனாட்டுப் பொருள் ஒழிப்புக் கிளர்ச்சி, மது ஒழிப்புக் கிளர்ச்சி, வரிகொடா இயக்கம், சட்ட மறுப்புக் கிளர்ச்சி, ஒத்துழையாமைக் கிளர்ச்சி, ஆங்கிலப் படிப்பு அகற்றும் கிளர்ச்சி என்பனபோன்ற கிளர்ச்சிகள், நடத்தப்பட்டவர்களால், நடத்தப்பட்ட நேரத்தில், உடனடி வெற்றிபெறும் என்று வாக்களிக்கப்பட்ட தென்றாலும், கிடைத்தது உடனடி வெற்றி அல்ல; இத்தனை கிளர்ச்சிகளும், கிளர்ச்சி நடித்தியோர் கொண்டிருந்த அடிப்படை நோக்கத்துக்கு — நாட்டு விடுதலைக்கு—வழிகோலின — மக்களை அதற்குத் தக்க பக்குவ நிலைபெறச் செய்தன.

ஆனால், எந்த ஒரு கிளர்ச்சிக்கான காரணத்துக்காகவும், தொடர்ந்து, விடாமூச்சாக, இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்ற முறையில் கிளர்ச்சிகளை நடத்தினர் இல்லை.

எடுத்துக் காட்டுக்குக் கூறுவதென்றால், அந்நியத் துணி எரிப்புக் கிளர்ச்சி அந்நியத் துணி அறவே தடுக்கப்பட்டுவிடும் வரையில், தொடர்ந்து நடந்துவரவில்லை. ஒரு குறிப்பிட்ட கட்டம் சென்ற பின்னர், தாம் விரும்பும் அடிப்படைக் கொள்கை வெற்றிக்கான ஆக்கமும் ஊக்கமும் கிடைத்திருக்கிறது என்று தெரிந்த பிறகு, கிளர்ச்சியை நிறுத்திக்கொண்டனர்.

பிரச்சினை வடிவிலேயும் கிளர்ச்சி வடிவிலேயும் தமிழ்ப் பெருங்குடி மக்களிடம் தொடர்ந்து முப்பது ஆண்டுகளாகவும், விறுவிறுப்புடன் கடந்த பதினைந்து ஆண்டுகளாகவும், இருந்து வருவது, தமிழ்மொழி பற்றிய பிரச்சினையே யாகும்.

இதிலே, வேறு எதிலும் கிடைத்திடாத அளவிலும் முறையிலும் நேரடியான பலன்கள் கிடைத்துள்ளன.

இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கிய கொடுமையையும் கண்டோம்; இது மடைமை என்று கூறித் தமிழர் எதிர்த்து நின்று கிளர்ச்சி நடத்தியதும் கண்டோம். இன்று? கொட்டு முழக்குடனும், கொடி கோலமுடனும், எனைத் தடுக்க எவருக்கும் ஆற்றல் இல்லை, உரிமை இல்லை! என்ற ஆர்ப்பரிப்புடன் படை எடுத்து வந்த இந்திமொழி, அடங்கி ஒடுங்கி ஒருபுறம், ஒதுங்கி நின்று, வெள்ளாட்டியாகி நான் வேலைபல செய்யவல்லேன்! என்று நயந்து பேசி, நுழைவிடம் பெறக் காண்கிறோம்.

அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி ஈராண்டு முடிந்ததும் இந்தியே எல்லாம், இந்தியே எங்கும், ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடித்து நிற்க இயலாது.

இதுகண்டு வெகுண்டு, மனம் குமுறி, கட்சிகளை, முன்பின் தொடர்புகளை, நிலைகளை, நினைப்புகளை எல்லாம் கடந்து, தமிழகத் தலைவரெலாம் ஒன்றுகூடி, ஒருபெரும் முயற்சி செய்ததாலே, அரசியல் சட்டத்தில் தக்கதோர் திருத்தம் செய்து, இந்தி ஆதிக்கம் தடுத்திட, வழி கிடைத்துளது.

பகைவன் உள்ளே நுழைந்ததும் கொள்கை வேறுபாடு மறந்து ஒன்று திரண்டு வாரீர், பகை முடிப்போம்! பழி துடைப்போம்! என்று பண்டித ஜவஹர்லால் நேரு, கனிவுரையாற்றினர்—அத்துடன், ஓர் அறிக்கை மூலம்,

> இந்தி திணிக்கப்படமாட்டாது.
>
> ஆங்கிலம் நீடித்து வரும்.
>
> இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிராத மக்கள், எவ்வளவு காலத்துக்கு ஆங்கில மொழி இருத்தல் வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவ்வளவு காலம் ஆங்கில மொழி இருக்கும் என உறுதி அளிக்கிறேன்

என்று தெளிவளித்தார், தேன் பெய்தார்.

இதுபோல, வெறெந்த கிளர்ச்சிக்கும் நேரடி வெற்றி உருப்படியாகக் கிடைத்ததில்லை.

எனினும், இதுவும்கூட நிலைத்து நிற்கும் வெற்றி எனக் கொள்வதற்கில்லை, மாயமானாகிப் போகலாம், எதற்கும் விழிப்புணர்ச்சியுடன் இருத்தல் வேண்டும் என்ற நிலை தமிழரிடம் காண்கிறோம்.

## நல் வாழ்த்து

தமிழ் மக்கள் விரும்பிக் கொண்டாடி மகிழ்ச்சிபெற வருவது பொங்கல் விழா. முன்பெல்லாம் இதைப் பண்டிகை, என்று சொல்லுவார்கள், இப்போது நல்ல தமிழில், விழா, திருநாள், புதுநாள் என்று சொல்லுகிறார்கள். இந்த விழாவிலே, வீடுகள் புது அழகு பெறுகின்றன. மக்கள் புது ஆடை உடுத்துகிறார்கள். புதிதாக நெல்லும் காய்கறியும் வீடுகளுக்குக் கொண்டுவருகிறார்கள். புதிய மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. இந்த நல்ல திருநாளில் நீங்கள் எல்லோரும் இன்பம் பெற்று, இன்று போலவே என்றும் நலம்பல பெற்று வாழவேண்டும் என்ற என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராணி-அண்ணாதுரை.

இன்று இந்திமொழி ஆதிக்கம் செயக்கண்டு, திரண்டெழுந்து நின்றுள்ள தமிழர், பின்னர் ஓர் நாள் அயர்ந்துவிடக்கூடும், அணி கலேயக்கூடும், அதுபோது, இது தக்க சமயம் என, ஆதிக்கம்தனைச் செலுத்த இந்தி அம்பாரி மீதமர்ந்து வரக்கூடும். இன்னும் ஓர் ஈராண்டில் இந்த நிலை வந்திடாதபடி தடுக்க, அரசியல் சட்டத்தைத் திருத்திடவும் ஒருப்படுகின்றனர், தமிழரிடை இதுபற்றி மலர்ந்து காணப்படும், பெருமை மிகு எழுச்சி காரணமாக. சில ஆண்டுகள் கழித்து, தமிழர் சிந்தை திரிந்து, செயல் மறந்து போவரேல், அரசியல் சட்டத்திலே புகுத்தப்படும் திருத்தம் நீக்கப்பட்டுவிடக் கூடும்.

அரசியல் சட்டம், திருத்தப்படக் கூடியது.

எனவே, எதையும் நீக்கவும் எதனையும் நுழைக்கவும், குறைக்கவும், வாய்ப்பு உளது.

எனவே, என்றென்றும், எந்நிலையிலும், தமிழ் மொழிக்கு ஊறு நேரிடா வழி காணவேண்டும், எனும் எண்ணம் எழுகிறது. தமிழ் மொழிக்குக் கேடு செய்திடும் நிலையில் ஓரிடம் இருத்தல் எற்றுக்கு என்ற கேள்வி எழுகிறது! அரசியலில் மிகப் பெரிய அடிப்படைப் பிரச்சினை பிறந்துவிடுகிறது.

இந்த விந்தைமிகு உண்மையினை உணர்ந்தனையா, தம்பி! அரசியல் கட்சிகள் தமக்கு ஆளும் வாய்ப்பு கிடைத்திடக் கிளர்ச்சிகள் நடத்துகின்றன; அறிகின்றோம்; ஆனல், தமிழ் மொழி பாதுகாப்புக்கான உணர்ச்சியும், அந்த உணர்ச்சியின் காரணமாக எழும் கிளர்ச்சியும், ஒரு புதிய அரசியல் கருத்தையும், அந்தக் கருத்து வெற்றி பெறுதற்காக ஓர் அமைப்பையும் பிறப்பிக்கச் செய்திருக்கிறது!

தம்பி! சந்தன மரம், பயிரிட்டு வளர்க்கப்படுவதல்ல. காட்டிடை கவினுறவிளங்கிடும் மணம்தரு சந்தன மரங்களிலிருந்து உதிர்ந்திடும் விதைகளைப் பறவைகள் ஏந்திச் சென்று தூவிடும் இடங்கள் தன்னில் செடிகள் முளைத்து, செழுமையாய் வளர்ந்து, புலவோர் பாடி மகிழ்ந்திடும் தென்றலெனும் பெண்ணாள் பெற்றிட மணமளிக்கும் சந்தன மரமாகிறது!

அஃதே போன்றே, ஏற்புடையதாக மட்டுமல்ல, உயிர்ப்புச் சக்தியுள்ளதாகவும் ஓர் கருத்து இருக்குமானல், அக்கருத்துக்காக ஆயிரம் அமைப்புகள் ஏற்பட்டுவிடும், அழிக்கப்பட்டது போக மற்றது கருத்தைத் தாங்கி நிற்கும், எல்லாம் அழிந்து போயினும், எங்கோ ஓரிடத்தில், ஏதோ ஓர் பறவை, எப்போதோ தூவிய விதை முளைவிட்டுச் செடியாகி நிற்கும்.

தமிழ் மொழி, வித்து' முளைத்திடும் செடி கொடியும், மலர்ந்திடும் பூக்களும், குலுங்கிடும் கனிகளும், பலப்பல.

எனவேதான் தம்பி! வித்து அழியாது பாதுகாக்கும் கடமையினைத் தமிழர் என்றென்றும் செய்திட முனைந்தபடி உள்ளனர்.

சந்தனத்தருவிலுள்ள நறுமணம் எடுத்து புது மணம் பெற்றிடப் பல பொருள் உண்டு, கண்டோம்; ஆனல், எம்மணம் பூசி மற்றோர் தருவினைச் சந்தனத் தருவாக்கிக் கொள்ள இயலும்!

மணம் தரச் சந்தனமும், சுவைதர மாவும், வலிவளிக்கத் தேக்கும், வண்ணப் பூக்கள் அளிக்க செடி கொடியும், நெல்லளிக்கப் பயிரும், காய்கறி அளிக்கச் சிலவும், உண்டு! ஒன்றை மற்றென்று ஆக்கல், இயலாத ஒன்று ஆகும்! ஒன்று தருவதை மற்றென்று தர இயலாது—இயற்கை அது.

விருப்பம் எழலாம் அதுபோல! விந்தை புரிந்திட எண்ணம்கூட முளைத்திடும், சிற்சிலர்க்கு!

மரம் குலுக்கி நெல் உதிர்க்கச் செய்வோம்:

பயிர் பறித்து சந்தன மணம் பெற்று மகிழ்வோம்! தேக்கினில் வண்ணப்பூவும், மாவினில் வாழை பலாவும் பெற்றிட விந்தை முறை காண்போம் என்று பேசலாம்; மகிழ்ச்சி பெற! ஆனல் இயற்கையை அடியோடு மாற்றிட இயலாதன்றோ.

எனவேதான், தமிழ் தந்திடுவன, பிறமொழி தந்திடா! தமிழர் கொண்டிடும் பண்பு, பிறரிடம் புகுத்தலாம், பூத்திடாது! எனவேதான், தனித்தன்மை கொண்டோர் நாங்கள் எனக் கூறுகின்றோம்.

எரிபொருள் ஆகத்தக்க தருக்களே, யாவும்; ஆனல் நறுமணம் தரவல்லது சந்தனம் ஒன்றே ஆகும்; அஃதேபோலப் பயன்தர மொழிகள் உண்டு, மணம் பெறத் தமிழே வேண்டும் என்கின்றோம்.

பிறமொழி ஆதிக்கத்தால், பொருளாதாரத் தாழ் நிலையால், எதையும் உரிமையுடன் செய்திடும் அரசியல் உரிமை பெருதாராய் இருக்குமட்டும், தமிழர் கண்ட மணம்கமழ் உயர் தனிப்பண்பு தன்னை உலகுக்கு ஈந்து, உலகிலே குவிந்துள்ள கருத்துச் செல்வத்தை மேலும் பெருக்கிடும் சீரிய செயலில் வெற்றி கிடைத்திடாது. எனவேதான் மொழி வளர்ச்சி என்பதுடன் அரசியல் விழிப்புணர்ச்சியும் கலந்து, தி. மு. கழகமாக வடிவமெடுத்திருக்கிறது. மக்களாட்சி முறையே, மக்களின் வாழ்வுக்கு இன்ப ஒளி அளிக்கவல்லது என்பதனல், அம்முறையைப் போற்றுகிறது.

அரசியல் கருத்து வளர்ச்சிபற்றிய வரலாற்றினைப் பார்த்தால், தம்பி! இந்த மக்களாட்சி முறை ஏற்பட எத்தனை பாடுபடவேண்டி இருந்தது, கொடுத்த பலி எத்துணை என்பது விளங்கும். எனினும், எழு ஞாயிறு எனக் கிளம்பிற்று மக்களாட்சி, ஆந்தைகள் அலறி ஓட, வௌவால்கள் பறந்து பதுங்க!!

பாம்பெது பழுதெது, கனி எது காய் எது. தளிர் எது சருகு எது, மேடும்பள்ளமும் எவை எவை, தொழிலிடம் எது, ஆங்கு செல்லப் பாதை எது,— எனும் பொருளின் பாங்கறியும் திறன் மக்கட்கு, அளிப்பது ஒளியாகும்—பேரொளிப் பிழம்பே ஞாயிறு!

ஞாயிறு! இல்லையேல் ஞாலம் இல்லை!

பொருளின் பாங்கினை நாம் உணர்ந்திட ஒளி அளிக்கவல்லது ஞாயிறு, எனினும், பொருளின் அமைப்பினைத் திருத்திடவோ, பாங்கினைக் கூட்டிடவோ நாமே பணியாற்றவேண்டும். மலைமுகடு மாருது, மடுவு மேடாகாது, மலராது சருகுதானும். ஞாயிற்றின் ஒளியினலே! இவை இவை இன்னவிதம் என்பதனை எடுத்துக்காட்டும்; அவற்றினின்றும் பயன்பெறப் பணியாற்றிடவேண்டும், மாந்தர் கூட்டம்!

அரசியல் துறைக்கு, மக்களாட்சி என்பது எழு ஞாயிறு என்னலாம்.

நாடுள்ளநிலை தன்னை நாம் அறிந்துகொள்ள வழிகாட்டி நிற்பது, மக்களாட்சி முறைதான்.

ஞாயிறு கண்டதும் தாமரை மலரும் என்பர்; மக்களாட்சி முறை வென்றதும், மக்களிடை மகிழ்ச்சி மலரும்.

கதிரவன் ஒளியின் துணைகொண்டு, அவரவர் தத்தமக்கென்றுள்ள அலுவல்களில் ஈடுபட்டுப் பயன்பெறுதல் போன்றே, மக்களாட்சி முறை அளிக்கும் வாய்ப்பினைத் தக்கபடி இயங்கச்செய்து, நாட்டுக்குப் பொதுவான செம்மை கிடைத்திடச் செய்தல்வேண்டும்.

ஞாயிறு எழுந்ததும், ஏர் தன்னாலே நடக்காது, சக்கரம் தானாகச் சுழலாது; இயக்குவிப்போன் சுறுசுறுப்பு அதற்குத் தேவை, அதற்கான உயிரூட்டம் தருபவன் கதிரோன்.

"பொல பொல என இருள் புலரும் வேளை
கலகலவெனக் கரைந்தன புட்கள்.
கொண்டையை அசைத்துக் கூவின சேவல்
தண்டையை இசைத்துத் தளிருடல் குலுக்கி
மெல்லிடை துவள வெண்குடம் ஏந்தி
அல்லியங் குளத்தினை அடைந்தனர் மடந்தையர்.''

அமரன் என்பாரின் கவிதையில் ஒரு பகுதி இது. புரட்சிக் கவிஞர் முன்பு பாடினாரல்லவா,

காலை மலர்ந்தது மாந்தரெலாம்
கண்மலர்ந்தே நடமாடுகின்றார்

என்று; அந்த நடமாட்டத்தின் ஒரு பகுதி காண்கிறோம்; ஆனால் அல்லிக் குளத்தருகே ஆரணங்கைக் கண்டதனால், எல்லாம் உள்ளதுகாண் என்றிருத்தல் முறையாமோ! இல்லை; எனவே, தொழில் நடக்கிறது:

"வயல்புறம் நோக்கி மாண்புடை உழவர்
செயல்திறம் காட்டச் சென்றனர் ஏருடன்
நீலத்திகழ் மேனி நெடுநடை ஏறுகள்
விலாப்புறம் அசைவுற விரைந்தன செருக்குடன்:''

எனவே, கதிரவன் கிளம்புவது ஒளியூட்டி உயிரும் எழிலும் ஊட்டமட்டும் அல்ல, கமலத்தைச் சிரிக்க வைத்து. கன்னியரைப் போட்டியிட வைத்திட மட்டுமல்ல, தொழில் நடத்தப் புறப்படுவீர்! என்று அறிவுறுத்த, ஆணையிடவுமாகும்.

மக்களாட்சி எனும் முறையும், இருட்டறையாக வைக்கப்பட்டுள்ள அரசியல் துறைக்கு ஒளியூட்டி உயிரூட்டி, எழிலூட்டி, அம்மட்டோடு நின்றுவிடுவது அல்ல. பொறுப்புணர்ந்து செயல்படுமின்! என்று ஆணையும் பிறப்பிக்கின்றது.

இதனை உணர்ந்திடவும் இவ்விழா, பயன்படட்டும்.

ஒளி தரும் ஞாயிறு வெப்பம் மிகுதியாகக் கக்கிடும் போக்கும் உண்டு, அஃதேபோல மக்களாட்சியிலேயும், உரிமை மறுத்தல், உருட்டி மிரட்டுதல், போன்ற ஆகாச் செயல்களும் முளைப்பதுண்டு! அவையாவும் களைகள்—பயிர் அல்ல! காலமறிந்து களைகளை நீக்கிடல்வேண்டும்; நீக்குங்காலை களையினைப் பறித்தெடுத்திடும் வேகம் தன்னில், பயிர் அழித்திடக்கூடாது.

மக்களாட்சியிலும் சிலபல கேடுகளும் கொடுமைகளும் ஏற்பட்டுவிடுகின்றன என்றாலும், அவைகளை நீக்கிடும் உரிமையும் போக்கிடும் வாய்ப்பும் மக்கட்குக் கிடைக்கிறது.

எனவே இன்று நடைபெறும் போர், உரிமையின் மாண்பதனை நாம் உணர்ந்து போற்றுகிறோம், எந்த வலிவாலும் இதனை வீழ்த்திடுதல் கூடாது என்ற உண்மையினை உலகறியச் செய்கின்றோம் என்பதற்கும சேர்த்துத்தான்.

பற்பல நாட்டு வரலாறுகளிலே, மமதை மிக்க மன்னர்கள் பற்றிப் படிக்கிறோம். கொலையைக் கூசாது செய்து, கொடி வழியை அறுத்தெறிந்துவிட்டுக் குறுக்கு வழி நுழைந்து கொற்றம் கைப்பற்றினோர், காமக் களியாட்டத்துக்கெனவே நாட்டிலுள்ள கன்னியர் உளர் என்ற கேடு நிறைக் கருத்துடன் இருந்திடும் போக்கினர், எனப் பல படித்திருக்கிறோம்.

முறையும் தெளிவும் தொடர்பும் மிக்கதான வரலாறு தொகுத்தளிக்கப்படவில்லை எனினும், கிடைத்துள்ளனவற்றைக் கொண்டு பார்த்திடும்போது, தமிழகத்துக் கோனாட்சிக் காலத்திலே, மன்னர்கள் மக்களை மருட்டியும், மாண்புகளை மாய்த்தும் வாழ்ந்தனர் என்பதற்கான அறிகுறிகளே இல்லை.

அரபு நாட்டுப் பெரு மன்னர்கள்போல், அழகிகளையே மலரணையாக்கிக்கொண்டு, உருண்டு கிடந்த பெரு மன்னர்கள் இங்கு இருந்ததில்லை.

வேறு பல நாடுகளிலே இருந்ததுபோல, மக்களின் சொத்து யாவும் மன்னனின் மகிழ்ச்சிக்காக என்று கூறி மக்களைக் கசக்கிப் பிழிந்து, பெரும் பணம் திரட்டி, பளிங்காலான நீரோடை கொண்டதும் பொன் முலாம் பூசப்பட்ட மாடங்கள் கொண்டதுமான அரண்மனைகளை எழுப்பிக்கொண்டு, மதோன்மத்தர்களாக, வாழ்க்கை நடாத்திய மன்னர்கள் இங்கு இருந்ததில்லை.

ரோமானிய மன்னர்களின் கோலாகல வாழ்க்கை பற்றிய குறிப்புகளைக் காணும்போது, இப்படியும் மக்கள் கொடுமையைத் தாங்கிக் கொண்டிருந்தனரா என்று கேட்கத் தோன்றும்.

கட்டழகி கண்டு களித்திடக் கட்டிளங் காளையை முதலைக்கு இரையாக்கி, அவன் உடலை முதலை பிய்த்தெறியும்போது, பழச் சுளையைப் பெயர்த்தெடுத்து, அவள் அதரம் சேர்ப்பிப்பதும், முதலையினால் கிழித்தெறியப்படுவோனுடைய குருதி குபுகுபுவெனக் கிளம்பிச், செயற்கை ஓடை செந்நிறமாகிடும் வேளை, இரத்தச் சிவப்பான போதைப் பானத்தைத் தங்கக் குவளையில் பெய்து, தளிர்மேனியாளுக்குத் தருவதுமான இன்ப விளையாட்டில் ஈடுபட்டிருந்த சில ரோமானிய மாமன்னர்கள் போன்று இங்கு ஒருவரும் இருந்ததில்லை.

மக்களிடம் குருட்டறிவு இருக்கும்படியான ஏற்பாட்டினைத் திறமையுடன் செய்து வைத்துக்கொண்ட, அம் மன்னர்கள், தம்மை 'வழிபடத் தக்கவர்கள்' என்ற

நிலைக்கு உயர்த்திக்கொண்டு, பிறர் கேட்டாலே கூசத் தக்க தீச்செயல்களை நிரம்பச் செய்து வந்தனர்.

"தங்கள் மருமகன், பெற்ற வெற்றி மகத்தானது, மாமன்னா! மக்கள் அவரைக் காண வும் கோலாகல விழா நடத்தவும் துடித்தபடி உள்ளனர்..."

"அவ்வளவு ஆர்வம் காட்டுகின்றனரா மக்கள்! சென்ற ஆண்டு நான் பன்னீர்க் குளத்துக்குச் சென்றேனே குளித்திட, அப்போது திரண்டுவந்ததைவிடவா அதிக மக்கள் திரண்டு வந்தனர்... அவனைக்காண!"

"ஆமாம்! மிகப்பெரிய கூட்டம்..."

"தளபதி எங்கே?"

"வரவேற்பு ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றிருக்கிறார்."

"அவனும்,அப்படியா! உம்! சரி! துணைத் தளபதி எங்கே?"

"அவர் எங்கு இருப்பார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே... ஆனால் இன்று அவர், அழகுமிகப்படைத்த ஒரு தெருப்பாடகியைக் கண்டு சொக்கிப்போய் உடனே அவளைச் சீமாட்டியாக்கி, சல்லாபம் நடத்துதற்கு என்றே அவர் புதிதாகக் கட்டிமுடித்த, உல்லாசக் கூடம் அழைத்துச் சென்றார்... அங்குதான் இப்போது அவர்..."

"அவன் எப்போதும், வாழத் தெரிந்தவன். ஆனால் ஆயிரம் களியாட்டம் நடத்தினாலும்,'ராஜபக்தி'மட்டும் எப்போதும்மிகுதி அவனுக்கு. அவனை உடனே கண்டு தலைநகரின் தலைவாயிலில் என் மருமகன் நுழைந்ததும், சிறைப்படுத்தி, காட்டுக் கோட்டையில் அடைக்கச்சொல்லு. தளபதி குறுக்கிட்டால், இவனே தளபதி! நீ அக்கணமே துணைத் தளபதி!! என் மருமகன் செய்த குற்றம், எதிரி நாட்டவரிடமிருந்து ஏராளமான பொன் பெற்றுக்கொண்டது. ஆதாரம், உளவர் தந்துள்ள அறிக்கை. புறப்படு! போகும் வழியிலே, உளவர் தலைவரைக் கண்டு, பெரும் பொருளை எதிரிநாட்டவரிடம் என் மருமகன் பெற்றதற்கான ஆதாரம் தயாரித்துக் கொண்டுவரச் சொல்லு..."

"தங்கள் மகள்...?"

"எனக்குத்தான் நீண்ட காலமாகவே சந்தேகம் உண்டே அவள் என்மகள்தானா என்பதில்..."

இப்படிப்பட்ட உரையாடல், அந்த நாட்களில், மன்னராட்சியிலே நடைபெறும். தமிழகத்தில் இதுபோன்ற மனித மிருகங்கள் இருந்ததில்லை. இந்த மண்ணிலே அத்தகைய நச்சுச் செடிகள் முளைப்பதில்லை.

கொடுங்கோலர்கள் மிகுந்திருந்த நாட்களிலேயே, இங்கு இருந்துவந்த கோனாட்சியையே, குடிக்கோனாட்சியாக்கி வைத்தவர் தமிழர் என்றால், குடியாட்சி முறை ஏற்புடையது, எங்கும் நிலவிட வேண்டியது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் இந்நாட்களிலே, மக்களாட்சி முறையினை மாண்புள்ளதாக்கும் பொறுப்பேற்கத் தக்கவர்கள் தமிழர் என்று கூறுவதிலே தவறில்லையே.

தமிழர் நெறி, கூடி வாழ்தல், கேடு செய்தல் அல்ல.

தமிழர் முறை, கருத்தறிந்து காரியமாற்றுதல், கத்தி முனையில் கட்டளை பிறப்பிப்பது அல்ல.

தூய்மை நிறைந்த மக்களாட்சிமுறை, தேவைப்படும்போது, பொது நோக்கத்துக்குத்தான் கட்டுப்படுமேயன்றி, கட்சிக்கொடிகளுக்கு அன்று. அங்ஙனமாயின் கட்சிகள் பலப்பல ஏன், தனித்தனிக்கொடிகள் ஏன் என்று கேட்கப்படுகிறது, இது எறிகிற வீட்டிலிருந்து எடுத்தவரையில் இலாபம் என்ற போக்கேயன்றி, வேறில்லை. ஒரு பொதுநோக்கத்துக்காகப் பாடுபடும் மாண்பு, மக்களாட்சிக்கு உண்டு என்பதாலேயே, எல்லாவற்றையுமே கூட்டிக்கலக்கி ஒருருவாக்கி. பேருருவாக்கிவிட எண்ணுவது பேதைமை மட்டுமல்ல, கேடுவிளைவிக்கும்.

மலர்களை உதிர்த்து இதழ்கள் குவித்திடலாம்—இதழ்களைக் குவித்து, புதிய பூக்களை மலரச்செய்திட முடியாது.

மலர்களைத் தொடுத்து மாலைகளாக்கலாம் — செடிகள் மாலை மாலையாகவே ஏன் தந்துவிடக் கூடாது என்று எண்ணுவது, வேடிக்கை நினைப்பன்றி, வேறில்லை.

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டச் சொன்னார் சான்றோர்; தனித்தனி கனிகளே கூடாது என்றார் இல்லை.

நமக்குச் சில வேளைகளிலே ஆவல் ஏற்படும், விந்தையான எண்ணங்களெல்லாம் எழும்.

வாழைப் பழம்போல உரித்திட எளிதான தோல் கொண்டதாகவும், பிசின் இல்லாத முறையில் பலாப் பழச் சுவைகொண்ட சுளைகள் கொண்டதாகவும், அது போட்டுக் குதப்பத் தக்கதாக இல்லாமல், மென்று தின்னத்தக்கதாகவும், அந்த அருங்கனியும் ஏறிப்பறித்திடவேண்டிய உயரமுள்ள மரங்களில் இல்லாமல், படரும் கொடியிலேயே இருந்திடவும் வேண்டும்; அக்கொடியும் விதையிட்ட மறு திங்கள் கனி தந்திட வேண்டும், கனி தந்த களைப்பினாலே மடிந்திடவும் கூடாது, நீண்ட காலம் கனி தந்தபடி இருக்கவேண்டும், தானாகவே முளைகள் கிளம்பிடவேண்டும்; மழையும் பனி நீரும் கொண்டே பிழைத்திருக்கவேண்டும், என்றெல்லாம் எண்ணிக்கொள்ளலாம்–விந்தை நினைப்பிலே ஒரு தனிச்சுவை உண்டல்லவா!!

தம்பி! இயற்கையின் முறையினை உணர்ந்திடும் நாளாகவும் பொங்கற் புதுநாளைக் கொண்டிடுதல் வேண்டும்—இஞ்சியும் மஞ்சளும், அவரையும் துவரையும், அரிசியும் பிறவும் உள்ளனவே, இவை பேசுவது கேட்கிறதா!

ஒவ்வொன்றும் தன் 'கதை'யைச் சொல்லப் போனால், காவியங்கள் தலைகவிழும் வெட்கத்தாலே— அவ்விதம், புறப்படு படலம், பகை காண் படலம், காப்புப் படலம், எனப் பல உள, அவை ஒவ்வொன்றுக்கும்.

மிக அதிகமான அளவு மக்கள் பற்றி அறிந்து கொள்ளவே, நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டு விட்டதால், இந்தப் 'படைப்புகள்' கொண்டுள்ள சிந்தை அள்ளும் கதையினை நாம் அறிந்துகொள்ள முயலுவதில்லை.

எல்லாம் நெல் எனினும், ஒவ்வோர் வகைக்கு ஒவ்வோர் காலம் தேவைப்படுகிறது. குறுவைக்குப் போதுமான நாட்கள் கிச்சிலிச் சம்பாவுக்குக் காணாது! ஒரு வகை நெற்பயிற் நீந்தியபடி இருக்க விரும்புகிறது, வேறு சில வகைக்கு நீர் தெளித்துவிட்டால் போதும் திருப்தி அடைந்துவிடுகிறது, சிலவகை ஏற்றுக்கொள்ளும் உரத்தை வேறு சிலவகையான நெற்பயிற் ஏற்றுக் கொள்வதில்லை. நாம், நெடுங்காலமாக, இவருக்கு எந்தப் பண்டம் பிடிக்கும், அவருக்கு என்ன பானம் தேவை என்பதுபற்றியே பேசி வருகிறோம், நம்மை வாழவைக்கும் 'படைப்புக'ளான இப்பயிர் வகைகளின், விருப்பு வெறுப்புப்பற்றி அறிய முனைந்தோமில்லை. ஏன்? வயலருகே சென்றவர்கள் நம்மில் அநேகர் அல்ல! செல்லும் சிலரும் 'அறுவடை' காணச் செல்லும் ஆர்வத்தை மற்றபோது காட்டுவதும் இல்லை.

ஒவ்வோர் விளைபொருளும் ஒவ்வோர் வாழ்க்கை முறை கொண்டுளது. அறிந்துகொள்ளும் முயற்சி சுவையளிக்கும்

ஆனால் நாமோ, அவைகளினால் கிடைக்கும் பயனைப் பெறவும், அதற்கான பக்குவம் காணவும் முயற்சிக்கிறோம், அதற்காக துணிந்து எதனையும் செய்கிறோம், நாம் பிழைக்க. எத்துணை உயரத்தில், எவ்வளவு பாதுகாப்பு அமைத்துக்கொண்டு, தென்னை இளநீர்க் காயைக் கொண்டிருக்கிறது! விடுகிறோமோ? நம்மாலே முடியாதுபோயினும் பிறரைக் கொண்டேனும் பறித்துவரச் செய்து, மேலே உள்ளதைச் சீவி எடுத்து விட்டு, அதற்கு அடுத்து உள்ளதை உரித்து எடுத்துவிட்டு, அதற்கும் பிறகு உள்ள ஓட்டினை உடைத்து, உள்ளே இருக்கும் இளநீர் பருகி இன்புறுகிறோம்.

மதில்சுவரின்மீதேறிச் சென்று, உள்ளே நுழைந்து, பெட்டியைக் களவாடி, அதன் பூட்டினை நீக்கித் திறந்து உள்ளே உள்ள பொருளைக் கண்டு களித்து எடுத்தேகும் களவாடுவோனைப்பற்றி, நாம் என்ன எண்ணுகிறோமோ அதுபோலத்தான் நம்மைப்பற்றி, தென்னை எண்ணுகிறதோ என்னவோ!

இந்தப் படைப்புகளிலே தம்பி! சில பிஞ்சிலே மட்டும் சுவைதரும், சில கனிந்த பிறகே பயன் அளிக்கும், சிலவற்றை உதிர்த்தெடுக்கவேண்டும், சிலவற்றைப் பறித்தெடுக்கவேண்டும், இவை நாம் அவைகளைப் பயன்படுத்தும் முறைகள். அதுபோன்றே, இவை வாழ, வளர.

## அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறை காரணமாக **"திராவிட நாடு"** இதழ் நிறுத்தப்பட்டு, மீண்டும் 3-2-63ல் வழக்கம்போல் வெளிவருமென்பதை விற்பனையாளர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்

—பொறுப்பாளர்.

ஒவ்வொன்றுக்கென அமைந்திருக்கும் வெவ்வேறு முறைகள்பற்றி அறிந்திடும்போதுதான், இயற்கை எனும் பல்கலைக் கழகத்திலே நாம் கற்றுணரவேண்டிய பாடங்கள் பல உள; கற்றோம் இல்லை; என்ற தெளிவு பிறக்கும்.

இத்தனை வகையான வாழ்க்கை முறை மேற்கொண்டு, இத்தனைவிதமான வடிவங்களைக் கொண்டு, இப்பொருள் இருப்பானேன்; எல்லாம் உண்ணும் பொருட்களன்றோ ஏன் இவை இத்தனை வகை வகையாய் இருப்பதனைத் தவிர்த்து, இவற்றின் சுவை யாவும் பயன் யாவும் நன்றாகக் கூட்டி, ஓருருவாகி விளைந்து நமை மகிழ்விக்கக் கூடாது!—என்ற எண்ணம் கொண்டால், என்ன பலன்?

அந்த எண்ணத்தை மிக அதிகமாக்க, வலியுறுத்தத் தொடங்கினால் "நல்ல மனிதன்! நன்றாகத்தான் இருந்தான்! எப்படியோ இப்படி ஆகிப் போனான்!" என்று கூறுவரேயன்றி, "இவனோர் விற்பன்னன்! வேறு வேறாய் உள்ள பொருள் அத்தனையும் ஒரு பொருளாகிட வேண்டுமென்று விழைகின்றான்" என்று கொண்டாட மாட்டார்கள்.

இயற்கை விளைவிக்கும் படைப்புகள் போன்றே, எண்ணமெனும் கழனியிலும் எத்தனையோ விளைகின்றன! அவற்றின் பயன் யாவும் கண்டறிந்து எடுத்துச் சுவை பெறல், அறிவுடைமை.

கருத்துகள் பல மலர்வது, பல பண்டங்களை இயற்கை தருவது போன்றதாகும். அவை வெவ்வேறு முறைகள் கொண்டனவாய் இருப்பினும், முடிவில் ஒரு பயனே பெறுகின்றோம். அந்தப் பயன் பெறும் முறையிலேதான் செம்மை தேவை; படைப்பின் முறையில் அல்ல!

தம்பி! இயற்கையோடு அளவளாவ, நமக்கெல்லாம் நேரமுமில்லை, நினைப்புமில்லை, நகர வாழ்க்கையும் நாகரிகப் போக்கும் இயற்கையின் கோலத்தையே மாற்றிடச் செய்துவிட்டன.

பழந்தமிழர் அதுபோல் இருந்திடவில்லை: புலவர்களின் கண்கள் இயற்கையைத் துருவித் துருவி ஆராய்ந்தன; சங்ககாலப் பாக்களில், எத்தனை பூக்களைப்பற்றிய செய்தி அறிகிறோம், அன்று அவர் ஆக்

கிய கவிதைகளினுல், காவும் கனியும், கரியும் கடுவனும், அருவியும் அளிவண்டும், இன்றும் நமக்குத் தெரி கின்றன.

மாத்தின் இளந்தளிர்வருட
வார்குருகு உறங்கும்
நீர் சூழ்வளவயல்

கண்டனர்; கவிசுரந்தது.

நீர் வளமிக்க வயலோரம் உள்ள மாமரத்தின் தளிர் தடவிக்கொடுக்க, நாரை இனிது உறங்குகிறதாம்!

கழனிக் கரும்பின்
சாய்ப்புறம் ஊர்ந்து
பழன யாமை பசுவெயில்கொள்ளும்.

பாங்கினைப் பார்க்கிருர் புலவர்.

நன்செய் நிலத்தில் விளைந்துள்ள கரும்பின் வழி ஏறிக் காலை இளவெயிலில் ஆமை காய்கிறதாம்.

இரவெல்லாம், பாவம், நீர் நிரம்பிய இடத்திருந்த தால், உடலுக்கு வெப்பம்தேவைப்படுகிறது; இளவெயி லில் காய்கிறது, ஆமை!

தம்பி! கவனித்தனையா, புலவர் தந்துள்ள கருத் துள்ள பதம் ஒன்றை—காலை வெயில் என்று கூறினுர் இல்லை—வெயிலில் காய்ந்தது என்று சொன்னுரில்லை—பசுவெயில் என்கிருர்—செல்லமாக!!

ஆமை, வெயிலிலேயே நீண்டநேரம் இருக்கப் போவதில்லை—ஏன்? என்கிருயா, தம்பி! புலவர் கூறு கிருரே, புரியவில்லையா? எங்கே கூறினுர் அதுபோல என்கிருயா? அப்பொருள், அவர் கூறியதிலே தொக்கி இருக்கிறது. கரும்பின்மீது ஏறி அல்லவா ஆமை பசு வெயில்கொள்கிறது! கரும்பின்மீது எப்படி ஆமை அதிக நேரம் இருந்திட இயலும். உழவன், அப்பக்கம் வந்துவிடுவானன்ருே!

மாந்தளிர் தடவிக்கொடுக்கத் துயில்கொள்ளும் நாரை! கரும்பினில் ஏறி பசுவெயில் கொள்ளும் ஆமை!

உறங்கும்நிலை! விழித்து நடமாடி உடலுக்கு வெப் பம் பெறும் நிலை!

நெடுங்கழி துழை இய
குறுங்கால் அன்னம்
அடுப்பு அமர் எக்கர்
அம் சிறை உலரும்:

உப்பங்கழியிலே மீன் தேடி உண்ட அன்னம், அடும்பங் கொடி படர்ந்திருக்கும் மனல்மேட்டில் ஏறித் தன் சிறகை உலர்த்திக்கொள்கிறது.

ஏறக்குறைய நீராடிவிட்டு வந்து உடலை உலர்த்திக் கொள்வதுபோன்றது.

இதுபோல், இயற்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால், எழில் கண்டு இன்புறமட்டுமல்ல பயன் பெற்றிடவும், இயற்கையின் பொருள் விளக்கிக் கொள்ளவும் முடிந்தது, பழந்தமிழர்களால்.

கருணனந்தம் தந்துள்ள கவிதை காட்டுதல் போல்,

"உலகம் வியக்க நிலவிய புகழும்,
கழகம் வளர்த்த பழந்தமிழ் மொழியும்
அறநெறி பரப்பும் குறள்முறை தழுவிப்
பிறரைப் பணியாத் திறலும் படைத்த
தந்நேர் இல்லாத் தமிழக உழவர்
பொன்னேர் பூட்டி செந்நெல் விளைத்தே
ஆண்டின் பயனை அடைந்திடும் பெருநாள்;
தூண்டிடும் உவகையில் துள்ளிடுந் திருநாள்!

பொங்கற் புதுநாள் என்பதால், இந்நாளில் மகிழ்வு பெற்று, என்றென்றும் இம்மகிழ்வு, அனைவர்க்கும் கிடைத்திடத் தக்க நிலைபெற வழிகண்டு, அதற்காகப் பாடுபட உறுதி கொண்டிட வேண்டுகிறேன்.

களத்திலுள்ளார் காட்டும் வீரமும் ஆற்றல், அருந் திறனும், சாக்காடு போவதேனும் கலங்கோம் என்று 'சங்கநாதம்' செய்குவதும், புறநானூற்றுக் காட்சிகளை நினைவிற்குக் கொண்டுவந்து சேர்க்கும் வீரக் காப்பிய மாய் விளங்கிவரும் அச்செயலில், இங்கிருந்து களம் சென்ற தமிழ் மறவர் ஈடுபட்டு என் தமிழர், அவர் தீரர்! எதிர்ப்புகட்கு அஞ்சாத வீரர்! என்று நாம் கூறி மகிழ்ந் திடவே நடந்து வருகின்ருர். எந்தக் குறையுமின்றி, எதிர்ப்பை முறியடித்து, சிங்கத் தமிழரெலாம் பொங்கற் திருநாளை, இவ்வாண்டு இல்லையெனினும் அடுத்த ஆண் டேனும், இல்லந்தனில் இருந்து இன்மொழியாளுடன் குலவி, செல்வக் குழந்தைகட்கு முத்தமீந்து மகிழ்ந் திருக்கும் நிலை எழவேண்டும்.

தம்பி! உன்னேடு உரையாடி நீண்ட பல நாட் களாகி விட்டன—நிகழ்ச்சிகள் ஆயிரத்தெட்டு உருண் டோடிவிட்டன—எனவே, ஏதேதோ கூறவேண்டு மென்று ஆவல் எழுகிறது, எனினும் எல்லாவற்றினை யும் ஓர் மடலில் அடைத்திடுவது கூடாது என்ற உணர்வு மேலும் பல கூறிடவிடவில்லை.

விழா நாள் மகிழ்ச்சி பெறும் நாள்; இன்று பிரச் சினைகள் பலவற்றிலே உன்னை ஈடுபடுத்துவதும் முறை யாகாது.

எனவே, வாழ்க நீ. இல்லத்துள்ளோர். இன்பம் துய்த்து வாழ்க என வாழ்த்துகிறேன்.

கருப்பஞ்சாறும் அதனினும் இனிய சொற் கற்கண்டும் கிடைத்திடும் இந்நாளில், நான் தந்திடும் வாழ்த்தினையும் ஏற்றுக்கொள்வாய்—இது உன் மகிழ்ச் சிக்கு மணம் கூட்ட! என் இதயத்தை உனக்குக் காட்ட!!

அண்ணன்,

அண்ணாதுரை

# இடை வெளி

சி.என்.ஏ. பரிமளம்

மன்றத்தைவிட்டு இருவரும் வெளியே வந்தனர்.

"அரசு உன்னிடம் ஒரு முக்கியமான சேதியைச் சொல்லவேண்டும்"

"கண்ணு, நான் இவ்வளவு விரைவாக எங்கே போகிறேன் என்று உனக்குத் தெரியும்."

"தெரிந்ததால்தான் சொல்லுகிறேன்."

"சரி சொல்."

"உன்னை எனக்குத்தெரியும். உனக்கு என்தங்கையைத்தெரியும். அவளுக்கும் உன்னைப்பற்றித்தெரியும். ஆனுல் இந்த ஊர் நம்மைபற்றித் தெரியாததுபோல் நடிக்கிறது"

"சுருங்கச்சொல்"

"உனக்கும் என் தங்கைக்கும் ஏதோஉறவு இருப்பதாக இந்த ஊர் பேசுகிறது. பேசிவருகிறது. இதைப் பற்றி நான் இவ்வளவு நாள் கவலைப்படவில்லை. இப்போது நம் மன்றத்திலேயே பலர் பேச ஆரம்பித்துவிட்டார்கள். உன்னுடைய காதலைப்பற்றி எனக்குத் தெரியும். ஆனுல், அதே நேரத்தில் உன்னை வற்புறுத்த வேண்டிய கட்டத்தில் நான் இழுத்துவரப்பட்டிருக்றேன். அவர்கள் உன்னையும் என் தங்கையையும் மட்டும் இணைத்துப் பேசவில்லை, உன் கொள்கையையும் இதில் இணைத்துப் பேசுகிருர்கள். 'மறுமணத்தைபற்றிப் பேசுகிருன் மணிக்கணக்காக; ஆனுல் நண்பனின் தங்கை என்றுகூடப் பார்க்காமல் அவள் வாழ்வைப் பாழக்குகிருன். அவளை மறுமணம் செய்துகொள்ள இவனுக்குத் துணிவில்லை" என்கிருர்கள். உன்னையும் என்னையும் மட்டும் பழிக்கவில்லை. நம் உயிரினும் மேலான கொள்கையைப் பழிக்கிருர்கள். இதையே காரணமாகக்கொண்டு நம் மன்றத்தையும் இவர்கள் அழித்துவிடுவார்கள்.

"கண்ணு, அல்லியை எப்படி மறப்பேன்? அவள் காதலை எப்படி மறுப்பேன்?"

"கண்ணு, உன்தங்கைக்கு இல்லையடா உபதேசம், ஊருக்கு" என்று கேலி பேசுகிருர்கள். ஆனுல் ஒன்று, அரசியல் தூய்மையை, சொந்த விசயத்தைக்கொண்டு எடைபோடுகிருர்கள். அது அறிவுக்குஒவ்வாத செய்கையாய் இருக்கலாம். ஆனுல் அது விதியாகிவிட்டது இந்த நாட்டில்."

"முடிவு உன்கையில், என் தங்கையின் வாழ்விற்கும், நம் கொள்கைக்கும்"

✲

"கடைமை முதல், காதல் பிறகு என்பது சரி. ஆனுல் இரண்டுக்கும்இடையே இவ்வளவு பெரிய இடைவெளிவைத்து என்னைக் காத்திருக்க வேண்டாம்.

"இந்த இடை வெளியே சற்று நீண்டுவிட்டால், நீ எப்படித் தாங்குவாய் அல்லி!"

"இடைவெளியை குறைப்பதற்குதான், திருமணத்தைப்பற்றி என் அன்னையிடம் பேசச்சொல்கிறேன்."

"அல்லி நான் சொல்லப்போகும் விசயத்தைச் சற்றுக் கவனமாகக் கேள். காலையில் நான் ஒரு மருத்துவரைச் சந்தித்தேன். எலும்புருக்கி நோய் என் உடலைஅரித்து வருவதாகச் சொன்னுர். வாழ்வின் கடைசிப் படிக்கட்டில் இருப்பவன் நான். நீயோ முதல் படிக்கட்டில் இருப்பவள். நான் உன் அருகில் வருவது என்பது முடியாது. உன்னை நான் கடைசிப் படிக்கட்டுக்கு அழைத்துச் செல்ல விரும்பவில்லை. உனக்கும் எனக்கும் இடையில் இடைவெளியை அதிகப்படுத்துகிறேன் — பாலம் அமைக்க முயற்சிக்காதே. புதிய பாதையை அமைத்துக்கொள்.

✲

"ரங்கா! இந்த ஊரில் இன்னெரு புதிய துணிக்கடை......"

"வழக்கப்படி செய்யறதுதானுங்களே! முடிச்சுடுறேன்."

"இல்லை. இந்தக் கடைக்குச் சொந்தக்காரன் கண்ணன். ஊரில், அவனுக்குச் செல்வாக்கு அதிகம் அதனுல் இந்த முயற்சியை முளையில் கிள்ளவேண்டும்.

"என் வேலையை ஆரம்பித்துவிடுகிறேன்."

✲

அந்தச் சிறிய வீட்டினுள் நுழைவதற்கு அவனுக்கு ஒரு தடையும் இல்லை. அங்கு இருந்ததும் ஒரு சிறிய பெட்டி.

"யாரது?"

"குரல் எழுப்பாதே! உன் கதை முடிந்துவிடும்."

"நேற்று வரை என் கதை முடிந்தது என்றுதான் நினைத்திருந்தேன். ஆனுல் இன்று ஓர் அற்ப ஆசை என் கதை தொடருமோ என்று."

"என்ன புதிர் போடுகிருய்!"

"இல்லை. அந்தப் பெட்டியிலே இருப்பதோ சிறிய தொகை. என் தோற்றத்தில் இருந்தே என் நிலைமையைத் தெரிந்துகொண்டிருப்பீர் என்று நினைக்கிறேன். என் அண்ணன் எனக்கு மறுமணம் பேசுவதற்கு அடுத்த ஊர் சென்றிருக்கிருர். முடிந்துவிடும் எனும் நம்பிக்கை எனக்கு. தடை ஏதாவது ஏற்பட்டால், நாளை உங்களிடமே இந்தத் தொகையை நானே தருகிறேன். என்னை உங்கள் தங்கையாக நினைத்துக் கொள்ளுங்கள். என் மறுமணத்தைப்பற்றித்தான் கனவு கண்டுகொண்டிருந்தேன். அதைப் பாதியில் கலைத்துவிட்டீர்கள். ஆனுல், என்வாழ்வையும் அப்படிப் பாதியில் கலைக்காதீர்கள்!!"

"அம்மா, இரும்புப் பெட்டிகளை உடைத்தவன்தான் நான். ஆனுல் எனக்கும் இதயம் உண்டு. உனக்கு மறுமணம் செய்துவைக்கவேண்டியது என் பொறுப்பு"

✲

"அல்லி உன்னைப் பார்த்துச் சொல்லவேண்டும் என்றுதான் துடித்துக்கொண்டிருந்தேன். நான் மறுமணம் செய்துகொள்ளப் போகிறேன்."

[24-ம் பக்கம் பார்க்க]


புத்தியிலா
உலகமிது!

மண அறையில் தலை கவிழ்ந்து
அமர்ந்திருந்த மை விழியாள்
மாந்தளிர் மேனி அழகுடையாள்
மணவாளன் தந்த பல அணிகள்பூண்டு
மயில் கழுத்து நிறச்சேலை ஒயிலளிக்க
'மகராசி' போலிருந்தாள் மன்றம் காண!
இவள் 'ராசிக்காரி' அறிவேன் முன்பே
'ஆசீர்வதியுங்கள்' அனைவரும் என்றே
மார்புடையப் பாடுபட்டு அவளைக் காத்த
மாமனவன் மகிழ்ச்சிப் பொங்கக் கூறினனே!

✽

வளர்த்துவந்தேன் வண்ணக் கிளியைப் போலே
எண்ணத்தில் பால்வார்த்தாள், என் அரசி
இன்றுமுதல் என் பொறுப்பு இல்லை, இல்லை,
ஏற்றவனைப் பெற்றுவிட்டாள் வாழ்வாள் நன்றாய்.
இது அந்த முதியவரின் பேச்சு; மூச்சு
சின்னாளில் பிரிந்ததய்யோ, வேலை முடிந்ததென்று.

✽

அப்பா'வாய் இருந்தமாமன் மறைந்த தாலே
அவளுக்கு இனி 'அவரே' அவனி; முற்றும்
அன்பாகத்தான் இருப்பார்,
அணிகள் தந்தார்
ஐநூறு அறுநூறு விலை இருக்கும்
வேலையிலே ஊதியமும் மிகுதி உண்டு
வேறெந்தத் தொல்லையுமே அவருக்கில்லை
வேலவன் துணைபுரிவான் என்று வேணி
வேதனையைத் துடைத்துவிட்டாள்
**வேலன்** காண!

✽

இரண்டொருநாள் ஆயிற்று
வேலன் வீட்டில்
வேறெவரோ சிலர் வந்தார்
பேசிச் சென்றார்
வேலை விஷயமது என்றெண்ணி வேணி
இருக்கின்றாள் தூண் மறைவில்
நாணிக்கோணி.

✽

வேலன் மெள்ள வெளியிட்டான்
உண்மையினை
"வேணி! உன்னை, எப்பாடுபட்டேனும்
பெறவே எண்ணி
உன் 'மாமப்பா' கேட்ட
பொருள்யாவும் தந்தேன்!
எல்லாம் என் உடைமை அல்ல; இரவல்;
எடுத்துக்கொடுத்திடு கண்ணே!
அவர் ஏசுமுன்னே!"

✽

ஏனிந்தச் சூது இவர் செய்தல் வேண்டும்
என்றாலே ஆகாது என்று சொன்னால் என்ன?
என் மனதை மயக்கி இன்று குலைக்கின்றாரே!
இவர்போக்கு எங்கெங்கு கொண்டு செல்லும்
எண்ணினாள் இதுபோலெல்லாம் வேணி
எதிர்த்துப் பேசிடும் பெண் அவள் அல்ல அல்ல!
அவர் காணும்போது இரண்டோர் கண்ணீர் சிந்தும்
அவர் கேட்டபடியே அணிகள் தந்துவிட்டாள்

✽

நகைபோனதாலே நகை இழந்தாளில்லை
நயந்துபேசி அவன் மகிழ்வித்தானே!
பொய்யான வார்த்தைகளைப் பேசலாமோ
பொல்லாதவர் இந்த ஆண்கள் கூட்டம்!
இல்லாததெல்லாம் சொல்லிப் பெண்ணைக் கொள்வார்
இதயத்தை எப்படியோ தமதாக்கிக் கொள்வார்!
வேணி இதுபோலப் பேசவில்லை
வேலன் அறிந்துகொண்டான் விழியே கண்டு!

✽

ஓராருண்டு முடிவதற்குள் வேலன்
ஒன்பதிடம் மாறிவிட்டான் அய்யோ!



[அண்ணாதுரை]

ஒருவேலைபோய் மற்றோர்வேலை வந்தால்
ஒன்பதும் பத்துமாய்க் குறையும் கூலி;
இது காணத்தானோ மிக ஆர்வம்கொண்டு
பிறந்திட்டான் ஒருபிள்ளை வேணிக்கென்று
கேட்பானா வேலன் இதை? கேளான்!
வாரி அணைக்கின்றான் தங்கத்தை, தன் சொத்தை!!

✲

போட்ட நகை திருப்பிப் பெற்றுவிட்டார்
போடடா கண்ணே! முதுகில் மூன்று
அம்மாவை ஏய்த்திட வேண்டாமென்று
அப்பாவிடம் சொல்லு; வழிபடுத்து!
வாழ்விக்க வந்த எங்கள் கோவே!
வளர்ந்திடுவாய் குலக்கொடியே! என்றாள் மாது.

மூவாண்டு உருண்டதுகாண், வேலன் முகம் இருள,
நாடாண்ட பயலோடா! நடையைக் கட்டு என்றுரைத்து
நாலாறு இடத்தினிலே அவனை விரட்டிவிட்டார்.
தெருக்கூலி ஆகிவிட்டான் வேலன்,
வீட்டில் தொட்டிலிலே ஒன்றுளது
தொட்டிழுக்கும் மற்றொன்று
மூன்றாவது ஒன்று அவள் வலிவை
முறித்த பிறகே வெளிவந்தான்!
தங்கமே! தாலேலோ! என்ற பேச்சில்லை
என் செய்வோம் என்ற பெருமூச்சு;
ஏழைக்குக் குடும்பம் ஏகமாய்ப் பெருத்துவிட்டால்
அச்சு முறியுமன்றோ, அவதியன்றோ!
அந்தநிலை வந்ததய்யா வேலன் குடும்பம் தன்னில்.

✲

வேற்றார்கள் பலசென்று வேலை தேடி
வேலன் திடும்பிடுவான் வேலையற்று
கோலம் இழந்த மயில் குமுறிடுவாள்
குழந்தைகளோ 'கோ'வென்ற ஒலி எழுப்பும்.
குழலப்பா! யாழப்பா! என்று யாரும்
குழந்தைகளின் ஒலிபற்றிச் சொன்னாரில்லை
அவன் செவிக்கு அவ்வொலியே நாராசமாக,
அவன் 'தந்தை' நிலைமறந்தான்; தத்தளித்தான்.

✲

வேலையில்லா ஏழை என்ன செய்வான்?
வேதனையைப் போக்கவழி இல்லை; கண்டாள்.
வீடுபல கூட்டி மெழுகியேனும்
பிழைக்கும் வழி தேடிடுவேன் விம்ம வேண்டாம்.
கல்லுக்குள் தேரைக்கும் உணவு உண்டாம்; கதை கேட்டேன்
கலங்காதீர்! என்றவளும் கூறுகின்றாள்.

✲

ஆடவன் நான் எங்கும் அடிமையாகி
அடிபட்டும், உதைபட்டும், இருத்தல் ஆகும்
அய்யோ! உன்னை, நான் இருக்கும் நிலையினாலே
நாலுபேர் பற்பலவும் பேசுவாரே
வீடு வீடாக வேலை செய்யச்சென்றால்,
விம்மினான் வேலன், வேதனையுற்று
வேணமட்டும் ஆறுதல்கள் வேணி தந்துவந்தாள்.

✲

வேலை செய்யப்பல வீடு போவாள் வேணி
வேலை தேடி அலுத்து வேலன் வருவான் வீடு
விபரீதமான பல எண்ணங்களோடு!

✲

சோறு கறியுடனே சுவைக்க அளிப்பாள் வேணி!
சொல்லட்டுமா ஒரு சேதி என்று பேச நிற்பாள்
போ! போ! என் எதிரில் நீ நில்லாதே
கல்லும் கரையும் உனைக் காணும்போதே
கட்டினவன் நான் இன்று கை ஏந்துகின்றேன்
கண்ணாலே உனைக்காணக் கூசுகின்றேன் என்றான்.

✲

வேலை செயும் இல்லத்தில் உள்ளோர் பல்லோர்
வேணியை ஏசுவரோ, வெகுண்டுமேதான்
கெஞ்சிக் கூத்தாடியன்றோ வேணி
மிஞ்சும் சோறுகறி பெறுவாள் அங்கு;
இந்நிலையில் இவளை இருக்கவிட்டு
எனக்கு அவள் 'கணவன்' எனப் பெயரும் ஏனோ!
அவள் 'பிழைக்க' அவள் உழைப்பு தருகின்றாளே
அவளன்றோ குழந்தைகட்குத் தந்தை யானாள்
எனக்கு இங்கே இனி என்ன வேலை?
இருப்பதுவும் இறப்பதுவும் வெவ்வேறல்ல!!

✲

வேலன் மனக்குகையில் வேகமாக
வேறு நச்சரவம் புகுந்து
இடம் பிடித்துக்கொண்டு
இம்சிக்கத் தொடங்கிற்றே மேலும் மேலும்!

✲

கூட்டி மெழுகுகிறாள் அழுக்கெடுக்கத் துவைக்கின்றாள்
மூன்று பிள்ளைகளும் நானும் உண்டிட
சோறும் கறியதுவும் பெற்று வருகின்றாள்,
வேலைக்காகத்தான் பெறுகின்றாளா?
வேறேதும் விபரீதம் உண்டோ, அய்யோ?
வேலன் இவ்வெண்ணம் கொண்ட பின்னர்
வெறுத்திடவே தலைப்பட்டான் வேணி தன்னை.

✲

மாசற்றவள் வேணி என்பான் ஓர் நாள்,
மனம் குழம்பி வேறோர் நாள் 'கள்ளி' என்பான்;

ஏன் இத்தனை நேரம்? என்ன? என்பான்,
எது சொன்னால் எனக்கென்ன தெரியும் வேணி!
இழிவாக நடந்தாய் நீ என்றறிந்தால் பின்னர்,
என் பிணமே திருக்குளத்தில் மிதக்கும் என்பான்.

✲

எவனுடனே குலுக்கிப் பேசி நின்றாய்?
ஏடி! நானென்ன குருடா, சொல்லு.
கூட்டுக் கோல்தூக்கி நீ! ஆனால் பாரேன்,
நாட்டுக்கு ராணிபோல் நடை நடக்கின்றாய்!
பார்த்தேன் நீ பசப்பி நின்ற கோலம்
பட்டாணிக் கடை அருகே, வெள்ளி மாலை.
பக்கத்தில் நின்றவன் யார்? மாமன் தானே!
பதறிப் பொய்யை மெய் ஆக்கிடப்போமோ!
வெடவெடத்து போய் நின்றாள் வேணி
வேலவன் இதுபோலெல்லாம் கேட்டபோது.

✲

வேலைக்கு நான் சென்று விபரீதம் காண்பானேன்
வீடுதனிலிருப்பேன், சோற்றுக்கு வழிகாட்டு
வேணி இதுபோலச் சொன்னாள்,
வேலன், வேறாகப் பொருள் கொண்டான்
வேகம் கொண்டான்.
சோற்றுக்கு வழி காட்டமாட்டாதவனே!
உனக்கு,
சொரணையும் ஒரு கேடா! சொல்லு, சொல்லு,
சொகுசுகாட்டி, நீ வாழ, பிள்ளைகுட்டி வாழ
நான் பாடுபட்டு வருகின்றேன், நாய்போல் நித்தம்
ஏசிப் பேசுகிறாய், என்னாலே பிழைப்பவனே!
என்றெல்லாம் பேசாமற் பேசுவதே
வேணியின் புதுப்போக்கின் பொருள்
என்றெண்ணுகிறான்.
கண்ணீர் பொழிகின்றான், கரைகிறது அவள் மனமும்
எண்ணாதே தவறாக! என் மரபு அறிவாயே!
திண்ணமாய் வேலை விரைவில் கிடைத்துவிடும்
வேறு வேறு வீடுகளில் வேலை பல செய்துவரும்
வேணி மறைந்திடுவாள்! உன் 'தாதி' ஆகிடுவாள்!!

✲

புன்னகையொன்று வந்தது, போனது;
புள்ளினம் பாலையில் வருவதுபோலே!
இதழ் சிரித்தது, இதயம் அல்ல!
இம்மியும் வேலன் கொண்ட வெப்பம் குறைந்திடவில்லை.

✲

மீண்டும் மனக்குழப்பம்; நச்சரவு.
மீண்டும் வெகுண்டுரைத்தல்; விபரீதம்.
கண்டபடி ஏசுகிறான், வேணி
வேலை செயும் இடமெல்லாம் சென்று சென்று.

கண் சிமிட்டிப் பயலெங்கே! காலை உடைத்திடுவேன்!
வேலைசெய்ய வந்தவளை, வேறு பார்வை பார்த்த
வெறிப்பயல் இங்குதானே? வேங்கை வந்திருக்கின்றேன்
என்றெல்லாம் வேலன் ஏதேதோ பேசுகிறான்.
வேணிக்குப் பேரிடியாய் ஆனது அவன் போக்கு.
வேலைக்கு நீ வேண்டாம்; வேலனுடன் வீட்டில் இரு!
பழிபோட்டுத் தலைவாங்கும் பாவிப் பயலிருக்க
பல்லை நீ காட்டி இங்கு பசப்பாதே, போ! போ! போ!
என்றுரைத்து விரட்டிவிட்டார் வேலை தந்தோரெல்லாம்.
எவரும் இவளுக்கு வேலைதர ஒப்பவில்லை,
வேலன் வெறிபிடித்தோன், வெட்டுவான்தலையையென்று,
வேகமாய்ப் பரப்பினர்காண், விஷவாடை நெடுகலுமே!

✲

அரைவயிற்றுக் கஞ்சிக்கும் வழி இல்லை
பிள்ளைகளோ, பெரும் தொல்லை!
குற்றம் செய்துவிட்டேன், குணவதியே
பொறுத்திடு நீ, என உள்ளம் உரைத்திடுது
உதடசைய மறுத்திடுது! புருடனன்றோ!
நானிருக்கும் இடந்தன்னில்
நலிவுதான் முந்திவரும்
நானெதற்கு, நெடுமரம்போல்!
எப்படியும் பிழைத்திடுவாள்
குழந்தைகளை வளர்த்திடுவாள்
எங்கேனும் நெடுந்தொலைவு
சென்றுவிடவேண்டும் நான்.
இங்கே நானிருந்தால் இம்சைதான் வேணிக்கு.
இவ்வாறு எண்ணினான் ஏக்கமுற்ற வேலன்.
காரணம், கோபம் அல்ல! கசப்பு எழுந்ததாலும் அல்ல!
காரணம் வேறொன்றுண்டு! கருத்துக் குழம்பிடுது!!
பித்தனாகி விடுவோம் என்ற பயம்
கொண்டான் வேலன் தானும்
பித்தனே ஆகிவிட்டான் என்றார் பார்த்தோர்.

✲

எங்கோ சென்றுவிட்டான் வேலன்.
எவரும் காணவில்லை.
அவள்தேடா இடமும் இல்லை;
அலைகின்றாள் ஊரூராக!
இன்னவிதம் இருப்பார்! வேணி!
வேணி! என்றழைப்பார்
இந்தப்பிள்ளைகளின் 'அப்பா' அவர், அம்மா!
கண்டீரா ஐயாவே! கண்டீரோ பெண்டீர்காள்!!
வேணி இது போலக் கேட்டாள்; விடைவருமா!
சேற்றிலே அமிழ்ந்து போன
செங்கல்லாய் ஆனான் வேலன்!

✲

வேலன் கிடைக்கவில்லை; வேணி துயர் மாளவில்லை.
பிள்ளைகளை வளர்த்திடவும், பிரிந்தவனைத் தேடிடவும்

வேணி நடக்கின்ருள் ஊரூராய்.
கெஞ்சிப் பெறுகின்ருள், பழஞ்சோறு எச்சிலிலே!
அங்கம் கழுவிடவே வேறென்ன வழி உண்டு!!

✲

பெற்ருளே பிள்ளைகளை, காட்டுகின்ருள்;
பிழைத்திடவோ மார்க்கமில்லை, பேசுகின்ருள்;
பட்டினியாய் நானிருக்க ஒப்பினுலும்
பாலகரின் முகம் பார்த்துப் பதறுகின்றேன்
இவர்க்காக ஏதேனும் தாருமம்மா
என்றேதான் கேட்கின்ருள், இறைஞ்சுகின்ருள்.

✲

செல்லாத இடமில்லை, வேலை தேடி
கொல்லாதோ கும்பியதைக் கொடிதாம் பசியே!
எங்கே அவர் சென்ருர்? என்னுனர்?
ஏக்கமது பிய்த்தது அவள் நெஞ்சத்தை
கண்கள் காட்டினவே, கலக்கம், பீதி
கையோ, தன்னுலே சென்றதுகாண்கழுத்தின் பக்கம்,
'திருத்தாலி' இருக்கிறது அன்ருே அங்கு!

✲

தெருத் தெருவாய் அலைந்தாலும்
அவளைக் காண்போர், முகம் சுளித்து
'சகுனத்தடை' என்று செப்பார்கள்,
அம்மட்டில் இலாபம்!
சாக்காட்டை நோக்கி அவர் சென்றுவிட்டால்?
ஐயயோ! அது வேறு வருமோ?
அஞ்சுகிருள், அலறுகிருள், நிலையை எண்ணி.
மஞ்சள் கயிறதனைக் கரத்தால் பற்றிக்கொண்டால்
மணவாளன் உயிர்போக முடியாதென்று
எண்ணமது கொண்டிட்டாள் போலும் மாது!

✲

மலர்கள் தரும் கொடியதுவும் காய்ந்துபோனுல்,
மணம் விரும்பும் மக்கள் அதை நாடுவாரோ?
இவள் ஏழை, அனுதை ஆன பின்னர்
எவருக்கு இவள்பால் பார்வை செல்லும்?
உருகுவார் சிலபேர் கண்டு! உசாவுவார்
மற்ருேர், சேதி! கருகுவாள் மாது மேலும்,

✲

மக்களைக் காட்டுகின்ருள், மாதாவானுள்
மணவாளன் எங்கெனவே சொல்கின்ருளா?
மடக்குகிருள் இதுபோலக் கேட்டொருவள்
மதியற்ருர் மற்றவர்கள் எனும் நினைப்பால்;
மாய்மாலம் செய்கின்ருள் மாது என்று
மனதினிலோர் எண்ணமுமே கொண்டதாலே!
மருவியவன் எங்கே என்று கேட்பாய் பெண்ணே!
மணவாளன், இதுகட்கு உண்டோ என்ருள்
மல்லுக்கு நிற்பதிலேவல்ல பெண்ணுள்.

✲

எத்தனையோ இதுபோல ஏச்சுப் பேச்சு
எல்லாம் இப்பாலகரைக் காப்பாற்றத்தான்.
எத்தனைதான் கேட்டிடுவாள் மானம் கெட்டு,
ஏனிந்த வாழ்வு என வெறுத்துவிட்டாள்.
நெஞ்சிலே பெருநெருப்பு மூட்டிவிட்டால்
நேரிழையாள் கருகாமல் இருக்கப்போமோ?
செத்திடுவேன் மானம் காக்க என்றே
செப்புகின்ருள், பொங்கிவரும் கண்ணீராலே!

✲

காப்பாற்ற முடியவில்லை, அதனுலென்ன?
கையேந்தும் நிலை அழிப்பேன், கொல்வேன் என்ருள்
செத்து நடமாடும் பெண்ணுள் சீறி!
பெற்றிட அவள்பட்ட பாடதனை
அவள் அறிவாள், அறியும் அவனி;
பெற்றவளே இதுபோது உறுதி கொண்டாள்
மற்றவர்க்குப் பாரமாக மக்கள்தம்மை
விடடு வைத்தல் ஆகாது என்றுதானே!

✲

ஊட்டி வளர்த்தவளே உயிர் குடித்தாள்
ஓர் மடுவில் குழந்தைகளைத் தள்ளிவிட்டாள்
பிணமானுர் இருமக்கள், ஒன்று பாக்கி
தன்னுடனே கொண்டு செல்லக் குளமே சென்ருள்.
ஈ எறும்பு மொய்த்திடாமல் காத்தவள்தான்!
எடுத்தணைத்து இன்பமது கொண்டாள் முன்பு
அணைத்துவிட்டாள் ஆவிதன்னை அன்னை, கையால்,
இந்த அவனிக்கு வேண்டாம் ஓர் தொல்லை என்று.

✲

தாயா? பேயா? தங்கத்தை
அழ அழவா அடித்தாள் என்று
கேட்காத மாதும் உண்டோ
அவள் மகவை அவள் அடித்துத் திருத்தும் போதும்.
இங்கொருதாய், கொன்றுவிட்டாள் இருவரையும்
இருந்தவர்கள் வயிற்றினிலே பத்துத் திங்கள்!
பெற்றவளே, பிணமாக்கிப் போட்டுவிட்டாள்,
பெரும்பாரம் தீர்ந்ததென்றும் எண்ணுகின்ருள்.
மற்றுமோர் மகனையும் முடித்துவிட்டு
மாதவளும் தான்சாக உறுதி கொண்டாள்.
பூவும் பிஞ்சும் போகும் முதலில்
பின்னர் சாயும் கொடியே வேரும் அறுந்து.

✲

இந்நிலையில் எப்படியோ விவரமதை
அறிந்தார், அலறி நின்ருர்;

வந்தததுகாண் போலீசும் நீதிகாக்க
வழியெல்லாம் கூடிவிட்டார் விழி பெற்றோர்கள்!

✲

இப்படியும் ஒருத்தியா இருக்கின்ருள்?
இவளுக்கென்ன, இதயமே இல்லையா
பித்தமோதான்!
இவ்வளவு பெரிய உலகந்தன்னில்
இம்மகவுகளைக் காக்க ஆளா இல்லை!
பிடிசோறு போடவா ஆட்கள் இல்லை!
பிணமாக்கி விட்டாளே, பேயுள்ளத்தாள்.
பிய்த்தெறிய வேண்டாமோ துண்டுதுண்டாய்.
குற்றமில்லை இக்கொடியாளைத்தான்
கொதிக்கின்ற கொப்பரையில் தள்ளினுலும்,
என்றெல்லாம் ஆர்ப்பரித்தார்! இதயம்
உள்ளோர் என்னும் விருது பெற்றோர்!!

✲

கொலைகாரி, கொலைகாரி, ஆமாம், ஆமாம்!
கொலையேதான் செய்துவிட்டேன் மறுக்கவில்லை.
கொடியவள் என்றென்னைக் கூறுகின்ருர்,
தாயுள்ளம் படும்பாடு, அறியாதாரே!
மிகப்பெரிய உலகமிது என்கின்ருர்கள், ஆமாம்!
உண்மை!
வாழ்வுக்குப் போராடி வந்தேன் இங்கு
சாவதுதானே! ஏன் இந்தத் தொல்லை
தந்துயிரை வாட்டுகிருய் என்று கேட்டார்!
ஒருவர் இருவரல்ல, பலரும்; நித்தர்.
செத்துவிட்டார் என் மக்கள் என் கையாலே
சாகத்தான் நானும் புறப்பட்டு விட்டேன்.
இங்கிலையில் இவர்கூடிக் கேட்கின்ருர்கள்
இருக்கவா இடமில்லை உலகில் என்று!
உயிரோடிருந்தால் உருட்டி மிரட்டுகிருர் சாகச் சொல்லி
செத்துத் தொலைத்தாலோ வந்துகண்டு,
வாழவா வழிஇல்லை எனக்கூறி உருகுகின்ருர்!
பொல்லாத உலகமிது என்றுதான்
இதுநாளும் எண்ணிவந்தேன்
புத்திஇலா உலகமிது! இன்று கண்டேன், என்ருள்.

# வெற்றி! -- வெற்றி!!

"மூன்று போட்டிகள்--அவற்றில் உங்கள் திறமையைப் பார்க்கவேண்டும்" என்றது நியூ சேலம் (New Salem) என்ற நகரத்தைச் சேர்ந்த இளைஞர் குழாம் ஒன்று, அவரிடத்தில்!

முதலில் ஓட்டப்பந்தயம்--பின்னர் மற்போர்--அதன் பிறகு குத்துச் சண்டை!

மூன்று பந்தயங்களுக்குமே, நாட்டில் அப்போது கைதேர்ந்தவர் எனப் பெயர் பெற்றவர்கள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர் -- பயங்கரமான போட்டிகள்தான் என்றனர், பந்தயங்களைப் பார்க்க வந்திருந்தவர்கள் "இவராவது ஜெயிப்பதாவது" என்ற முணுமுணுப்புகள் ஒரு பக்கம்!



இத்தனைக்குமிடையே ஓட்டப்பந்தயம் துவங்கியது--பார்த்தவர்கள் அதிசயப்படுகின்ற வகையிலே அவர் ஓடினர் --- 'சாம்பியன்' தோற்கடிக்கப்பட்டார்!

அடுத்து மற்போர்க்களம். மற்போர் வீரன் ---குட்டையான உருவமும் நல்ல உடற்கட்டும் உடையவன்---குறும்பாடு, சண்டையிலே பாய்வதைப்போல் பாய்ந்தான் அவர்மீது, கர்ச்சனையோடு!

அனைவரும் அகலக்கண்களைத் திறந்தவண்ணம் விழியிமைக்காமல் பார்த்திருந்தனர்!

அவன் பாய்ந்தான் --- அவர் ஒதுங்கினர்-- ஆனல் அவனுடைய கழுத்துஅவருடைய கரத்தில்!

முடிவு, மற்போர்வீரன் தரையிலே சாய்ந்தான், மூச்சுத் திணறி!

"சரி அடுத்த பந்தயம் ஆரம்பமாகட்டும்" என்ருர் அவர்!

ஆனல், குழுமியிருந்தவர்கள், பந்தயங்கள் போதுமென நிறுத்திவிட்டனர்-வெற்றிபெற்றவரைப் பெரிதும் பாராட்டினர்!

இந்தப் பந்தயங்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றது வேறு யாருமல்ல, ஒல்லியான உருவம் கொண்ட அமெரிக்க ஜனதிபதி **ஆப்ரகாம் லிங்கன்**, ஆச்சரியமாக இல்லையா?

✲

[17-ம் பக்கத் தொடர்ச்சி]

"எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டாய். உனக்கு என் உளங்கனிந்த வாழ்த்துக்கள். உன்னை மணம் செய்துகொள்ளப் போகும் அந்தப் புதுமை விரும்பி யார்?"

"அரசு"

"கனகா'!!"

"என்ன அல்லி!"

"நீ, உன்மறுமணத்தைப்பற்றிச்சொல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது நானுவது, உன்னை மணப் பாரைப்பற்றிக் கேட்காமல் இருந்திருக்கலாம். இதைக் கேட்ட பிறகு என்னல் உண்மையைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அரசு என் காதலர். இருவரும் மணம் முடித்துக்கொள்ள முடிவு செய்திருந்தோம். இரண்டு நாட்களுக்கு முன் என்னிடம் சொன்ன சேதி, என் வாழ்வையே வேறு பாதையில் திருப்பிவிட்டது. அவருக்குப் பயங்கரமான எலும்புருக்கி நோயாம். என்னுடைய வாழ்வைப் பாழாக்கக் கூடாது என்று நினைத்த இதயம், உனக்கு இரக்கம்காட்டவில்லை. காரணம், நீ ஓர் விதவை. உன்னை மணந்தால், புகழும் வரும், அதே நேரத்தில் உன்னுடன் வாழும்நாட்களை வாழ்வின் இலாப நட்டக்கணக்காக நினைத்துக்கொண்டிருக்கிருர்.முற்றும் என்று இருக்கும்உன்னுடைய வாழ்க்கைப் புத்தகத்தின் வாசகத்தைத் தொடரும் என்று மாற்றி, உன்னுடைய சோகக் கதையின் இரண்டாவது பாகத்தை ஆரம்பிக்கிருர்.

✽

"நீங்கள்தானே, அரசு என்பவர்"

"ஆம். என்ன வேண்டும் உங்களுக்கு"

"என் பெயர் ரங்கன். நடந்த கதை நம் இருவருக்கும் தெரியும். இனி நடக்கப் போவதைப்பற்றிப் பேச வந்தேன். நீங்கள் கனகாவை மணந்துகொள்ளவேண்டும். நேற்றுவரை நான் எதையும் பயமுறுத்திப் பெற்று வந்தேன். அதை என் தோற்றத்தை கண்டே புரிந்து கொண்டிருப்பீர்கள். இன்றும் என் தோற்றம் மாற வில்லை. ஆனல் இதயத்தில் ஓர் மாற்றம். உங்களை மன்ருடிக் கேட்கிறேன். நீங்கள் அவளை மணந்து கொள்ளவேண்டும்.

"ரங்கா இந்தக் கடிதத்தை முதலில் படித்துப்பார்"

கடிதம் கைமாறியது. ரங்கனின் முகமும் மாறியது. ஏனென்ருல் அந்தக் கடிதத்தில் கதையே மாறியிருந்தது.

நண்பா,

கொள்கையைக் காக்க, என்னுடைய தங்கையின் வாழ்வைப் பாழாக்க முடிவுசெய்வாய் என்று நான் நினைக்கவில்லை. ஆனல் அதையாவது நீ, என்னிடம் சொல்லியிருக்கலாம். நம்பிக்கைத் துரோகத்தை உன்னிடம் இருந்து நான் எதிர்பார்க்கவில்லை. நீயும் இந்தக் கடிதத்தை என்னிடம் இருந்து எதிர்பார்த்திருக்கமாட்டாய். உன்னையும், இந்த ஊரையும்விட்டு வெகு தூரம் போகிறேம்.

—கண்ணன்.

கடிதத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு ரங்கன் நடந்தான்.

"ரங்கா, நடந்தவைகளைக் கனகாவிடம் சொல்லாதே. நான் சொன்ன சிறு பொய் என் வாழ்வை மாற்றிவிட்டது. முடிந்தால், உனக்குத் துணிவிருந்தால் அவளை நீயே மறுமணம் செய்துகொள்."

✽

"அத்தான்!"

"அல்லி, நீயா?"

"ஆம். நடந்தவைகள் எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் உளமார நல்லது செய்யவேண்டும் என்று எண்ணித்தான் செய்தீர்கள். கனகாவிடம் சேதியைச் சொன்னவள் நான்தான். என்னை மன்னித்துவிடுங்கள். ஆனல், நடந்தவைகள் உங்களுக்கு மாசு கற்பித்து விட்டன. ஆனல் நீங்கள், ஒரு பெரிய தியாகத்திற்காக என்னிடம் பொய் சொன்னதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். இனி நடப்பவைகள் இனிதாய் இருக்கும்படி நாம் நடந்துகொள்ள வேண்டும்."

"அல்லி, நீ சொல்வது எனக்குப் புரிகிறது. உனக்குத் தெரியும் நான் நல்லவன் என்று. நீ என்னை ஏற்றுக்கொள்கிருய். ஆனல் ஊருக்கு என்ன தெரியும்? உடன்பிறந்த அந்த இருவருக்கும் என்ன தெரியும்? நீயும் நானும் மணந்துகொண்டால், கண்ணனும் கனகாவும் என்ன நினைப்பார்கள். கண்ணனுக்குத் தெரியும் நான் உன்னைக் காதலிப்பது. அவன் நம்மைப்பற்றித் தவருக நினைப்பான். நாம் நாடகமாடி அவர்கள் திட்டத்தை அழித்துவிட்டதாகத்தான் நினைப்பான்.

நம் இருவருக்கும் இடையே உள்ள இடைவெளி இன்னும் சற்று நீள்கிறது, அல்லி!! ✽

பிப்ரவரி 1ல் வெளிவருகிறது!

# "தென்னகம்"

(வார இதழ்)

ஆசிரியர்:

கே. ஏ. மதியழகன் எம். எல். ஏ.

தனி இதழ் 16 காசு. ஆண்டுசந்தா ரூ. 8.

எல்லா இடங்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

'தென்னகம்'

126. மவுண்ட்ரோடு, சென்னை 6.

வாரா வாரம் 'அறப்போர்' படிக்கிறீர்களா?

# "அறப்போர்"

ஆசிரியர்: அரங்கண்ணல், M. L. A.

கலைஞர் மு. க. தீட்டும் 'சிறை நினைவு'

அரங்கண்ணலின் 'அரசியல் கட்டுரைகள்'

கதைகள்! வரலாறுகள்! பிரஞ்சுப் புரட்சி!

முதலியன.

எழிலேடு! எண்ண ஏடு!!

விலை 16 காசு :: பக்கம் 12

அறப்போர், சென்னை-18.




"சிலருடைய வார்த்தை சொன்னது சொன்னாற்போல் அப்படியே பலித்துவிடுகிறதே, அது எப்படி?"

இந்தக் கேள்வி என்னை நிமிர்ந்து பார்க்கச் செய்தது. எதிர் இருக்கையில் இருந்த ஒருவர் மற்றவரைப் பார்த்து இந்தக் கேள்வியைப் போட்டார்.

"ஒருவேளை இதுதான் நடக்கும் என்று உறுதியாகத் தெரிந்துகொண்டு சொல்லியவர் சொன்னதாக இருக்கலாம். அல்லது சொல்லியவர் எதையோ ஒன்றை நினைத்துக்கொண்டு, ஏதோ ஒன்றைக் குருட்டுப் போக்கில் சொல்லிவைக்க, எதிர்பாராத விதமாக அவர் சொன்னது சொன்னபடியே நடந்து முடிந்ததாக இருக்கலாம்!" என்று மற்றவர் நிதானமாகப் பதில் கூறினார்.

"ஒருவேளை, எக்ஸ்ரே மூளை என்று சொல்கிறார்களே, அந்த மாதிரி மூளை உடையவராக இருக்கலாம் அந்தச் சொன்னவர்!"

"அல்லது திரிகாலம் உணர்ந்த ஞானி என்று சொல்கின்றார்களே, அப்படிப்பட்டவராக, அளவற்ற ஆற்றல் பெற்றவராக இருக்கலாம் அவர்."

இப்படிப் பக்கத்திலிருந்த மற்றுமிருவர் பாதி சிரிப்பாகவும், விளையாட்டாகவும், பாதி உண்மையாகவும் தங்கள் உள்ளக் கிடக்கையை வெளியிட்டார்கள்.

நான் வாய் திறவாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். கேள்வி எழுப்பியவரே திரும்பவும் பேசினார்.

"அதோ பாருங்கள் அந்தத் தெரு முனையில் ஒரு மூதாட்டி இட்டலிக் கடை வைத்துக்கொண்டிருக்கிறாள், —அவள் அருகில் வேறொரு பெண் கையில் இரண்டு வயதுக் குழந்தையை வைத்துக்கொண்டிருக்கின்றாள்— தெரிகின்றதா?" என்று அவர் கூறியவுடன் நான் மெல்லத் திரும்பித் தெரு முனையை நோக்கினேன். நான் அப்படிப் பார்க்கத் திரும்புவதற்கும், நாங்கள் அமர்ந்திருந்த பேருந்தி, நகர்வதற்கும் சரியாக இருந்தது. நான் அவசர அவசரமாக அந்த மனிதர் குறிப்பிட்ட மூதாட்டியையும், அவள் அருகில் நின்ற மற்றொரு பெண்ணையும் நன்றாகப் பார்த்துக்கொண்டேன்.

நான் பலமுறை அந்த மூதாட்டியை அதே தெரு முனையில் பார்த்திருக்கிறேன்—இட்டலி, வடை விற்றுக் கொண்டிருப்பதை. அதேபோல் அந்த மூதாட்டியின் அருகில் இப்போது நிற்கும் அந்த மற்றொரு பெண்ணை அண்மைக் காலத்தில் பார்க்கவில்லையென்றாலும், ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு முன்னே, இன்று பார்ப்பது போல் அந்த மூதாட்டியின் அருகில் பார்த்திருக்கிறேன். ஆனால், அன்று அந்தப் பெண் இப்படியா நலிவோடு, மெலிவோடு காணப்பட்டாள்! இப்படியா சோகம் கப்பிய நிலையில் சீரிழந்து காணப்பட்டாள்! அப்போது அவள் கையில் குழந்தை இல்லை. முகத்தில் சோகமில்லை. எண்ணெயிடப்படாமல், ஒழுங்காக வாரப்படாமல் அவளது பட்டுக் கூந்தல் இப்படிப் பரட்டையாகிக் காற்றில் பறந்துகொண்டிருக்கவில்லை. அவள் கட்டியிருந்த அந்தக் கந்தற்புடைவை இப்படித் தோய்க்கப்படாமல், கரிக்கோலத்தில் காட்சியளிக்கவில்லை. 'மூன்றாண்டுகட்குப் பின் நானே ஒரு மூதாட்டியாகி விடுவேன்—சிந்தனைமிகுந்த, கவலை நிறைந்த தோற்றத்தைக் காட்டி' என்று அவள் அப்போது எண்ணியிருக்க மாட்டாள். அவளை அப்போது பார்த்திருப்போர் அவள் நிலை அப்படி மாறிவிடும் என்று நினைத்திருக்க மாட்டார்கள்.

கள்ளங் கவடமில்லாத கன்னிப் பெண்ணாக, அந்நாள் அவள் துள்ளித் திரிந்த காட்சி என் கண் முன்னால் வந்து நிழலாடிற்று.

இந்தத் தெரு, பல்லோர் புழங்கும் தெரு—நாற்சந்தி. இது ஒரே வகை மனிதரையா நடமாடவிட்டுக் கொண்டி



ருக்கின்றது! இந்தத் தெருவிலே வாழ்வோரில்தான் எத்தனை விதம்! இங்கே திரும்பத் திரும்ப வளைய வருவோரில், எப்போதாவது இந்தத் தெருப்பக்கம் வந்துவிட்டுப் போவோரில் எத்தனை எத்தனை விதம்! அவர்களில் நஞ்சினையே முழுக்க முழுக்கப் பார்வையாகக் கொண்ட தீயோராய் இருந்தாலும் சரி, உண்மையே உருவாக, கனிவையே நோக்காகக் கொண்ட நல்லவராய் இருந்தாலும் சரி, அந்த எல்லாருடைய பார்வையிலும் அவள் ஒரே நோக்கினளாய், ஒரே செயலினளாய், ஒரே போக்கினளாகவே அப்போது தென்பட்டுக்கொண்டு திரிந்தாள். வஞ்சனையில்லாத குறுநகை, எதையும் பெரிதாகவோ, அலட்சியமாகவோ எண்ணுத — இயல்பாக அமைந்த பொது நோக்கு. பல்வேறு வகைப்பட்ட மனிதரையும், பல்வேறு வகைப்பட்ட நிகழ்ச்சிகளையும் அடிக்கடி காண்பதால், பல்வேறு வகைப்பட்ட செய்திகளை அடிக்கடி கேட்பதால் எதற்கும் மருட்சியே இல்லாது பழகிப்போன, விதிர்விதிர்ப்பே காட்டாது பழகிப்போன ஒரு பொது நோக்கு. இவ்வளவோடும் அன்று அவள் ஆடிக் குதித்து, படீர் படீர் என்று வார்த்தைகளை வெடித்துக் கவலை என்பதையே அறியாதிருந்த நிலை என் கண் முன்னுல் வந்து நின்றது.

'ஆமாம், இவ்வளவு நாள் அவள் எங்கேபோயிருந்தாள்? இப்போது அவள் எங்கிருந்து திடீரென்று இப்படி அவலக் கோலத்தோடு வந்து நிற்கிருள்?' இந்தக் கேள்விகள் என் உள்ளத்தைக் குடைந்தன. என் எதிரில் இருந்த மனிதர் ஒருமுறை செருமிக்கொண்டு பேசத் தொடங்கினுர். என் காதுகள் கூர்மையாயின. நாங்கள் ஏறியிருந்த பேருந்தி ஓடிக்கொண்டிருந்தது. நல்லவேளை என் எதிரிலும், பின்னுலுமிருந்த மற்றவர்கள், இடையே வேறு எதையும் சளசளவென்று பேசிக் கொள்ளவில்லை. எல்லாரும் அந்த மனிதர் கூறப் போகும் கதையை உருக்கமாக அமைதியாகக் கேட்கத் தொடங்கினர்.

"அந்த மூதாட்டி இருக்கிருள் பாருங்கள். எனக்குத் தூரத்து உறவு.

மூன்ருண்டுகளுக்கு முன்னே ஒரு பையன் என் கடைக்கு வேலைக்கு வந்தான். அவன் ஊர் எங்கோ திண்டுக்கல் பக்கமாம். அவன் பெயர் இரத்தினம். அவன் படித்தவன். எந்த வேலையையும் துடிதுடிப்பாகச் செய்யும் தகுதிபடைத்தவன். மெல்ல மெல்ல என் உள்ளத்துக்கு அவன் மெத்தவும் பிடித்தவனுமானுன், உண்மையாளனுனுன், நம்பகமானவனுனுன், என் பொறுப்புக்கள் பலவற்றை அவன் சிறப்போடு எடுத்து முடித்துக்கொண்டு வருபவனுனுன்.

அந்த மூதாட்டி என் கடையில்தான் தனக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் வாங்கிக் கொள்வது வழக்கம். சில சமயம் கையில் பணமிருக்கும். சில சமயம் பணம் இருக்காது. எந்தச் சமயம் வேண்டுமானுலும் அவள் என் கடையில் வந்து சாமான்கள் வாங்கிக்கொண்டு போவாள். அதிகப் பாக்கி வைக்க மாட்டாள். அவசரத்துக்கு வாங்கியதை உடனுக்குடன் தீர்த்துவிடுவாள். சாமான் அவளே வந்துதான் நேரில் வாங்குவாள் என்பதில்லை. கடனுக வாங்கவேண்டிய சமயத்தில் பெரும்பாலும் அவள் வருவாள். மற்றச் சமயங்களில் எல்லாம் அவள் கமலத்தையே — அதுதான் அந்தப் பெண்ணின் பெயர் — கடைக்கு அனுப்பி வைப்பாள்.

ஒரு நாள் நான் வெளியூருக்குப் போய்விட்டுக் கடைக்குத் திரும்பி வந்தேன். இரண்டு நாட்கள் மிகுந்த அலைச்சல். இரண்டு இரவு தூங்கவில்லை. மிகமிக அலுப்போடு வந்தேன். கடைக்குள் நுழையும்போது இரத்தினம் கடையில் இல்லை. அவனுக்குத் துணையாக வேலை செய்யும் வேருெரு பையன் இருந்தான். நேரம் நடுப்பகல். இரத்தினம் சாப்பிடப்போயிருப்பான் என்று நான் அனுமானித்துக்கொண்டேன். கடையிலிருந்த மற்றப் பையனிடம் நான் பேச்சுக் கொடுக்கவில்லை. அவ்வளவு அலுப்பு. கடையிலிருந்து வீட்டுக்குப்போவதென்ருல், ஒரு கல் தொலைவு செல்லவேண்டும். அலைச்



சலில் ஏற்பட்ட அலுப்பில்லையென்றாலாவது வீட்டுக்குப் போயிருப்பேன். வழியிலேயே சாப்பிட்டும் ஆகிவிட்டது. இப்போது நன்றாகப் படுத்துத் தூங்கவேண்டும். அதுவே தேவை. எனவே கடையிலிருக்கும் உள்ளறையில் அப்படியே போய்ப் படுத்துக்கொள்வதுதான் அப்போதைக்கு எனக்கு மிகமிக முக்கியமாகப்பட்டது. உள்ளே சென்று படுத்துக்கொண்டுவிட்டேன். படுத்துக்கொண்டேன். தூங்கவேண்டும் என்று விரும்பினேன். கண்களை நன்றாக இறுக மூடிக்கொண்டேயிருந்தேன். ஆனால், தூங்கவில்லை; தூங்க முடியவில்லை; தூக்கம் வரவில்லை. சொல்லவேண்டுமா காரணம் அதற்கு! பல்வேறு வகைப்பட்ட வியாபார எண்ணங்கள் உள்ளத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் அப்போதைக்கப்போது தலைகாட்டிக்கொண்டிருந்தன. ஒன்றன்பின் ஒன்றாகவோ, ஒன்றுமாறி ஒன்றாகவோ, வெவ்வேறு வியாபாரச் செய்திகள், வியாபாரக் குறிப்புக்கள் திடீர் திடீர் என்று என் கவனத்தை நோக்கித் தூக்கிப் போடப்பட்டனபோல் வந்து விழுந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக, அதுவரை நான் ஒரு நாள்கூடப் பகல் வேளையில் அப்படித் தலைசாய்த்ததே கிடையாது. சில சமயம் கண்ணைச் சுழற்றிக்கொண்டு, நிலைகுலைய அப்படியே தள்ளியதுகூட உண்டு — தூக்கம் பகல் வேளையில். ஆனால் அந்தத் தூக்கத்துக்கு நான் அனுமதி கொடுத்ததே கிடையாது. அதனை எதிர்த்து எந்தவகையிலாவது ஓட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்த்திருக்கிறேனே தவிர, அந்தத் தூக்கத்துக்கு ஒரு நாள் ஆட்பட்டேன், தலைசாய்த்தேன் என்ற பேச்சே கிடையாது. இவ்வளவையும் பிடிவாதமாக நேற்று வரை செய்துவிட்டு, இன்றுபோய்த் திடுதிப்பென்று படுத்துவிட்டால் நல்ல தூக்கம் வந்துவிடுமா என்ன— பகல் வேளையில்? ஆக நான் தூங்கவில்லை. இப்போது வேண்டிய செய்தி அவ்வளவுதானே! இவ்வளவு தூரம் விவரித்தது அதிகம்தான். இருந்தாலும் பொறுத்துக்கொள்ளுங்கள்.

சிறிது நேரத்தில் சாப்பிடப்போன இரத்தினம் கடைக்குத் திரும்பி வந்தான். உடனே அந்த மற்றொரு பையன் வீட்டுக்குக் கிளம்பினான். இரத்தினம் அப்படியே கடையில் கல்லாப்பெட்டி எதிரில் உட்கார்ந்துகொண்டுவிட்டான். அவன் உள்ளறைப் பக்கம் வரவில்லை.

பின்னும் சிறிது நேரம் ஆயிற்று. வெளியில் வளைகுலுங்கும் ஒலியொன்று என் காதில் வந்து பட்டது — ஒரே ஒரு முறை. அதைத் தொடர்ந்து பேச்சொலியோ வேறு அரவமோ சிறிது நேரம் வரை கேட்கவில்லை. அப்புறம், திரும்பவும் அந்த வளை குலுங்கும் ஒலி கேட்டது. இப்போது அந்த வளை ஒலி இயல்பாக குலுங்குவதால் கேட்பதாகத் தோன்றவில்லை. யாரோ வேண்டுமென்றே கையை ஆட்டி அந்த ஒலியை எழுப்புவதாகத் தோன்றியது. பின்னும் இருமுறை அந்தச் செயற்கை வளை குலுங்கல் கேட்டது. சில இடங்களில், பைராகிகள் சதங்கை போன்ற ஒன்றைக் கையிற்பிடித்துக் கொண்டு கலகலவென்று குலுக்கி ஆட்டுவார்களே, அந்த ஒலியைப்போல் அந்தச் செயற்கை வளை குலுங்கல் திடீர், திடீர் என்று கேட்டது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அது வேறு ஒலியல்ல, வளையொலியேதான்.

"என்ன இது? நேரம் காலம் தெரியாமே இப்படி விளையாடறே!" என்று இரத்தினம் கோபத்தோடு உரக்கப் பேசினான்.

"நானா விளையாடறேன். நீங்கதான் நேரம் காலம் தெரியாமே, வியாபாரம் செய்யற கடையிலே தவம் செய்யற கணக்கா காகிதத்தைக் கையிலே வெச்சுக்கிட்டு, வர்றவங்க போறவங்களைக் கவனிக்காமேகூட உட்கார்ந்துகிட்டு இருக்கிறீங்க! இது வியாபாரம் செய்யற கடைசார்! முதல்லே வியாபாரத்தைப் பார்த்துட்டு, அப்புறம் தூங்கிவிழுவீங்களோ, கையிலே இருக்கிற அந்தக் காகிதத்தைக் கட்டிக்கிட்டு அழுவீங்களோ—உங்கள் விருப்பப்படி செய்யுங்க சார்!" என்று கேலியோடு கலகலப்போடு கூறியது ஒரு பெண் குரல்.

அந்தக் குரலைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. உடனே எழுந்து வெளியே வரலாமா என்றுகூடப் பார்த்தேன். பின்னும் என்ன நிகழ்கிறது என்று மறைந்திருந்த வண்ணமே கவனிக்கவேண்டுமென்று ஒரு எண்ணம் தோன்றியது. காதுகளைத் தீட்டிக்கொண்டு அப்படியே படுத்திருந்தேன்.

"மகா வியாபாரம் பண்ண வந்துட்டே நீ! இந்த நேரம் பார்த்துத்தான் வியாபாரம் பண்ண வர்றதோ— மனுசன் அசந்து கிசந்து உட்காருகிற நேரமாப் பார்த்து?"

"ஐயோ, — ஐயா வெட்டி முறிக்கிறாரு, அசதி வந்துடிச்சி அசதி. உங்களையெல்லாம் தண்டச் சம்பளம் கொடுத்து இங்கே உட்கார வெச்சிருக்கிறாங்களே, அவங்களைச் சொல்லணும்."

"பின்னே நீதான்வந்துடுவே கடைக்கு, வியாபாரம்

பண்றதுக்கு! அசதியில்லாமே எப்போதும் ஆடிக் கிட்டே வியாபாரம் பண்ணுவே!''

"ஏன், நான் வந்தா வியாபாரம் பண்ணமாட் டேன்னு நினைச்சுக்கிட்டீங்களா! நான் மட்டும் இங்கே கடையிலே வந்து நின்னு அயனை வியாபாரம் செய்வேனே!''

"ஓ, அது உண்மை! நீ சொல்றீயே, அது நூத் துக்கு நூறு உண்மை. நீ இங்கே கடையிலே வந்து வியாபாரம் பண்ணக்கூட வேண்டியதில்லே! சும்மா அப்படி ஒரு ஒட்டிலே நின்னுக்கிட்டு இருந்தாலேபோதும், தெருவிலே போற வர்ற அவ்வளவு பேரும் இந்தக் கடைக்கு எதிரே வந்ததும் அப்படியே டில் போட்டு நின்னிடுவாங்க. வியாபாரம் மலை மலையா நடக்கும். ஓரணு விலைபோற சாமானையெல்லாம் நாலணு குடுத் திட்டுக் கையிலேயிருந்து அப்படியே பறிச்சுக்கிட்டுப் போயிடுவாங்க.''

"அய்ய, பேச்சைப் பாருங்க பேச்சை. இந்தப் பேச்சு இல்லேன்னு உங்களுக்குப் பொழைப்பும் இல்லியே!—அதுபோகட்டும், நீங்க கையிலே என்னமோ வெச்சிப் படிச்சுக்கிட்டு இருக்கீங்களே, அது என்னு? எங்கே நானும் கொஞ்சம் பார்க்கிறேன்.''

"இதெல்லாம் நீ படிக்கக்கூடாது. இது லெட்டர். ஒருத்தருக்கு வந்த லெட்டரை ஒருத்தர் படிக்கலாமா?''

"பரவாயில்லே. உங்களுக்கு வந்த லெட்டர்தானே. அதை நான் படிக்கலாம்.'' கடிதத்தை இரத்தினத்தின் கையிலிருந்து அந்தப் பெண் பறிக்க முயல்வதுபோல் தோன்றியது. பதிலாக அந்தப் பெண்ணின் கையை அவன் பற்றிக்கொண்டான்.

"பார்த்தியா, பார்த்தியா! என்னமோ கதை சொன்ன கணக்கா இல்லே இருக்குது! மொதல்லே கையை விடுங்க. இல்லேன்னு வம்பாப்போயிடும். எவனுவது சோமாறிங்க பார்த்துட்டா தின வதந்திக் காரன்கிட்டே போய்ச் சொல்லிப்போடுவானுக! அப் புறம் அவங்க பேப்பரிலே போட்டிடுவாங்க.''

"பேப்பரிலே போடுவாங்களா? என்னுன்னு போடு வாங்க?''

"அது என்னுன்னு போடுவாங்களோ! நானு தின வதந்தி படிக்கிறேன். நீங்கதான் அதை விழுந்துவிழுந்து படிப்பீங்க!''

"சே, நான் எதுக்கு அந்த மட்டத்தைப்போய்ப் படிக்கிறேன்!—இந்த மாதிரி சமாச்சாரம் மட்டும் தின வதந்திக்கு கெடைச்சுட்டா மூணு நாளைக்கு பேரை மாத்தி மாத்திப் போட்டுக்கிட்டே வருவாங்க. அதுவும் அந்தச் செய்தி எப்படிவரும் தெரியுமா?''

"எப்படிவரும்? 'மளிகைக்கடைகொள்ளை! காதலர் கள் கைபற்றிக்கொண்டார்கள்!' அப்படின்னு போடு வாங்களோ?''

"சேச்சே! இந்தமாதிரி இரண்டு அர்த்தத்திலே, அதுவும் அழகான அர்த்தத்திலே செய்தி போடறதுக்கு அங்கே ரசனை தெரிந்த எழுத்தாளர்கள் யார் இருக்கி ருங்க! நீ என்னமோ, ஒரு கலைஞன் வாயிலேயிருந்து எடுத்த எடுப்பிலே வர்றதுபோல அழகான அர்த்தத் தோட இரண்டு தொடர்களைச் சொல்லிட்டே!—ஆமா, அப்படின்னு நீ ஒரு கலைஞள்தானே?''

"என்ன அள்?''

"கலைஞ அள்!''

இருவரும் கெக்கொலி போட்டுச் சிறிது நேரம் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

"அது சரி, தினவதந்தியிலே இந்தச் சமாசாரத்தை எப்படிப் போடுவாங்க?''

"ஏன், என்னைக் குப்பைமேயிறவன் என்று நினைச்சியா?''

"அய்ய, சும்மா சொல்லுங்களே ஒரு வேடிக்கைக் குத்தானே!''

"ஊ ஊ கும். அது முடியாது!''

"சொல்லுங்களே, ஒவ்வொருத்தன் மூளையும் எப் படி வேலைசெய்யுதுன்னுதான் பார்க்கலாம்!''

"நான் எல்லாருடைய மூளையையும் கணக்கு எடுத்தா வெச்சிக்கிட்டு இருக்கிறேன்?''

"கணக்கு எடுக்கறது எதுக்கு? அனுபவத்திலேயே அவங்க அவங்க மூளையைப்பத்திச் சொல்லலாமில்ல?''

"மூளையிலே ஒண்ணும் கோளாறு இல்லே. அந்த மூளையைப் பயன்படுத்தி வேலை செய்யறவங்களிடத் திலேதான் கோளாறு. சிலர் மூளையை மட்டும் பயன் படுத்துருங்க. சிலர் அந்த மூளைக்கு மனசையும் துணையா வச்சிக்கிருங்க. மனசு துணையில்லாமே வெறும் மூளையை மட்டும் வச்சிக்கிட்டுக் காரியம் செய் யறவங்க எப்படியாவது பணம், எப்படியாவது புகழ், எப்படியாவது வெற்றி என்ற போக்கிலே போறவங்க ......இது பெரிய கதை. ஆனு, எல்லாருக்கும் பொது வான கதை......''

"சரி, இந்தக் கதைக்கு இப்படியே முற்றுப்புள்ளி வையுங்க!—வேறே ஏதாவது சிரிக்கிருப்பலே சொல் லுங்கோ!—ஆமா, எப்படியோ பேப்பரிலே போடுவாங் கன்னு சொன்னீங்களே, அது என்னுன்னு போடு வாங்க?''

"அடே, நீ இதை விடமாட்டே போலிருக்கே! அந்த ஆபாசம் எல்லாம் நமக்கு எதுக்கு?''

"சும்மா சொல்லுங்களே, ஒரு வேடிக்கைதானே! இங்கே நம்ம இரண்டுபேரையும் தவிர வேறெ யார் இருக்காங்க!''

"இது வேடிக்கை இல்லே! ஆபாசம்! படு ஆபாசம்! சரி நீ விடமாட்டே! நான் சொல்றேன்! இங்கே வா இப்படி!''

அந்தப் பெண்ணின் காதருகில் இரத்தினம் ஏதோ சொன்னுன். சொல்லிவிட்டு "இப்படித்தான் போடு வான்!'' என்று அவன் உரக்கக் கூறுவதற்குள் குபுக் என்று வெடிச்சிரிப்புச் சிரித்தாள் அந்தப் பெண். அவள் சிரிப்பு ஓயவில்லை. "அடபாவி, இப்படியா போடுவான்!'' என்று சொல்லிக்கொண்டு திரும்பத் திரும்பச் சிரித்துக் கொண்டேயிருந்தாள். சிறுபொழுதில் மூன்ருவது சிரிப்பு ஒன்றும் கேட்டது. அந்தச் சிரிப்பு இரத்தினத் துக்கு உதவியாகக் கடையில் வேலைசெய்யும் மற்ருெரு பையனின் சிரிப்பு. இதில் வேடிக்கை என்ன தெரியுமா? 'நீ ஏன் சிரிக்கிருய்' என்று அந்த மற்றவன் அவர் களைக் கேட்க, 'நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்' என்று அவன் அவர்களைக் கேட்டான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த நான் சிரிப்பை அடக்கமாட்டால் உரக் கச் சிரித்துவிட்டேன்.

என் சிரிப்பைக் கேட்டதும் என்ன ஆகியிருக்கும்? நீங்களே பார்த்துக்கொள்ளுங்களேன். இரத்தினம் வெலவெலத்துப்போனுன். அந்தப் பெண் கடையில் சாமான் வாங்க இனி நிற்பாளா? ஓரே ஓட்டம்! வீடு

## வேலைதேடும் படலத்தில்...!

அரசாங்க இலாகா ஒன்றிற்கு, வேலை வேண்டுமென்று கோரி ஒரு விண்ணப்பம் அனுப்பியிருந்தான் அவன். விண்ணப்பத்திற்குப் பதில் வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்---ஒரு நண்பரின் சிபாரிசு மூலம் அவனுக்கு அந்த வேலையும் கிடைத்தது.

வேலைக்கு அமர்ந்து சில மாதங்கள் கழித்து, ஒரு கடிதம் வந்தது அவனுக்கு. அந்தக் கடிதம், அவனுடைய பழைய முகவரிக்கு அனுப்பப்பட்டுப், பின்பு அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டிருந்தது!

கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோது அவனுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

காரணம், அவன் வேலைகோரி அனுப்பியிருந்த விண்ணப்பம் அதிலேயிருந்தது --- அதோடு ஒரு கடிதம்---அதில், அவன் போதுமான தகுதியைப் பெறவில்லையென்றும், அதனால் அவனை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாதெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது!

மீண்டும் உற்று நோக்கினான்--என்ன அதிசயம்! அந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டிருந்தது, வேறு யாருமல்ல, அவனேதான்!

போய்த்தான் திருப்பிப்பார்த்தாள். அந்த மற்றப்பையன் ஒன்றும் ஓடாமல் திகைத்து நின்றான்.

நான் சிரிப்பை மாற்றிக்கொண்டு வெளியே வந்தேன். இரத்தினம் கிடுகிடு என்று ஆடிக்கொண்டு நின்றான். நான் கண்களில் கடூரத்தை வரவழைத்துக்கொண்டு—செயற்கையாகத்தான்—பேசினேன்.

"ஏண்டா, இது கடையென்று நினைச்சியா? சந்துமுனைன்னு நினைப்பா?" என்று இரத்தினத்தை ஒரு அதட்டு அதட்டினேன். அவன் ஒடுங்கிப்போனான்.

பிறகு அங்கு நான் நிற்கவில்லை. உடனே வெளியே கிளம்பினேன்.

மறுபடியும் நான் கடைக்கு வந்தபோது நன்றாக இருட்டியிருந்தது. இரத்தினத்திடம் ஒரு வார்த்தைகூட நான் பேசவில்லை. வியாபாரம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது நான் கணக்குப் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தேன். ஆயிற்று—கடை எடுத்துவைக்கும் நேரம். இரத்தினம் சுறுசுறுப்பாக எல்லாவற்றையும் எடுத்து வைத்தான். இனிக் கடையைப் பூட்ட வேண்டியதுதான். மற்றொரு பையன் பூட்டுச்சாவி எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். நான் செருப்பை மாட்டிக்கொண்டு கிளம்பச் சித்தமானேன். இரத்தினம் கையில் ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு என் எதிரில்வந்து வினயமாய் நின்றான். நான் என்னவென்று வாயால் கேட்கவில்லை. கண்ணால் அப்படிக் கேட்டுக்கொண்டு அவனை ஏறிட்டுப் பார்த்தேன்.

"ஊரிலிருந்து கடிதம் வந்திருக்குங்க. நான் அவசரமா ஊருக்குப் போகணுமுங்க—நாளைக்கு அல்லது அடுத்த நாளைக்கு!"

"என்ன அவ்வளவு அவசரம்?"

"உடனே புறப்பட்டு வரணுமின்னு இதோ பாருங்க எழுதியிருக்கிருங்க" என்று கடிதத்தை என்னிடம் நீட்டினான் அவன்.

உள்ளத்தில் சுருக் என்றது எனக்கு நான் கடிதத்தை வாங்கிக் கொள்ளாமலே "ஏன்? ஏதாவது கலியாணம் கிலியாணம் என்று ஏற்பாடு பண்ணிப் போட்டார்களா?" என்று வினவினேன்.

என் கேள்வி அவனையும் திகைக்க வைத்தது. சற்றுநேரம் அவனும் ஒன்றும் பேசாமல் அப்படியே நின்றான். பிறகு சொன்னான்:

"அப்படி ஒன்றும் எழுதலீங்க. உடனே புறப்பட்டு வா. அவசரம் என்று மட்டுந்தான் எழுதியிருக்கிருங்க. நான் ஊரிலே இருக்கிறப்போ இரண்டு வருசத்துக்கு முன்னாடி இரயில்வேயிலே வேலைக்கு எழுதிப் போட்டிருந்தேன். ஒருவேளை அந்த வேலைக்கு இப்போ தான் ஆர்டர் வந்திருக்குதோ என்னமோ!"

அவன் அப்படிச் சொன்னதும் மேலும் திக் என்றது எனக்கு. நல்ல பையன், வியாபாரத்தின் நெளிவு சுளுவெல்லாம் தெரிந்தவன், திடீரென்று அவன் கடையை விட்டுவிட்டுப் போய்விட்டால் திரும்பவும் அவன் மாதிரி ஒரு நல்ல பையனைத் தேடிப் பிடிப்பது அத்தனை சுலபத்திலே இல்லையே! அப்புறம் என் விருப்பப்படி நினைத்த இடத்துக்கெல்லாம் நினைத்த நேரத்திலே போய் வந்துகொண்டிருக்க முடியாதே! வேலைக்காக அல்லாமல் வேறு ஏதாவது அலுவலுக்காக அவனை அழைப்பதாக இருக்கக்கூடாதா!' என்று மனத்துக்குள் நான் சொல்லிக்கொண்டதோடு நிற்காமல் "வேலைக்காக இருந்தால் கடிதத்தில் எழுதியிருப்பார்களே! அப்படியொன்றும் எழுதக் காணுமே!" என்றேன்.

"ஆமா, அதுதான் எனக்கும் சந்தேகமா இருக்குது" என்றான் அவன்.

"சரி, விசயம் எதுவோ! ஊருக்குப் போனால் எல்லாம் தெரிஞ்சுபோயிடும்—நீ ஒரு வேலை செய். நாளைக்குக் காலையிலேயே இங்கிருந்து ஊருக்குக் கிளம்பு. அங்கே போய் விசயம் என்னவென்று தெரிந்துகொண்டு, வேறு அவசரம் ஒன்றும் இல்லையென்றால் உடனே திரும்பி வந்துவிடு. அதோடு இன்னொரு சமாச்சாரமும் மனசிலே வைத்துக்கொள்! கலியாணம் என்று ஏதாவது பேச்சு வந்தால் அதற்குப் பிடிகொடுத்துவிட்டு வந்துவிடாதே!" என்று நான் உள்ளர்த்தத்தோடு அவனிடம் பேசினேன்.

"சரிங்க. அப்படியே ஆகட்டுங்க. நான் அந்த மாதிரி ஒண்ணும் பிடிகொடுத்துட்டு வந்துடமாட்டேனுங்க!" என்றான் அவன்.

பிறகு இருவரும் விடை பெற்றுக்கொண்டு பிரிந்தோம்.

அன்றும் மறுநாளும் எனக்கு இரத்தினத்தின் நினைவாகவேதான் இருந்தது. சொல்ல மறந்துவிட்டேனே—அன்று நண்பகல் இரத்தினத்துடன் உரையாடிக்கொண்டிருந்த பெண் வேறு யாருமில்லை. கமலமேதான். நான் அப்போதே வெளியே கிளம்பினேன் என்று சொன்னேன் அல்லவா? அது வேறெங்குமில்லை. நேரே கமலத்தின் தாயாரைப் பார்ப்பதற்குத்தான் போயிருந்தேன். ஆனால், அந்த அம்மா சட்டென்று சொன்ன

வார்த்தை என் மனத்தைப் பெரிதும் கலங்க வைத்தது. எடுத்த எடுப்பில் அவள் ஏன் அப்படிச் சொன்னுள் என்று எனக்கே புரியவில்லை.

"என்னமோ ஆயிரங்காலத்துப் பயிரு. என் பொண்ணு நல்லா இருக்கணும் என்கிறதுக்குத்தான் இவ்வளவு பாடும், பரபரப்பும். நீயும் அந்தப் பிள்ளையாண்டான் நல்லவனின்னு சொல்றே! சூட்டிகையானவன்' சம்பாதிக்கத் தெரிந்தவன், உத்தமமானவன் என்று சொல்றே! உனக்கு எங்கள் குடும்பத்தின்மீது உள்ள அக்கறை எனக்குத் தெரியாதது அல்ல" என்று சொன்னதோடு அந்த அம்மா தன் வார்த்தையை நிறுத்திக்கொண்டிருக்கக் கூடாதா!

"கலியாணம் ஆகி ஒரு வருசம், இரண்டு வருசத்துக்குள்ளே திடீர்னு அந்தப் பையனுக்கு ஏதாவது நேர்ந்துட்டா என்ன செய்யறது! என் பொண்ணு அந்தரத்திலேயில்லே நிக்கணும்!" என்று வெடுக்கென்று அவள் சொன்னுள் பாருங்கள்! அந்த வார்த்தையைக் கேட்டதும் திகைப்பூண்டை மிதித்தவனுனேன் நான். என்ன இருந்தாலும் வார்த்தையின் வேகத்துக்கு ஆற்றல் இருக்கத்தானே செய்கிறது!

என் திகைப்பைக் கண்டபோதுதான் அவள் தான் சொன்ன வார்த்தையின் பொருளை உணர்ந்துகொண்டவளானுள். வெடுக்கென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

என் வார்த்தைக்கு எப்போதும் அவள் அட்டி சொன்னது கிடையாதே! கடைசியில் அவள் ஒப்புக் கொண்டுவிட்டாள்.

ஊருக்குப் போன இரத்தினம் ஒரு வாரம் கழித்துத்தான் திரும்பி வந்தான். அவன் எதிர்பார்த்திருந்தபடியே அவனுக்கு இரயில்வேயில் வேலை கிடைத்திருந்தது. அதற்காகத்தான் அவன் அழைக்கப்பட்டிருந்தான். அந்தச் செய்தி—அவன் என் கடையிலிருந்து போகின்ருனே என்ற செய்தி எனக்கு மனக்கிலேசத்தை உண்டாக்காமலில்லை. என்ருலும் அதை நான் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை.

## பல ரகம்

ஓவியர்களில் பலரகம் உண்டு.

தாங்கள் பார்ப்பதைப் படமாக ஆக்குபவர்கள்.

பார்ப்பதாக எண்ணுவதைப் படமாக ஆக்குபவர்கள்.

பார்ப்பதாக எண்ணியதைப் படமாக ஆக்குவதாக எண்ணுபவர்கள்.

பார்ப்பதைப் படமாக ஆக்குவதாக எண்ணுபவர்கள்.

கடைசி ரகம், தாங்கள் தீட்டுவது ஓவியம் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள்!

கண் மூடித் திறப்பதற்குள் எல்லாம் முடிந்துவிட்டன. இரத்தினமும், கமலமும் தம்பதிகள் ஆயினர். என் நெஞ்சு துளும்பும் மகிழ்ச்சியிலிருந்து வெளிப்பட்ட வாழ்த்துக்களோடு, கமலத்தின் அன்னையின் நெகிழ்ச்சி மிகுந்த ஆசிகளோடு அவர்கள் ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஆண்டுகளிரண்டு கடந்துவிட்டிருந்தன. என்ன இருந்தாலும் துன்பத்தின் கால நீட்சி மெல்ல மெல்ல மிக மெதுவாக ஊர்ந்து மறையாமலிருந்துகொண்டேயிருப்பதுபோல், இந்த இன்பத்தின் கால நீட்டம் ஓடி மறைவதுகூட மெதுவாக ஓடி மறைவதில்லையே! அது மறையும் வேகமே ஒரு தனித் தன்மை வாய்ந்த படுவேகமாயிற்றே! கண் மூடித் திறப்பதற்குள் அது காட்டவேண்டிய வேடிக்கை விளையாட்டுக்களையெல்லாம் காட்டித் தீர்த்துவிட்டு ஓடி ஒளிந்துகொண்டு விடுகிறதே! அது ஓடி ஒளிந்து தொலைகிறதுதான் தொலைகிறது. சும்மா தொலைந்து போகக் கூடாது! கேட்போர் எல்லாம் மனம் வெடித்துப் பொருமும் அளவு துன்பச் சுழலில் அல்லவா தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விடுகிறது.

திடீரென்று ஒரு செய்தி வந்தது—மதுரைப் பகுதியில் சாமான் வண்டித் தொடர் ஒன்று கவிழ்ந்துவிட்டது என்ற செய்தி. அந்தச் செய்தி நாட்டில் மற்ற யாரையும் அவ்வளவு கவர்ந்திருக்க முடியாது. காரணம் உயிர்ச் சேதம் சொற்பம். உயிர்ப் பலி கொடுத்தவர்களும் பொதுமக்கள் அல்லர். இரயில்வே ஊழியர்கள். அந்த உயிர்ப் பலி கொடுத்த ஊழியர்களில் இரத்தினமும் ஒருவனுக............

ஐயோ, அந்தச் செய்தி என்னை எப்படித் தாக்கிற்று தெரியுமா? கமலம் எப்படி அலமந்து வீழ்ந்து புரண்டாள் தெரியுமா? அவற்றை விளக்க எப்போதும் யாராலும் வார்த்தைகள் கண்டுபிடிக்கவே முடியாது.

"அன்று கமலாவின் அன்னை சொன்னுலும் சொன்னுள், அது அப்படியே பலித்துவிடும்படி சொல்லிவிட்டாளே!"

இப்படிக் கதையை முடித்தபோது நெடிய பெருமூச்சொன்று விட்டுக்கொண்டார் அந்த மனிதர்.

அவ்வளவு நேரம் அந்தச் சோகக் கதையை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த என்னுள்ளும் வருந்துதல் எழுந்தது. அப்படி நான் வருந்தியபோது இரண்டு காரணங்களுக்காக வருந்தினேன். கமலம் தன் வாழ்க்கையை இளமையிலே இழந்துவிட்டாளே என்று எண்ணியமை அவற்றில் ஒன்று. அவளுடைய வாழ்க்கை அப்படி முடிந்து போனமைக்கு அவள் அன்னை கூறிய அவச் சொல்லே காரணம் என்று எண்ணுகின்ற அந்தப் பேதைமையாளரின் பேதைமைக்காக இரங்கியது மற்ருென்று.

# வழக்கு மன்றத்தில் விலங்குகள்



ஜூரிகள் அனைவரும் வந்துவிட்டனர்—மாஜிஸ்ட்ரேட்டும் மிடுக்கோடு வந்து அமர்ந்தார், தனது ஆசனத்தில்! அந்த வழக்கைக் காண வந்திருந்த மக்கள் தொகை, ஏராளம்! எனினும், அமைதி நிலவியது அந்த மன்றத்தில்! "குற்றம் சாட்டப்பட்டவர் கொண்டுவரப் படலாம்" என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதும், இரும்பால் ஆன ஒரு பெரிய கூண்டு கொண்டுவந்து நிறுத்தப் பட்டது! அதற்குள்ளிருந்ததோ, ஒரு ஓநாய்!

ஆம்! அன்று விசாரணைக்கு உள்ளானது, அந்த ஓநாய்தான்!

முதலில் அதன்மீது குற்றப் பத்திரிகை வாசிக்கப் பட்டது, சர்க்கார் தரப்பு வழக்கறிஞரால்!

பின்னர் வேறொரு வழக்கறிஞர் வாதாடினார், ஓநாயின் சார்பில்!

கடைசியில், மாஜிஸ்ட்ரேட், இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின், தீர்ப்பளித்தார், ஓநாய் குற்றவாளி தானென்றும், அது, பொது இடத்திலே தூக்கிலிடப்பட வேண்டுமென்றும்!

✲

விசித்திரமான இந்த வழக்கு, நடைபெற்றது ஐரோப்பாவில்—1442ம் ஆண்டு!

இதுபோன்ற வழக்குகள் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன, அந்தக் காலத்தில்!

1386ல் ஒரு பன்றி விசாரணைக்கு உள்ளாயிற்று—அதன்மீது சாட்டப்பட்ட குற்றம், அது ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டதென்பது! மாஜிஸ்ட்ரேட் மிகவும் வேதனையுடன் தீர்ப்பளித்தாராம், அதனுடைய தலை, ஒரு பொது இடத்திலே வெட்டப்பட வேண்டுமென்று!

விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டபோது, மனிதனைப்போல் உடை உடுத்தியிருந்தார்களாம்!

இதே குற்றத்திற்காக, ஒரு பெண் பன்றியும், அதன் ஆறு குட்டிகளும் வழக்கு மன்றத்திற்குக் கொண்டுவரப் பட்டன—செவிக்னி (Sevigny) என்ற நகரில் — 1547ம் ஆண்டில்!

பன்றிகளின் சார்பிலே வாதாடிய வழக்கறிஞர் தனது வாதத் திறமை முழுவதையும் வெளிப்படுத்தினார் —முடிவு, தாய்ப்பன்றிக்கு மட்டுமே தண்டனை—குட்டிகள் காப்பாற்றப்பட்டன!

எனினும் அடுத்த மூன்று வாரங்களில், அந்த ஆறு பன்றிக்குட்டிகளும், மீண்டும் வழக்குமன்றத்திலே நிறுத்தப்பட்டன. காரணம், அவை எதிர்காலத்தில் நன்னடத்தையுடன் இருக்கும் என்று உறுதியளிக்க, அவற்றின் உரிமையாளர் மறுத்துவிட்டாராம்! தாயின் குணம் குட்டிகளுக்கு இல்லாமலா போகும், என்று அவர் கருதியதாலேயே, உறுதிமொழி தரமறுத்தாராம்.

✲

பர்கண்டி (Burgendy) என்னுமிடத்தில் 1347ல் ஒரு வழக்கு—மூன்று பன்றிகள் அவற்றின் குட்டிகள் கூண்டேற்றப்பட்டன, ஒரு குழந்தையைக் கொன்றதற்காக!

அந்தப் பன்றிகளின் உரிமையாளர், பன்றிகளுக்காக வாதாடவில்லை—அந்தக் குட்டிகளுக்காக வாதாடினார்; வயதைக் காரணமாகக் காட்டி.

"குழந்தை கொல்லப்படுவதைப் பன்றிக்குட்டிகள் பார்த்துக்கொண்டு வாளா இருந்தன—அந்தக் குழந்தையைக் காப்பாற்ற முன்வரவில்லை — என்றாலும் அவற்றின் வயதை உத்தேசித்து அவற்றை விடுதலை செய்கிறேன்"— என்று தீர்ப்பளித்தார் மாஜிஸ்ட்ரேட்!

✲

1314ல் ஒரு மனிதனைக் கொம்பால் தாக்கிக் கொன்றதற்காக, காளை ஒன்று, சிறையிலிடப்பட்டது! சிறையில் மனிதர்களோடு அதுவும் அடைபட்டிருந்தது! விசாரணை முடிந்ததும் அது தூக்கிலிடப்பட்டது!

✲

மனிதனைக் கொன்றதற்காக ஆண் குதிரையொன்று தூக்கிலிடப்பட்டது—பெண் குதிரை, பொது இடத்தில் எரிக்கப்பட்டது, கிரேக்கநாட்டில்!

✲

பிரெஞ்சுநாட்டில் மற்றொரு வழக்கு நடைபெற்றது, 1521-ம் ஆண்டு! அதில் எலிகள் விசாரணைக்குள்ளாக் கப்பட்டன.

பார்லி தானியக் கதிர்களை அழித்ததாகவும், களை வாடியதாகவும், அவற்றின்மீது வழக்குத்தொடர்ந்திருந் தார் ஒரு விவசாயி!

சம்மன்கள் அனுப்பப்பட்டன, அந்த எலிகளுக்கு. ஆயினும் அவை, தங்கள் வளைகளைவிட்டு வெளியே வருவதாக இல்லை!

அவற்றின் சார்பிலே ஒரு பிரபல வழக்கறிஞர்— பார்தலோமியூ செஸ்னீ என்பார்—வாதாடினர்!

ஒரு பகுதியிலேயுள்ள எலிகளுக்கு மட்டுமே 'சம் மன்' அனுப்புவதில் பொருளில்லை—ஊரிலுள்ள எல்லா எலிகளுக்கும் அனுப்பவேண்டும்—என்று அவர்செய்த வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது! ஊரில் காணப்பட்ட எலி வளைகள் அத்தனையிலும் 'சம்மன்'கள் காணப் பட்டன!

ஆயினும் எலிகள் நீதிமன்றத்தின் ஆணைக்குக் கட்டுப்படுவதாக இல்லை!

எனவே, அந்த வழக்கறிஞர் வேறொரு வகையான வாதத்தில் இறங்கினர்.

"எலிகள், தங்களது வளைகளிலேயிருந்து வெளியே வர அஞ்சுகின்றன. காரணம், வாதி ஒரு பூனையை வளர்க் கிறர். எனவே, அவரது பூனையால் எலிகளுக்கு எந்தத் தொந்தரவும் ஏற்படாது என்பதற்குப் பொருத்த ஜாமீன் தொகையை வாதி, வழக்குமன்றத்தில் செலுத்தினல், எலிகள் ஆஜராகத் தயாராக இருக்கின்றன"–இது அவரது வாதம்!

வாதத்தில் நியாயம் இருக்கிறதென ஏற்றுக் கொள்ளப்பட்டது—ஜாமீன் செலுத்த, வாதி தயாராக இல்லாததால், வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது!

✲

ஒரு கரடி வழக்கு மன்றத்திற்குக் கொண்டுவரப் பட்டது, 1499ல்! அதன் சார்பிலே வாதாடிய வழக் கறிஞர் கூறினர், "கரடியை விசாரிக்க, நமக்கு உரிமை யில்லை. கரடி வர்க்கத்திலேயேயுள்ள 'பெரியதனக் காரர்கள்'தான் ஜூரிகளாக இருக்கவேண்டும்" என்று!

இந்த வாதம், பெரியதொரு குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது—வழக்கும் நீண்டது, சில வாரங்கட்கு!

✲

கொலை கொள்ளை முதலிய வழக்குகள், நாய் பூனை போன்ற பிராணிகள் சாட்சிகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டன!

அவற்றின் சொந்தக்காரர், அவற்றின் முன்னிலை யில், குற்றத்தை மறுக்கின்ற நேரத்தில், அவை அமைதியாக இருப்பின், அவர் நிரபராதி என ஏற்றுக் கொள்ளப்பட்டார்!

குற்றவாளியெனில் கடவுள் பேசாமலிருக்கமாட் டார் — அவற்றின் செய்கைகள் மூலம், குற்றவாளி யைக் காட்டிக் கொடுத்துவிடுவார்—என்ற நம்பிக்கை அவர்களுக்கு!

✲

உயர்ந்தரகப் பொழுதுபோக்குகள் இல்லாத காலம் அது—இதுபோன்ற வழக்குகள், நாகரிகமற்ற உள்ளங் களுக்கு நல்ல பொழுதுபோக்குகளாக அமைந்தன— எனபதைத் தவிர, வேறெந்த விளக்கம் தரமுடியும், இத்தகைய விநோத வழக்குகளைப்பற்றி?

✿

# மணமே, நீ....!

"குணமும் மணமும் நிறைந்தது"---சாதாரண மாக, பொடி விளம்பரங்களில் வருகிற வாசகம்.

சோப்பு விளம்பரங்களிலும் டாய்லட் பவுடர் விளம்பரங்களிலும், நறுமணம்பற்றிய குறிப்புகள் வருவதுண்டு!

ஆனல், அமெரிக்காவில், அநேகமாக எல்லாத் தொழிலதிபர்களும், மணத்தின்மீது மக்களுக்குள்ள மோகத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுகின் றனராம்!

பொருள்களுக்கு நறுமணம் ஏற்றுவது, ஒரு புதிய, பெரிய தொழிலாகவே ஆகிவிட்டிருக்கிறது, அங்கு!

கிராமபோன் ரிகார்டுகளைத் தயாரிக்கும் கம் பெனிகள், தாங்கள் வெளியிடுகிற 'ஆல்பம்'களில், நறுமணம் ஏற்றி விற்கின்றனவாம்!

அச்சுத் தொழிலுக்குப் பயன்படுத்துகிற மையில் மணம் ஏற்றுவதன் மூலம், பல விளம்பரங் கள், வாசகர்களைக் கவர்கின்றனவாம்---விளைவு, விளம்பரம் செய்பவர்களுக்கு இலாபகரமாக உள்ள தாம்!

வாசனைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழி லதிபர் ஒருவர் தான் தருகிற செக்குகளிலும் வாச னைப் பொருள்களைத் தடவித்தான் தருகிறாராம்--- அதன் மூலம், தனது வியாபாரம் பெருகுகிறது என் கிறர் அவர்!

இன்னொருவர்---ரொட்டிக்கடை முதலாளி--- தனது 'செக்'குகளில், ரொட்டியின் வாசனை வரு மாறு ஏற்பாடு செய்துகொள்ளுகிறாராம்!

✦

நறுமணம், எப்படி வியாபாரத்தைப் பெருக்கு கிறது, என்று நிரூபிக்க முற்பட்டாராம் ஒரு கடைக் காரர்.

விலையில் வேற்றுமையில்லாத ஒரே பொருளைத் தன் கடையில் இரண்டு தினுசாகப் பிரித்தார்--- ஒன்றில் நறுமணம் தரும் பொருள்களைத் தடவி ஞர்---மற்றொன்றில் மணம் ஏதுமில்லை!

பொருள் ஒன்றுதான்---எனினும் நறுமணம் வீசிய பொருள், பல மடங்கு விற்பனையாகியதாம்!

✲

அது மட்டுமா! இரண்டாம் உலகப் பெரும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அமெரிக்க வீரர்கள், பாரசூட்டிலே இறங்கியதும், ஜெர்மன் நாய்கள் மோப்பம் பிடித்து, அவர்களைக் கண்டு கொள்ளுமாம்---அதனல் அவர்கள் ஆபத் துக்கு உள்ளாயினர்.

எனவே அமெரிக்க விஞ்ஞானி ஒருவருக்கு, அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது---நாய்களிட மிருந்து வீரர்கள் தப்ப வழி செய்யுங்கள் என்று!

வாசனைத் திரவியம் ஒன்றைத் தயாரித்துத் தந்தார் அவர்---நாய்கள், பிறகு, அருகில் வர வேண்டுமே!

அப்பப்ப! மணமே! நீ எத்தனை சாதனைகளைச் செய்கிறாய், என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?




**போர்** முழக்கத்துடன், பெரும் படையெனப் புறப்பட்டது, அந்தப் பெண்டிர் குழாம்! அனைவரும் கருப்பு உடையில்!

கையில் கோடரி—மடியில் கற்கள்—படைத்தலைவி ஏந்திச் சென்ற ஆயுதங்கள் இவை! படை வீரர்களும் அப்படியே!

நகரமே கூடி நின்று வேடிக்கை பார்த்தது, அந்த விநோதக் காட்சியை! அமைதி காக்கவேண்டிய அதிகாரிளும், நமக்கேன் இத்தொல்லை என இருந்துவிட்டனர் போலும்! அவர்களும் வேடிக்கைபார்த்தனர்!!

போர்ப்பரணியோடு, படை வந்தடைந்தது, அந்தக்கடைக்கு முன்னுல்!

கடையின் உரிமையாளர் நிலையை உணர்ந்தார் — செய்வதறியாது தவித்தார், ஒரு விநாடி — அடுத்து அவரே வெளியே வந்தார், துணிவோடு!

படைத் தலைவி ஆர்ப்பரித்தாள், எச்சரிக்கைவிடுத்தாள்.

"என்னருகில் வராதீர்கள்! என் கோடரிக்கு இரையாகாதீர்கள்: விளைவுகளுக்கு நான் பொறுப்பல்ல!''

முதலாளி ஒதுங்கினுர்! மங்கையர் படைக்கு ஆணை பிறந்தது. "உம்! அடித்து நொறுக்குங்கள்! எதையும் மீதம் வைக்காதீர்கள்!'' என்று—தலைவியிடமிருந்து!

ஆணையும் நிறைவேற்றப்பட்டது!

அடுத்து, அருகாமையிலிருந்த கடைகள்—அவை கட்கும் அதே கதி!

✻

யார் அந்த நாரீமணி — மதுரையை எரித்த கண்ணகி கோலத்திலே அவள், அதுவும் பெரும்படையோடு புறப்படக் காரணமென்ன—அந்தக் கடையினர் அவருக்கு இழைத்த கொடுமையென்ன — எனக் கேட்டிடத் தோன்றும், எவருக்கும்!

அந்த அம்மையாரின் பெயர் கேரி நேஷன் (Carry Nation)—நிகழ்ச்சி நடைபெற்றது அமெரிக்காவில் விச்சிட்டா என்ற நகரில்—1901ம் ஆண்டு ஜனவரி 21ல்!

அந்த அம்மையார் நடத்திச் சென்ற படையால் சூறையாடப்பட்டவை, மதுபானங்கள் விற்கப்படும் கடைகள்!

✻

இதுபோன்ற நிகழ்ச்சிகள் பற்பல அவர்தம் வாழ்க்கையில்!

புகைபிடித்தலும், மதுபானம் அருந்துதலும் அவருக்குப் பிடிக்காதாம்! எனவேதான் இத்தகையபோராம்!

அந்த அம்மையார் இலண்டன் மாநகருக்குச் சென்ருர், 1909ல்!

அந்த நகரின் ஒரு பகுதியில் பெரிய சிகரெட் விளம்பரம் ஒன்று அவர் கண்களிலேபட்டது — அப்போது கையில் மழு இல்லை! இருப்பினும், கைத்தடி இருந்தது! அந்த விளம்பரம் சுக்கு நூருகக் கிழித் தெறியப்பட்டது!

வழக்குத் தொடரப்பட்டது அவர்மீது!

5-ஷில்லிங் அபராதம்—25-ஷில்லிங் நஷ்டஈடு விதிக்கப்பட்டது!

பெருமகிழ்ச்சி அவருக்கு! காரணம், இதைவிடச் சிறிய குற்றத்திற்காகச் சிறைத்தண்டனை கிடைத்தது, அமெரிக்காவில்! இது, குறைவுதானே!

✻

1880-ல், அமெரிக்காவில் உள்ள கன்சாஸ் மாநிலத்தில் மதுவிலக்குச்சட்டம் நிறைவேற்றப்பட்டது!

சட்டம் அமுலுக்கு வந்தது—எனினும் மது ஒழியவில்லை—மறைமுகமாகக் காய்ச்சுபவர் எண்ணிக்கை வளர்ந்தவண்ணமிருந்து — மெள்ள மெள்ளப் பொது இடங்களிலேயே விற்கவும் செய்தனர் சிலர். பக்கத்து மாநிலங்களிலேயிருந்தும், ஏராளமான இறக்குமதி!

அதிகாரிகளின் நடவடிக்கை பலனளிப்பதாக இல்லை. மதுவிற்றல், இலாபகரமான, பெரியதொரு தொழிலாகவே இருந்தது!

அந்தச் சூழ்நிலையிலேதான் இந்த அம்மையார், போர்தொடுத்தார்—அதிகாரிகள், வேடிக்கை பார்த்தது மட்டுமல்ல, அவருக்குத் துணையும் புரிந்தனர் பற்பல வகையில்!

ஏராளமான பொருள் குவிந்தது அவருக்கு, அந்தப் பெரியதொரு போரைநடத்திட!

மழு ஆயுதம், அந்தப் போரின் அடையாளம்-சிறிய சிறிய மழுக்கள் விற்கப்பட்டன, விலைக்கு!

ஒரு நகரத்தின் மேயர், அந்த அம்மையாருக்குப் பொருள்கொடுத்தது மட்டுமல்ல, எட்டு அங்குல அகலமுள்ள மழு ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்தாராம்!

✻

அந்த அம்மையார் பிறந்தது 1846-ம் ஆண்டில்—கான்சாஸ் மாநிலத்தில்!

இருபத்தோராவது வயதில், திருமணம் நடந்தது அவருக்கு—அவரது கணவன் பெரிய குடிகாரராம். திருமணமாகி ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளாகவே, மதுவிற்குப் பலியாகி அவர் மாண்டார்!

தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த ஏமாற்றம், பேரிடி, மற்றப் பெண்களின் வாழ்க்கையிலும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், இந்த அம்மையார் மதுவை எதிர்த்துப் போராட ஆரம்பித்தாராம்! அவரை, இன்றும் போற்றுகின்றனர் பலர்—அங்கு!

✻

# பொங்கலோ பொங்கல்!

—[ பி. மணிவேந்தன் ]—

காலையிலே எழுந்திருந்து கதிரவனைக் கைதொழுது
வேலைசெயும் உழவரெலாம் விளையாடிக் களித்திடவே
பைந்தமிழன் கொண்டாடும் நன்னுளாம் இந்நாள்!
பாட்டாளி உளம்மகிழச் செய்கின்ற பொன்னுள்!

வீடுகளில் மாஇலைகள் வீதியெலாம் தோரணங்கள்
மாடுகளும் 'சல்லி'யுடன் மாண்புடனே துள்ளியோட
செந்தமிழன் தைப்பொங்கல் திருநாளைக் காணீர்!
சிங்காரத் தமிழ்நாட்டின் பெருநாளைக் காணீர்!

புத்தாடை அழகொளிரப் பொலிவுடனே முகம்திகழ
கொத்தான மலர்சூடிக் கும்மியுடன் தமிழ்பாடி
மங்கையர்கள் பொங்கலினை ஆக்குவதைக் காணீர்!
மறவரெலாம் அன்னவரை வாழ்த்துவதைப் பாரீர்!

பச்சரிசி வெல்லமுடன் பாலோடு முந்திரியே
இச்சையுடன் தமிழ்ப்பெண்டிர் இட்டுவைத்த பானைகளில்
பொலிவுடனே பாற்பொங்கல் பொங்குவதைக் காணீர்!
பூவையர்கள் வாழ்த்துப்பா பாடுவதைக் கேளீர்!

மங்கையரின் எழில்வளர மஞ்சளிட்ட முகம்மலர
செங்கரும்பைக் கைதழுவ சிறுவரெலாம் உளம்மகிழ
புதுப்பொங்கல் பொன்னுளின் பூஞ்சிரிப்பைக் காணீர்!
"பொங்கலோ பொங்கல்" என்ற புத்தொளியைக் கேளீர்!

# இலக்கியத்தில் வீரம்!






பன்மொழிப்புலவர்
கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி.,

வீரத்துக்கு விளைநிலம், வீர வாழ்வுக்கு இலக்கியம் தமிழகம்! பாடிய பாட்டையெல்லாம் அகம் என்றும் புறமென்றும், காதல் சார்ந்ததென்றும் வீரம் சார்ந்த தென்றும் பகுத்துக்கண்ட திருநாடு நம் தமிழ் நாடு! ஆனால், இந்தப் பகுப்பில்கூட வீரமே மேம்பட்டு நின்ற தென்னலாம். ஏனெனில் தமிழரின் காதல், வீரத்தில் மலர்ந்த ஒரு மலராகவே காட்சியளிக்கிறது.

இது மட்டுமோ?

அறநெறிபற்றிப் பாடப்பட்ட இலக்கியத்திலும் உலகத்திலேயே எம்மொழியிலும் சிறந்த மொழி தமிழ் மொழி என்று கீழ்திசை அறிஞரும் மேல்திசையறிஞரும் வேறுபாடின்றிப் போற்றிப் புகழ்கின்றனர். ஆயின் இந்தத் தனிச் சிறப்புக்குரிய காரணம்கூட, அந்த அறநெறிகள் வீரத்திலிருந்து விளைந்த விழுமிய பண்புகள் என்பதே!

தமிழிலக்கியத்திலே ஒப்பற்ற காதல் காப்பியமாகத் தொடங்கிய சிலம்பு இறுதியில் உலகிலேயே ஒப்புயர்வற்ற வீர காப்பியமாக மிளர்வது காண்கிறோம். கண்ணகியின் வீரக் கற்பில் தளிர்த்த அரும்பாகிய மணிமேகலை வாழ்க்கையும் வீரக் காதலாகத் தழைத்து, வீரச் சமுதாய அறமாக, வீர அருளறமாகத் தமிழிலக்கிய வானில் மின்னுகின்றது.

காதல் பாடவந்த ஓர் ஆங்கிலக் கவி தன் காதலியிடமே தன் வீரப் பண்பு பாடிவிடுகிறான். 'அன்பே, உன் காதலை மிஞ்சி என் உள்ளத்தில் இடம் பெறுவது ஒன்றே ஒன்றுதான், ஒரே ஒரு காதலிதான்!' என்று அவன் நகையாடுகிறான். காதலி உள்ளம் சீறி எழுகிறது. அவன் அச்சீற்றம் தணிக்கிறான்.

"போர்க் களத்தில் எதிரியின் முதல் வீரவாள்தான் உன்னை மிஞ்சி என் உள்ளத்தில் இடம்பெற்ற காதலி. அந்த வாளை என் வாள் தழுவிப் போரிடும்போது, நான் உன்னையும் மறந்துவிடுகிறேன். உலகத்தையும் மறந்துவிடுகிறேன். அந்தக் காதலியிடம் நீ என்னை ஒப்படைத்து விடும் நாள் வரும் வரை, நான் உன் காதலில் திளைத்து விளையாடுவேன்' என்றான் வீரக் கவிதைக் காதலன்.

தமிழ்க் காதல் இலக்கியமும் இதில் குறைந்ததன்று. 'வேந்தே! கடவுளை வணங்கும்போதுதான் உன் தலை சிறிது சாயும். கற்புக்கரசியாகிய அரசியின் காலடி ஒன்றில்தான் அது சாய்ந்து கிடக்கும். வேறு எங்கும் எப்போதும் அது சாயா முடி, வணங்கா முடி' எனப் புறநானூற்றுப் புலவர்கள் அரசன் காதலையும் பக்தியையும் அவன் வீரத்தாலேயே சிறப்பித்தனர்.

தமிழ் ஒழுக்க ஏடுகளிலேகூட வீரமே அடிப்படைப் பண்பாய்த் திகழ்கிறது என்றால் தவறில்லை. கீழ்வரும் நீதி வெண்பா இதனைக் காட்டும்:—

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
மற்றவரைக் கண்டால் பணிவரோ—கல்தூண்
பிளந்திடுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்!

இப்பாட்டைப் பாடிய புலவர் அவர் காலத்துப் பாண்டியரின் சா வேர்ப்படை (சாவேற்புப்படை), சோழரின் வேளைக்காரப்படை (சாவு வேளைக்காகவே காத்திருக்கும் படை) ஆகியவற்றை நேரில் கண்டு, அவர்களை மனத்தில் நினைத்துக்கொண்டே இவ்வெண்பாவைப் பாடியிருக்கவேண்டும் என்னலாம். மன்னர் உயிரைத் தம் உயிர் கொடுத்தும் காக்கவும், மன்னர் உயிர் விடுமுன் தாம் உயிர்விடவும் உறுதி பூண்ட வீரர்களின் படை அது. சாவும் அதன் வீரர்களைக் கண்டு அஞ்சும். தாங்கமுடியாத பாரம் ஏற்ற கல்

தூண் அதனல் வளையாது, முறியவே செய்யும். அது போல, தம்மினும் பெரும் படையும் பெருத்த படைக் கலங்களும் தம்மைத் தாக்க நேர்ந்தால், அவர்கள் கொன்று குவித்து மாள்வரேயல்லாமல், பணிந்திட மாட்டார்கள் என்று ஒழுக்கம் பாடவந்த கவிஞர் இவ்வாறு வீரம் பாடுகிருர்.

சாவேற்புப் படையும் வேளைக்காரப்படையும் கண்ட தமிழினத்தோடொத்த வீர இனங்களின் விளைநிலம் இந்தத் துணைக்கண்டம் என்றறியாமல் அதன் வாழ் வின்மீது வலிந்து தலையிட்டுள்ளார் இன்று சீன ஏகாதிபத்திய வெறியர்கள்! தம் உள்ளத்தில் ஏகாதிபத்திய ஆசை அடங்காது படபடத்து வெடிக்க, தம் நேர்மை யையும் பண்பையும் தம் விலையற்ற வாக்குறுதிகளையும் காற்றில் வெடித்துப் புகைத்துப் பறக்கவிட்டு, பின் னிருந்து பதுங்கிப் பாயும் நயவஞ்சக நரிகள்போலப் போர்த் தயாரிப்பற்ற இந்தியாவின் சமாதான காலக் காவல் வீரர்மீது பாய்ந்துள்ளனர், அறமுறையும் வீரப் பண்புமற்ற கோழைப் பேராசைக்காரர்களான சீனர்கள்.

ஆண்டுக்கணக்காகத் திட்டுமிட்டு நயவஞ்சமாகப் பாய்ந்த சீன அதிர்வேட்டில், முன்னெச்சரிக்கையற்ற இந்திய வீரர், திட்டமும் ஆயுத பலமும் வாய்ப்பு வளங் களும் அற்ற நிலையிலும் தாம் சாவேற்புப் படை வீரர், வேளைக்காரப்படை வீரர் மரபினர் என்பதைக் காட்டி, வீரத்துடன் எதிர்த்து நின்று தொடக்கக் களபலி கொடுத்தனர். அம்முதற் களப்பலியில் பங்கு கொள் ளும் பெருமை வீர சிதம்பரனரின் வீரார்ந்த தொண்டின் நிலைக்களமான தூத்துக்குடி — பாஞ்சாலங் குறிச்சி வீரர் விடுதலைக்கொடி உயர்த்திய நிலத்துக்குக் கிடைத்துள்ளது.

முதல் உலகப்போரில் தமிழர் பிற இந்திய வீரருடன் உலகெலாம் சென்று நாட்டிய வீரப்புகழை இப்போது மீண்டும் தம் முன்னேர் தமிழ்க்கொடி ஏற்றிய இமயத் தில் காட்டி வருகின்றனர்.

இமயத்தில் மூவேந்தரும் முத்தமிழ்க்கொடி ஏற்றிய செய்தி தமிழக வரலாறு அறிந்தது மட்டுமல்ல. தமிழிலக்கியம் கண்டது. முதற்கண் நெடியோன் என்ற நிலந்தரு திருவிற்பாண்டியன் மீனக்கொடியை இமயத்தில் பொறித்தான். அவனுக்குப் பின் சோழன் கரிகாற்பெருவளத்தான் இமயத்தின் உச்சியிலே கொடி பொறித்தான். மூன்ருவதாகச் சோழன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் வீர வெற்றிகளை இமயம்வரை கொண்டு சென்று அதன் உச்சிமீது சேரரின் விற்கொடி பொறிப்பித்தான்.

இவ்வீரச் செயல்களைப் புறநானூறும் அகநானூறும் பத்துப்பாட்டும் பதிற்றுப்பத்தும் பிற சங்க இலக்கியங் கள் மட்டுமன்று, கலிங்கத்துப்பரணியும் முரசொலி முழக்கமென எடுத்துப் பாடுகின்றன.

## அதைக் கேளுங்கள் !

நடுத் தெருவில் ஒரு பிச்சைக்காரன் மயக்கம் அடைந்து விழுந்துவிட்டான்!

"தண்ணீர் கொண்டு வாருங்கள்"

"காற்று விடுங்கள்"

"பாவம் பசிபோல் இருக்கிறது"

---என்று பல குரல்கள் பேசின!

"பாவம், களைப்புபோல் இருக்கிறது---காபி வாங்கிக்கொண்டு வந்து கொடுங்களேன்" என் ருர் ஒரு பெரியவர்!

யாரும் கேட்பதாக இல்லை---பெரியவரும் தனது யோசனையை மூன்று நான்கு முறை சொல்லிவிட்டார்.

திடீரென்று, மயக்கமுற்ற பிச்சைக்காரன் எழுந்து உட்கார்ந்துகொண்டு,'அந்தப் பெரியவர் சொல்வதைத்தான் கொஞ்சம் கேளுங்களேன்!' என்ருன் உரத்த குரலில்!

சேரன் செங்குட்டுவன் ஆந்திரப் பேரரசருடன் கங்கை கடந்துசென்று இமயமலையடிவாரத்திலுள்ள குவிலாறுவம் என்னும் தீர்த்தத்தருகே கனக விசயர் களை முறியடித்து, அவர்கள் தலைமேலேயே கண் ணகிக்குச் சிலை கொண்டுவந்த செய்தியைச் சிலம்பு பாடுகின்றது.

ஒரிசாவாண்ட பேரரசன் படைகளைவென்ற சோழர் படைத்தலைவன் கருணாகரத்தொண்டைமானையும் அவ் வெற்றிக்குரிய சோழன் குலோத்துங்கனையும் பாடுகிறது கலிங்கத்துப்பரணி. ஆயிரம் யானைகளை எதிர்த்துநின்று கொன்ற மாவீரனைப் பாடுவது பரணி என்பது தமிழ் மரபு.

சேர சோழ பண்டியர் மூவருமே பெருங்கடற்படை வைத்திருந்தனர். தென்னகத்தை மட்டுமன்றி இந்து மாகடல் முழுவதையுமே அவர்கள் ஆண்டனர். கல் வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் உரைநடை வர லாருகவும் கவிதையாகவும் இவற்றின் புகழ் பாடுகின் றன. சோழன் இராசேந்திரன் இமயம்வரை வென்றது டன் அமையாது, இலங்கை முதல் இந்தோசீனவரை யுள்ள தென்கிழக்காசியா முழுதும் வென்ருண்டான். இதுவும் சோழர் மெய்க்கீர்த்திகளால் பாடப்பட்டுள்ளது.

தேசிங்கு ஆற்றிய வீரப்போர், இராமநாதபுரத்து மறவர் ஆற்றிய அரிய பெரிய போர்கள், மதுரைநாயகர் போர்கள், பாஞ்சாலங்குறிச்சிப்போர் ஆகியவை தமி ழரின் நாட்டுப்பாடல் இலக்கியங்களாக நிலவுகின்றன.

தமிழர் ஆற்றிய இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பாடுவதற்கென்றே மக்கட் கவிஞர் பாரதி தம் நாளில் தமிழகத்தில் தோன்றி, வீரத்தையும் கவிதையையும் ஒரே தளமாகப் பிணைத்தான்.

தமிழக இலக்கியம் கண்ட இந்த வீரப்பெரும் போர்ப்புகழ் ஒருபுறமிருக்க, இலக்கியத்தில் படம் பிடித்துத் தரப்படும் வீரக் காட்சிகள் இவற்றிலும் அருமை வாய்ந்தவை.

தகடூர் யாத்திரை என்ற தமிழர் வீரப் பெருங்காப்பியத்திலிருந்து நமக்கு ஒன்றிரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. ஆனால் போர்க்களத்தை நேரில் சென்று பார்த்த இரு புலவர்கள் அப்பாடல்களிலேயே போரையும் அதன் பல கட்டங்களையும் அதன் வீரப் படைத் தலைவர்களையும் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றனர். இரண்டாயிர ஆண்டுகட்கு முன் நடைபெற்ற ஒரு பெரும் போரின் திரைப்படச் சுருள்களாக அவை இன்று விளங்குகின்றன.

பதிற்றுப் பத்தில் எட்டுப் பத்துக்கள்தான் நமக்குக் கிடைத்துள்ளன. அதில் எண்ணற்ற கடற்போர்கள், களப்போர்கள் முற்றுகைகள், ஆகியவற்றின்காட்சிகள் நிறைந்துள்ள. இதனைப் பாடிய புலவர்களுக்குச் சேர அரசர் கொட்டிக்கொடுத்த பரிசில் செல்வங்கள்—இன்றைய அமெரிக்காவையும் பிரிட்டனையும் விலை கொடுத்து வாங்கப் போதியவை.

## உடை மயக்கம்!

அமெரிக்காவைச் சுற்றிப் பார்த்த ஒரு ஆங்கிலேயர் "இங்கு, பெண்களெல்லாம் ஆண்களைப் போலவே உடை உடுத்திக்கொள்கிறார்களே" என்று சலித்துக் கொண்டார்.

தூரத்திலே நின்றிருந்த ஒரு பெண்ணைச் சுட்டிக் காட்டி அருகிலிருந்தவரிடம் கேட்டார். "அதோ பாருங்கள், அங்கே நிற்பது ஆணா பெண்ணா என்று அவ்வளவு சுலபத்திலே புரிகிறதா?" என்று!

"அது பெண்தான்---என்னுடைய மகள்," அருகிலிருந்து வந்த பதில் இது!

"அப்படியானால், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் அந்தப் பெண்ணின் தந்தை என்று எனக்குத் தெரியாது"

"நான் அவர் தந்தையல்ல---தாய்!"

தந்தை, தமயன், கணவன் யாவரும் போரில் மாள, மீந்த தன் பத்து வயதுச் சிறுவனுக்கு வாள் கொடுத்துப் போருக்கு அனுப்பும் தாய்; முதுகில் புண்பட்டான் தன் மகன் எனக் கேட்டு, அப்படியானால் அவனுக்குப் பால் கொடுத்த மார்பை அறுப்பேனென்று களஞ் சென்று பிணங்கள் புரட்டி, மார்பில் புண்பட்டது கண்டு மகிழ்ந்த வீர அன்னை; பிள்ளையை பெறுதல் என் கடன், சான்றோனாக்குதல் தந்தை கடன், வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர் கடன், போர் செய்து வெற்றிப் புகழுடன் மீள்தல் அல்லது மாள்தல் மகன் கடன் என்று கூறிய வீரத்தாய்; மகன் ஒரு புலி, தன் வயிறு புலி கிடந்த வயிறு என்று பெருமிதத்துடன் பேசிய வீர அணங்கு—இத்தகைய அரிய வீரக் காட்சிகள் தருவது புறநானூறு. இரு பெரு மன்னர் போரிட்டு இரு படையும் இரு அரசரும் அழிய மக்கள் கலங்கிய காட்சி; இரு பெரு மன்னர் போரிட்டு ஒருவன் வெற்றி கண்டும், தோற்றவன் தற்செயலாக முதுகில் புண்பட்டதற்கு வடக்கிருக்க, புலவரும் வீரரும் அவனுடன் வடக்கிருந்த காட்சி ஆகியவையும் புறநானூற்றுப் பெருங்கலை ஏடு தருவனவே.

சோழன் செங்கணானிடம் தோற்றுச் சிறையிலே மானமிழந்து வாழ ஒருப்படாது மாளமுற்பட்ட சேரன் கணைக்கால் இரும்பொறையின் அருநிலை பாடுவது களவழி நாற்பது.

தமிழர் வீர இலக்கியத்துக்கு முத்தாய்ப்பு தமிழில் இயற்றப்பட்டுள்ள உலகப் பொதுமறையான திருக்குறளின் படைச் செருக்கு அதிகாரத்தின் பத்துப் பாட்டுக்கள். இறந்த வீரர்க்குக் கல் நாட்டும் பழக்கம் சிறப்பிக்கிறது முதற் பாட்டு. முயல் எய்து கொன்ற வேடனை விட, யானையை எதிர்த்து முயற்சியில் முழு வெற்றி காணாத வீரன் வீரம் பெரிதென்னும் உயர் கருத்து ஒரு பாட்டில் காட்டப்பட்டுள்ளது. போரிடையே வேலை யானைமீது எறிந்து கொன்றபின், வேல் யானை உடலினுள் சிக்கியதால் என் செய்வதென்று சிறிது யோசித்து, தன் மார்பில் தைத்து ஊடுருவிய வேலைப் பறித்து, புதுப்படைக் கருவி கண்ட மகிழ்வுடன் நகைத்துப் போருக்குக் கிளம்பும் வீரர்தம் காட்சியை இரண்டே அடியில் ஒரு பாட்டு அடக்கி நமக்குக் காட்டுகிறது.

தமிழர் வீரம் பெரிது. அதனைப் படம் பிடித்துக் காட்டி வீரர்க்கும் வீரக் கவிஞர்க்கும் சிறப்பளிக்கிறது தமிழர் இலக்கியம்.

இமயம் கண்ட தமிழ் வீரம் வெளிப்பட மீண்டுமோர் வாய்ப்பு கிட்டியுள்ளது. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னாலேயிருந்த வீரம் இன்னும் மங்கிவிடவில்லை, மாண்டு விடவில்லை என்பதை உலகிற்கு வெளிப்படுத்துவோம்—வாகை சூடுவோம்.

# மலரும் மங்கையும்

[ கோ. சம்புமணிச்செழியன் B Sc ]

மலர்...! பூத்துக்குலுங்கும் மலர்க்கொத்து!

அதனைக் கண்டான் ஒரு தத்துவக்காரன்:-

"அழகு மலரே! சிரிக்கின்ற பூவே! இன்றுமாலை நீ சாகப்போகிறாயே!'—இப்படித் தத்துவம் படித்தான்.

விஞ்ஞானி ஒருவன் அதே மலரைக் கண்டான்:-

"இந்த மலரில் மகரந்தப் பையே கிடையாதோ?" என்ற ஆராய்ச்சியில் இறங்கினான்.

ஒரு கவிஞன் கண்ணிற்கும் அதே மலர் விருந்து படைத்தது. அவன் சொன்னான்:-

"மலரே! என் உள்ளத்தில் அழித்தெழுதா ஓவியமாய்—ஆடகப் பொற்பாவையாய் — சிரிக்கின்ற என் காதலியின் முகமலர்ச்சி முன்னே உன் மலர்ச்சி எம்மாத்திரம்?''

ஒரே பொருள் மூன்று கோணங்களில் விதவிதமாய்க் காட்சியிட்டாலும் கவிஞனுக்கும் மலருக்கும் இடையில் ஒருவகை இறுக்கமான "உறவு" பின்னிக் கிடக்கிறது. அந்த பிணைப்பு,...அன்பு, காதல், பாசம், நட்பு பற்று என்ற வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்டதாகும். மலர் மனத்திலூட்டும் மகிழ்ச்சியில் திளைக்காத சங்கக் கவிஞனுமில்லை; இலக்கியமுமில்லை.

பழந் தமிழகத்தில் மலருக்கும் தமிழனுக்கும் இருந்த தொடர்பு அதிகம். மூவேந்தர்க்கும் தனித்தனி மாலைகளுண்டு; செல்வர்களுக்குப் பொன்மலரணியும் வழக்கம் உண்டு; நான்கு வகை நிலங்கட்கும் மலர்களின் பெயர்களாலேயே பாகுபாடு காட்டியவன் அன்றையத் தமிழன்! போர் முறைகளில்கூட வெட்சி, வஞ்சி, உழிஞை என்று பூக்களாலேயே "திணை"களைக் கணித்தவன், தமிழன்! பாரிசாதம் மலர்ந்தால் நடுநிசி என்றும், தாமரை மலர்வது காலையிலென்றும், இரவில் தான் அல்லி மலருமென்றும் அறிந்தவன், தமிழன்! இப்படி இருந்த நெருக்கத்திற்குக் காரணம், தமிழர்களின் இயற்கையோடியைந்த வாழ்வே என்று கூறலாம். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் கூறுகின்ற மலர்களின் தொகையும், மணிமேகலையில் சாத்தனார் காட்டும் பூக்களின் எண்ணிக்கையும் பழந்தமிழகத்தின் மலர் வளத்தை எடுத்துக் கூறுகின்றன.

அன்றுமுதல் இன்றுவரை மலருக்கும், மங்கைக்கும் ஏதோ ஒருவகை "ஒற்றுமை" (உண்டானதோ, உண்டாக்கப்பட்டதோ) இருக்கத்தான் செய்கிறது. அல்லி, செந்தாமரை, கமலம், மல்லிகா, பங்கயம், குமுதா — என்பனபோன்ற மலர்களின் பெயர்களைப் பெண்களுக்கு மட்டும் சூட்டுகின்ற வழக்கம் இன்றைக்கும் இருக்கிறதல்லவா? வெண்டாமரையில் கலைமகள் வாழ்வதாகவும், செந்தாமரையில் திருமகள் வாழ்வதாகவும் கற்பித்து அம்மலர்கட்கு பெருமை தந்ததும் 'புராணம்'தான்!

மங்கையின் உடலையே 'மலர்க்கொடி'யாகக் கண்ட கண்கள் தமிழ்க் கவிஞர்களின் இலக்கியக் கண்கள்! பெண்ணின் முகத்தைத் தாமரை என்றதும் — கண்களைக் குவளை என்றதும்—நாசியை எட்பூ என்றதும்—காதுகளை வள்ளை என்றதும்—இதழ்களை ரோஜா என்றதும் — பற்களை முல்லை என்றதும் — மார்பகத்தைத் தாமரை என்றதும் — கைகளைக் கமலம் என்றதும் — தமிழிலக்கிய மரபன்றி வேறெந்த மொழி மரபும் இல்லை எனலாம்.

மலர் மென்மையானது — மங்கையும்தான்! இருவருமே அழகானவர்கள்; சுவையானவர்கள்! தேனை வண்டுக்குத் தந்த பின்பு மலர் கருவுற்று, பிஞ்சாகி, காயாகிக் கனிகிறது — மங்கைக்கும் அதே நியதிதான்!

இப்படி மங்கை வாழ்வின் காதல் தொடக்கம் மலராலேயே துவங்குகிறது. கணவனிறந்தால் மங்கை மலரை மறக்கின்றாள்; அவள் வாழ்வு மலரோடு முடிகிறது! தமிழிலக்கியங்களின் காதல் வாழ்வினைக் கூர்ந்து கவனித்தால் தலைவனைப் பிரிந்த தலைவியின் உடல் பீர்க்கம் பூவின் நிறத்தை அடைவதைக் காணலாம்; ஊடிய தலைவியின் உடல் மாதவிப் பூவைப்போல் மாமை நிறம் அடைவதை உணரலாம். இப்படி மங்கையின் உறுப்புகள் முதற்கொண்டு அவளின் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவுகளிலும் மலர்களின் தொடர்பு இருப்பதை உணரலாம்.

மலரைக் காணும் கவிஞன் நினைவில் மலர்வது மங்கையின் உருவம்தான். "மென்மையான மங்கைக்கு ஏற்ற உவமையாக மலரைவிட்டால் வேறில்லை"—இதுதான் இலக்கியங்கள் காட்டும் உண்மை. எந்தக் கவிஞனும் மங்கையைப் பாடும்போது மலரை மறப்பதில்லை. ஒன்றிரண்டு "எடுத்துக் காட்டுகள்" எடுத்து வைத்தேன்—சுவைக்க!

அழகான அந்தப் பெண்......!

"வண்டு வந்து மடக்காத வெள்ளை மலர்—நிலவு
கண்டு சிரிக்காத அல்லி மலர்!"

கவிஞன் ஒரு மங்கையைப் பார்த்தான். களங்கமறியா முகத்தோடு—வாழவைக்கக் காதலன் உள்ள நிறைவோடு—பார்த்தால் பசி எடுக்கும் பருவ அழகோடு —இனிமை நினைவோடு—எச்சலனமும் இன்றி உறங்குகின்ற அந்த மங்கையென்னும் தங்கச் சிலைக்கு ஏற்ற ஒப்புமை தேடிய கவிஞனின் எழுத்தில்தான் எத்தனை முழுமையான, சரியான உவமை பாருங்கள்! ஆதவனை எதிர்நோக்கும் கூம்பிய தாமரை போன்றிருந்ததாம்.

இத்தகைய மலர்கள் இன்றைக்கும் பூசைப் பொருளாய் — காதல் சின்னமாய்—வாழ்த்துக் கருவிகளாய் வாழ்கின்றன. 'மலர்' என்று சொல்லும்போதே ஒருவகை இன்பக்கிறக்கம் ஏற்படுவதைக் காணலாம். 'எனதன்பு மலர்களே! உங்களைக் கொய்ய நான் வரவில்லை என்பதை எப்படி உங்களுக்கு உணர்த்துவேன்?' என்று தன்னைக்கண்டு அஞ்சி அசைந்த மலர்களைக் கண்டு கண்ணீர் விட்டான், கவிஞன் இக்பால்! இவர்கள் மலரின் மென்மையோடு மனங்கலந்து வாழ்ந்தவர்கள். அத்தகைய மலருள்ளம் நமக்கும் மலரட்டும்!




மூன்று நாட்கள்—உலகெங்கிலும் ஒரே பரபரப்பு—அந்தக் கப்பல் என்ன ஆகியிருக்கும் என்ற கேள்விப் புயல் — பற்பலவிதமான யூகங்கள் — கடற் கொள்ளை நடைபெறுகிறதோ என்ற ஐயப்பாடு — எங்காவது கடலில் மூழ்கியிருக்கக் கூடுமோ, என்ற அச்சம்!

கப்பலைப் பற்றிய விளக்கங்கள் வந்த வண்ண மிருந்தன, செய்தித் தாள்களில்!

இங்கிலாந்து, அமெரிக்கா இரு நாடுகளும், மும்முரமாக ஈடுபடுத்தின, தத்தமது கப்பற் படையையும், விமானங்களையும், காணமற்போன அந்தக் கப்பலைத் தேடிடும் பணியில்!

போர்ச்சுகல் நாட்டுக் கப்பற்படை தயாராகிக் கொண்டிருந்தது!

தென் அட்லான்டிக் பகுதியில், பிரயாணம் செய்ய விருந்த கப்பல்கள் அனைத்திற்கும், வேண்டுகோள் விடுக்கப்பட்டன, அந்தக் கப்பல் எங்காவது தென் பட்டால், உடனே செய்தி அறிவிக்குமாறு!

கடைசியில் — கப்பல் காணமற்போன மூன்றும் நாள் — டென்மார்க் தேசத்துக் கப்பல் ஒன்றிலிருந்து செய்தி வந்தது, காணமற்போன கப்பல் அட்லாண்டிக் சமுத்திரத்தில், தென கிழக்குத் திசையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறதென்று!

அடுத்த சிலமணி நேரத்திற்குள், அமெரிக்காவின் போர் விமானம், அந்தக் கப்பலின்மீது பறந்தது!

விமானத்தைக் கண்டதும், பிரயாணிகள் அளவு கடந்த மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தனர்—ஆரவாரம் செய்தனர்!

○ ○

இந்த நிகழ்ச்சி, இந்த நூற்றுண்டின் அதிசயங்களில் ஒன்றுகக் கருதப்படுகிறது, இப்போது! ஆரம்பத்திலே அதிர்ச்சி—பின்னர் அதிசயம்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ், தான் பிரயாணம் செய்த கப்பலுக்கு சாண்டா மேரியா (Santa Maria) என்று பெயரிட்டிருந்தாரும்—அதே பெயர் தான் காணமற்போன இந்தக் கப்பலுக்கும் சூட்டப்பட்டிருந்தது, போர்ச்சுகல் நாட்டினரால்! அந்தப் பெயரைச் சூட்டுவதிலே, அளவிறந்த மகிழ்ச்சி, பெருமிதம், அவர்கட்கு!

ஏறக்குறைய 22000 டன் எடையுள்ள அந்தக் கப்பல், போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த லிஸ்பன் (Lisbon) துறைமுகத்திலேயிருந்து, 1961ம் ஆண்டு, ஜனவரி 9ம் நாள் புறப்பட்டது!

அன்றிருந்து பதின்மூன்று நாட்கள் வரை—ஜனவரி 22-ம் நாள் வரை — பிரயாணம் அமைதியாகவே நடைபெற்றது, எந்தவிதத் தொந்தரவுமில்லாமல்!

கப்பலில் ஏறக்குறைய 600 பிரயாணிகள் இருந்தனர்.

ஜனவரி 21-ல், தென் அமெரிக்காவின் வடகோடி நாடான, வெனிசூலா (Venezula) நாட்டைச் சேர்ந்த லா கைரா (La Guaira) துறைமுகத்தை வந்தடைந்தது—அங்கு 23 பிரயாணிகள் கப்பலிலே ஏறினுர்கள்.

போர்ச்சுகல் நாட்டு அதிபர் சலாசருக்கு எதிராகப் புரட்சி செய்து, நாடு கடத்தப்பட்ட ஜெனரல் டெல்கேடோவைச் (General Delgado) சேர்ந்தவர்கள் அவர்கள்.

> கப்பலை முதலில் கைப்பற்றுவது—பிரயாணிகளை, ஏதாவதொரு துறைமுகத்திலே இறக்கிவிடுவது—பின்னர் அந்தக் கப்பலைத் தளமாகப் பயன்படுத்திப் போர்ச்சுகல்நாட்டு அதிபருக்கு எதிராகப் புரட்சியிலே ஈடுபடுவது—இதுதான் அவர்களது திட்டம்!

அந்தப் புரட்சிக்காரர்களின் தலைவன் கால்வோ (Galvao) 65 ஆண்டுகளைத் தாண்டியவன்! ஒல்லியான உருவம்—எனினும் உறுதி படைத்த நெஞ்சம்! இல்லையெனில், ஈடுபட இயலுமா, இத்தகைய பயங்கரமான, மயிர்க்கூச்செறிகின்றதொரு பணியில்?

கவிதைகள் தீட்டினுன் முதலில்—ஷேக்ஸ்பியர் நூல்களை மொழி பெயர்த்தான், பின்னர்—படைத் தலைவனுக ஆனுன், அதற்குப் பிறகு!

ஆட்சியை எதிர்த்தான் என்பதற்காகச் சிறையிலிடப்பட்டான் 1958ல்-ஆயினும் எப்படியோ தப்பினுன், சிற்சில மாதங்களுக்குள்ளாகவே!

தப்பியவன், வெனிசூலா நாட்டில், லா கைரா துறைமுகத்தருகில் வாழ்க்கை நடத்தி வந்தான்.

அந்தத் துறைமுகத்துக்கு சான்டா மேரியா அடிக்கடி வருமாம்! அப்போது அவனுடைய உள்ளத்திலே முளைவிட்டது, இத்தகைய திட்டம்!

இந்தத் திட்டத்தோடு, கப்பல் அதிகாரிகளின் அனுமதி பெற்றுப் பல தடவை கப்பலுக்குள் சென்று பார்த்திருக்கின்ருன் அவன்!

அப்போது அவனுக்குப் புரிந்தது, அந்தக் கப்பல் பிரயாணிகளை மட்டுமே ஏற்றிச் செல்லுகிற கப்பலென்றும், அதில் போர்க்கருவிகள் ஏதுமில்லையென்றும்!

எனவே, சூழ்நிலையைச் சாதகமாக்கிக்கொண்டான். ஜனவரி 21-ல் அவனைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கப்பலில் ஏறினர் லாகைரா துறைமுகத்தில்!

அவனுக்கு மட்டும் ஒரு சந்தேகம்—எங்கே திட்டம் வெளியாகிவிடுமோ என்ற அச்சம்!

எனவே அந்தத் துறைமுகத்திலே அவன் ஏறவில்லை.

அடுத்த நாள், அந்தக் கப்பல் குராகோ (Curago) என்ற துறைமுகத்திற்குவருமென்று அவனறிவான்—எனவே அந்த இடத்திற்கு ஆகாய விமானத்தில் சென்றுவிட்டான்—அங்கிருந்துதான் கப்பலுக்கு டிக்கட் வாங்கினன்!

எனவே ஜனவரி 22-ல் புரட்சித் தலைவனும் கப்பலேறிவிட்டான்.

அடுத்து, திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப் படவேண்டியதுதான்!

22-ம் தேதி இரவு 11-55-க்கு, இரண்டு குண்டுகள் வெடித்தன, அந்தக் கப்பலில்! கப்பல் தலைவனுக்குத் துணையாகப் பணிபுரிந்துவந்த காஸ்டா, அந்தக் குண்டுகள் பாய்ந்து படுகாயமுற்று உயிருக்கு மன்ருடினன்.

குண்டுச்சத்தம்கேட்டவுடன்,கப்பலோட்டப்பயிற்சி பெற்றுவரும் டி சௌசா (De Sousa) தனது அறையை விட்டு வெளியே வந்தான்!

ஒரு விநாடி திகைப்பு! "கப்பல் தலைவனிடம் போ!" என்ருன் காஸ்டா, உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் போதே!

காஸ்டாவை அதுவரை கவனித்துக்கொள்ள ஆள் வேண்டுமே, முதலில் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில், டி சௌசா, ரேடியோ ஆபரேடர் அறைக்கு ஓடினன்.

ஆனல், கதவைத் திறந்ததும் அவனுக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் காத்திருந்தன அங்கு! ரேடியோ ஆபரேடர் இருக்கவேண்டிய இடத்தில் துப்பாக்கியோடு ஒருவன் நின்றுகொண்டிருந்தான்!

அவனது துப்பாக்கிக் குண்டுகள் டி சௌசாவைத் தாக்கின — தள்ளாடி வீழ்ந்தான்! ஆனலும், குருதி கொட்டக் கொட்ட, நெஞ்சாலே நகர்ந்து கொண்டே, கப்பல் தலைவன் அறைக்குச் சென்ருன், செய்தி சொல்ல!—நிலைமையை விளக்க!

தலைவன் அறையை அடைந்துவிட்டான்—ஆனல் கூக்குரலிடவோ, கதவைத்தட்டவோ வலிவில்லை — மூர்ச்சையாகிவிட்டான்!

இதற்குள் கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒருவன், தலைவனிடம் ஓடோடி வந்தான்—ஏற்பட்டிருக்கிற பயங்கரத்தை விவரித்தான் நடுக்கத்தோடு!

கப்பல் தலைவன், அவசர அவசரமாக, ரேடியோ ஆபரேடர் அறைக்கு 'போன்' செய்தான்!

அங்கிருந்து அவன், முன்பின் கேட்டறியாத ஒரு குரல் கேட்டது!

"பேசுவது, கேப்டன் கால்வோ. ஜெனரல் டெல்கேடோவின் பெயரால், இந்தக் கப்பலை நான் பலாத்காரத்தின் மூலம் கைப்பற்றியிருக்கிறேன். நீங்கள் என் செயலுக்கு எந்த விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது—செய்தால், பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேரும். சரணடையுங்கள்—உங்களுக்கு இலாபகரமாக இருக்கும்."

என்ன செய்யமுடியும், அந்தக் கப்பல் தலைவன்? நடப்பது நடக்கட்டும் என்று விட்டுவிட்டான்!

ஏறக்குறைய அரைமணி நேரத்திற்குள்ளாகவே காரியங்கள் அனைத்தும் நிறைவேறின — கப்பல் கைமாறியது!

பிரயாணிகளாலே, நடந்ததை நம்பவே முடியவில்லை — அவர்களுக்குள்ளே பற்பலவிதமான எண்ணங்கள், குழப்பங்கள், விளைவு என்ன ஆகும் என்பது பற்றிய வதந்திகள்.

காஸ்டாவும் டி சௌசாவும், கப்பலிலிருந்த மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். அங்கு காஸ்டா, எவ்வளவோ சிகிச்சைக்குப் பிறகும், இறப்பை அணைத்துக் கொண்டான்—நான்கு நாட்களுக்கு முன்னர்தான், அவனுக்குத் தந்தி வந்திருந்தது, அவனுடைய மனைவியிடமிருந்து, தனக்கு ஒரு மகள் பிறந்திருப்பதாக!

டி சௌசா உயிர் பிழைத்தான்—மறுநாள் காலை செயின்ட் லூசியா (St. Lucia) துறைமுகத்தருகில் இறக்கிவிடப்பட்டான்.

பின்னர், காலை 9 மணியளவில் (ஜனவரி 23) முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புப் பிரயாணிகள் அனைவரும், கப்பல் தலைவனல் அழைக்கப்பட்டனர்.

தலைவன் மேரியா (Maria) அவர்களுக்கிடையே போர்ச்சுகல் மொழியிலே உரையாற்றினன்,

"கப்பல் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டிருக்கிறது. பறித்தவர்கள், துப்பாக்கி முனையில் கப்பலை ஓட்டிச் செல்லுகிருர்கள்" என்ருன்.

அடுத்துப் பேசிய கால்வோ, தனது நோக்கத்தை விளக்கி, பிரயாணிகளுக்கு எந்தவிதத் தொந்தரவும் தரப்படமாட்டாது, என உறுதியளித்தான்!

எனினும் அவர்களிடையே சொல்லொணுத பீதி—அடுத்து என்ன நேருமோ என்ற ஐயப்பாடு, அச்சம்—சுடுகாட்டு அமைதி என்பார்களே, அதுபோன்ற சூழ்நிலை!

ஆயினும், சிலமணி நேரங்கள்தான் அந்த நிலை—பிறகு எல்லாம் வழக்கம்போல் நடைபெற்றன.

நீச்சல் குளத்தில் குளிப்பது—பந்தாடுவது—நடனம்—களியாட்டங்கள்—அனைத்துமே நடைபெற்றன!


[ கால்வோ ]

இந்த இக்கட்டான வேளையில் கப்பலில் ஒரு பிரசவமும் ஆகியிருக்கிறது.

ஹாலந்து நாட்டைச் சேர்ந்த ஒருவனும்—ஸ்பெயின் நாட்டுப் பெண்மணியொருத்தியும், ஒருவரையொருவர் கண்டனர், கட்டுண்டனர், திருமண உறுதிமொழிகளும் பரிமாறப்பட்டன!

மூன்று நாட்கள் கழிந்தன — கப்பல் தென்கிழக்குத் திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தது, ட்ரினிடாட் நகரத்திற்கு 500 மைல் கிழக்கில்!

அப்போதுதான், அமெரிக்க நாட்டு விமானம் அதைக் கண்டது.

O O

அந்த விமானிக்கும் கால்வோவுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன, கம்பியில்லாத் தந்தி மூலம்!

கால்வோ திட்டவட்டமாகச் சொன்னன், "கடற் கொள்ளையடிக்க வேண்டுமென்பதல்ல, எனது நோக்கம். போர்ச்சுகல் நாட்டைச் சலாசரின் பிடியிலேயிருந்து விடுவிக்க வேண்டுமென்பதற்காகவே இப்படிச் செய்தேன்'' என்று!

பேசவேண்டியதைப் பேசிக்கொள்வோம் என்று மீண்டும் மீண்டும் வேண்டுகோள் வந்தது, அமெரிக்க நாட்டுக் கப்பற் படையினரிடமிருந்து.

ஜனவரி 31ம் நாள்–கப்பல் வெனிசுலாவின் துறைமுகமான ரிசைப் (Recife) நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது, அமெரிக்க நாட்டுக் கப்பற் படைத் தளபதி அட்மிரல் ஸ்மித் (Admiral Smith) கால்வோவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்—அதிலும் பயனில்லை!

தனது திட்டங்கள் மெள்ள மெள்ளத் தவிடுபொடியாவதைத் தெள்ளத் தெளிய உணர்ந்தான், கால்வோ.

எனவே, கடைசி முயற்சி என்ற முறையில், கப்பலைத் துறைமுகத்திற்கு வெளியிலேயே நிறுத்திவிட்டு, பிரேசில் நாட்டு அரசோடு பேச்சு வார்த்தைகள் நடத்தினன். பிரேசில் நாட்டு ஜனதிபதியாக, குவாட்ராஸ் (Guadros) அப்போதுதான் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவருக்கும் கால்வோவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு!

எனினும், குவாட்ராஸ், ஒரு நாட்டின் தலைவனென்ற முறையில் ஏதும் செய்ய இயலாத நிலை!

எனவே கால்வோவின் திட்டங்கள் தவிடு பொடியாயின—சான்டா மேரியா, ரிசைப் துறைமுகத்திலே நிறுத்தப்பட்டதும், பிரயாணிகள் அனைவரும் துள்ளிக் குதித்தவண்ணம் ஓடினர் கரைக்கு — கப்பல் அதன் உரிமையாளருக்கு அளிக்கப்பட்டது-கால்வோ பிரேசில் நாட்டில் தஞ்சம் புகுந்தான் — உலகை உலுக்கிய அத்தியாயம் முடிவுற்றது!

செய்திகள் பறந்தன உலகெங்கும்!

கப்பல் அமைதியாகவே சென்றுகொண்டிருந்தது.

எனினும், கால்வோவுக்குப் பற்பல குழப்பங்கள்! கப்பலிலிருந்த உணவுப் பொருள்கள் நீண்ட நாட்களுக்குப் போதுமானவையல்ல மூன்றும் வகுப்பிலேயிருந்த பிரயாணிகள், "ஏர் கண்டிஷன்'' இயந்திரத்திலே பழுது ஏற்பட்டதாலே மிகவும் அவதிக்கு ஆளாயினர்!

எப்படியோ, கப்பலிலிருந்த பிரயாணிகளை, எந்தவித ஆபத்துமில்லாமல் இறக்கிவிட்டு விடுங்கள், பின்னர்,



இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிற்று—காலடி பட்ட இடமெல்லாம்! களம் பலப்பல! கடுவேகமாகப் போரிட்டவண்ணம், நாடுபல வென்ருன், நானிலம் நடுங்கிடப் போரிட்டான், எங்கும் இரத்தவெள்ளம், பிணமலை, எலும்புக் குவியல்!! போர்! போர்! போர்! என்று முழக்கம் எழுப்பியபடி, இருபது ஆண்டுகள், எங்கும் எவரும் இவன் நடாத்தும் செயல்கள் பற்றியே பேசித் தீரவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டான்; இரத்தம் பொங்கிற்று, மலைமுகடுகளில், பெரு நகரங்களில், சாலைகளில் சோலைகளில், கடலோரங்களில்.

கிளம்பிவிட்டது இவன் நடாத்திச் செல்லும் பெரும் படை என்று செய்தி வெளிவந்தவுடன், அரண்மனைகளிலே அச்சம், மாளிகைகளிலே மருட்சி, இல்லங்களிலே திகைப்பு ஏற்பட்டுவிடும்.

எப்பக்கம் பார்த்துப் பாய்ந்திடுமோ, எவர்மீது தாக்குதல் நடத்திடுமோ, என்ன நிபந்தனை விதித்திடுமோ, என்ற ஏக்கம் குடிகொண்ட நிலையில், பேரரசர்கள் பீதி கொள்வர்.

நேற்றுத்தானே கிளம்பிற்று, இதற்குள்ளாகவா, காடுமலை கடந்து, ஆறுகளைத் தாண்டி, அழகு நகர்மீது தாக்குதலை நடாத்துகிறது அந்தப்படை என்று வியந்து கேட்பர் — அவ்வளவு வேகமாக, எத்தகைய இடுக்கண்களையும் கண்டு கலங்காமல், எதிர்ப்புகளை முறியடித்தபடி, அவனுடைய படைகள் பாய்ந்திடும்.

பெருங் காற்றைத் தடுத்து நிறுத்திவிடத் தருக்களால் முடிவதுண்டோ—வேரறுந்தன்ரே பெரு மரங்கள் சாய்கின்றன, பெருங் காற்றின் முன்பு! இப்படையும் அதுபோன்றே, எதிர்ப்புகளை முறித்துக் கீழே சாய்த்துவிட்டு, இடியோசை போன்ற வெற்றி முழக்கமிட்டபடி, முன்னேறும், வேகவேகமாக, குறித்த இடம் நோக்கி, விட்ட கணைபோல!!

தாக்கும் சக்திமட்டுமல்ல, தாங்கிக்கொள்ளும் சக்தியும் நிரம்பக் கொண்ட படை; வெட்டி வீழ்த்த மட்டுமல்ல, வீழ்ந்துபடவும் அஞ்சாது நடமிடுகிறது படை.

பயம்கொண்டு பதுங்க மறுக்கிறது; பசி, தூக்கம், அதனைத் தொட அஞ்சுகின்றன! பாய்வோம், பாய்வோம், மடைகளை உடைத்தெறிந்திடும் வெள்ளம்போல, தீயைப் போல, என்று கூருமற் கூறிக்கொண்டு செல்கிறது; இரத்தம் பொங்குகிறது! இருபது ஆண்டுகள், இதுபோல!

“எதிரியின் படைபலம் மிக அதிகம்.”

“பொருள் என்ன? விளங்குகிறதா? நம்மிடம் எதிரிக்கு உள்ள பயம் அவ்வளவு. பெரும் படை திரட்டித்தான், தனக்கு வர இருக்கும் ஆபத்தைத் தடுத்துக்கொள்ள முடியும் என்று கருதுகிருன், வீர தீரமாகப் போரிடுபவர்கள்என்பதை உணர்ந்துகொண்டு விட்டனர் மாற்ருர் என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமோ! படை வருகிறது என்றதும் தொடை நடுக்கம் ஏற்பட்டுவிடுகிறது மாற்ருர்களுக்கு. இந்த நிலை கண்டு, கெக்கலி செய்திட வாரீர்! கிலிகொண்டு, ஒரு பெருத்த கும்பல் கூடிவிட்டிருக்கிறது, விரட்டி அடித்திடக் கிளம்புவீர், வெற்றி நம்மை அழைக்கிறது! வீரர்களுக்கு அழைப்பு, கோழைகளுக்கு அல்ல! கோழைகளா!! கோழைகள், இந்தக் கொடியின் கீழ் ஏது!! இது வீரர் படை, வெற்றிப் படை; தீரர் படை, தியாகப் படை!!”

# இரத்தம் பொங்கிய



# இருபது ஆண்டுகள்



## அண்ணாதுரை

களம் நோக்கிப் பாயும்போது படை வரிசையிலே, பாடி வீடுகளிலே இதுபோன்ற உரையாடல்!

எதிரியின் படைபலம் அதிகம் என்று கேள்விப் பட்டவுடன் என்ன ஆகுமோ நமது கதி என்ற ஏக்கம் கொள்வதில்லை, எதிரியின் படை அதிகமாகவாக, வேட்டை மும்முரமாகும், விருதுகள் விதவிதம் பெறலாம், விருந்தின் சுவை மிகுதியாகும் என்று எண்ணிக் களித்திடுவர், அந்தப் படையினர்.

கிளம்பிற்று காண் சிங்கக் கூட்டம்! கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!! — என்று கவிகள் சிந்து பாடிடுவர், அத்துணை வீரம் கொப்பளிக்கும் படையினரிடம்! வீரம் கொப்பளிக்கும் நிலையினர் பாய்ந்திடும் இடமெங்கும், இரத்தம் பொங்கும்!

வெறியோ? மண்டலங்களைத் தாக்கிட வேண்டும், மாடுமனை அழித்திட வேண்டும், இரத்தச் சேற்றிலே புரண்டிட வேண்டும் என்ற வெறியோ எனில், வெறி அல்ல! எமது கொடி எங்கணும் பறந்திட வேண்டும்! எமது ஆணைக்கு எவரும் அடங்கிடுதல் வேண்டும்! எமக்கு நிகர் எவரும் இல்லை என்ற பேருண்மை நிலை நாட்டப்படவேண்டும்! என்றனர் எழுச்சி கொண்டிருந்த படை வீரர்கள்—கொண்டிருந்தனரா! எழுச்சி ஊட்டப்பட்டிருந்தது அவர்களுக்கு!!

வெறி—எழுச்சி—ஆர்வம்—ஆவல்—இவை வெவ்வேறு வார்த்தைகள்—வெறும் வார்த்தை மாற்றங்கள் மட்டுமா இவை! நிலைமை மாற்றங்கள்! நினைப்பிலே ஏற்படும் மாற்றங்கள்! போக்கிலே மூட்டப்படும் மாற்றங்கள்! அந்த மாற்றங்களுக்கு ஏற்ப விளைவுகள் வெவ்வேறுகின்றன.

தாயகத்தைத் தருக்கர் தாக்கிடும்போது, நாட்டுப் பாதுகாப்புக்காக, நாட்டு உரிமைப் பாதுகாப்புக்காகப் போரிடும் படையினர் காட்டிடும் வீரம், எழுச்சியை அடிப்படையாகக் கொள்கிறது.

பிறிதோர் நாட்டின்மீது, படை எடுத்துச் சென்று, தாக்கிப் பிடித்திடலாம், தாள் பணியச் செய்திடலாம், கொன்று குவித்திடலாம் கொள்ளை அடித்திடலாம், சிட்டுப்போல, மல்லிகை மொட்டுப்போல, உள்ள மெல்லியலார் கிடைப்பர்; அலறித் துடித்திடுவர் அதரம் சுவைத்திடும்போது, என்ற எண்ணம் கொண்டிடுவோர் வெறிகொண்டலைகின்றனர் என்னலாம்.

நீதிக்காக நேர்மைக்காக, உரிமை காத்திட, அநீதியை அழித்திடக் கிளம்பும் படை வீரதீரத்துடனும், தியாக உணர்வுடனும், தாளின்கீழ் வீழ்ந்து தாசராவதைக் காட்டிலும், மண்ணிலே மாற்றான் வாளால் வெட்டுண்டு நம் தலை உருளட்டும், கழுகு உடலைக் கொத்தித் தின்னட்டும், செத்துத் தொலைந்தான் சீறிப் போரிட்டவன் என்று கூறிக் கேலி பேசட்டும், தாக்க முனைந்தோம், தாள் தொழுதான், உயிர்ப்பிச்சை தாரும், உமக்கு நான் எதனையும் உடைமையாக்குகிறேன் என்று கெஞ்சினான் என்று எதிரி பேசிடும் பேச்சை விட, சாவு, கொடுமையுள்ளது அல்ல, என்ற உணர்ச்சி

யுடன் போரிடும் படை, மண்ணுக்காக அல்ல, மானங் காத்திட, மாண்பு நிலைத்திடப் போரிடும் படை என்றும் நிலைத்த புகழ் பெறுகிறது. பாவாணர்களின் புகழாரம் சூட்டப்பட்டுப், பலப்பல தலைமுறைகளுக்குப் பின்பும், வீடுதோறும் வீடுதோறும், பேசப்படும் காதைகளுக்கும், பாடப்படும் கவிதைகளுக்கும் உறுபொருளாகிறது, அவர் காட்டும் வீரம்!

படைகளைக் கொன்று குவித்து, மண்டலங்களை மண்மேடுகளாக்கி, மணிமுடிகளைக் காலால் உதைத்து விளையாடி, நகர்களைக் கொளுத்தி, நாசத்தை நடமிட விட்டுக் கொள்ளை அடித்துக், குமரிகளைக் கற்பழித்து, அடிமைகொண்டு, எஞ்சியோரைச் சித்திரவதை செய்து, சரிந்துவிழும் கட்டிடம், அதன்கீழ் சிக்கிக் கூழானோர் தொகை, பற்றி எரியும் வீடுகள், ஆங்கு பதறிக் கருகிடும் மக்கள், இவை போன்ற நெஞ்சம் உருக்கும் நிலைமைகளைக் கண்டு, கைகொட்டிச் சிரித்திடும்—போக்கு, வீரம் அல்ல—வெறி!

எழுச்சி கொண்டவன் வீரன்!

தியாக உணர்வுடன் போரிடுபவன் மாவீரன்!

வெறி உணர்ச்சியால் ஆட்டி வைக்கப்படும் நிலையிலே போரிடுபவன், மாவீரன் ஆகான் — மனித மிருகமாகிறான்.

ஒரு நாட்டுப் படைபற்றி எதிரி நாட்டுப்படை கூறிடும் கருத்தினை ஆதாரமாகக்கொண்டு பெறப்படும் எண்ணம், முற்றிலும் உண்மையானது என்று கூறுவதற்கில்லை. போர் நடந்திடும்போதும், அதை அடுத்துச் சில ஆண்டுகள் வரையிலும்கூட, உலவிடும் கருத்துகளைக்கொண்டு, உண்மை என்ன என்பதனைக் கண்டறிதலும் முடியாத காரியமாகும்.

போர் குறித்துப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, பொது நிலையினர், ஆய்வாளர்கள், விருப்பு வெறுப்பற்ற நிலையிலே வெளியிடும் கருத்துகளே, பெரும் அளவு உண்மை நிலையை எடுத்துக்காட்டுவனவாக இருக்க முடியும்.

ஒரு நாட்டுக்கும் மற்றோர் நாட்டுக்கும் ஏற்பட்டுவிடும் தொடர்புபற்றி, மூண்டுவிடும் போர்பற்றி, எல்லாக் காரணங்களும், எல்லா உண்மைகளும், எப்படியும் வெளிவந்தே தீரும் என்றுகூடக் கூறுவதற்கில்லை. எத்தனையோ உண்மைகள் வெளிவராமலே போய்விடக்கூடும். மூச்சடக்கி மூழ்கி மூழ்கி எடுத்தாலும், கடலிலே உள்ள எல்லா முத்துகளையுமா எடுத்துவிடமுடிகிறது!!

போர் என்பதே வெறிதான்—மனிதன் நிலைதடுமாறிடும்போதும்–அறநெறி மறைந்திடும்போதும் விளைவதே போர் — போர் எந்த நோக்கத்துக்காயினும் சரி, காரணம் எத்துணை உண்மையானதாக இருப்பினும், நோக்கம் எவ்வளவு தூய்மையானதாக அமையினும், போர் வெறுக்கத்தக்கதே! கண்டிக்கத்தக்கதே! ஒரு நாடு இழைக்கும் கொடுமை, கொண்டிடும் அநீதியான போக்கு என்பவைகளைக் கண்டிக்க, களைந்தெறிய நடத்தப்படும் போர் எனினும்கூடப், போர் மனிதகுலத்துக்கு இழைக்கப்படும் துரோகம் என்பதிலே ஐயமில்லை. எத்துணை புனிதத்தன்மையுடையது என்று எடுத்து விளக்கப்பட்டாலும், போர்ச்சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, மக்களிடம், விரும்பத்தகாத வெறுப்புணர்ச்சிகள், கிளம்பிவிடுவதைத் தடுக்க இயலுவதில்லை—அதனைக் கவனிக்கும்போது போர் மனித குலத்துக்குக் கேடு பயக்கும் என்பதை மறுக்க இயலாது—என்று பொது நீதி பேசுவோர் உளர்; அந்தப் பொது நீதியை நிலைநாட்டுவது முடியாததாக இன்றுவரை இருந்துவருகிறதே தவிர, அதன் மாண்பினை, உண்மையினை, மறுத்துப் பேசுவார் எவரும் இல்லை.

இந்த வையகம் வலிவுள்ளவனுக்கே! எவன் வலிவுள்ளவன் என்பதனை அவ்வப்போது எடுத்து விளக்கியாக வேண்டி நேரிட்டுவிடுகிறது; போர் அக்காரணம் பற்றியே தேவைப்படுகிறது; போரின்போது வலிவு மிக்கவன் வாகை சூடுகிறான், ஆற்றல் அற்றவர்கள் அடிபணிகின்றனர், அவனிக்குப் புதியதோர்ஆற்றலரசு கிடைக்கிறது—போரின் விளைவு இஃதே என்று கூறுவோரின் தொகை மிகக் குறைந்துபட்டுவிட்டது. உள்ளனர், இப்போதும் ஒரு சிலர்—போர் தவிர்க்கமுடியாதது—என்று கூறிட! தேவைப்படுகிறது என்றுகூடக் கூற முனைவர், அறிவுத் தெளிவு பெற்றநிலை இன்று அவனியில் இல்லாதிருந்தால்.

போரற்ற, புகைச்சலற்ற ஓர் உலகு, பொன்னுலகாகும்—ஐயமில்லை!

மலர்தரும் செடி கொடிகளும், கனிதரும் மரங்களும் கொண்டதாகவே தோட்டங்கள் இருத்தல் வேண்டும்—பூங்காக்கள் கொண்டதாகவே புவி இருக்க வேண்டும் என்று விரும்புவதும் கூறுவதும், தவறு அல்ல—அந்த நிலைக்காகப் பாடுபடுவது தேவையானதுங்கூட! ஆனால் மலர்த்தோட்டத்துக்குப் பக்கத்திலே கள்ளி காளான் முளைத்துவிடுகிறது—பக்கத்திலா?—தோட்டத்திலேயேகூட!! என் செய்யலாம்? கனி குலுங்கும் மரத்தைக் கருமந்தி பிடித்தாட்டுகிறது; கடுங்காற்றுக் கிளம்பி மரங்களைப் பெயர்த்தெடுத்து விடுகிறது!! என் செய்வது?

கேடுகள் முளைக்கும்போது, அவற்றினை எதிர்த்து வீழ்த்தி, நல்லனவற்றைப் பாதுகாத்துத் தீரவேண்டும்!

அது மட்டும் போதாது—கேடுகள் மீண்டும் எழாதபடி, பாதுகாப்பு ஏற்படுத்திக்கொண்டாகவேண்டும்.

இது தேவையானதுதான் — இதனை வற்புறுத்த, விளக்கம் அளிக்க, இதற்கு ஆதரவுதிரட்டிடத் தேவையா —எவரும் இசைவரே என்று கூறத்தோன்றுகிறது. ஆனால் இதிலே உள்ள சிக்கல் யாதெனில், களைந்தெறியப்படவேண்டிய கேடு எது—என்ன இலக்கணம் கண்டு ஒன்றினைக் கேடு என்று கொள்ளமுடிகிறது, என்பதுதான்.

இரத்தம் பொங்கிய இருபது ஆண்டுகள், நாடு பலவற்றைத் தாக்கி, அரசு பலவற்றைக் கவிழ்த்து, பல இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தது, கொடுமை என்பதற்கு வாதங்கள் தேவையா? மகனை இழந்த தாயின்கண்ணீர் போதாதா! தந்தையை இழந்த மதலையின் கதறல் போதாதா! தாலி இழந்த தையலரின் தவிப்புப் போதாதா! எனின்—எத்தகைய போரிலும்—அறம் காத்திட, உரிமை பெற்றிட—மானம் காத்திட—நடத்தப்படும் போரிலும், நெஞ்சு நெக்குருகச் செய்யும் இவை காணப்படுகின்றன! எனவே, இவைகள் காணப்படும் போர் கொடுமை நடத்தப்பட்டிருக்கிறது என்பதற்குப் போதுமான சான்று என்றால், எல்லாப் போரிலும் இவை நேரிட்டுவிடுகின்றன. எனவே இவைகளைக் கொண்டு, கேடு எது என்று கண்டறிய இயலவில்லை.

எனவே, சிக்கல்நிரம்பிய பிரச்சினை, கேடு எது என்பதனைக் கண்டறிவதே!



நெப்போலியன்

இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிடச் செய்ததே கேடன்றே, கொடுமையன்றே, அக்ரமமல்லவோ, அநீதியன்றே!—என்போருக்கு, "ஆம்! ஆம்! இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிற்று! மறுக்கவில்லை! ஆனால், கேடுகளைக் களைய, மீண்டும் கேடுகள் ஏற்படாமலிருக்கும் வலிவான ஓர் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே, இரத்தம் பொங்கிட இருபது ஆண்டுகள் போர்நடாத்தினேன்—வெறும் வெற்றிகளுக்காக அல்ல — விருதுகள் பெற அல்ல — வெறியினல் அல்ல! போர்நடாத்திப், பொல்லாங்கு மூட்டவல்லவர்களை அடக்கி ஒடுக்கி, ஒருபெரும் பேரரசு அமைத்து, அந்தப் பெரும் பேரரசின் கீழ் எல்லா மக்களும் வாழ்ந்து, வளம்பலபெற்று, நீதி நிலைத்திட நிம்மதி ஓங்கிடத்தக்க நன்னிலை பெறவேண்டும் என்ற நோக்கமேகொண்டேன்—என்றுதான், இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிடவைத்த இணையில்லாப் போர் வீரன், தளர்வு காட்டாத படைத்தலைவன், அச்சமற்ற பெருவீரன், ஆற்றலுக்குத் தனி இலக்கணம் வகுத்துக் காட்டிய அருந்திறன்மிக்கோன் நெப்போலியன் கூறினான். இருபது ஆண்டுகள் இரத்தம் கொட்டப்பட்டதற்காகத், தன்னை மன்னிக்கும்படி கேட்டானில்லை. என் நோக்கம் நல்லது; கணக்குப்பொய்த்துப்போய்விட்டது; அவ்வளவுதான்!—என்று மட்டுமே கருத்தறிவித்தான்.

"இருபதாண்டுகள் இரத்தம் பொங்கச் செய்தவனா! ஐயோ! அத்துணை கொடியவனா! மனிதகுலத்தைக் கருவறுக்கவந்த மாபாவியா! — என்று கண்டித்து, அவன் கல்லறைமீது காரித்துப்புகின்றனரோ, இன்று? இல்லை! கல்லறையைக் காணும் போது, கண்களில் நீர்துளிர்க்கிறது. அவன் நடாத்திய போரிலே கொட்டப்பட்ட இரத்தம் பற்றி அல்ல, அவன் காட்டிய வீரம்பற்றி, போர் முறைகளை வகுத்த நேர்த்திபற்றி, பெற்ற வெற்றிகளைப் பற்றி, அவனைச் சுற்றி அமைந்திருந்த புகழொளிபற்றி எண்ணுகின்றனர் — எண்ணியதும், நீர் துளிர்க்கிறது, கண்களில்! நானிலத்தை நடுங்கவைத்த ஓர் மாவீரன் கல்லறைமுன் நிற்கிறோம் என்ற உணர்வு; வலிவு பெறுகிறது; வாழ்த்தத் தோன்றாவிட்டாலும், வசைபாட முடியவில்லை, வணக்கம் கூற முனைகிறோம்.

இந்தக் கல்லறையிலா உள்ளான், கடும் போர் பல புரிந்த நெப்போலியன் — காவலர் பலரைக் கவிழ்த்தவன் — புதிய காவலர்களை நொடிப்போதிலே உண்டாக்கிக் காட்டியவன். இந்தக் கல்லறைக்குள்ளா அடைபட்டுக் கிடக்கிறது, பல நூற்றாண்டுகளாக எங்கும் எவரும் கண்டறியாத வீர உணர்ச்சி -போர்த்திறன்!! என்றுவியப்படைகின்றனர்.

கல்லறை காட்சிப்பொருளாகிவிட்டது.

கல்லறையைக் கவனிக்கத் தொடங்கி விட்டோம்—கடைசியாகக் காணவேண்டிய கல்லறையை! முதலிலேயே!!

உலகினரில், அரசு நடாத்துவோர் ஆற்றல் அறிவோர், படை நடாத்துவோர் போர் முறை வகுப்போர் என்பவர் பலரும், சுட்டிக் காட்டிக், கல்லறை காண்மின்! கல்லூரிகள் பலவும் கற்பிக்க இயலாத கருத்துக்களைப் பெற்றிடலாம்—அத்தகைய கல்லறை இது, என்று சுட்டிக்காட்டிடத் தக்கதாகிவிட்டது—நெப்போலியனின் கல்லறை! ஆனல், காலத்தை வென்று நிற்கும் கல்லறைக்கு உரியவனாகிவிட்ட நெப்போலியன், படுத்துறங்கிய, தொட்டில்?

தங்கத்தாலானது அல்ல! மணிகள் இழைக்கப்பட்டது அல்ல! மாளிகைக் கூடத்திலே அதனை ஆட வைத்து மதுரகீதமிசைத்துத் தாதிமார் பாடவில்லை— எத்தனையோ ஏழைக் குழந்தைகளிலே அதுவும் ஒன்று. கைகளை ஆட்டுகிறது! கால்களால் உதைக்கிறது! உற்றுப் பார்க்கிறது! கலகலவெனச் சிரிக்கவில்லை, பார்ப்பவர், மறுபடியும் பார்க்க விரும்புவர் — அதுபோன்றதோர் கவர்ச்சித் தோற்றம் இருக்கிறது. ஆனல், எத்தனையோ குழ்ந்தைகள் உள்ளன, அந்தத் தீவினில்!! கார்சிகா எனும் தீவில்!

தீவினில் பிறந்தவன் வேறோர் தீவினில் அடைபட்டு இறந்துபடப்போகிறான் என்றா கண்டார்கள்!

தீவினில் பிறந்த இவன், நாடுபல ஆளப்பிறந்தவன் என்றும் அன்னை எண்ணவில்லை; முடிவிலே எலினா தீவிலே சிறைவைக்கப்பட்டு, இறந்துபடப்போகிறான் என்ற எண்ணம் எழக் காரணமும் இல்லை.

கார்சிகா தீவிலிருந்து கிளம்பி, எலினா தீவு போய்ச் சேர்ந்தான்—எத்தகைய பயணம்! இடையிலே என்

னென்ன வகையான தங்குமிடங்கள்! பெரும் படைகள் போரிட்ட களங்கள்! கோட்டை கொத்தளங்கள்! கொட்டும் குளிர் சூழ்ந்த சதுப்புகள்! பயங்கரச் சரிவுகள்! மலை யுச்சிகள்! பெருநகரங்கள்! அரண்மனைகள்! உல்லாசக் கூடங்கள்! பூங்காக்கள்! புலவர்குழாம் கூடும் கழகங்கள்! கூடாரங்கள்! குழலியர் கொலுவிருக்கும் மணி மாடங்கள்!!

எங்கெங்கெல்லாமோ சென்றான்—எத்துணை எத்துணையோ நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டான்!

கடைசியில், ஒரு தீவிலே பிறந்தவன் மற்றோர் தீவிலே இறந்துபடுகிறான்!

அன்னையின் மடியிலே தவழ்ந்திருந்தான் பிறந்த தீவில், கார்சிகாவில்! இறந்தபோது, பிடித்தடைத்த மாற்றாரின் முகாமுக்குப் பக்கத்திலே, இறுதிவரை அவனுடன் இருக்கும் வாய்ப்புப் பெற்ற ஆருயிர் நண்பர்கள் அருகிருந்து கண்ணீர் மல்கிட இறந்துபட்டான்—நீங்காத துயிலுற்றான் என்றனர் உடனிருந்தோர்.

மண்டலங்கள் பலவற்றை மருட்டிய மாவீரனை மகன் இறந்துபட்ட இடத்துக்கு நெடுந்தொலைவிலே, பெற்றமாது இருந்தாள். நெப்போலியனைச் சிறைப்படுத்தியது மட்டுமல்ல, அவன் உடன்சென்றிருக்க, அன்னைக்கு அனுமதி அளிக்க, அதிபர்கள் கூட்டுக் கழகம், மறுத்துவிட்டது.

நெடுந் தொலைவிலே கண்ணீர் சிந்தியபடி, தாய்!

துணைவி? அரண்மனையில்!! அரசகுமாரி, மேரி லூயி ஆஸ்ட்ரியாவில்!

மகன்? இளவரசன்!!—அவனும் ஆஸ்ட்ரியாவில்.

தாய் இல்லை! மனைவி இல்லை!! மகன் இல்லை! நெடுந் தொலைவிலே இருக்கிறார்கள். எலினா தீவிலே அவன் இறந்துபடுகிறான்—ஓர் நீர் ஊற்றுப் பக்கத்தில் மரங்கள் அடர்ந்த சிறு தோட்டத்தில், புதை குழி!! அந்த இடத்தைக்கூட, நெப்போலியன், முன்னதாகவே கண்டு வைத்திருந்தான்—காவல் காத்திருந்த அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தான்.

"என் உடலை, பாரிஸ் பட்டினத்துக்கு அனுப்பச் சொல்லிக் கேளுங்கள், மறுப்பார்களானால், நமக்குப் பருகும் நீர் கிடைத்து வந்ததே, நீர்ஊற்று, அதற்கு அருகாமையில், என் உடலைப் புதைத்துவிடச் சொல்லுங்கள்" — என்று, நெப்போலியன், உடனிருந்த நண்பர்களிடம் கூறினான்.

"இந்த நாட்டுக்கு இவனை மன்னனாக்கினேன்! இந்த மன்னனை இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் மண்டியிடச் சொல்லு! இத்தனை இலட்சம் வீரர்கள் புறப்பட்டாகவேண்டும்! — என்ற இதுபோன்ற ஆணைகளைப் பிறப்பித்து வந்த நெப்போலியன், நான் இறந்துபட்டதும், என் உடலை இன்ன இடத்திலே புதைத்து விடுங்கள் என்றும் ஆணைகூறிய பிறகுதான் ஆவி பிரிந்தது.

தீவிலே பிறந்தான்—தீவிலே இறந்தான்! ஆனால் புதைகுழியினின்றும் உடலை எடுத்துச்சென்று, பாரிஸ் பட்டணத்திலே, அரச விருதுகளுடன், மற்றோர் கல்லறையில் அடக்கம் செய்தனர், பிரன்சு நாட்டு ஆள வந்தார்கள்—சில ஆண்டுகளுக்குப் பிறகு. தீவிலேயே உடலம் இருந்துவிடவில்லை — புகழொளி மிகுந்த பாரிஸ் பட்டினம் கொண்டு செல்லப்பட்டது.

தீவிலே பிறந்தான்—தீவிலே இறந்தான்! ஆனால் கார்சிகா தீவு போதுமானதாக இருக்க இயலுமா, அளவற்ற ஆற்றல் கொண்டோனுக்கு! பிரான்சு சென்றான்! ஐரோப்பா அழைத்தது! எகிப்து அழைத்தது! வீரக் கோட்டங்களில் உலவினான்!

தீவிலே இறந்தான் — எலினா தீவில்! ஆனால், அவனியோர் கண்டு அதிசயிக்கத்தக்க ஆற்றலரசனுக்குப் போதுமான இடமா, எலினா தீவு! எப்படிப்பட்ட கல்லறை!! அதற்கு ஏற்ற இடம், பாரிஸ் அல்லவா? அங்குதான், கொண்டுபோகப் பட்டது, நெப்போலியனின் உடல்.

கார்சிகாவிலிருந்து பாரிஸ்; பாரிசிலிருந்து எலினா தீவு; எலினா தீவிலிருந்து பாரிஸ்! இந்தப் பயணம், கேட்போர் வியப்படையத்தக்க நிகழ்ச்சிகள் கொண்ட காப்பியமாகி விட்டிருக்கிறது.

"புறப்பட்டு வருகிறேன் மகனே! நெடுந் தொலைவு என்கிறார்கள். வழியிலே இறந்துவிடுவேன் என்று சொல்கிறார்கள். இறந்தாலும் பரவாயில்லை, பயணத்திலே இறந்தால், இப்போது இருப்பதைவிட உனக்கு அருகாமையில் இருப்பேனல்லவா! அது போதும் மகனே! புறப்படுகிறேன்" — என்று, நெப்போலியனுடைய தாயார் லெடிசா அம்மையார் கடிதம் அனுப்பினார்கள்—எலினா தீவுக்கு.

கடிதம், எழுதப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு நெப்போலியனுக்குக் கிடைத்தது. படித்துப் படித்துப் பாகாய் உருகினான். அன்னையோ, நெடுந் தொலைவில், ரோம் நகரில்! எலினா தீவு சென்று மகனுடன் தங்கி இருக்க அனுமதி கிடைக்கவில்லை. மகனைப் பிரிந்து மனமுடைந்த நிலையில் லெடிசா, இருந்துவர நேரிட்டது.

குடும்ப பாசம் மிகுதியும் கொண்டவர்கள், கார்சிகா தீவு வாழ் மக்கள். கார்சிகா தீவு, பிரான்சு நாட்டு ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது — ஆனால், அது தனியான தீவு! அந்தத் தீவு, அரசுரிமை பெறவேண்டும் என்ற விடுதலைக் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில்தான், நெப்போலியன் பிறந்தான். அவனுடைய தந்தை, விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தவர். அந்தக் கிளர்ச்சியை நடாத்திவந்த பாயொலி எனும் தலைவனுக்குத் துணைநின்று போரிட்டவன்.

தொட்டிலிலே நெப்போலியன் கிடந்தபோதே, போர்ச் சூழ்நிலை, அந்தத் தீவிலே.

தாலாட்டாக அமைந்த பாட்டே, விடுதலைப்போர் குறித்ததாக இருந்தது என்று கூறலாம்.

தொட்டிலிலே படுத்திருக்கும் குழந்தை, கால்களால் உதைக்கிறது! எதை? வெறும் காற்றுத்தானே தட்டுப்படுகிறது! ஆனால் எதிர்காலத்திலே, மணிமுடிகளைப் பந்தாடப் பழகிக் கொள்கின்றன போலும், அந்தக் கால்கள்! கைகளை ஆட்டுகிறது, எதனையோ, பிடித்துக் கொள்ள முனைவதுபோல! என்னவேண்டும் இந்தக் குழந்தைக்கு? விளையாட்டுக்கான பொம்மைகளா! தின்னப் பழமா!—இப்போது அவை போதும். ஆனால், அந்தக் கரங்கள், போரிடப் போகின்றன பல அரசர்களுடன்—வலிவு பெற்றதும் — அதற்கு இது ஒத்திகை போலும்.

லெடிசா, குழந்தையிடம் கொஞ்சிக் குலவாமலிருந்திருக்க முடியாது — ஆனால், அதற்கு அதிக நேரம்,

ஓய்வு கிடைத்திருக்க முடியுமா என்பது சந்தேகந்தான், விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருந்த கணவன்; குடும்பம் நடந்திட வழி தேடும் பொறுப்பினை ஏற்றுத் தீரவேண்டிய நிலையிலே லெடிசா. மிகச் சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி இருக்கவேண்டும்—நெப்போலிய னுடன் சேர்ந்து எட்டு குழந்தைகள் லெடிசாவுக்கு.

குடும்பத்துக்குச் சிறப்புப் பெயராக, போன பார்ட்டி என்பது அமைந்திருந்தது. அந்தப் பெயரின்படி பார்த்தால், இத்தாலிய மேட்டுக் குடியினர் இக்குடும்பத்தினர் என்று தெரிகிறது.

நெப்போலியனுக்கு, வெற்றிமேல் வெற்றி கிட்டிய நாட்களில், இந்த உணர்ச்சி மேலோங்கியும் காணப் பட்டது. 'பிரபு வம்சம்' என்று கூறிக்கொள்வதிலே ஒரு சுவை இருக்கத்தான் செய்தது. ஆனால், புகழ்பாடி மயக்கவிரும்பிய சிலர், குடும்பத்தின் பூர்வீக பெருமைகள்பற்றி அதிகம் கதைத்தபோது, நெப்போலியன், விரும்பவில்லை. பொய்யுரை கேட்டு ஏமாறுபவன் அல்ல என்பதால் மட்டுமல்ல, இந்தக் குடும்பத்துக்கு, வேறு எந்தக் குடும்பத்துக்கும் ஏற்பட இயலாத பெரும் புகழ் ஈட்டியிருக்கும்போது, பழைய நாட்களிலே என்னென்ன பெருமைகள் இருந்தன என்று கண்டறிந்து கூறத்தான் வேண்டுமா? வைரம் ஒளிவிட்டு, அதன் மதிப்பைத் தானே எடுத்துக் காட்டும்போது, அது எத்தகைய ஆழமான சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது என்பதைக் கூறியா, புதிய மதிப்புத் தேடவேண்டும்! நெப்போலியன் இவ்விதம் எண்ணுமலிருந்திருக்க முடியாது.

கார்சிகா தீவில், அஜாசியோ எனும் சிற்றூரில், 1769-ம் ஆண்டு, ஆகஸ்ட்டுத் திங்கள் 15-ம் நாள், நெப்போலியன் பிறந்தான். அஜாசியோ எனும் ஊர், கார்சிகா தீவுக்குத் தலைநகரம்கூட அல்ல. கார்ட்டி எனும் இடமே தலைநகரமாக இருந்தது.

நெப்போலியன், புகழேணியின் உச்சியில் இருந்த போது, குடும்பத்தினர், உற்றார் உறவினர் அனைவருக்கும், புதிய புதிய பதவிகள் வழங்கினான்—நிலைகளை உயர்த்தினான். தாய், லெடிசாவை அன்பாகக் கேட்டான்; விரும்பி இருந்தால் ஏதாவதொரு நாட்டுக்கு அரசியாக்கிவிட்டிருக்க முடியும்; அரசுகள் அவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்தனவே! "மகனே! எனக்கு வேறு எதுவும் வேண்டாம். நம்முடைய சொந்த ஊரான அஜாசியோ, கார்சிகாவுக்குத் தலைநகரானல் போதும்'' என்று தாயார் சொல்ல, நெப்போலியன், அப்படியே ஆகுக! என்றான்; அதற்கான ஆணையும் பிறப்பித்தான்.

கார்சிகா தீவினருக்கு, தங்கள் நாடு, தங்கள் ஊர், தங்கள் குடும்பம், என்ற உணர்ச்சி மிகுதியாக உண்டு. நெப்போலியனுடைய தந்தை, சார்லஸ் போனபார்ட்டி, இந்த உணர்ச்சி காரணமாகத்தான், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட நேரிட்டது; நெப்போலியனுக்கும் இந்த எண்ணம் இளமைப் பருவத்தில் மிகுதியும் இருந்தது. பிரான்சுமீதே நெப்போலியனுக்கு வெறுப்பு, கோபம், பழி வாங்கவேண்டும்—கார்சிகாவை விடுவிப்பதன் மூலம் — என்று எண்ணம் கொண்டான். அதற்கு ஏற்றபடிதான், பிரன்சு நாட்டினரும், கார்சிகா மக்களைப்பற்றி மிகத் துச்சமாக மதித்துப் பேசி வந்தனர்; ஏளனம் செய்து வந்தனர்.

ஏழைக் குடும்பம் என்பதற்காக ஒரு ஏளனப் பேச்சு!

அடிமைப்பட்டுக் கிடந்த கார்சிகா தீவினன் என்பதற்காக மற்றோர் கேலிப் பேச்சு.

இந்த இருவித ஏளனக் கணைகளைத் தாங்கவேண்டி இருந்தது, நெப்போலியனுக்கு—மாணவப் பருவத்தில்.

"வீராதி வீரர்கள் என்கிருயே உன்னுடைய கார்சிகா மக்களை, அது உண்மையானல், எப்படி அவர்கள், பிரான்சுக்கு அடி பணிய முடிந்தது!''

"அதுவா! ஒன்றுக்குப் பத்து என்ற அளவில், உங்கள் பிரன்சுக்காரர், எங்கள் கார்சிகா மக்களைத் தாக்கினர். வீழ்ந்தது அதனுல்தான்; வீரம் இல்லாததால் அல்ல''

"மீசையில் மண் ஒட்டவில்லையாம்...... கேட்டீர்களா.........''

"பொறு! பொறு! நான் பெரியவனானபிறகு பார்! அப்போது தெரியப் போகிறது, கார்சிகாக்காரர் எப்படிப்பட்டவர்கள் என்பது''

மாணவர்களின் உரையாடல் இந்தக் கருத்துப்பட. மாணவனாக இருந்தபோதே, நெப்போலியனுக்கு, வீரத்தின்மீது, வெற்றியின் மீது நினைப்பு! அப்போது அவன் கண்களுக்கு, கார்சிகா பிடிபட்டு, பிரான்சுடன் பிணைக்கப்பட்டிருப்பதுதான் மிகப் பெரிதாகத் தெரிந்தது. அதனுல்தான், கார்சிகா விடுதலை பெறவேண்டும், பிரான்சு நாட்டுக்குப் பாடம் புகட்டவேண்டும் என்ற எண்ணம் துடித்தது. முயற்சிகளிலும் ஈடுபட்டான்—வெற்றி கிட்டவில்லை!


அறிவு நூல்களுக்கு

## அலமேலு நிலையத்தை நாடுங்கள்!!

பன்மொழிப் புலவர்

**கா. அப்பாத்துரையார்**

எழுதிய எல்லா நூல்களும் எங்களிடம் கிடைக்கும்.

**சரித்திரம் பேசுகிறது.**
**வாழ்க.**
**வெற்றித் திருநகர்.**
**இன்பத்துள் இன்பம்**
(திருந்திய பதிப்பு)

மற்றும் பிற ஆசிரியர்களின் கதை, கட்டுரை, அரசியல், ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு, சிறுவர்க்கான நூல்கள் எம்மிடம் கிடைக்கும்.

விவரங்கட்கு:

அலமேலு நிலையம்
53, ஆற்காடு ரோடு, சென்னை—24.

உன் ஆற்றலுக்கு ஈடான வெற்றி, சின்னஞ் சிறு தீவான கார்சிகாவை விடுவிப்பதாகவா இருக்க வேண்டும்! உன் ஆற்றல் மிகப்பெரிது! கார்சிகாவை அடிமைகொண்ட பிரான்சு நாடே உன் காலடியில் வீழப்போகிறது! உன் தீவைப் பிடிக்கப் பாய்ந்துவந்த, பிரன்சுப் போர் வீரர்களே, உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு, உன் சுட்டுவிரல் காட்டும் திக்குநோக்கிப் பாயப் போகிருர்கள். பிரான்சுக்கு அதிபனே ஆகப்போகிருய்! உன் ஆற்றல் உன்னை அந்தச் செயலுக்கு அழைத்துச் செல்லப்போகிறது, இடையிலே கார்சிகா விடுதலைக் காக வேலை செய்யவேண்டுமா! — காலம் கூறிற்று போலும் இதுபோல.

கார்சிகா, பிரான்சுடன் பிணைக்கப்பட்டிருந்தது, என்ருலும், என்ன காரணத்தினுலோ, ரூசோ "ஐரோப்பாவையேஆச்சரியத்தில்ஆழ்த்தப்போகிறது இந்தக் கார்சிகா —என்றே ஓர் நாள்.'' என்று எழுதினர்.

கார்சிகா விடுதலைக்காகப் போராடி, நாடு கடத்தப்பட்ட தளபதிக்கு நெபோலியன் எழுதிய கடிதத்தில், மாணவனின் மனக்கொந்தளிப்பு நன்கு தெரிந்தது.

"என் நாடு இறந்துகொண்டிருக்கும்போது நான் பிறந்தேன். உரிமையை அழித்திட 30000 பிரன்சுக்காரர்கள் இங்கு கொட்டமடிக்கவந்த நேரம். நான் தொட்டிலில் கிடந்தபோது அதைச்சுற்றி, இறந்து படுவோரின் அழுகுரல், கொடுமைக்கு ஆளானேரின் குமுறல், கண்ணீர் இவையே இருந்தன.''

நெப்போலியன், போர் வீரன் மட்டுமல்ல, உள்ளத்தைத் தொடத்தக்க உணர்ச்சிகளைத் தொடுத்திடும் ஆற்றலும் மிக்கவன் என்பது, அவன் எழுதிய கடிதங்கள் மூலமும், போர் துவக்கப் பேச்சுகளின் மூலமும் மிக நன்ருகத் தெரிகிறது.

மாணவப் பருவத்திலே, நெப்போலியன், கதைகள் கட்டுரைகள் எழுதுவதிலே ஆர்வம் கொண்டிருந்தான். 'நாடக பாணி'யில் எழுதுவதிலே நெப்போலியனுக்குப் பெருவிருப்பம். உணர்ச்சிகளை உரையாடல்கள் வடிவிலே எழுதிவந்திருக்கிருன்.

காதல்—கடமை—இந்த இரண்டு உணர்ச்சிகளுக்கும் ஏற்படும் மோதுதல்—அதனுல் விளையும் சிக்கல்—இவைபற்றி ஒரு உரையாடல் எழுதினன் மாணவன் நெப்போலியன். ஒருவன் காதலுக்காக — மற்றவன் கடமைக்காக வாதாடும் முறை.

"உன் நாடு தாக்கப்படும்போது, உன் கடமை என்ன? நீ என்ன செய்வாய்?''

"நாடு! கடமை! வெறும் வார்த்தைகள். எனக்கென்ன கவலை, அரசு கவனிக்கவேண்டிய பிரச்சினைபற்றி.''

"கோழையின் மனப்பான்மை இது. களியாட்டக்காரனின் போக்கு. சுயநலம். மக்களை மறந்திடும்போக்கு. மகிழ்ச்சியாக வாழத்தான் பிறந்தோம். ஆம்! ஆனுல், சமுதாயத்தில் வாழும் போது, சில பொறுப்புகள் மேற்கொண்டாகவேண்டும். ஆட்சிப்பொறுப்புச் சிலரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவர்கள், மதத் தரகர்களுடன் கூடிக்கொண்டு, கடமையை மறந்து காட்டுப்போக்கிலே நடந்துகொள்கிருர்கள். உன் கடமை என் ன? சமுக வாழ்வில் உனக்குள்ள பொறுப்பு என்ன? கொடுமைக்கு ஆளானவர்கள் கூவி அழைக்கிருர்கள், உதவிக்காக! கொஞ்சிக் குலவிக்கொண்டிருப்பதா, குமரியுடன் அந்த நேரத்தில்.''

மாணவப் பருவத்திலே, இலட்சியம்பற்றிய உணர்ச்சி மேலிட்ட நிலையிலே இதுபோல எழுதுவது இயல்பு. பலர் இந்த இயல்புகொள்கின்றனர். ஆனுல் வயது ஆக ஆக, இலட்சிய ஆர்வம் மங்கிவிடுகிறது, மறைந்தேகூடப்போய்விடுகிறது. ஆனுல் நெப்போலியனுக்கு அவ்விதம் இல்லை.

கடமை அழைக்கிறபோது, காதற் களியாட்டத்திலே ஈடுபடுவதா? என்று கேட்ட அதே போக்கில், தானே நடந்துகாட்டவும் முற்பட்டான். போர் வீரனுவதற்கான பயிற்சிக் கூடத்திலே பயிலும்போது மற்ற மாணவர்கள், மலர்விழியாளைத் தேடுவதும், மதுஅருந்தி ஆடுவதும், கண்ணழகியின் கருத்து என்ன? கனி, துவர்ப்பா இனிப்பா? புன்னகை போதுமா, பொன்னகை கேட்பாளா, பட்டுப்பூச்சியா? வெட்டுக்கிளியா? கட்டுக்காவல் அதிகமா? தொட்டால் ஒட்டிக்கொள்ளுமா? — என்று பேசிக் காலத்தைப் பாழாக்கிக் கொண்டிருந்தனர்—நெப்போலியன், கோட்டை கொத்தளங்களின் அமைப்பு, போர் முறைகளின் நுணுக்கங்கள், நாடுகளின் இயல்புகள் நாடாள்வோரின் போக்கு எனும் இவைபற்றிய ஏடுகளைப் படிப்பதிலே ஈடுபட்டுச், சிறப்பறிவு எனும் செல்வத்தைத் தேடிப்பெற்றுக் கொண்டிருந்தான். வரலாறும், பூகோளமும் நெப்போலியன் படித்துக்கொண்டிருப்பான், அவனுடைய தோழர்களோ, வடிவழகு இயற்கையா செயற்கையா என்பது பற்றிய கருத்துகளிலே மூழ்குவர்.

கணக்குப் பாடத்திலே நெப்போலியனுக்கு மிகுந்த அக்கரை. படைத்துறைக்கு இந்தப் பயிற்சி மெத்தப் பயன்படக்கூடியது.



ஜோசபைன்

காதலிக்கத் தெரியாதா என்ருல், தெரியும், கண்மண் தெரியாமல் அதிலே சிக்கிக்கொள்வதில்லை– வேறு கடமையிலே ஈடுபடும்போது காதல் விளையாட்டிலே நுழைவதில்லை.

நெப்பாலியன் மனதைக் கொள்ளை கொண்ட ஜோசபைன், வியக்கத்தக்க பேரழகி— விதவை — விரும்பத்தக்க சல்லாபி, அவ

ளிடம் கட்டுண்டான் நெப்போலியன் — அவளைப் பற்றிப் பல்வேறு வதந்திகள் உலவின — "அந்த மதுக் கோப்பையா! சுவைமிகுதிதான் — ஆனால் எச்சிற் கலமாயிற்றே என்று கூடப் பேசுவர். ஆனால் நெப்போலியன் கண்களுக்கு, காதற் கலையின் அழககத்தனையும் திரண்டெழுந்து வடிவமெடுத்து ஜோசப்பைனாக வந்ததாகத்தான் தெரிந்தது. நெப்போலியன் தன்நேரத்தையும் நினைப்பையும் பெரிதும், படிப்பிலேயும் பிரச்சினைகளைப்பற்றிச் சிந்திப்பதிலேயும் ஈடுபடுத்தியதால், அவனால் குயிலுக்கும் கருங்குருவிக்கும், மயிலுக்கும் வான்கோழிக்கும், பருவமெருகுக்கும் பூச்சுமினுக்குக்கும், முகமலர்ச்சிக்கும் பாவனைச் சிரிப்புக்கும், தயக்கமொழிக்கும் மயக்கமொழிக்கும், தளிர்மேனிக்கும் ஆபரணத்தகதகாயத்துக்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறியும் கலைகற்க இயலாதிருந்தது என்று கூறலாம்.

வயதிலே தன்னைவிட மூத்தவள்—என்றால் என்ன? —வசீகரிக்கத் தெரிகிறது அவளுக்கு! எனவே நெப்போலியன் ஜோசபைனை மணமுடித்துக்கொண்டான்.

தீர்ந்தது அவனுடைய இலட்சியங்கள்—திட்டங்கள்—கனவெல்லாம் கலைந்தது—இனி ஒரே களம்தான் நெப்போலியனுக்கு, ஜோசபைன் மாளிகை! ஒரே ஒரு ஆணைக்குத்தான் அவன் எழுவான் — அவளுடைய புன்னகை—அடிமூச்சுக் குரல்! போரிலே புலிதான்—ஆனால் இனி...! என்றுதான் எவரும் எண்ணிக் கொள்வர்—ஜோசபைனை அறிந்தவர்கள்.

சிக்கலுள்ள அரசியல் பிரச்சினைகளை எல்லாம் மறந்துவிட்டு, முதுபெரும் அரசியல்வாதிகள் அந்தச் சிங்காரியின் சிரிப்பொலியிலே மயங்கிக்கிடந்திட, மாலை வேளைகளிலே அவளுடைய மாளிகையைத் தேடி வருகிறார்கள்–நெப்போலியன் எம்மாத்திரம்! டோவ்லான் சண்டையிலே திறமையைக் காட்டினான் — உண்மை —வெற்றிபெற்றான்—உண்மைதான்—ஆனால் அவை, ஜோசபைனிடம் சிறைப்படுவதற்கு முன்பு! இனி?

நெப்போலியனுடைய பாசம் நிறைந்த பார்வையையும் அவளுடையபாகுமொழி கேட்டதால் சொக்கிவிட்ட தன்மையையும் கண்டவர்கள், வீரன் காதலைப் பரிசாகப் பெற்றான்! இனி அவன் காதலன்—அவ்வளவுதான்!!— என்று தீர்மானித்தனர்.

ஆனால், கடமை அழைக்கிறபோது காதலியுடன் கொஞ்சிக்கிடப்பதா? என்று கேட்டானே, மாணவப் பருவத்தில் அந்த நெப்போலியன், அழகி ஜோசபைனை அடைந்ததால், மறைந்துவிடவில்லை. இத்தாலி நாட்டின்மீது தாக்குதல் நடத்தப் பெரும் படையொன்று கிளம்பட்டும்—உன் தலைமையில் என்று அரசு ஆணை பிறப்பித்தது. கண்ணாளா! என்று அவளும், கட்டித் தங்கமே! என்று வீரனும், மலரா இதழா? என்று அவனும், கேலியா போதையா? என்று அவளும் பேசி மகிழும் காலம்–மணமாகி இரண்டு நாட்கள் முடிந்ததும் இந்த அழைப்பு—கடும்போரிடச் செல்லும்படி.

என் இதயம் என்னிடம் இல்லையே! அதனைத் தங்களுக்குக் காணிக்கையாக்கி நாட்கள் பல ஆகிவிட்டனவே!—என்று கூறி, தன்னை அவன் அணைத்துக் கொள்ளும் உரிமையை ஜோசபைன் அளித்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட எந்த அளவிலும் குறைவான களிப்பல்ல—இத்தாலிமீது போரிடப் புறப்படுக!– என்று அரசு அழைத்தது கேட்டு.

நாட்கள் இரண்டுதானே ஆகியுள்ளன—நெஞ்சிலே உலவும் எண்ண அலைகளைப்பற்றிப் பேசி மகிழக் கூட நேரம் காணாதே—பூங்காவிலே உலவி, புதுவித இன்பம் சுவைத்திடுவதற்கு ஏற்ற மணக்கோலம் கொண்டுள்ள போதா, களம் நோக்கிச் செல்ல ஆணை—கட்டழகியை மறந்து!—நெப்போலியன் இதுபோல எண்ணி ஏங்கினானில்லை. இத்தாலியைத் தாக்குவது எப்படி? என்னென்ன முறைகளைக் கையாளவேண்டும்? எவ்வளவு வலிவு திரட்டவேண்டும்? — என்ற இவைபற்றிய எண்ணம்தான் அவனை ஆட்கொண்டது. அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான், அன்பே! உன் காதலன் எத்தகையவன்—எத்துணை ஆற்றல் மிக்கவன்—என்னென்ன விருதுகள் பெறப் போகிறான்—பார்! நீ மகிழத்தக்க, பெருமைப்படத்தக்க வெற்றிகளைப் பெற்றிடக் கிளம்புகிறேன். பற்பல நூற்றாண்டுகளாகப் பாரோர் மெச்ச விளங்கி வரும் இத்தாலி செல்கிறேன்! உலகப் பெருவீரன் ஜூலியஸ் சீசர் உலவிய இடம்! அங்கு செல்கிறேன் அழகு மயிலே! உன்னை அடைந்ததால் நான் பெற்ற மகிழ்ச்சியைத் துணைகொண்டு செல்கிறேன்!! வெற்றிச் செய்திகளுக்காகக் காத்திரு — உன் வேல்விழி நான் செல்லும் பக்கம் எப்போதும் இருக்கும் என்பது அறிவேன்—நான் என் இதயத்தில், நீ அளித்த காதலைக் கருவூலமாகக் கொண்டு செல்கிறேன்!"—என்று நெப்போலியன் சொல்ல முனைந்தானேயன்றி, மணமாகி இருநாட்கள் முடிந்ததும், மலரணை மறந்து களம் செல்வதா என்று கவலை கொண்டானில்லை.—இங்கு பாவை பன்னீர் தெளித்திடுகிறாள்—அங்கு?—இரத்தம் பொங்கும்! ஆம்! ஆனால் இரத்தம் பொங்குவதுடன் என் வீரம் பொங்கும், வெற்றி பொங்கும், கீர்த்தி பொங்கும். தன் காதலிக்கு இந்தக் கீர்த்தியைப் பெற்றுத் தருவதைக் காட்டிலும் ஒரு காதலன் தரத்தக்க பெருமைமிகு பொருளும் உண்டா! — என்ற எண்ணம் எழுகிறது, இத்தாலி செல்கிறான்.

நெப்போலியனுடைய உறுதிப்பாட்டுக்கு இது போன்ற எடுத்துக்காட்டுகள் பல உள.

களத்திலே கடும் போரிடும் கடமையை மறந்து வேறு எந்தச் செயலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவனல்ல, இளமைப் பருவத்திலேயே, இந்த இணையிலா வீரன்.

1796-ம் ஆண்டு மார்ச் 9ம் நாள் திருமணம்—12-ம் நாள், இத்தாலி நோக்கிப் பாய்கிறான்.

ஜோசபைன் வயது சிறிது அதிகமல்லவா?

நெப்போலியன், அவளைவிட இளையவன் — நிச்சயமாக!

இவ்விதம் பேசுவது தெரியும் இருவருக்கும். எனவே பதிவாளரிடம் சென்று திருமணத்தை நடத்திக் கொண்டபொழுது, நெப்போலியன் தன் வயதை ஒன்றரை ஆண்டு கூட்டி அதிகமாக்கிச் சொன்னான்—ஜோசபைன்? தன் உண்மை வயதிலே நான்கு ஆண்டு குறைத்து, கணக்குக் கொடுத்தாள். வயதுப் பொருத்தம் கிடைத்துவிட்டது, திருமணத்துக்கு! இருமனம் ஒன்றான பிறகு திருமணம்தானே! பொருளற்ற கேள்வி

கள் எழுப்புகிறார்கள்—வயது என்ன? என்று! வயதாம் வயது? அவருக்கு காதலிக்கத் தெரியும் வயது! எனக்கு அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் உள்ள வயது! வேறு என்ன தெரியவேண்டும்?—சாகசப் பேச்சிலே திறமைமிக்க ஜோசபைனால் இதுபோலெல்லாம் பேசவா முடியாது. ஆனால், நெப்போலியன் அவளைத் திருமணம் செய்துகொண்டபோது, ஜோசபைனுக்கு, ஒரு மகன்—ஒரு மகள்! மகனுக்கு வயது பன்னிரெண்டு! மகனைத்தான் நெப்போலியன் முதலிலே கண்டான்—அவனுடைய பேச்சும் போக்கும் மிகவும் பிடித்தது. பிறகு அவள் வந்தாள்—நன்றிகூற.

நெப்போலியன், தன் திறமையை டோலான் களத்திலே காட்டிய பிறகு, பிரன்ச்சு ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திக்கொண்டு வந்த குழுவினருக்கு, நெப்போலியன்மீது ஒரு பற்று, நம்பிக்கை.

ஆட்சிக் குழுவினருக்கு பாரிஸ் நகர மக்களிலே ஒரு சாரார் எதிர்ப்பு மூட்டியபோது, நெப்போலியன், ஆட்சி மன்றத்துப் பாதுகாப்புப் பொறுப்பு ஏற்று, ஆபத்தை முறியடித்தான், எதிர்ப்பாளர்களைத் தாக்கி விரட்டி அடித்து. ஆட்சிக் குழுவினருக்கு நம்பிக்கை மேலும் வளர்ந்தது. அந்த படைப் பிரிவுக்கு நெப்போலியனைத் தளபதியாக்கினர்.

எந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டாலும், அக்கரை காட்டித் திறம்படப் பணியாற்றுவது நெப்போலியனுடைய இயல்பல்லவா? அந்த இயல்பின்படி, குடிமக்களிடம் இருந்த ஆயுதங்களைப் பறிமுதல் செய்தால்தான், கலக உணர்ச்சி ஏற்படும்போது தாக்குதலில் ஈடுபடாமலிருப்பார்கள் என்று தீர்மானித்தான்—ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அப்படிப் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களிலே, சீமான் ஒருவனுடைய வாளும் ஒன்று.

ஒருநாள், அவசரமாகத் தன்னைப் பார்க்க விரும்புகிறான் ஒரு இளைஞன் என்று நெப்போலியனுக்கு அறிவிக்கப்பட்டது.

இளைஞனா? என்னைக் காணவா?

ஆமாம், பன்னிரண்டு வயது இருக்கும்.

பனிரண்டு வயதுப் பொடியனா! என்ன வேலை அவனுக்கு, என்னிடம்......

கூற மறுக்கிறான்—நேரிலே கண்டுதான் கூறுவானாம்... ..

நெப்போலியன் அந்தப் பன்னிரண்டு வயதினனை விரட்டி விடவில்லை; வரச் சொன்னான் தன்னைக் காண.

''என்ன வேலையாக......''

''ஒரு வேண்டுகோள்......தாங்கள் பலருடைய ஆயுதங்களைப் பறிமுதல் செய்தீர்கள்......''

''ஆயுதம் ஏந்தும் வயதினனல்லவே, நீ...''

''என்னுடையது அல்ல! என் தந்தையின், வாள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது...''

''அரசுப் பாதுகாப்புக்கான நடவடிக்கை. உன் தகப்பனார், யார்......அவர் எங்கே...''

''அவர் இறந்துவிட்டார்....கொல்லப்பட்டு விட்டார்...புரட்சியின்போது. 'வாள், எம்மிடம் இருந்தது......குடும்பத்தின் பெருமைப் பொருளாக......'

''குடும்பப் பெருமையிலே அவ்வளவு விருப்பமா......''

''நியாயமற்ற உணர்ச்சி அல்லவே......''

''கூர்மையான புத்தி உனக்கு......''

வாள், திருப்பித் தரப்பட்டது; மகிழ்ச்சியுடன் அதனைப் பெற்றுக்கொண்டு சென்றான், பன்னிரண்டு வயதினன். எத்தனையோ விந்தையான சம்பவங்களிலே இது ஒன்று, என்று எண்ணினான், நெப்போலியன் — இல்லை — அது தொடர் கதையாகிவிட்டது.

''தங்களைக் காண ஒரு மாது......''

''என்னைக் காண ஒரு மாதா......?''

''ஒரு சீமாட்டி......''

''சீமாட்டிக்கு இங்கு என்ன வேலை? என்னிடம்.''

''தங்களுக்கு நன்றி தெரிவிக்க வந்திருக்கிறார்கள்......''

''எதற்கு நன்றி......புரியவில்லையே......''

''பறிமுதல் செய்த வாளைத் திருப்பித் தந்தீர்களே......''

''ஆமாம் உணர்ச்சிமிக்க பன்னிரண்டு வயதினன்......''

''அவனுடைய தாயார் — வந்திருக்கும் சீமாட்டி.''

''அப்படியா! வரச் சொல்லு,''

வந்தாள் ஜோசபைன்! நெப்போலியன், முதுமைக் கோல விதவையை எதிர்பார்த்தான் — அவன் எதிரில் வந்ததோ, புன்னகை பூத்த முகத்தழகி, புதுமலர் போலும் எழிலுடையாள், ஜோசபைன்.

''வாளைத் திருப்பித் தந்ததற்கு என் நன்றி......''

என்றாள் வனிதை! ஒரு வாளா, ஓராயிரம் வாட்களைத் திருப்பித் தரச் சொன்னாலும் தரலாமே—இவ்வளவு சுவைமிகு பார்வையாள், கேட்டால்!

வாளைப் பறித்தவனை, வேல் விழியால் அவள் வென்றாள். சீமாட்டி எனும் நிலைக்கு ஏற்ற கெம்பீரம் — அதேபோது அதிலே ஓர் தனிக் கவர்ச்சி—அதிகம் பழக்க மில்லாதவரிடம் பேசும்போது காட்டவேண்டிய கூச்சம்! தயக்கம்—அதேபோது பேச்சிலே ஒரு இனிமை, குளுமை, களம் கண்டவனானால் என்ன, வெற்றிபெற நெப்போலிய னால் மட்டுந்தானா முடியும். ஜோசபைன் என்ன, போர் முறை தெரியாதவளா? கட்டழகி விட்ட பார்வை, அவன் கட்டுடல் எங்கும் பாய்ந்தது—அவள் வென்றாள்'

இவ்விதம் தொடங்கிய காதல்தான், கடிமணமாகி மலர்ந்தது. ஆனால் மணத்தை நுகர்ந்து கொண்டிருந்த வேளையிலே போர் நடாத்த அழைப்பு வந்தது; மாவீரன், இத்தாலி நோக்கிச் சென்றான்.

நெப்போலியன் கட்டழகி ஜோசபைனிடம் கட்டுண்ட திலே வியப்பில்லை—அந்த வசீகரத்தின் முன்பு வீழாம லிருக்க இயலாது. ஆனால், மற்றோர் காரணமும் உண்டு. நெப்போலியன், ஏற்கெனவே ஒரு மங்கைக்காக ஏங்கிக் கிடந்து, அது எட்டாக் கனியாகிவிட்டதால், மனதிலே வாட்டமுற்றுக் கிடந்தவன். மாடப் புறா கிட்டாவிட்டால், மணிப் புறா கிடைக்கட்டும்—என்று எண்ணி, வேட்டை யாடிடும் போக்கினன் அல்லவே. எனவே, காதல் முயற் சியிலே ஏற்பட்ட தோல்வி நெப்போலியனுக்கு பெருத்த வேதனையைத் தந்தது. தன் மனநிலையை விளக்கி, ஒரு காதற் கதை எழுதினான். எந்த எண்ணத்தையும் எழுச்சி யையும், நாடக பாணியில் எழுதும் வழக்கமல்லவா— அதுபோலவே, காதலில் ஏற்பட்ட தோல்வி பற்றியும் மனம் உருகும் சிறு கதை தீட்டிடலானான் — வரலாறு தீட்டும் வல்லமை கொண்டோன்.

மார்சேல்ஸ் நகர வணிகரின் மகள், வனப்புமிக்க டிசயரி என்பவளை மணம் செய்துகொள்ள விரும்பினான் நெப்போலியன். அவள் செல்வக் குமாரி-நெப்போலியன் போர் வீரன்-தளபதிகூட அல்ல.-களத்திலே, மற்றவரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு, இருக்கவேண்டியவன் இந்தத் துப்பாக்கி தூக்கிக்குத் தன் மகளைத் தர,பட்டு பட்டாடை விற்பதால் பணம் திரட்டிய வணிகருக்கு விருப்பம் இல்லை.



ஜோசப் போனபார்ட்டி
*(நெப்போலியனுடைய அண்ணன்)*

நெப்போலியனுடைய அண்ணன் ஜோசப், ஒரு வணிகர் மகளை மண முடித்துக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து வந்தான்— அண்ணிக்கு உறவினள் தான் டிசயரி! நல் வார்த்தை பேசி இந்த மணத்தை முடித்துவைக்க வேண்டுமென்றுகூட, அண்ணனுக்குக் கடிதம் எழுதிப் பார்த்தான்; எனினும் நெப்போலியன் எண்ணம் ஈடேற வில்லை. காதலிலே தோல்வி கண்டான், கதை பிறந்தது. கிளிசான்—யூஜினி—என்பது கதைத் தலைப்பு. கிளிசான், நெப்போலியன்! யூஜினி, டிசயரி!! மனம் உடைந்த காதலனைப்பற்றி மட்டுமல்ல, அந்தக் காதலன் எப்படிப் பட்டவன், எதிலே திறமைமிக்கவன் என்பதனையும் விளக்கினான், கதையில்.

கிளிசான், பிறவி வீரன்! குழந்தைப்பருவத்திலேயே, உலகப் பெருவீரர்களைப்பற்றி அறிந்துகொண்டிருந்தான். பள்ளிப் பருவத்திலே, மற்றவர்கள்போல் மனதை மைய லில் அலையவிடாமல் போர்முறைகளை அறிவதிலும், புது முறைகள் வகுப்பதிலும் ஈடுபட்டான்—திறமை மிக்கவ னானான். வெற்றி மேல் வெற்றி! விருதுகள் பலப்பல! நாட்டவர் போற்றினர், நமது பாதுகாவலன் இவனே என்று.

செயல்வீரனான கிளிசான் இலட்சியக் கனவுகள் கொண்டவனாகவும் இருந்துவந்தான். சில வேளைகளில், தனியாக உலவச் செல்வான்—சிந்தனையில் பல அரும்பும் —மலரும்.

ஓர் நாள், ஏரிக்கரை ஓரத்திலே எழில் மங்கை ஒரு வளைக் கண்டான். அவள் பெயர் யூஜினி! காதல் கொள் கின்றனர்—கடிமணம் நடக்கிறது. கடமை அழைக்கிறது; களம் செல்கிறான்; சீறிப் போரிடுகிறான், படுகாய மடைகிறான்.

நண்பன் ஒருவன் மூலமாக நிலைமையை, யூஜினிக் குச் சொல்லி அனுப்புகிறான்.

தூது சென்றவனே அந்தத் தோகை மயிலாளைக் கண்டதும் காதலிக்கத் தொடங்கிவிடுகிறான்.

பாவை என்ன சொன்னாள், பதில் என்ன வரும் என்று படுகாயமுற்ற நிலையிலே வீரன் களத்திலே காத்துக்கிடக்கிறான். அங்கோ—தூது சென்றவனிடம் அந்தத் தூரத்தை கொஞ்சிக் கிடக்கிறாள்.

அது தெரிகிறது கிளிசானுக்கு. நடமாடும் நிலைபெறு கிறான். ஆனால் மனதிலே வேதனை கொட்டுகிறது. ஊர் திரும்பினானில்லை. மீண்டும் களம்நோக்கிப் பாய்கிறான்— மாற்றாரின் படை வரிசை மிகுதியாக உள்ள பக்கம் சென்று போரிடுகிறான் — உடலெங்கும் வடுக்கள்—ஓரா யிரம் தாக்குதல்கள்—போரிட்டபடி மடிந்துபோகிறான்.

காதலில் தோல்வி கண்டதும், கட்டாரியால் குத்திக் கொல்பவர்கள், அல்லது கட்டாரியால் குத்திக்கொண்டோ கடுவிஷம் குடித்தோ தற்கொலை செய்துகொள்பவர்கள்; காதலிலே துரோகம் இழைத்தவளை காரி உமிழ்ந்து அவ ளுடைய கயமைத்தனத்தை ஊரறியச் செய்பவர்கள்— இப்படியெல்லாம்தான் எழுதுவார்கள் கதை எழுதுவோர்.

நெப்போலியன் அவ்விதம் அல்ல! காதலிலே ஏற் பட்ட தோல்வி காரணமாக, வாழ்க்கை வெறுத்துப்போகு மானாலும், கடும்போரிட்டபடி, களத்திலே மாற்றாரைத் தாக்கியபடி, மாற்றாரின் தாக்குதலைப் பெற்றபடி, கடைசி மூச்சு இருக்கும்வரையில் போராடிக், களத்திலே மடிந்து விடவேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றுகிறது.

வெற்றி அல்லது வீரமரணம் என்ற எண்ணமே ஏந்தப் போர் வீரனுக்கும் ஏற்படும். நெப்போலிய

னுடைய கருத்தும் — களத்திலே கடும்போரிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் வீரமரணம் ஏற்படவேண்டும் என்பதுதான் என்று கதைமூலம் தெரிகிறது

கண்டோர் கலங்கிடவும் கேட்டோர் திடுக்கிடவுமான பெரும் போர்களைக் கண்டான் நெப்போலியன் — களத்திலே கடும் புயலெனச் சுற்றிச் சுற்றி வருவது வழக்கம் —ஆனால் அவனுக்குக், களத்திலே வீரமரணம் கிடைக்கவில்லை. எந்த மாற்றானுக்கும் அந்த ஆற்றல் இல்லை! பிடிபட்டு, அடைபட்டு, மனம் உடைந்த நிலையில், நோய் வாய்ப்பட்டு, கண்காணாத் தீவிலே இறந்துபட்டான். தீவிலே இருந்தபோது பலமுறை, களத்திலே இறந்திருந்தால்... வீரமரணம் கிடைத்திருந்தால்... என்று ஏக்கத்துடன் நெப்போலியன் பேசினான். அந்த அஞ்சா நெஞ்சனைக் கொல்லவரும் எந்த எதிரியும் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதால்போலும், நேருக்கு நேர் நின்று தாக்காமல், கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்து, நோய்க்கிருமிகள், உடலிலே இடம்பிடித்துக்கொண்டு, நெப்போலியனைச் சிறுகச்சிறுகச் சிதைத்துச் சாகடித்தன.

இரண்டோர்முறை களத்திலே, நெப்போலியனுக்குக் குண்டடி பட்டதுண்டு. மிகச் சாதாரணமான காயம் ஒருமுறை கணுக்காலில் ஏற்பட்டது.

மற்றோர் முறை, களத்தில் போர் கடுமையாக நடந்து கொண்டிருந்த இடத்திலே நெப்போலியன் சென்றபோது மாற்றார் சூழ்ந்துகொண்டனர்—ஆனால் வீரத்திலும் தியாக உணர்விலும் மிக்க தோழன் ஒருவன், நெப்போலியன் மீது பாயவந்த குண்டுகளைத் தன்மீது விழச்செய்து கொண்டு இறந்தான்—நெப்போலியனைத் தன் உடலால் மறைத்துக்கொண்டான்.

நெப்போலியன் இறந்துபடத்தக்க ஆபத்தான நிலை கிளம்பியபோதெல்லாம், அவன் தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பு. எளிதாகக் கிடைத்தபடி இருந்தது.

கார்சிகா விடுதலைக்காக இளமைப் பருவத்திலே ஈடுபட்டபோது, பிரன்ச்சுப் படையின் தாக்குதலால், நெப்போலியனுக்கு ஆபத்து ஏற்பட இருந்தது; ஆனால் தப்பித்துக்கொண்டான்.

பிரபு வம்சத்திலே பிறந்து, ஏழ்மையில் உழலும் குடும்பத்தினருக்கு இலவசமாகக் கல்வி கற்பித்துத் தரும் முறை பிரான்சு நாட்டிலே இருந்ததால், நெப்போலியன், கல்விக்கூடம் சென்றிட முடிந்தது. ஓயாமல் படிப்பதும், சிந்திப்பதுமாக இருந்துவந்த நெப்போலியன், முதல் மாணவனாகவில்லை என்றாலும், குறிப்பிடத்தக்க இடம் பெற்ற மாணவனானான். விடியற்காலை நான்கு மணிக்குத் துயிலெழுவதும், மற்ற எந்த அலுவலிலும் அதிககாலத்தைச் செலவிடாமல், படிப்பிலேயே கவனம் செலுத்துவதுமாக இருந்துவந்த நெப்போலியனைக் கண்டவர்கள், அப்போதே இவன் உள்ளம் ஒரு எரிமலையாகி ஒரு காலத்தில் நெருப்பைக் கக்கும் என்று கூறினர். நாளைக்கு ஒரு வேளைதான் உணவு! வாரத்துக்கு ஒருமுறைதான் உடை மாற்றுவது! கேளிக்கைக்கு நேரமும் கிடையாது, வசதியும் கிடையாது.

ஏழை என்பதால் ஏளனம் செய்கிறார்கள்—இதைத் தாங்கித் தத்தளிக்கவேண்டி இருக்கிறது என்று பாரிசில் இருந்து, ஊருக்கு நெப்போலியன் கடிதம் எழுதுவான். என்ன கஷ்டம் ஏற்படினும் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள் மகனே! என்பார்கள் அன்னை. மிகச் சிறு வயதிலேயே பொறுப்பை மிக நன்றாக உணர்ந்திருந்தான், பல பெரிய பொறுப்புகளைப் பிற்காலத்திலே ஏற்று நடத்தவேண்டிய நெப்போலியன்.

படிப்பது என்றால், மேலெழுந்தவாரியாக அல்ல— மிகுந்த அக்கறையுடன் — ஒன்றுவிடாமல் படிப்பதும், குறிப்புகள் எழுதுவதுமான முறையில் படித்துவந்தான், பல அரிய ஏடுகளிலே இருந்து குறிப்புக்களை எடுத்துத் தொகுத்து எழுதிவைத்துக்கொண்டான்.

விந்தை நிறைந்த ஒரு செய்தி உளது, நெப்போலியன் படித்து எழுதிவைத்த குறிப்பேடுகளிலே கடைசிக் குறிப்பேட்டில், கடைசியாக அவன் எழுதி இப்பது எலினா தீவுபற்றிய தகவலைத்தான். அட்லான்டிக் பெருங்கடலில் உள்ள சிறுதீவு, செயின்ட் எலினா. பிரிட்டிஷாருடையது!!

எந்த எலினா தீவுபற்றி, மாணவன் நெப்போலியன் குறிப்பேட்டிலே எழுதிவைத்தானோ, அதே தீவுதான், நெப்போலியனுக்குச் சிறைக்கூடமாயிற்று, கல்லறை பூமியுமாயிற்று.

இருபதாண்டு நிரம்பப் பெற்ற நிலையிலேயே, நெப்போலியனுக்கு, கார்சிகாவை விடுதலை அடையச்செய்ய வேண்டும் என்பதற்கான செயலில் ஈடுபடும் துணிவு ஏற்பட்டுவிட்டது.

பிரான்சுநாடு, புரட்சியை வெற்றிகரமாக நடாத்தி, முடிதரித்த மன்னனை வெட்டுப்பாறையில் நிறுத்திக் கொன்றுவிட்டதுடன், குடிஅரசு நாடாகி, கோல்காட்டுபவனுக்கெல்லாம் அஞ்சிக்கிடந்த சாமான்யர்களே கொற்றம் நடாத்தும் நிலைபெற்றிடச் செய்தது.

இதுவே, கார்சிகா விடுதலைக்கு ஏற்றசமயம் என்று கருதிய நெப்போலியன், 1789-செப்டம்பர் திங்கள் பள்ளி விடுமுறையின்போது, தீவு சென்று விடுதலைப் படையினருடன் கூடிப் பணியாற்றினான்—வெற்றிகிட்டவில்லை. பிரான்சுக்கு எதிராகப் புரட்சி நடத்தியதற்காக, பிடித்திழுத்துச்சென்று சிறையில் அடைத்திடுவர் என்று பேசிக்கொள்ளப்பட்டது; ஆனால் அதற்கு இடம்கொடுக்காதமுறையில், நெப்போலியன் பாரிஸ் திரும்பிவிட்டான். முதல் முயற்சியில் தோல்வி! காதலிலும் களத்திலும்!!

திரும்பவும் பாரிஸ் நகர் வந்தபோது, நெப்போலியனுடன் தம்பி லூயியும் வந்தான். இருவரிடமும் சேர்ந்து இருந்தது 85 (பிராங்குகள்) வெள்ளி நாணயங்கள், பாரிசில், எவ்வளவு சிக்கனமான வாழ்க்கை நடத்தினாலும், கடன்படாமல் இருக்கமுடியவில்லை. கைக் கடிகாரத்தைக் கூட அடகுவைத்துச் செலவுக்குப் பணம் தேடவேண்டியதாயிற்று, பிறகோர்நாள், பல்வேறு அரசுகளிலே இருந்த செல்வக் களஞ்சியங்களின் திறவுகோலுக்கு உரிமையாளனாகும் உயரிடம் பெற்ற நெப்போலியனுக்கு.

கார்சிகா விடுதலைக்காகப் பாடுபடுபவர் என்பதால் எந்தப் பாயோலி என்பாரிடம், நெப்போலியன் மெத்த மதிப்பு வைத்திருந்தானோ, அதே தளபதியை நேரில் கண்டு, பழகி, உரையாடி, உள்ளப் பாங்கைத் தெரிந்து கொண்டபிறகு, மதிப்பு மங்கிவிட்டது—மிகச்சாதாரண ஆசாமி! விடுதலைக்கானபோர் நடாத்தும் திறமையுள்ளவரல்ல, என்ற எண்ணம் ஏற்பட்டது. இருவருக்கும் ஏற்பட்ட கருத்துவேற்றுமை, பகைமூளும் அளவு வளர்ந்தது;

ஊரார் பாயோலி பக்கம், எனவே நெப்போலியனுடைய வீட்டைத் தாக்கக் கிளம்பினர் ஆத்திரம்கொண்ட மக்கள்—கொள்ளையும் அடித்தனர்—தலைதப்பினல் போதும் என்று நெப்போலியன் குடும்பத்தாருடன் ஓடி ஒளிய நேரிட்டது.

பாரிசில், இந்த நிகழ்ச்சி நெப்போலியனுக்குச் சாதகமானநிலையை உண்டாக்கிற்று. கார்சிகாக்காரனுக இருந்தாலும், நெப்போலியன் குடியாட்சிகண்ட புரட்சி இயக்கத்திடம் பற்றுமிகக்கொண்டவன், அதனுல்தான், பிரான்சு சார்பில் நின்று பாயோலியை எதிர்த்திருக்கிருன் என்று, பிரான்சிலே அரசு நடத்துவோர் எண்ணிக்கொண்டனர். புதிய ஆதரவு கிடைத்திட இந்த எண்ணம் பயன் படுவதுகண்டு, நெப்போலியன் தன் பழைய கருத்தை பிரான்சிடம் கொண்டிருந்த பகை உணர்ச்சியைக்கூட மாற்றிக்கொண்டான்.

பாயோலியை எதிர்க்க, நெப்போலியனையே ஒரு படைப் பிரிவுக்குத் தலைவனுக்குகிறது பிரன்ச்சு அரசு.

எந்தக் கார்சிகாவின் விடுதலைக்காகச் சீறிப் போரிட்டானே, அதே கார்சிகாவில் பிரன்ச்சு ஆதிக்கம் நிலைத்திட, அதே நெப்போலியன், எந்தப் பாயோலியை விடுதலை வீரன் என்று கொண்டாடி வந்தானே அதே தளபதியை எதிர்த்துப் போரிட முனைந்தான்.

இலட்சியப் பற்றுள்ளவரின் செயலாகுமா இது எனில், ஆகாது. நெப்போலியன் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்டுவிட்டான் என்றுதான் கூற வேண்டும்—கூறுவர்—கூறினர். ஆனல் நெப்போலியனின் மனம் வேறுவிதமாகப் பக்குவம் அடைந்ததின் விளைவுதான் இத்த நிலைமை மாற்றமேயன்றி, கேவலப் போக்கு அல்ல என்பதனை மிகக் கூர்ந்து கவனித்தால் மட்டுமே உணரமுடியும்,

பிரான்சு, கொடுங்கோலரின் கொலு மண்டபம் அல்ல; புரட்சிப் பூங்காவாகிவிட்டது; எனவே, கார்சிகா, தன்னைப் பிரான்சு அடிமைப் படுத்திவிட்டதாக இனி எண்ணத் தேவையில்லை; புதிய கருத்துக்கள் பரவிட, புதிய ஆட்சிமுறை மலர்ந்திட, பிரான்சு வழிகாட்டுகிறது என்று கொள்ளவேண்டும்; இனிப் பிரான்சு நாட்டுடைய வலிவு எந்த அளவு வளருகிறதோ அந்த அளவுக்குப் புரட்சியில் பூத்த புதுமைக் கருத்துகளுக்கு வெற்றி கிட்டும். எனவே இனி நாம் பிரான்சின் பக்கம் நிற்க வேண்டும் என்று முடிவு செய்தான்—எதனையும் ஆய்ந்தறிந்து கணக்குப் போட்டுப்பார்க்கும் திறமை படைத்த நெப்போலியன்.

பாயோலியின் கோட்டையை இருமுறை தாக்கியும் பலன் ஏற்படவில்லை—அந்தத் தளபதியின் கை ஓங்கிவிடுகிறது—நெப்போலியன் நாட்டுத் துரோகி என்று அறிவிக்கப்பட்டு விடுகிறது. நெப்போலியன் தப்பினல் போதும் என்ற நிலை! குடும்பத்துடன், கார்சிகாவை விட்டு வெளி ஏறிவிடுகிருன். அப்போதே சிக்கியிருந்தால், நெப்போலியனுடைய எதிர்காலம் இருண்டுபோய் விட்டிருக்கும்,

மார்சேல்ஸ் நகரில், ஒரு வீட்டின் நாலாவது மாடியில் தஞ்சமடைந்த இந்தக் குடும்பம், வாடுகிறது.

இந்தச் சமயத்தில்தான் நெப்போலியனுடைய அண்ணன் ஜோசப், வணிகர் மகளை மணமுடித்ததும் நெப்போலியன் டிசயரியைக் காதலித்துக் கைகூடாமற் போனதும்.

இதிலிருந்து, நெப்போலியன் கார்சிகன் என்ற நினைப்பை மாற்றிக்கொண்டு விடுகிருன்; நிலைமை மாறி விடுகிறது; பிரன்சுக்காரனுகி விடுகிருன்; பிரான்சு என் நாடு என்று கொள்கிருன்.

தனித்து இயங்க முடியாது—ஏதாவது ஒரு பக்கம் சேர்ந்துதான் வாழமுடியும் என்ற நிலை ஏற்படுமானல், எந்தப் பக்கம் ஆதிக்கம் செலுத்தும் வலிவுடையதோ அங்கு சேர்ந்துகொள்ள வேண்டியதுதான்! வீழ்த்தப் பட்டுப் போவதைக் காட்டிலும், வீழ்த்தும் வலிவு தேடிக் கொள்வது நல்லது — இது நெப்போலியன் கொண்டு விட்ட கொள்கை.

நிலைத்து நிற்பது கொள்கை; நேர்மையுடன் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டும்; வேளைக்கு ஒரு கொள்கை, நாளைக்கு ஒரு கட்சி என்று மாறுவது தவறு; அதிலும் சுயநலத்துக்காக மாறுவது, மிகக் கேவலம்.

எவரும் மறுக்கொணுத, எவருக்கும் எளிதிலே புரியத் தக்க, எவராலும் போற்றிப் பாராட்டத்தக்க, இந்தக் கருத்து, நெப்போலியனுக்குத் தெரியாதா? மிக நன்ருகத் தெரியும்! படித்த ஏடுகள் கொஞ்சமா! சிந்தித்த காலம் தான் குறைவா!!

கரு உருவில் இருந்துவந்த நோக்கம் பெரிதாக வளர்ந்து, வளர்ச்சி காரணமாக வடிவத்திலே மாற்றம் கொண்டுவிட்டது, என்று கூறுவதுதான், பொறுத்தமாக இருக்கும். கோழைத்தனமும் சுயநலமும் நெப்போலியனை மாற்றிவிடவில்லை. கார்சிகா விடுதலை என்பது, துவக்கத்தில் மிகப் பெரிய சாதனை என்று அவன் மனதிலே தோன்றிற்று. காலம் மாறிற்று, கருத்தும் மாறிற்று! கார்சிகா, உள்ளங்கை அளவுள்ள தீவு! இதிலே ஆதிக்கம் பெற்றுத்தான் என்ன பலன்? உலகறியும் வீரனுகவா முடியும். வெற்றி பெற்ருல், தீவின் தலைவனுகலாம்—எந்தச் சமயம் எந்த எதிரிக் கப்பல் வருகிறதோ என்ற திகிலுடன் இருக்கவேண்டும்! தோற்றுவிட்டால், பாரிசில், சந்தைச் சதுக்கத்தில், வெட்டுப் பாறையிலே வீழ வேண்டும். இதற்கா, திரட்டி வைத்துள்ள ஆற்றல் பயன் படுவது. பிரான்சிலே பிடிதேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும்; பிறகு பிறநாடுகள்; பேரரசு; காலத்தை வெல்லும் கீர்த்தி பெறவேண்டும் — இது நெப்போலியனுடைய புதிய கோட்பாடாகிவிட்டது.

தன் ஆற்றலிலே அளவற்ற நம்பிக்கை; அந்த ஆற்றலை வெளிப்படுத்தி வீர வெற்றிகள் பெற்ருக வேண்டும் என்ற துடிப்பு—நெப்போலியனுக்கு.

ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதிலே, அத்துணை வெறி—என்று குற்றம் சாட்டினர், பிற்காலத்தில். நெப்போலியன் சொன்னான்,'' நான் ஆதிக்கம் பெற விரும்புகிறேன் — மறுக்கவில்லை. ஆனால் எந்த முறையில், எனக்கு அந்த ஆர்வம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். யாழ் வாசிப்பவனுக்கு, எப்படி, யாழிடம் தனக்கு நிகரற்ற ஆதிக்கம் இருக்கவேண்டும் என்று எண்ணம் இருக்குமோ, அப்படி எனக்கு, ஆதிக்கத்தின்மீது ஆர்வம். யாழ்வல்லோன் எதற்கு விரும்புகிறான், ஆதிக்கத்தை? யாழினின்றும் எவரையும் மகிழ்விக்கவல்ல இனிய இசையை எழுப்ப! என் நோக்கமும் அஃதே போன்றதுதான். பல அரசுகளிலே ஆதிக்கம்பெற முனைகிறேன்—எதன் பொருட்டு? அமைதி நிலைத்திட, அரசு நிலைத்திட, வாழ்வு சிறந்திட, வளம் பெருகிட, மக்கள் வாழ்ந்திட!!

இரத்தம் இருபது ஆண்டுகள் பொங்கிடும் விதமான போர்பல நடாத்தி, ஆட்சிகள் பலவற்றைக் கலைத்தும் கவிழ்த்தும், ஒரு பேரரசு அமைத்திட முனைந்தது, மக்களுக்கு நல்வாழ்வு பெற்றளிக்க என்று கூறுவதாலேயே, இருபது ஆண்டுகள் விளைந்த விபரீதங்களை விருந்தாக்கிக் கொண்டு விருது அளித்திட எவர் ஒப்புவர்!

நெப்போலியனுடைய ஆதிக்க வேட்டைக்கு ஒரு நோக்கம்கூட இருக்கலாம் — அந்த நோக்கம் நேர்த்தியானது என்று திறம்பட வாதிடவும் செய்யலாம், ஆனால் எத்தனை எத்தனை அழிவு, கொடுமை, இழப்பு, இடிபாடு, இடர்ப்பாடு! எல்லாம் கடைசியில் எதற்குப் பயன்பட்டது— ஒரு மாவீரன் மகத்தான வெற்றிகளை, திறமையால், உழைப்பால், திட்டமிடுவதால் பெறமுடிந்தது என்பதை வரலாற்றுச் சுவடியிலே இணைத்துக் காட்டத்தானே!! மல்லிகையின் வெண்ணிறத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று சூளுரைத்து, மதலையினைக் கொன்று, அந்தக் குருதியிலே மல்லிகையைக் கொட்டி, செந்நிறமேற்றிக் காட்டுவதா! இரத்தம் பொங்கிடும் இருபது ஆண்டுகள், ஒரு இலட்சிய அடிப்படையிலே மேற்கொள்ளப்பட்ட புனிதப் பணி அல்லவே அல்ல! ஆற்றலை அளவு கடந்து பெற்றவன், அவனியை அழித்தேனும், வெற்றிப் புகழ்பெற முனைந்திடும் விபரீத விளையாட்டு அது. உலக வரலாற்றிலே, பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை, ஏற்படும், பூகம்பம், எரிமலை, பெரும் புயல், பெரு வெள்ளம்.

துவக்கத்திலேயே, நெப்போலியனுடைய போக்கைக் கூர்ந்து கவனித்தவர்கள், 'தன்னால் முடியும்' என்ற எண்ணம் தடித்துப்போன நிலை இந்த வீரனுக்கு இருக்கிறது. இது மிக ஆபத்தானது. இவன் ஆட்டிப் படைத்திட, ஆதிக்கம்கொண்டு அலைந்திட முனைவான். வருங்காலத்தினர், கொடுமையின் சின்னம், பயங்கர மனிதன், என்று கூறத்தக்க நிலைக்குச் செல்கிறான் இந்த நெப்போலியன்—என்று கூறினர்.

டோவ்லான் எனும் ஊரில், பிரிட்டிஷார் கோட்டை எழுப்பிக்கொண்டு, மன்னர் கட்சியை மீண்டும் பிரான்சில் புகுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த இடத்தைத் தாக்கிப் பிடித்திடுவதற்கேற்ற வழி இல்லை என்று பிரன்சுத் தளபதிகள் பலரும் கருதினர்.

நெப்போலியன், துணிவாகத் தாக்கி. டோவ்லானில் வெற்றி பெறமுடியும் என்று கூறி, அதற்கான திட்டம் தயாரித்திருப்பதாகத் தெரிவித்தான். தயக்கத்துடன் தான், நெப்போலியனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. என்றாலும், வியக்கத்தக்க வெற்றியைப் பெற்றான். அஞ்சாமல் தாக்குவது, விரைவாகச் செயலாற்றுவது எனும் போக்கின் காரணமாக அந்த வெற்றி கிடைத்தது. பிரிட்டிஷாரும் அவர்களை நம்பி அங்குக் குடியேறி இருந்த பல்லாயிரவரும் பதை பதைத்துப் போயினர்,

அந்தப் போரிலே பெரும் படைத் தலைவன், நெப்போலியன் அல்ல.

அந்தப் பதவி வகித்தவர் வேறொருவர் இருந்தார்— திட்டம் நெப்போலியனுடையது—வெற்றி பெற்றதற்குக் காரணம் திட்டம்தான் என்பது அனைவருக்கும் தெரியும்— பெரும்படைத் தலைவரும் அறிவித்தார் — நெப்போலியனைப் பாராட்டினர்.

நெப்போலியன் நடாத்திய புயல் வேகத் தாக்குதலால் நிலைகுலைந்து போனவர்கள், பீதியுற்று, பல்வகைக் கலங்களேறிக் கடல் வழியாகத் தப்பிச் செல்ல முனைந்தனர். பதினையாயிரவர், முதியவர் இளைஞர். ஆடவர் பெண்டிர், படுகாயமுற்றோர், நோய்வாய்ப்பட்டோர், பதறி ஓடுகிறார்கள் படகுகளைநோக்கி. படகுகளிலே ஏறுவதற்குப் போட்டி, சச்சரவு! படகுகள் கவிழ்ந்துவிட, பலர் பிணமாகி மிதக்கிறார்கள். இதற்குள் ஊரிலே ஆயுதக் கிடங்கு தீ பிடித்துக் கொள்கிறது, பெரு நெருப்பு பரவுகிறது; சிக்கினோர் கருகினர்! கட்டடங்கள் இடிபாடுகளாயின! பொருட் குவியல், சாம்பலாயிற்று! ஒரு புறம் கொந்தளிக்கும் கடல், மற்றோர் புறம் பெரு நெருப்பு—இடையிலே பீதிகொண்ட மக்கள்.

எதிர்பாராதிருந்த நேரத்தில் எவரும் எதிர்பார்த்திருக்க முடியாத முறையிலே தாக்குதலை நடத்தியதால் வெற்றி கிட்டியது மட்டுமல்ல, தோற்றவர்கள் நாசமாயினர். இரத்தம் பொங்கப் போகிறது இனி இவன் நடாத்தும் போரினால் என்பதை அறிவிக்கும் எச்சரிக்கையாயிற்று டோவ்லான்.

நெப்போலியனுடைய புகழ் பாடலாயினர் பலரும்.

இடிப்பொடிந்தவர்கள் இருபது முப்பது தங்கப் பதக்கங்களை அணிந்துகொண்டு, பெரும் படைத் தலைவர்கள் எனும் பட்டம் சுமந்துகொண்டுள்ளனர்—இதோ ஓர் இளைஞன்—வீரதீரப் போர் புரிகிறான்—வெற்றிக்கான திட்டம் தருகிறான்— வெந்தழலாகிறான் எதிரிகளுக்கு—இப்படிப்பட்டவர்கள் அல்லவோ படைகளை நடாத்திட வேண்டும்—



(நெப்போலியன்—ஒரு தோற்றம்)

என்று அங்காடியிலும் அலுவலகங்களிலும் பேசலாயினர். இனி, நெப்போலியனுக்காக, பரிந்து பேச, இடம் தேடிக் கொடுக்க, ஒருவரும் தேவை இல்லை. அவன் ஆணையின் படி அஞ்சாது போரிட்டு வெற்றி பெற்ற படையினர் போதும், அவன் புகழ் பாட. புதிய விண்மீன் ஒளிவிடத் தொடங்கிவிட்டது என்பதனைப் பலரும் உணர்ந்தனர். வாய்ப்பு அளிக்கப்பட்டால், வாகை சூடிடலாம் என்ற நம்பிக்கை பலப்பட்டது நெப்போலியனுக்கு.

ஆனால், அவனுக்கான முன்னேற்றப் பாதை, பள்ளம் படுகுழியற்றதாக அமைந்துவிடவில்லை. அவ்வளவு எளிதாகவும் ஒரு புதியவனுக்கு இடம் அளித்துவிடப் பலருக்கு மனம் ஒப்பவில்லை.

அரசு நடாத்துவோர் போர்க் கருவி பெறும் காரியமாக நெப்போலியனை, ஜெனோவா நகர் அனுப்பி வைத்தனர். அங்கு இருக்கும்போது, யாரோ மூட்டிவிட்ட கலகத்தால், அரசினர் நெப்போலியன்மீது ஐயம் கொண்டனர்—ஏதோ சதி நடத்துகிறான் என்று கூறி, சிறைப் படுத்தினர்.

வெற்றி. வெற்றி! என்று முழக்கமிட்டான் இளைஞன்—பாபம் சிக்கிக்கொண்டான் வசமாக—காலமெல்லாம் சிறையோ; அல்லது சுட்டுத் தள்ளிவிடுவார்களோ, என்ன கதியோ இவனுக்கு என்று ஏளனமாகச் சிலரும் இரக்கம் காட்டி பலரும் பேசினர்.

நெப்போலியன், மனம் வெகு பாடு பட்டிருக்கவேண்டும். தூய்மைபற்றி ஐயப்பாடு கிளப்பப்படும்போது, உள்ளம் வெதும்பத்தானே செய்யும். அவ்விதமான மன வேதனையின் போதெல்லாம், நெப்போலியன் வாழ்க்கையையே வெறுத்துப் பேசுவதும், தற்கொலைபற்றி எண்ணுவதும் வாடிக்கை.

> என்ன வேலை இருக்கிறது இந்த உலகில். எப்படியும் சாகப் போகிறேன் ஓர் நாள்—என்னைநானே கொன்று கொள்வது சாலச்சிறந்ததல்லவா! அறுபது ஆண்டு முதியவனாகிவிட்டிருப்பின், பரவாயில்லை, இவ்வளவு காலம் இருந்ததுபோல இன்னும் சிறிதுகாலம் இருந்துவிடலாம் என்றுகூட எண்ணிக் கொள்ளலாம். நான் முதியவனல்ல, தொல்லைகள், மனச்சங்கடங்கள் அடுக்கடுக்காக, எனக்கு. மகிழ்ச்சி திருப்தி இல்லை. ஒருபலனுமற்ற இந்த வாழ்வு இருப்பானேன்—முடித்துக்கொண்டால் என்ன?

இவ்விதமாக, மனம் வெதும்பி, எண்ணுகிறான், நெப்போலியன்.

உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்கள்—அவைகளைச்செயல்படுத்தும் வாய்ப்புகிடைக்கவில்லை என்றால், எண்ணங்கள் நச்சரவுகளாகி இதயத்தை அல்லவா கடித்து, பிய்த்துத் தின்னத் தொடங்கும். அந்த நிலை நெப்போலியனுக்கு.

அதிலும், துரோகிப் பட்டம் வேறு! செ! என்ன உலகம் இது'!—என்று கூறிக் குமுறுகிறான். நண்பர்கள் சிலர், சிறையிலிருந்து தப்பி ஓடிவிடும்படிச் சொல்கிறார்கள். செவிசாய்க்க மறுக்கிறான்.

> நாட்டுக்குத் துரோகியாக என் தந்தையே மாறினாலும் அவரைக்கூடக் குத்திக் கொன்று போடுவேன். என்னைத் துரோகி என்று தூற்றுவதா! என் தளைகளை நீக்கி, நான் குற்றமற்றவன் என்பதை ஏற்றுக்கொண்டு விடுதலை அளியுங்கள், அடுத்த கணம், என்னைச் சாகச் சொல்லுங்கள், நாட்டுக்காக. தயார்! மகிழ்ச்சி! சாவுக்கு அஞ்சுபவன் நான் அல்ல! களத்திலே, மரணத்தின்பிடியில் பலமுறை சிக்கிக்கொண்டவன், நான்.

என்று நெப்போலியன் நண்பனுக்கு எழுதுகிறான்.

பெரியதோர் ஆபத்து, நெப்போலியனுக்கு ஒரு எதிர்காலம் இல்லாமற் செய்துவிடக்கூடிய பழி, எப்ப

டியோ ஒரே வாரத்திலே துடைக்கப்பட்டு, நெப்போலியன் விடுதலை பெறுகிருன்.

நாடு பல காலடி வீழத்தக்க போர்த் திட்டங்களை உருவாக்கி வைத்துக்கொண்டு, உலவுகிருன் மாவீரன்—மதிப்பளித்து ஏற்றுக்கொள்வார் இல்லை. வாழ்க்கையிலே மகிழ்ச்சியாவது உண்டா? இல்லை! பணமுடை! சோம்பிக்கிடக்கவேண்டிய நிலை! அண்ணன் ஜோசப் பரவாயில்லை—வணிகனின் மகளை மணந்துகொண்டு, சொத்து சுகம் பெற்று இருக்கிருன்-நெப்போலியனுக்கு? டிசயரியிடம் கொண்ட காதல் கைகூடவில்லை! பணத் தொல்லை! அண்ணனிடம் சிறிதளவு பொருமைகூட ஏற்பட்டது.

நெடுங்காலம் அடைபட்டுக் கிடக்கும் பொன், என்றேனும் ஓர்நாள் வெளியே வந்திடுவது காண்கிருேம்—அதுபோலவே, மங்கிக்கிடக்கும் ஆற்றல், வெளிவர வாய்ப்புக் கிடைத்தது.

அரசாளும் குழுவினருக்கும் பாரிஸ் நகர மக்களுக்கும் பகை! குழுவினருக்குப் பாதுகாப்பு அளித்திடும் பொறுப்பு, நெப்போலியனிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேற்று நாட்டவரை வீழ்த்துவதிலேயே விருதுகள் கிடைக்கும்—இது உள்நாட்டிலேயே ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளும் வேலை. இதுதானு, எனக்கு? மலை முகடு தாவி மாற்றுனை வீழ்த்தவல்ல என்னை, காவல் காத்திடச் செய்கின்றனர்—கலாம் விளைவிக்கும் கும்பலை அடக்கச் சொல்லி, நாடாளும் பொறுப்பாளர் கூறுகின்றனர். நன்று! நன்று! நாடாளும் பொறுப்பாளர்களின் வீரம்!—என்று எண்ணி, உள்ளூறச் சிரிக்கிருன், உலகாளும் ஆற்றலை உள்ளத்தில் அடக்கிவைத்துக்கொண்டுள்ள வீரன்.

பீதிகொண்ட ஆளும் குழுவினரிடம், ஆர்ப்பரித்து எழுந்து, அமளி மூட்டிடும், கும்பல் மோதிக்கொள்ள வந்தபோது, நெப்போலியன், கலகக்காரர்கள்தானே, கைஒலி கேட்டாலே சிதறி ஓடுவர் என்று இருந்துவிடவில்லை—கடுமையாகத் தாக்கினுன் — பலரைச் சுட்டு வீழ்த்தினுன். துணிவு! துரிதமான நடவடிக்கை!!

லூயி மன்னன், புரட்சிக்காரர்களால் பிடித்திழுத்துச் செல்லப்பட்ட நாட்களிலேயே, நெப்போலியன், நண்பர் சிலரிடம் மெல்லிய குரலில் கூறியிருக்கிருன், கண்டதைக் கையில் எடுத்துக்கொண்டு, காட்டுக்கூச்சலிடும் கும்பலில் முன்வரிசையிலே உள்ள சிலநூறு பேர்வழிகளை, மன்னர் படையினர் சுட்டுத்தள்ளி இருந்தால், பின்வரிசையாவும் பீதிஅடைந்து, சிதறி ஓடி இருக்கும். தவறிவிட்டார்கள் மன்னர் தரப்பினர், என்ருன்.

மன்னர்களின் மமதையும் சீமான்களின் செருக்கும் நெப்போலியன் மனதிலே வெறுப்பைமூட்டியதுபோலவே மக்களின் காட்டுப்போக்கும் கடுங்கோபத்தை மூட்டிற்று.

மக்களாம், மக்கள்! என்னதெரியும், அப்பாவிகளுக்கு. ஆயிரம் அறிவுரை பேசட்டும், திருந்துவார்களா? அமைப்புகளை மேலும் மேலும் செம்மைப்படுத்தட்டும், நல்வாழ்வு பெறுவார்களா? ஒருக்காலும் இல்லை. மக்களுக்குத் தேவைப்படுவது, தத்துவங்களுமல்ல, விதவிதமான அமைப்புகளிலே இடமும் அல்ல! அவர்களுக்குத்தேவை. அவர்கள் போற்றத்தக்க, புகழ்மிக்க ஒரு தலைவன்! பரம்பரை காட்டியோ பணத்தைக் காட்டியோ புகழ் பெற்றவர்களை அல்ல, ஆற்றலைக்காட்டி, பெற்ற வெற்றிகளைக் காட்டி ஒரு தலைவன் புகழ் ஒளியுடன் நின்ருல்போதும், மக்கள் அவன் ஏவல்படிநடந்திட போட்டியிட்டுக்கொண்டு வருவார்கள். இது நெப்போலியன் கொண்டிருந்தகருத்து, மக்களை மதியாத மாமன்னர்களை விரட்டி அடித்து, மக்களாட்சி அமைத்த நாட்கள்—அதே பிரான்சு—அங்கு, மக்களை மரப்பாச்சிகள் என்று கணக்கிடும் போர்வீரன்—அவன் புகழ்பெறுகிருன்! பொருள் என்ன? மக்களாட்சி மறைகிறது, மாவீரன் காலடிவீழ்ந்து, கட்டளைப்படி நடக்கும் முறை வெளிவருகிறது என்பதுதான்.

இந்தச்சம்பவம், நெப்போலியனுக்கு ஓர் புதிய இடம் பிடித்துக்கொடுத்திட மட்டும் பயன்படவில்லை. ஆட்சிக் குழுவில் அமர்ந்து அமுல்நடத்தும் பொறுப்பாளர்கள், எவ்வளவு கோழைகள், முதுகெலும்பு அற்றவர்கள், என்பதைத் தெளிவாக நெப்போலியன் உணர்ந்துகொள்ள வைத்தது,

பெரிய கூட்டமாம்! துப்பாக்கியுடன் வருகிருர்களாம்!—என்று பீதியுடன்பேசினர், நாடாள்வோர். என்ன நடுக்கம்! எத்துணைத்திகில்! இவ்வளவுதானு இவர்கள்—இதுகள்! போரிடத் தெரியாத மக்கள், ஆயுதம் எடுத்து வந்தாலே, குலைநடுக்கம் எடுக்கும்போது, அஞ்சாநெஞ்சுடைத் தலைவனெருவனின் ஆணையின்படி நடந்திடும் ஆற்றலுள்ள, கட்டுப்பாடுமிக்க ஒருபடை இவர்களை எதிர்த்தால்? என்ன ஆவார்கள்?—என்று எண்ணினுன்—எதிர்காலமே அவன் கண்ணெதிரே தெரிகிறது.

ஒருவர் சொல்லியிருக்கிருர், "நெப்போலியன், எரி நட்சத்திரம்போல! வளர வளர ஒளி அதிகமாகும்—வேறெந்த ஒளியையும் மிஞ்சும் அளவு. ஆனுல் ஒளி மிகுந்திட மிகுந்திட, தன்னைத்தானே எரித்துக்கொண்டு விடும் — எவ்வளவு அதிகமாக ஒளி காணப்படுகிறதோ அவ்வளவு அதிகமான நெருப்பு பிடித்துக்கொண்டது என்று பொருள்—எவ்வளவு வேகமாக ஒளி வளருகிறதோ அவ்வளவு வேகமாக, பற்றி எறிந்துகொண்டு போகிறது என்று பொருள். இறுதி? கருகிப்போய் விடுகிறது, எரி நட்சத்திரம், நெப்போலியனுடைய வரலாறும் இதுதான்."

இத்தாலி நோக்கிக் கிளம்பும்போது புகழ், புள்ளி அளவாகத்தான் இருந்தது.

பாரிஸ் — பள்ளி அறை — பளிங்குக் கண்ணுடி—எனக்குப் பின்னுல். முன்னுல் இருப்பது புகழ் தரும் வெற்றிகள்! — என்று எண்ணியபடி, களம்நோக்கிச் செல்கிருன். வழியிலே, தங்குமிடங்களிலிருந்தெல்லாம், ஜோசபைனுக்குக் காதற் கடிதங்கள் தீட்டுகிருன். களம் வந்திராவிட்டால், என்னென்ன பேசி மகிழ்ந்திருப்பானே,

அவைகளை எல்லாம் கடித மூலம் அனுப்பி மகிழ்கிருன்—மகிழ்விப்பதாகவும் எண்ணிக்கொள்கிருன்.

இத்தாலிமீது படை எடுத்துச் சென்று பிடித்திட வேண்டும் என்பது அரசு ஆணை. ஆனுல் அதற்கு ஏற்ற வலிவுமிக்க படை உண்டா? இல்லை! வசதிகள் உண்டா? கிடையாது! ஆனுல் இவைகளைக் கூறித் தயக்கம் காட்டினுனு என்ருல் இல்லை. போரிலே ஈடுபட்டு பயிற்சி பெற்ற பொறியியல் அதிகாரி ஒருவர்கூடக் கிடையாது; வத்தலும் தொத்தலுமான நாலாயிரம் குதிரைகள்; உணவு போதுமான அளவு இல்லை; செலவுக்கான பணம் மிகக் குறைவு. ஆனுல், உடன்சென்ற படையினரிடம் வீரம் நிறம்ப! அதனை அதிகமாக்கத்தக்க உணர்ச்சியை, உற்சாகத்தை ஊட்டவல்ல வீர உரை நிகழ்த்தினுன் நெப்போலியன்.

இந்தப் போரிலே நெப்போலியன் காட்டிய துணிவும் மேற்கொண்ட முறைகளும், வல்லரசுகள் பலவற்றுக்குக் குலைநடுக்கத்தை ஏற்படுத்திவிட்டன.

இத்தாலியைத் தாக்க, மிக உயரமான, பனி நிரம்பிய, ஆல்ப்ஸ் மலையைக் கடந்தாகவேண்டும் என்று திட்டமிட்டான்—கேட்போர் மலைக்கத்தக்க திட்டம்.

ஆல்ப்ஸ் மலையை முன்பு அனிபால் எனும் இரண களச்சூரன் கடந்ததுண்டு. உலகம் வியந்தது.

நெப்போலியன், வேறு எவராயினும் இதனைச் செய்திருப்பர் என்று கூறிடத்தக்க செயலை நடாத்திக்காட்டுவது போதாது என்ற எண்ணம்கொண்டவன். இதற்கு முன்பு இதுபோலச் செயலாற்றியவர் எவரும் இல்லை!—என்று எவரும் வியந்து கூறத்தக்க செயல்களைச் செய்வதிலேயே நாட்டம் மிகுதியும் கொண்டிருந்தான்.

எது நடைபெருது என்று மாற்ருர் நம்பிக்கொண்டிருக்கிருர்களோ, அதனை நடத்திக்காட்டுவது எதிரி முகாமைக் கிடுகிடுக்கவைத்துவிடும் என்பதனை நெப்போலியன் அறிவான். ஒவ்வொரு களத்திலும், இதனை நோக்கமாக்கொண்டு, கேட்போர் திடுக்கிடத்தக்க செயலாற்றி, வீரக் காதை தீட்டியபடி இருந்தான்.

ஆல்ப்ஸ் மலையுச்சியைக் கடந்து படை வர இயலுமா? என்று எண்ணி ஏமாந்துகிடப்பர், மாற்ருர்கள். மலையைக் கடந்து நம்படை எதிரே சென்று நின்ருல் போதும், பீதி எதிரியின் வலிவிலே பாதியைச் சாகடித்துவிடும் என்று அறிந்து திட்டமிட்டான், வீரத்தளபதி.

ஆல்ப்ஸ் மலையைக் கடப்பதற்கான திட்டத்தை, மிகத் திறமையாக, தீரயோசித்து வகுத்தான், இயற்கை விளைவிக்கக்கூடிய கொடுமைகளையும் சமாளிக்கவேண்டும், எதிரிப்படைகளின் தொல்லைகளுக்கும் ஈடுகொடுக்க வேண்டும். படைவீரர்கள் மட்டுமல்ல, பீரங்கி வண்டிகளும் மலையைக் கடந்தாகவேண்டும். உணர்ச்சி ஊட்டத்தக்க தலைவனுல் மட்டுமே, இத்தகைய மகத்தான செயலைச் செய்யும்படியான வீரத்தைப் படையினர் பெறச்செய்ய முடியும், நெப்போலியன், தான்கொண்டிருந்த நம்பிக்கையைப் படையினர் அனைவரும் பெறத்தக்கவிதமாக நடந்துகொள்வான். பட்டாடைகளாலான கூடாரத்தில் ஓய்வாகச் சாய்ந்துகொண்டு, களியாட்டத்துக்கிடையே, கட்டளை பிறப்பித்துக்கொண்டுள்ள, படைத் தலைவன் அல்ல குடும்பப்பெருமை காரணமாகவோ, கொலுமண்டபத்து தயவாலோ, படைத்தளபதியானவனல்லவே நெப்போலியன். ஓயாத உழைப்பினுல், மங்காத வீரத்தால், செயலாற்றும் திறத்தால், முன்னணி நிற்பவன். எனவே, தன் படைவரிசையிலும் வீரம்காட்டப்படும் போதெல்லாம் பாராட்ட, பரிசு வழங்க, பெரிய பதவிகள் அளித்திடத் தவறுவதில்லை. தமது வீரச்செயலைப் பாராட்ட, வாழ்த்த, தலைவன் முன்வருவது தெரிந்ததும், படை வீரர்கள் புதிய எழுச்சி பெறத்தானேசெய்வர்.

நெப்போலியனிடம், படை வீரர்களுக்கு ஏற்பட்ட பாசம், மிக உன்னதமானது. அவன் ஆணை எதுவாயினும், முறை எது கூறினும், தட்டாமல் தயங்காமல் மட்டுமல்ல, மகிழ்ச்சியுடன் அவற்றின்படி நடப்பர்.

வெற்றி பெற்றுத்தரத்தக்க மாவீரன், நமது தலைவன், என்ற உணர்ச்சி, படையிலே. எப்போதும், எத்தகைய சூழ்நிலையிலும், நெப்போலியனுக்காக உயிரைக் கொடுக்கவும், போர்வீரர் காத்துக்கிடந்தனர். அரச குடும்பத்தினர், சீமான்கள் என்போர் மட்டுமே பெரிய பதவிகளைப் பெற்றுவந்தனர் பட்டாளத்தில். நெப்போலியன் அப்படிப்பட்டவன் அல்ல. எளிய குடும்பம். உழைப்பால் உயர்ந்தவன். எனவே அவனிடம் எளிய குடும்பத்தினரான போர்வீரர்களுக்கு உயிர். சொந்தத்தோடும் பந்தத்தோடும் பழகமுடிகிறது. செல்லப் பெயரிட்டு அழைத்து மகிழமுடிகிறது. எனவே வேறு எந்தக் காலத்திலும் ஏற்படாதவிதமான வீர எழுச்சி காட்டிப் போரிட்டனர், நெப்போலியன் தலைமையில் இருந்து வந்த போர்வீரர்கள்.

துணிகரமான போக்குடன், பெரிய ஆபத்துகளைப் பற்றிக் கவலைப்படாமல் போரிடும் வீரமிக்க பல தளபதிகள் தோன்றினர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அளவில், நெப்போலியன்களாகவே விளங்கினர். எதிரிப் படை எத்துணை பெரிதாக இருப்பினும், தன்வசம்உள்ள படையைக்கொண்டு, எதிரிப் படைவரிசையில் ஏதேனும் ஓர் பகுதியை மிகவேகமாகத் தாக்கி, எதிரிப்படை வரிசையில் பிளவை ஏற்படுத்தி, சிதறவைத்து, நிலை குலைந்து அப்படை ஓட, துரத்திச் சென்று தாக்கி அழிப்பது, நெப்போலியன் கையாண்ட போர் முறை. இதற்கு அச்சமற்ற போக்கும், கணக்கிட்டபடி காரியமாற்றும் துரிதத் தன்மையும் வேண்டும்.

> களத்திலே பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன், ஆனுல் காலம் வீணுக்கப்படுவதை, இழக்கப்படுவதை மட்டும் விரும்பவே மாட்டேன்

என்று நெப்போலியன் ஒரு முறை கூறினுன்.

போர் நடைபெறும்போது நெப்போலியன் குதிரை மீதேறி களத்திலே எங்கெங்கு சென்று நேரிடையாகக் காரியமாற்ற வேண்டுமோ அங்கெல்லாம் செல்வான்—காற்றெனச் சுற்றிச் சுற்றி வருவான். வேலை கடினமானது ஆக ஆக அவன் சுறுசுறுப்பு வளரும். நிலைமையில் ஆபத்து அதிகப்பட அதிகப்பட நெப்போலியனுடைய வீர உணர்ச்சி கொழுந்துவிட்டு எரியும். பசி

தூக்கம் மறந்து பம்பரமாகச் சுற்றுவான். களத்திலேயே ஓரிடத்தில் குதிரைமீது அமர்ந்தபடியே சில நிமிடங்கள் கண்களை மூடிக்கொள்வான் — தூக்கம்! உடனே விழித்துக்கொள்வான்—புது வேகம் பிறக்கும்.

செயலாற்றுவதற்கான வேகம், அளவிடமுடியாத படி இருந்தது. இத்தனைக்கும், சில படைத் தலைவர்கள் போல, பார்க்கவே பயங்கரமாகத் தோற்றமளிக்கும் பேருருக் கொண்டவன் அல்ல. நாலடி பத்து அங்குல உயரம், நெப்போலியன்—ஐந்தடிக்கும் குறைவு. குதிரை மீது அமர்ந்திருக்கும்போது மட்டுமே கெம்பீரமான தோற்றம் இருக்கும். நேர்த்தியான உடற் கட்டு! களைப்பு சலிப்பு அவனைத் தீண்டுவதில்லை.

நினைத்தபோது தூங்கவும் முடியும் — விரும்பிய உடனே விழித்துக் கொள்ளவும் முடியும். பல நாட்கள் போதுமான அளவு தூங்காமலேயே, வேலைசெய்து கொண்டிருக்க இயலும். விடிய விடிய வேலை செய்வதுண்டு—உடன் இருப்போர், களைத்துப்போய்க் கண் அயர்வர், நெப்போலியன் துளியும் சோர்வின்றி காணப்படுவான். உணவு உட்கொள்வதிலும் நெப்போலியன் அதிகமான ஆர்வம் காட்டுவதில்லை. படாடோபமான முறையிலே, பத்துப் பனிரண்டு வகைகள் கொண்ட விருந்து உண்டிடுவதிலே விருப்பம் கொள்வதில்லை. பெரிய நிலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிறகு, பேரரசனான பிறகு ஏற்பாடு செய்யப்பட்ட ஆடம்பரமான விருந்திலேகூட அவன் மனம் ஈடுபட்டதில்லை. சீமான்கள் சீமாட்டிகளிடம் சிரித்துப் பேசிக்கொண்டே பல பண்டங்களைத் தொடுவதும் துண்டாடுவதும், சுவைப்பதும் சிதறவிடுவதுமான முறையில் நெடுநேரம் விருந்து சாப்பிடுவது சம்பிரதாயம். ஒருபுறம் இன்னிசை! எங்கும் மெல்லிய குரலிலே பேச்சு. விழியாலே மொழி பேசும் கலை! நடந்தவைகளை எண்ணிப் புன்னகை, நடக்க வேண்டியவைகளை நினைத்து ஏக்கப் பார்வை, பெருமூச்சு! இப்படி, மணிக் கணக்கிலே விருந்து நடைபெறும். நெப்போலியன் இதனைக் காலக்கேடு என்று கருதினான்—அரை மணிநேரத்திலே விருந்துவேலையை முடித்துக் கொண்டு, எழுந்துவிடுவான். மற்றவர்கள் பாடு திண்டாட்டமாகிவிடும். அவர்கள் அப்போதுதான், உள்ள பண்டங்களில் எதை உண்பது என்ற முடிவுக்கு வந்து, சிறிதளவு சுவைத்துக்கொண்டு இருப்பார்கள். நெப்போலியன் அதுபற்றிக் கவனம் செலுத்துவதில்லை — தன் வேலை முடிந்ததும் எழுந்துவிடுவான். மாமன்னன் எழுந்தான பிறகு, மற்றவர்களும் எழுந்தாக வேண்டுமே! விருந்து முடிந்துவிட்டதாகத்தானே பொருள். எனவே, எழுந்துவிடுவார்கள் — விருந்து கலைந்துவிடும், விதவிதமான பண்டங்கள் விணாகிக் கிடக்கும்; பசித்த வயிரோடு பலரும் தத்தமது இடம் செல்வர்.

மாமன்னன் நெப்போலியன் நடத்தும் விருந்துக்குப் போவதானால், போகுமுன் வீட்டில் வயிறு நிறம்பச் சாப்பிட்டுவிட்டுத்தான் செல்லவேண்டும், என்று பலரும் பேசுவர். பானங்கள் பருகுவதிலும் நெப்போலியனுக்கு ஆர்வம் அதிகம் கிடையாது. போதை தரும் பழச்சாறு பருகும்போதுகூட, இனிப்புக்காகவும் உடல் வலிவுக்காகவும்தான் பருக வேண்டுமே தவிர, உருண்டு கீழே விழவோ, உளறுமொழி பேசவோ அல்ல என்ற எண்ணத்தில், திராட்சை ரசத்தாலான போதைப் பானத்தில் நிரம்பத் தண்ணீர் கலந்துதான் பருகுவான்.

போரில் புதுமுறை காண்பவன் நெப்போலியன். எனவே, போர் இப்போதைக்கு இல்லை என்ற எண்ணத்தில், ஏற்பாடுகளைச் சரியாகச் செய்துகொள்ளாமல், மாரிகால விடுதிகளிலே ஓய்வாக எதிரிப்படைகள் இருப்பதனை அறிந்து, தாக்கி திகைக்கவைத்து வெற்றி கொள்ள இதுவே தக்க சமயம் என்று துணிந்து திட்டமிட்டு இயற்கையுடன் போராடுவதால் களைத்துக்கிடந்த தன் வீரர்களுக்கு உற்சாகமூட்டி, முன்னேறச் செய்தான்.

குதிரைகள் போதுமான அளவு இல்லையே என்பார் ஒரு தளபதி.

நம்மிடம் இல்லை — சரி — ஆனால் வேறு எங்குமா குதிரைகள் இல்லை. எங்கு இருந்தாலும் சரி, குதிரைகளைப் பிடித்துவாருங்கள் என்று உத்திரவு கிளம்பும், நெப்போலியனிடமிருந்து.

உணவு பற்றுக்குறை, நோய், இவைகளும் எதிரிகளே! பணிந்துவிடக்கூடாது. இவைகளிடமும். தாங்கிக்



நெப்போலியன்—வீரத்தோற்றம்

கொள்ளவேண்டும், தாக்கக் கிளம்பவேண்டும் என்பான் நெப்போலியன். அதுபோலக் கூறிவிட்டு அலங்கார வண்டியில் அமர்ந்துகொண்டு கேளிக்கைக் கூடம் சென்றுவிடுபவனு? இல்லை! முன்பு அப்படிப்பட்டவர்கள் பதவி வகித்தனர்—இவன் பிறவித் தளபதி! பதினெட்டு மணி நேரம் வேலை—களத்துக்கான எல்லா விதமான ஏற்பாடுகளையும் கவனித்துக்கொள்கிருன்—வைரங்கள் இழைக்கப்பட்ட தங்கப் பதக்கங்கள் நிறம்பிய பளபளப்பான பட்டாலான உடை அல்ல அணிந்திருப்பது, போர்த் தளபதி அணியும் உடைதான்—படாடோபம் துளியும் இல்லை. இரவெல்லாம் வேலை செய்துவிட்டு, விடியும்போது படுத்திடுவான் — தூக்கம் வருவதற்குள், போர்முறை பற்றிய ஏதேனும் ஓர் புதிய எண்ணம் தோன்றும் — காலையில் பார்த்துக்கொள்வோம் என்று இருந்துவிடுவதில்லை—உடனே கிளம்புவான், படையினருக்குக்கூற, புதிய ஏற்பாடுகளைக் கவனிக்க.

மகத்தான செயலை மேற்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வும், வெற்றி பெறத்தக்க ஆற்றலுள்ளவர்கள் நாம் என்ற நம்பிக்கையும், ஒரு படைக்கு வலிவான போர்க் கருவியாகும். அழிக்கும் வலிவுகொண்ட படைக்கலன்களைக் குவித்து வைத்துக்கொண்டிருக்கலாம், ஆனல் உறுதியும் நம்பிக்கையும் இல்லை என்ருல் வெற்றி கிட்டாது. உறுதியும் உணர்ச்சியும் படையினர் பெறத்தக்கவிதமான செயல் வீரனுகவும் பேச்சுத்திறன் மிக்கவனுகவும் விளங்கினன் நெப்போலியன்.

> "தொல்லைகள் பலவற்றைத் தாங்கிக் கொண்டீர்கள், வீரர்களே! அவைகளுக்கெல்லாம் ஒரு முடிவுகட்டத் தீர்மானித்துவிட்டேன். அதோ அந்த மலைகளுக்கு அப்பால், எல்லாம் இருக்கின்றன, உணவு,உடை,பாய்ந்திடும் புரவிகள், பொன், பொருள் யாவும். எல்லாம் நமக்காக! செல்வோம், வெல்வோம், அவைகளைக் கொள்வோம். எதிரிகளை நாம் சந்திக்கக் கிளம்புவோம்—இடையிலே உள்ள தடைகளைத் தகர்த்துவிட்டு முன்னேறி, நமது ஈட்டிமுனைகளை எதிரிகளின் மார்பில் பாய்ச்சுவோம்—புறப்படுக!"

மாவீரன் நெப்போலியன் இதுபோல எழுச்சியூட்டினன். போர் வீரர்கள் எத்தகைய உணர்ச்சிவயப்பட்டிருப்பார்கள் என்பதனைக் கூறவும் வேண்டுமா! முன்னேறிச் சென்றனர்—மூடுபனிக்கு இடையே படைகள் பாய்ந்தன — எதிரிப்படை வரிசைகளைத் தாக்கினர் — நிலை குலைந்தது—பிணம் குவிந்தது—இரத்தம் பொங்கிற்று—வெற்றி மலர்ந்தது.

நெப்போலியன் பெற்ற வெற்றி, அதைப் பெற அவன் தீட்டிய திட்டம், போர் வீரர்கள் வட்டத்திலேயே ஓர் புதிய கிலியைக் கிளப்பிவிட்டது.

எப்படி முடிந்தது இத்தனை மகத்தான வெற்றி பெற!—என்று கேட்டுக் கேட்டு வியந்தனர். பாரிசில் விழா! நெப்போலியனுடைய பெயர், ஒவ்வொருவர் பேச்சிலும். நெப்போலியன் நடத்திச் சென்ற படையிலிருந்தவர்களுக்கே பெரும் வியப்பு. முன்னேறித் தாக்கினல் வெற்றி பெற்றிடலாம் என்று நெப்போலியன் கூறியபோதுகூட, வழக்கமான பேச்சு இது என்று

## ஏன் செயற்கை?

அந்தச் சீமானின் மனைவி, கிணற்றில் விழுந்து விட்டாள். அவளைக் காப்பாற்றியவர்கள் முதலுதவி செய்வதிலே ஈடுபட்டார்கள்.

பின்னர், டாக்டர் வரவழைக்கப்பட்டார்!

"டாக்டர், இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" சீமானின் கேள்வி, இது!

செயற்கைச் சுவாசம் கொடுக்கப்போகிறேன்"

"ஏன் செயற்கைச் சுவாசம்? இயற்கைச் சுவாசமே கொடுங்கள், எவ்வளவு செலவானுலும் பரவாயில்லை" என்ருர் சீமான்!

தான் எண்ணிக்கொண்டனர்–நம்பிக்கை முழு அளவில் இல்லை. ஆனல் வாக்களித்தான், வெற்றி கிடைத்துவிட்டதே! இவனன்றே பெருந்தலைவன்! இவனை நம்பிச் செல்லலாம் எந்தக் களம் நோக்கியும்—என்ன ஆபத்துகள் குறுக்கிடினும்; கவலையின்றி! நம்மை வெற்றி நோக்கி அழைத்துச் செல்லும் வீரத் தலைவன் நெப்போலியன்—களம் செல்வது என்ருல் இத்தகைய மாவீரன் தலைமையிலே செல்லவேண்டும். நெப்போலியன் காட்டிடும் வழி நடப்போம், வெற்றிபெற்றுப் புகழ்க் கொடி நாட்டுவோம்!—என்று கூறிக் கொண்டாடினர் போர் வீரர்கள். படையினருக்கும் நெப்போலியனுக்கும் முன்பே ஏற்பட்டிருந்த நேசம், பாசமாகிவிட்டது. இனி இது பிரன்ச்சு நாட்டுப் படை மட்டுமல்ல, நெப்போலியனின் படை! வெற்றி பெற்றுக் காட்டிடும் வீரப்படை!!

விழாக்கள் நடத்திக்கொண்டு காலத்தை வீணுக்கவில்லை, ஒவ்வொரு எதிரி முகாமையும் சுற்று வளைத்துக் கொண்டு தாக்கித் தகர்த்துவிட்டு, அவர்கள் சரண் அடையும் நிலையை ஏற்படுத்தும் வரையில் நெப்போலியன் ஓயவில்லை.

நெப்போலியன் நடத்திச் சென்ற படையிலே ஒரு தனித்தன்மை இருந்தது. வாலிப முறுக்கினர், போர்த் திறன் மிக்கவர்கள், தளபதிகளாக்கப்பட்டிருந்தனர். நரைத்த தலையினர், நாற்பதாண்டு போர்க்கள அனுபவம் பெற்றவர்கள், இத்தகைய முதியவர்களே, படைத் தலைமை ஏற்கவேண்டும் என்ற பழைய முறையை நெப்போலியன் மாற்றிவிட்டான். அவனே முப்பதாண்டினன்! எதிரிப் படைகளின் தலைவர்களோ, பழங்கதை பேசிடும் பருவத்தினர்–ஆஸ்ட்ரியப் படைத் தலைவருக்கு வயது 72. மற்ருேர் படைத் தலைவர் 60 வயது—காது செவிடு! கீல்வாதம்! வாலிப முறுக்கினர்களே பெரிதும் கொண்டபிரன்ச்சுப்படை, துணிச்சலாகப் பாயும்போது, அந்த முதியவர்கள் தலையை அசைத்தபடி, இலக்கணப்படி சரியல்லவே! சமரிடும் முறை இது அல்லவே—சாகத் துடித்துக்கொண்டு வருபவர் போலல்லவா வருகிருர்கள், என்று முணுமுணுத்தனர். இவர்கள் போர் முறை இலக்கணம்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்

போது படைகளை முறியடித்தபடி வேறு பக்கம் பாய்ந்து கொண்டிருக்கும் நெப்போலியன் படை.

படையிலே இருக்கிறோம் ஆகவே போரிடுகிறோம் என்று மட்டும் எண்ணம் கொண்டிருந்தால், ஒரு படை வீரப் படையாக, வெற்றிப் படையாக முடியாது. நாட்டின் பெருமைக்காகப் போரிடுகிறோம் என்ற உணர்ச்சி எழவேண்டும், பெருமைப்படத்தக்கது நம்நாடு என்ற உணர்ச்சியும் மேலோங்கி இருக்கவேண்டும். எப்படி இருப்பினும் என் நாடு! எது செய்தாலும் என் நாடு செய்வதே எனக்கு நியாயமானது!—என்ற குருட்டுப் போக்கைவிட, என் நாடு ஏற்றம் பெற்றது, என் நாட்டின் நினைப்பும் நடவடிக்கையும் நியாயமானது என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். அப்போதுதான் போரிடும் ஆர்வம் கொழுந்துவிட்டு எரியும். நெப்போலியன் காலத்துப்படையினருக்கு, பிரன்ச்சு நாடுபற்றி பெருமித உணர்ச்சி இருந்தது. பன்னெடுங்காலமாக கொட்ட மடித்து வந்த பட்டத்தரசர்களின் ஏவலை நிறைவேற்றுவதற்காகக் கூலி பெற்றுவந்த கும்பல் என்ற இழிவைச் சுமந்துகொண்டு இருந்த படையினர், புரட்சி பூத்த பிறகு, புதுமுறை கண்டு பூரித்தனர், பெருமை கொண்டனர். அதுமட்டுமல்ல புது முறைக்கு ஆபத்து ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளும் பொறுப்பு தம்முடையது என்றுஉணர்ந்தனர், விரட்டப்பட்ட பிரன்ச்சுமன்னர்கள் —போர்போன் வம்சத்தினர்—ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலே சதிக்கூடங்களை அமைத்திருந்தனர். பல்வேறு நாட்டு மன்னர்கள், மீண்டும் பிரான்சிலே போர்போன் வம்சத்தை முடிதரிக்கச் செய்தால் மட்டுமே, முடியாட்சி முறை நிலைக்கும், தமது அரசுரிமையும் காப்பாற்றப்படும் என்று கருதி வேலை செய்து வந்தனர். எனவே, பிரன்ச்சுப் படை, வேறு ஓர் நாட்டின்மீது படை எடுப்பதாக மட்டும், போர் அமையவில்லை; வெகு பாடுபட்டுக் கண்டெடுத்த குடியாட்சி முறையின் பகைவர்களை அழித்திடும் இலட்சியப் போராகவும் அமைந்தது.

குடியாட்சி முறை குறித்து நெப்போலியனுக்கு மதிப்பு அதிகம் கிடையாது. அவனுடைய திட்டம் திறமையாளர் அரசு நடத்தவேண்டும் என்பதுதான். எனினும், குடியாட்சி முறைக்குக் கேடு செய்வோரைச் சாடுகிறோம் என்று படையினர் இலட்சியம் கொள்வதால், வீரம் கொப்பளிக்கிறது என்பது அறிந்து அந்த உணர்ச்சியை வளரச் செய்தான். பிரன்ச்சு நாட்டுப் படை பிறர் பீதிகொள்ளத்தக்க துணிவுடன் போரிட்டதற்கு இது ஒரு காரணம். மற்றொன்று, வெற்றிபெற்றுத்தரத்தக்க படைத் தலைவனால் நடத்திச் செல்லப்படுகிறோம் என்ற உற்சாகம்.

> பீரங்கிகள் இல்லாமலேயே பெரும் போரில் வெற்றி பெற்றீர்கள்! பாலங்களின்றி ஆறுகளைக் கடந்தீர்கள். காலணியின்றி கடுவழி நடந்தீர்கள்; உணவு போதுமானது இல்லை எனினும் நெடுவழி சென்றீர்கள், வீரர்காள்! எனது நன்றி, உங்கட்கு. நாடு, உம்மை வாழ்த்த, நன்றிகூறக் கடமைப் பட்டிருக்கிறது. வளமும் வாழ்வும் நாட்டுக்கு வழங்குபவர், நீங்களே!''

படைத் தலைவன் இதுபோலப் பேசிடக் கேட்கும்போது, பட்ட கஷ்டம் அத்தனையும் பறந்தோடிப் போகாதா! வடுக்கள் இருக்கும், வலி மறைந்துவிடும்! புண் இருக்கும், புகழ் அதைப்போக்கும் மாமருந்தாகிவிடும்!

இத்தகைய உற்சாகம், எழுச்சி, ஊட்டிடவல்லவன் நெப்போலியன். அவனிடம் பாராட்டுப்பெற ஒவ்வொரு படைப் பிரிவும் ஆவல் காட்டும். வீரம் காட்டத் தவறினாலோ, நெப்போலியன் வெகுண்டுரைப்பான்—அதைத் தாங்கிக்கொள்ள அஞ்சுவர்.

ஆஸ்ட்ரியப் படையின் தாக்குதலைக் கண்டு பீதி கொண்டு படைப் பிரிவுகளில் இரண்டு பின்வாங்கி ஓடின. நெப்போலியன், அந்தப் பிரிவினரை மற்றவர் முன்பு அணிவகுத்துச் செல்லச் செய்து கடுங்கோபத்துடன் கண்டித்து, அந்தப் பிரிவுகளின் கொடிகளிலே, "இவர்கள் இத்தாலிய எதிர்ப்புப் படையினர் அல்ல—இனி—'' என்ற கண்டனத்தைப் பொறித்திடச் செய்தான். சுட்டுத் தள்ளுவது, கட்டி வைத்து அடிப்பது, கொட்டடியில் போட்டு அடைப்பது போன்றவைகளை விட, இந்தக் கண்டனமுறை, வாட்டி வதைத்தது. இழிவைச் சுமக்கச் சொல்லி அல்லவா, தண்டனை! அப்பிரிவினர் மற்றோர் வாய்ப்பளியும் எமது வீரத்தை விளக்கிட! என்று கேட்டு மன்றாடினர்.

உள்ளத்தைத் தொடத்தக்க புதிய முறைகள் இது போலப் பலப்பல.

நெப்போலியன் இத்தாலியக் களத்திலே நடத்திய பல போர்களுக்கான செலவுக்காக, அவ்வப்போது பிரான்சிலிருந்து பணம் அனுப்பச் சொல்லிக் கேட்டுத் தொல்லை தரவில்லை. போர்ச் செலவுக்கான பணத்தை, பெற்ற வெற்றிகளின் மூலமே திரட்டிக் கொண்டான். பிரன்ச்சு அரசுக்கு, பெரும் செலவு இல்லாமலேயே, பல வெற்றிகள், பல நாடுகள் கிடைத்தன.

இத்தாலி நாடு, கலைக்கூடம் அல்லவா. அங்கிருந்து ஏராளமான கலை அழகுப் பொருள்களை, காலத்தை வெல்லும் கீர்த்தி மிக்க ஓவியங்களை, நெப்போலியன், பிரான்சு நாட்டுக்கு அனுப்பிவைத்தான்.

இத்தாலி நாட்டிலே, ரோம் அரசிலே, பெரும்படைத் தலைவனாக இருந்த ஜூலியஸ் சீசர் தான் வெற்றிபெற்ற நாடுகளிலிருந்து அரிய பொருள்களை ரோம் நகர மக்கள் கண்டு மகிழவும் பெருமைப்படவும் அனுப்பிவைத்தான் —முன்பு. இப்போது ஜூலியஸ் சீசர் வெற்றி நடை போட்ட வீரக் கோட்டத்திலிருந்து விதவிதமான கலைப் பொருள்களை, நெப்போலியன் பிரான்சுக்கு அனுப்பி வைத்தான். அந்தப் பொருள்கள் ஒவ்வொன்றும் நெப்போலியனுக்காகப் பரிந்து பேசி, செல்வாக்கைத் தேடித் தரும், தூதுவர் போன்றவை அல்லவா! எவரும், நெப்போலியனைப் பற்றியே பேசி வந்தனர். நெடுந் தொலைவில், ஆல்ப்ஸ் மலைக்கு அப்பால் இருக்கிறான், நெப்போலியன், ஆனால் ஒவ்வொரு பிரன்ச்சுக்காரன் உள்ளத்திலும் உலவுகிறான்—எப்படி என் வீரம்? என்ன என் எதிர்காலம்? என்று கேட்டபடி.

வெற்றி, வெறி உணர்ச்சியைக் கிளப்பிவிடும். படைவீரர் தோற்ற மக்களைக் கொடுமைப்படுத்துவர்—கொள்ளை — கொலை — கற்பழித்தல் போன்றவைகள் தலைவிரித்தாடும். இதனால் வெறுப்பும் வேதனையும் பெருகும்—எந்த நாட்டுப் படையினர் தீயசெயலைச் செய்கின்றனரோ அந்த நாட்டின்மீது அடக்கொணா வெறுப்பு உலகினருக்கு ஏற்பட்டுவிடும். உலகமே

கண்டு கிலிகொள்ளத்தக்க படை எடுப்புகள் நடத்திய செங்கிஸ்கான், தைமூர் போன்றவர்கள், தமது படையினர் எத்தகைய கொடுமை செய்திடவும் இடமளித்ததால் துடைக்கப்படமுடியாத இழிவும் பழியும் அவர்களின் பெயருடன் ஒட்டிக்கொண்டுவிட்டது. பெரும் போர் நடத்தும் முறை மட்டுமல்லாமல், பின் விளைவுகள் பற்றியும் நன்கு அறிந்திருந்த நெப்போலியன், வெற்றிக்குப் பிறகு, படையினர் சற்று கட்டுமீறி நடந்துகொண்டதைக் கண்டும் காணாததுபோல இருந்துவந்தான். பல நாட்களாகத் தொல்லைப்பட்டார்கள், சில நாள் களியாட்டம் தேடுகிறார்கள்—என்று எண்ணிக்கொண்டான். ஆனால் கட்டு குலையும் முறையில், கெட்ட பெயர் ஏற்படும் விதத்தில், நடந்துகொள்ள அவர்கள் முனைந்ததும், மிகக் கடுமையான எச்சரிக்கை பிறப்பித்தான்.

வெற்றி, வெறியாகக் கூடாது. வீரர்கள், கொள்ளைக்காரர்களாகக் கூடாது. பெற்ற பெருமையைப் பாழ்படுத்தும் கெட்டகாரியத்தில் ஈடுபடுவோர் சுட்டுத் தள்ளப்படுவார்கள்—என்று கண்டிப்பான அறிவிப்பு வெளியிட்டு, படையினரைக் கட்டுக்குக் கொண்டு வந்தான். எனினும், படையினர் கொள்ளை அடிக்க நெப்போலியன் அனுமதி அளித்தான்—இது ஒரு பெருந் தலைவனுக்கு இழுக்கு என்று, சிலர் குற்றம் சாட்டினர்.

போர் நிறுத்தம் ஏற்பட்டது—சார்டினியா சமாதானமாகப் போகச் சொல்லி வேண்டிக்கொண்டது. பிரன்ச்சு நாட்டு ஆட்சிக் குழுவினர், சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு, அதனைக் களத்திலே இருந்த நெப்போலியனுக்கு அறிவித்தனர்.

> சார்டினியாவிடம் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தம் வரப்பெற்றேன். படை, அந்த ஒப்பந்தத்துக்கு ஒப்பம் அளிக்கிறது.

என்று நெப்போலியன், அரசுக் குழுவினருக்கு அறிவித்தான்.

நெப்போலியன் எழுதிய முறைகண்டு, அரசு நடாத்தும் பொறுப்பாளர்கள் அஞ்சினர்.

படை ஒப்பம் அளிக்கிறதாமே—கேட்டீர்களா இந்தப் பேச்சை — பார்த்தீர்களா இந்தப் போக்கை — புரி

# பத்திரிகை விற்ற பணம்!

25,00,000 ஏகர்கள் கொண்ட பண்ணை அவருடையது—ஏறக்குறைய 50 மைல் நீளம் உள்ளது!

அந்தப் பண்ணையில் ஏராளமான கட்டிடங்கள்—ஒவ்வொன்றிலும் அழகழகான ஓவியங்கள், சிற்பங்கள்! ஐரோப்பாவின் பல பாகங்களிலேயிருந்து, விலைக்கு வாங்கப்பட்டவை அவையெல்லாம்!




உபயோகப்படுத்தப்படுபவை போக, மீதியிருக்கிற பொருள்களைப் பாதுகாப்பதற்கென்றே, நியூயார்க்கில் விலையுயர்ந்த கட்டிடம் ஒன்று விலைக்கு வாங்கப்பட்டு, கிடங்காகப் பயன்படுத்தப்படுகிறது. அந்தக் கிடங்கில் 20 வேலையாட்கள் இருக்கிறார்கள். அதைநிர்வகிக்கமட்டும் ஆண்டொன்றுக்கு $ 12,000 (ரூ. 1,80,000) செலவாகிறதாம்!

மிருகக் காட்சி சாலைகூட ஒன்று இருக்கிறது அந்தப் பண்ணையில்! புலி, சிங்கம், யானை, காட்டெருமை, கரடி, மான், கங்காரு போன்ற மிருகங்கள் மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான பறவைகளையும் அங்கே காணலாம்! உலகப் புகழ் பெற்ற பார்னம் சர்க்கஸில்கூட அவ்வளவு மிருகங்கள் இல்லையாம்!

இந்தப் பண்ணை இருப்பது, அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மாநிலத்தில்—அதன் உரிமையாளர் வில்லியம் ராண்டால்ப் ஹியர்ஸ்ட் (William Rondolf Hearst) என்பார்!

அவருடைய மாத வருமானம் இரண்டு இலட்சம் பவுண்டுகள்—ஏறக்குறைய ரூ. 30,00,000!

இருபத்து நான்கு செய்தித் தாள்கள்—ஒன்பது வார, மாத இதழ்கள் ஆகியவற்றின் ஆசிரியரும் உரிமையாளரும் அவர்!

*

அவருடைய முக்கியமான பொழுதுபோக்கு, தன்னுடைய மாளிகையிலேயிருந்துகொண்டு, ஜன்னல் வழியாக அலைகடலைப் பார்த்துக்கொண்டிருப்பதுதான்!

அவர்தம் பண்ணையிலேயிருந்த பெரிய மரம் ஒன்று, அவருடைய பொழுதுபோக்குக்கு இடையூறாக இருந்தது—அது இருந்ததால் ஜன்னல் வழியாக சமுத்திரத்தைப் பார்க்க முடியவில்லை!

அவருடைய தந்தையார் பொழுதுபோக்க அந்த மரத்தடியில்தான் அமருவாராம்; தந்தை அப்போது இறந்துவிட்டார் என்றாலும், மரத்தை வெட்ட விரும்பவில்லை அவர்.

எனவே, மரமே இடம் பெயர்த்து வைக்கப்பட்டது—அதற்கு மட்டும் ஆகியிருக்கும் செலவு $ 8,000 (ரூ 1,20,000)! நம்பவே முடியவில்லையல்லவா?

கிறகா இதனுடைய உட்பொருள்! நாம் அரசு நடாத்து கிரேம், நமது நாட்டுப்படைகளிலே ஒரு பிரிவை நடத்தச் சொல்லி நாம் வேலை கொடுத்தோம் — இவன் எழுதுகிறன், நமக்கு, படை ஒப்பம் அளிக்கிறது என்று. போர் தொடுக்க, போர் நிறுத்த, அரசு உரிமை பெற்றது—முழு உரிமை. அரசு பிறப்பிக்கும் ஆணைக்கு ஏற்றபடி, படை நடந்து கொள்ளவேண்டும். இது தானே, ஆட்சி, மக்களாட்சி. படை ஒப்பம் அளிக்கிற தாமே, ஆணை பிறப்பிக்கும் அரசுக்கு! இது என்ன முறை. படை ஒப்பம் அளிக்கவேண்டும் என்று எழுதிக் கேட்டோம். ஏதோ நாம் எழுதிக் கேட்கக் கடமைப்பட்டவர்கள் போலவும், அதன்படியே எழுதி அனுப்பியது போலவும், அரசு செய்துகொள்ளும் ஒப்பந்தத்தை மறுக்கும் உரிமைகூட படைக்கு இருப்பது போலவும், ஆனல் ஏதோ தயவு வைத்து ஒப்பம் அளிப்பது போலவும், அல்லவா இருக்கிறது, நெப்போலியன் பயன்படுத்தும் வார்த்தைகள்.

ஆணவப் பேச்சுக்காரன்! மக்களாட்சியை மதிக்காத மமதையாளன். இவனை வளர விடுவது ஆபத்து! பிடித்திழுத்துவந்து சுட்டுத் தள்ளவேண்டும்!—என்று ஆட்சிக் குழுவினர் சிலர் கொதிப்புடன் கூறினர்.

ஆண்டவன் அருளால் அரசனுனேன் — என்று கூறிடும் மன்னர்கள் காலத்தில், மன்னர்களை மிஞ்சக் கூடிய திறமையும், மருட்டக்கூடிய வலிவும் பெற்று படைத் தலைவன் இருந்தாலும், ஆபத்து வராது — மன்னனை எதிர்ப்பது மாபாவம் என்ற பயத்தால் கட்டுண்டு கிடக்கும் மக்கள், மன்னனைக் கவிழ்க்க, படைத் தலைவன் கிளம்பினுல் ஆதரிக்கமாட்டார்கள். மக்களாட்சிக் காலத்தில் அவ்விதமல்ல தங்களைப்போன்ற சாமான்யர்கள், தங்கள் தயவை நாடி அரசாளும் உரிமையைப் பெற்றுள்ளனர்—நாட்டுக்குக் கீர்த்தியைத் தேடித் தரத்தக்க ஆற்றல்மிக்க ஒரு படைத் தலைவன் கிடைத்தால், அவனை அழைத்துக் கொலு வீற்றிருக்கச் செய்வதில், ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைப்பதிலே, பாவமுமில்லை, தவறுமில்லை என்ற எண்ணம் மக்களிடம் ஏற்படும். எனவே மக்களாட்சியினர், நெப்போலியன் வெற்றி பல பெற்று, மக்களின் பெருமதிப்புக்கு உரியவனுகியது கண்டு, கிலி கொண்டனர். நெப்போலியன் பேசும் போக்கு அவர்களின் பீதியை அதிகமாக்கிவிட்டது. தலை தப்பவேண்டுமானுல் இவன் கொண்டுள்ள செருக்கைத் தடுத்தாகவேண்டும் என்று தீர்மானித்தனர்; அதற்கேற்ப, நெப்போலியனுடன் கூட்டாகப் பணியாற்றிட, படைத் தலைமையில் பங்கு பெற கெல்லர் மன் என்பானையும், போரின் விளைவாக எழக்கூடிய அரசியல் பிரச்சினைகளைக் கவனித்துக்கொள்ள செலிசிடி என்பானையும் நியமித்திருப்பதாகச் செய்தி அனுப்பி வைத்தனர், நெப்போலியனுக்கு. நெறித்த புருவத்தினனுனன். தான்பெற்றவெற்றிகளும், அதனுல் கிடைத்துள்ள புகழும் செல்வாக்கும புது வலிவும், நெப்போலியனுக்கு நம்பிக்கையைத் தந்தன. அதிகாரத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டான்.

என்னிடம் முழு நம்பிக்கை வைப்பதாக இருந்தால், படைத் தலைவனுகக் கொள்ளுங்கள், இல்லேயேல் தள்ளுங்கள்; ஆனுல் கூட்டுத் தலைமை மட்டும் வேண்டாம். நிலைமைக்கேற்றபடி, நானே முடிவெடுத்து திட்டமிட்டுப் போர் நடாத்தினுல் மட்டுமே வெற்றிகள் கிட்டும் — எதற்கும் இருவர் கூடிப் பேசி, கருத்துக்களிலே ஒன்றுபட்ட தன்மையை ஏற்படுத்திக் கொண்டுதான், போரினை நடத்திடவேண்டும் என்ருல், வெற்றி பல பெற்றளிக்க முடியாது, எனவே, என் போக்கைத் தடுக்கும் ஓர் தடையைப் புகுத்தவேண்டாம், நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை, என்று நெப்போலியன் கண்டிப்பாகத் தெரிவித்தான்—செய்திகொண்டு வந்தவனைத் திருப்பி அனுப்பிவிட்டான்.

கடுங்கோபம் எழுந்து என்ன பயன்? நெப்போலியனுடைய மறுப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க இயலா நிலை, அரசாளும் பொறுப்பேற்றுக் கொண்டோர்களுக்கு.

ஒரே ஆண்டில், நெப்போலியன் ஆஸ்ட்ரியாவையும் அதற்குத் துணை நின்ற நாடுகளையும் லோடி, அர்கோலி, ரிவோலி, எனும் களங்களிலே தாக்கி வெற்றிபெற்று, காம்ப்போ பார்மியோ எனும் இடத்திலே, சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டான். வியக்கத்தக்க வெற்றிகளைப் பெற்று, தன் சுட்டுவிரல் காட்டும் வழி நடக்கத் துடித்திடும் பெரும் படையுடன் போர்க்கோலப் பொலிவுடன் விளங்கும் நெப்போலியனை வாதிடுவதிலே வல்லவர்களான ஆட்சிப் பொறுப்பினர், தட்டிக் கேட்கக் கூடத் தயக்கம் காட்டினர்.

எதிரிப் படைகள் தோற்று சின்னுபின்னமானதுடன், 150,000 பேர்கள், நெப்போலியனிடம் பிடிபட்டனர். இத்தகைய வீர வெற்றிகளைப் பெற்றவனை, விரட்டிவிட முடியுமா, குழுகூடி ஆணை பிறப்பிப்பதன் மூலம்! முகத்திலே கரி பூசுவது போன்றதுதான், நெப்போலியன் செய்கை —என்ன செய்வது. ஆட்சிக் குழுவினர், வெளியே தெரியாமலிருந்தால் போதும் என்று, தங்கள் முகத்தைத் துடைத்துக்கொண்டு, மக்களுடன் கூடிக்கொண்டு, குதூகலம் காட்டிக் கொண்டனர்.

பாரீஸ் விழாக்கோலம் பூண்டது. வீர வெற்றிகளைக் கொண்டாடிக் கொண்டிருந்தது.

நெப்போலியன் ஊர் திரும்பவில்லை — ஜோசபைனுக்குக் கொண்டாட்டம், ஏனெனில், அவனுக்கு அளிக்கவேண்டிய வரவேற்புகள் — வாழ்த்துகள் — பாராட்டுகள்—யாவும், தேவிக்கல்லவா கிடைத்தன!

ஒரு சாதாரண சிப்பாயை மணம் செய்துகொள்கிருளே, சிற்றரசனுக்கு ஏற்ற இந்தச் சீமாட்டி! இவளுடைய உடைக்கு ஆகும் செலவுக்கான பணம் திரட்டக்கூடி முடியாதே, நெப்போலியனுல்!—என்று கேலி பேசியவர்களெல்லாம், இப்போது ஜோசபைன், 'கொடுத்துவைத்தவள்' என்று பேசிக்கொள்கிருர்கள் அவள் இல்லா இடத்தில்; எதிரிலே அவள் இருந்தாலோ, எல்லாம் உன்னைத் தொட்டதால் கிடைத்த வெற்றிகள் என்று புகழ் சொரிகின்றனர். பாரிஸ் நகரத்து நெடுஞ் சாலைகளிலே, அலங்கார வண்டியில் அமர்ந்து, புன்னகைபூத்த முகத்தழகி செல்கிருள்; போர் நிறுத்தப்பட்ட பிறகு ஓய்வுகொள்ளும் நிலை ஏற்பட்டதால் மனதிலே சிறிதளவு வாட்டம் கொண்ட நிலையில், மிலான் நகர் அருகே, கொலுவிருக்கிருன் நெப்போலியன், ஒரு கோட்டையில்.

அரசர்கள் அடிபணிந்திட, சீமான்கள் கட்டியம் கூறிட, சீமாட்டிகள் நடை உடை அழகு காட்டிட, கொலுவிருக்கிருன் நெப்போலியன். மணிமாடம்! ஆடம்பரப் பொருள்கள்! அவன் படுத்துறங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'மஞ்சம்', மன்னர் காலத்தது.

மலரணை போதுமா, தூக்கம் பெற. தூக்கம் வரவில்லை. எல்லாம் இருக்கிறது, அவள் இல்லையே! அவள் விரும்பும் சூழ்நிலை; பளபளப்பு, மினுமினுப்பு; செல்வம்! ஆனால் அவ்வளவும் அவள் இல்லாததால், உயிரற்ற நிலையில் உள்ளனவே!

அழைப்பு செல்கிறது ஜோசபைனுக்கு, அக மகிழ்ச்சியுடன் மிலான் வருகிறாள், நெப்போலியன் பெற்றுள்ள பெருமைமிகு செல்வச் சூழ்நிலையைக் காண்கிறாள், அழகு மலர் பூத்திடும் பூங்காவும், அதற்கருகே இசை எழுப்பிடும் அருவியும் கண்டால், புள்ளிமான் எவ்வளவு மகிழ்ச்சியாய்த் துள்ளி விளையாடும்! ஜோசபைன் அதுபோலானாள்.

போர் வீரன்தானே, களத்திலே ஏற்பட்ட வடுக்களைத்தான் காட்டுவான்—என்று முன்பு எண்ணிடுவாள்—இப்போது, அவன் காட்டுபவை? — அதோ அந்த இருக்கை, சார்டினியா மன்னன் தந்த காணிக்கை, தங்கத்தாலான கோப்பை ஆஸ்ட்ரிய நாட்டவர் அனுப்பிவைத்தது, என்று ஆடம்பரப் பொருட் குவியலையல்லவா காட்டுகிறான். வெற்றி, புகழ், செல்வம் இவைகளை அவன் அவளுக்கு அளிக்கிறான்—ஆனால் அவள் அளித்ததற்கு இவை ஈடாகா என்று எண்ணுகிறான். அவன் அதுபோல் நினைத்திடத்தக்கதாக, அந்த ஆரணங்கு அவனுக்கு அளித்தது என்ன? புதிதாக! அளித்தாள், அவன் அகமகிழத்தக்க ஒரு சுவைமிகு செய்தி! தாயாகப்போகிறேன் என்றாள் தழதழத்த குரலில்! தந்தையாகிறேனா, தத்தைமொழியாளே! உன் தயவால்!—என்று கேட்கிறான் விழியால்.

மான்ட்டிபெல்லோ கோட்டையில், 'தர்பார்' நடத்தப்படுகிறது, ஜோசைபைன் அங்கு வந்த பிறகு, பொன்னொளி வீசுகிறது அங்கு. அங்கு காணப்பட்ட நிலையைக் கவனித்த ஒருவர் சொன்னார்.

> இன்னும் நாலு ஆண்டுகளில் இவன் களத்திலே இறந்துபடாமலிருந்தால், நாடு கடத்தப்படுவான் அல்லது அரியாசனம் அமருவான்.

பாரிஸ் செல்கிறான் நெப்போலியன் — வெற்றி உலா நடைபெறுகிறது. மக்கள் அவனைக் கண்டு களிநடமிடுகிறார்கள். ஆட்சிக் குழுவினர் ஆரத்தழுவிக்கொள்கிறார்கள். மரியாதைக் குண்டுகள் முழங்குகின்றன.

வீரவெற்றிகள் பல பெற்ற இந்த மாவீரன், ஒரு துளியாவது படாடோபம் காட்டுகிறானா பாருங்கள் என்று பாமர மக்கள் பேசிப் பாராட்டும்விதமாக நெப்போலியன் நடந்துகொள்கிறான். பட்டாளத் தலைவன் உடைகூட அணிவதில்லை. மிகச் சாதாரணமான வீடு! அலங்காரமற்றவண்டி! நாடகக்கொட்டகையில் இவனைக்கண்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் காட்டும்போது, கூச்சப்படுவது, கோலாகல விருந்துகள் கொண்டாட்டங்கள் கிடையாது. வீட்டல், பல்வேறு துறைகளிலே உள்ள விற்பன்னர்களை வரவேற்று உரையாடி அறிவுக்கு விருந்து பெறுவதிலே நாட்டம் காட்டினான்.

நாட்டுக்குக் கீர்த்தி பெற்றளிக்கும் கடமையை மேற்கொண்டேன்—செய்து முடித்துவிட்டேன் என்று கூறுவது போலிருந்தது அவன் போக்கு.

அறிவு வளர்ச்சிக்காக பாரிசில் ஒருகழகம் அமைக்கப்பட்டிருந்தது, அதிலே உறுப்பினனாகி அறிவாளர்களுடன் அளவளாவினான். படைத் தலைவன் என்றால் கொல்லும் தொழிலை மேற்கொள்பவன்தானே, அவனுக்கு அறிவுத்துறையிலே அக்கரை ஏற்படமுடியாதே, ஆனால் இந்த அதிசய மனிதனைப் பாருங்கள், கற்றறிவாளருடன் உரையாடுவதைக் கேளுங்கள், எத்தகைய மனப்பாங்கு, எத்தகைய நுண்ணறிவு, எதிலும் வல்லவனாக அல்லவா இருக்கிறான்! என்று பலரும் பாராட்டினர்.

பாரிஸ் நகரப் பத்திரிகைகள் நெப்போலியனுடைய அன்றாட நடவடிக்கைகளை விவரமாக எழுதின—பாராட்டுகளுடன். என்ன உண்கிறான், என்ன உடுத்துகிறான், எங்கு உலவச் செல்கிறான், யாராருடன் உரையாடுகிறான், எவரிடம் சிரித்து மகிழ்கிறான் என்பதுபற்றி எல்லாம் விளக்கமாக இதழ்கள் வெளியிட்டன. பிரான்சு, ஒவ்வொரு நாளும், நெப்போலியனைப் பற்றிய பாராட்டத்தக்க செய்தி ஏதாவதொன்று படித்தபடி இருந்தது. ஒவ்வொரு இல்லத்திலும், அவனைப் பற்றிய பேச்சு! வாலிபர்கள் அவன் காட்டிய வீரத்தைப் பாராட்டினர், முதியவர்கள் அவனுடைய அறிவுத் தெளிவைப் புகழ்ந்தனர், மங்கையர் அவனுடைய காதல் மேம்பாடு பற்றி கசிந்துருகிப் பேசினர். நெப்போலியன், பிரன்ச்சு நாட்டுப் பொதுச் சொத்து ஆகிவிட்டான். இதனை நெப்போலியன் நன்கு உணர்ந்திருந்தான் — எதிர்காலத்துக்கான திட்டம் அரும்பாக இருந்தது — மலரும் நாளை எதிர்பார்த்தபடி இருந்து வந்தான். கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு, வீட்டுத் தோட்டத்திலே உலவியபடி, ஏதேதோ எண்ணியபடி இருந்தான்.

"உன்னைக் காணத் திரள் திரளாக மக்கள் எவ்வளவு ஆர்வத்துடன் ஓடி வருகிறார்கள், பார்த்தனையா?" என்று கேட்பார்கள், சிலர். "இதைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கிறதல்லவா என்றுதானே கேட்கிறீர்கள். இதிலே என்ன பொருள் இருக்கிறது, மக்கள் காட்டும் ஆர்வத்தில்! என்னைத் தூக்கில் போட ஏற்பாடு செய்யட்டும் — அதை வேடிக்கை பார்க்க இதைவிடப் பெரிய கூட்டம் கூடிவிடும்." என்று கூறுவான். மக்கள் காட்டும் ஆர்வத்தை மட்டும் நம்பி திட்டமிடக் கூடாது என்பது அவன் எண்ணம். ஆனால் மக்களின் ஆர்வத்தைப் பெறவேண்டும், ஆர்வம் அவர்களுக்கு ஏற்படுவதற்காக வேலை செய்யவேண்டும், தூண்டவேண்டும் என்பதிலே கவனம் செலுத்தத் தவறவில்லை. பிரசாரம், மிக வலிவுள்ள ஆயுதம் என்பதை உணர்ந்திருந்தான்.

நெப்போலியன், இங்கிலாந்தின்மீது படை எடுத்து அந்த நாட்டை அழிக்கவேண்டும் என்று திட்டம் வகுத்தபோது, படைகளை வரிசைப்படுத்துவதற்கு முன்பே, பிரச்சார யந்திரத்தைத்தான் ஏவினான். இங்கிலாந்திடம் அலட்சியம், வெறுப்பு, பகை உணர்ச்சி ஏற்படத் தக்கபடி பிரன்ச்சு நாட்டுப் பத்திரிகைகளிலே கட்டுரைகள், கதைகள், கவிதைகள், கேலிச் சித்திரங்கள் இப்படி இப்படி வரவேண்டும் என்று, உள்துறை அமைச்சர் மூலம், யோசனைகள் என்ற பெயரால் புதிய கட்டளைகள் பிறப்பித்தான், நாடாளும் நாயகனான பிறகு. பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு இடையில், பத்திரிகை மூலம் என்னென்ன கருத்துகள் மக்களிடம் பரப்பப்படுகின்றன என்பதை கவனிக்காமலில்லை. இங்கிலாந்து நாட்டிடம் பிரன்ச்சு மக்களுக்கு

வெறுப்பு எழவேண்டும், அப்போதுதான் போரார்வம் எழும். ஆனால் அந்த வெறுப்பும் பகை உணர்ச்சியும் எங்கனம் மூட்டப்படவேண்டும்? இது தெரியாதா, பத்திரிகை நடத்துபவர்களுக்கு என்று நெப்போலியன் இருந்துவிடவில்லை அயர்லாந்து நாட்டினை அடிமை கொண்டு அவதி மூட்டுவதுபற்றி, தீப்பொறி பறக்க எழுதுங்கள். அயர்லாந்து நாட்டு கத்தோலிக்கர்களை, இங்கிலாந்து நாட்டு மதப் பிரிவினர் கொடுமை செய்வதை எடுத்துக் காட்டுங்கள்—பிராடெஸ்ட்டெண்டுகள் கத்தோலிக்கர்களைக் கொடுமை செய்கிறார்கள் என்று பொதுப்படையாக எழுதாதீர்கள்—ஏனெனில் பிரான்சிலே உள்ள பிராடெஸ்ட்டெண்டுகளுக்கு மனச்சங்கடம் ஏற்படும்—இங்கிலாந்து நாட்டிலே உள்ள மதப் பிரிவினர் என்று எழுதி, அவர்களைத் தாக்குங்கள்!—என்று நெப்போலியன் இதழ் நடத்துபவர்களுக்கு எடுத்துக் கூறினான் என்றால், எவ்வளவு நுணுக்கமான முறையில், பிரச்சினைகளை அலசிப் பார்த்திருக்கிறான் என்பது விளங்குகிறதல்லவா?

இத்தனை அறிவாற்றலையும் பயன்படுத்த வாய்ப்பு எழவில்லை — எழத்தான் போகிறது என்பதிலே ஐயமில்லை—எப்போது, எந்த முறையில் என்பதுபற்றி எண்ணியபடி இருந்துவந்தான்.

கார்சிகா தீவு விழா நடத்திற்று, வரவேற்பு வைபவம்! துரோகிகள் என்று முன்பு கண்டனக் குரலெழுப்பி, குத்திக் குடலெடுப்போம் என்று கொக்கரித்தார்கள் அல்லவா, நெப்போலியனுடைய வீட்டைச் சூழ்ந்துகொண்டு, அதே மக்கள், அவன் புகழ்பாடுகிறார்கள். பிரான்சு நாடு கொண்டாடும் மாவீரன், இங்கல்லவா பிறந்தான்! என்று சொந்தம் கொண்டாடுகிறது. நெப்போலியனை வரவேற்றா? இல்லை! அவன் வரவில்லை. தாயார் லெடிசா அம்மையார் வந்திருந்தனர்; அந்த வருகை, விழாவாயிற்று.

எங்கும் நெப்போலியனைப்பற்றியே பேச்சு இருந்து வந்தது—என்ன செய்யப்போகிறான் இப்போது? அரசு என்னபணியினைச் செய்யும்படிக்கூறப்போகிறது? எந்த நாட்டின்மீது படை எடுக்கப்போகிறான்? என்ன திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான், என்றெல்லாம்.

ஏன், நெப்போலியனே நாட்டை ஆளக்கூடாதா?

ஆற்றல்மிக்கோன் அரசாளாமல் வேறு எவர் ஆட்சி நடத்துவது.

ஆமாம்! அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நெப்போலியன் கண் காட்டினால் போதும், காலடி வந்து விழும் மணிமகுடம்!

அவனுக்காக உயிரையே கொடுத்திட உறுதி கொண்டுள்ள படைவீரர்கள் இலட்சக்கணக்கினர் உளர்.

அவர்களுடன் நெப்போலியன் தொடர்பு கொண்டிருக்கிறான்—திட்டம் தயாரிக்கப்படுகிறது — ஆட்சியைக் கைப்பற்ற.

ஆட்சிமன்றத்தை அவன் படையினர் சுற்றி வளைத்துக்கொள்வர்—ஆட்சிப் பொறுப்பில் உள்ளோருக்கு ஆணை பிறப்பிக்கப்படும், துப்பாக்கி முனையில், "வீரன் வருகிறான், விலகி நில்லுங்கள்!" என்று.

# குண்டு பாய்ந்தும் கூட்டத்தில் பேசினார்!

தேர்தல் பிரசாரம் மும்முரமாக நடைபெற்றது, சூடு பிடித்தது! கூட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்த தியோடார் ரூஸ்வெல்ட் (Theodore Roosewelt) சுடப்பட்டார்---துப்பாக்கிக் குண்டு அவருடைய மார்பில் பாய்ந்தது!

எனினும் அவர், யாரிடமும் சொல்லவில்லையாம், அதைப்பற்றி! ஏதும் நடக்காததைப்போல், மேடையேறி முழங்கினார் --- ஆனாலும் முழக்கம் பாதியிலே நின்றுவிட்டது---காரணம் அவர் மயக்கமடைந்து விழுந்துவிட்டார்!

நிகழ்ச்சி நடைபெற்றது 1912ல்--அவர் ஜனாதிபதி தேர்தலிலே போட்டியிட்டபோது!

இவ்வளவு துணிவும்,நெஞ்சழுத்தமும் கொண்ட அவர், இளவயதில், மிகவும் பயங்கொள்ளியாம்---



இரவில் வெளியே வரவேமாட்டாராம்--சிறு சப்தம் ஏற்பட்டால்கூடப் பயம் வந்துவிடுமாம்!

அச்சத்தை விரட்ட அவர் படாதபாடு பட்டிருக்கிறார்---முடிவில் வெற்றி கிட்டியது!

நல்ல உடற்கட்டு கொண்ட அவருக்கு, மல்யுத்தத்திலே பெரிதும் விருப்பமுண்டாம். அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த நேரத்தில், படைத்தளபதி ஒருவருடன் மற்போர் செய்து, அதன் விளைவாக அவருடைய கண் பழுதுபட்டுவிட்டது! என்றாலும், கண் பழுதுபட்டதை, அந்தத் தளபதியிடம் இவர் கூறவேயில்லையாம்!

கண்ணாடி அணியவில்லையெனில், பத்தடி தூரத்தில் யாராவது இருந்தாலும் அடையாளம் கண்டு கொள்ள முடியாதாம், அவரால்!

✻

வேலைப் பளு எவ்வளவு இருந்தாலும் நூல்களைப் படிப்பதற்கு அவர் சளைத்ததில்லை. கிடைக்கின்ற ஓய்வுநேரத்தில் பெரும் பகுதியை ஏதாவது நூல்களைப் படிப்பதிலேயே செலவிட்டாராம் அவர்! ஐந்து நிமிட ஓய்வு கிடைத்தாலும் அதற்குள் ஏதாவது படிப்பாராம். படிப்பதிலே அவ்வளவு ஆர்வம் அவருக்கு!

## சிறைச்சாலை--ஒரு திருப்புமுனை!

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் அவரைச் சிறையில் அடைத்தார்கள், சந்தேகப்படுகின்ற வகையில் திரிந்தார் என்பதற்காக! 30 நாள் தண்டனை கொடுக்கப்பட்டது அவருக்கு!

சிறையில், சிந்தனை செய்ய ஆரம்பித்தார் அவர்---பழைய நினைவுகள் ஒவ்வொன்றாக வந்தன. அவர் செய்யாத தொழில் இல்லை. ஹோட்டலில் மேசை துடைப்பது முதல், கொள்ளையடிப்பவரோடு கூட்டுச்சேருவதுவரை, எத்தனையோ காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்!

சிந்தனையின் விளைவாக ஒரு திருப்பம் ஏற்பட்டது-உடலுழைப்பு தேவைப்படுகிற தொழிலை இனிச் செய்வதில்லை என்ற முடிவுக்கு வந்தார்!

அவருக்குத் தோன்றியது ஒரே ஒரு வழிதான் ---அந்த வழியிலே இறங்கத் தீர்மானித்தார்--- ஒரு நாவல் உருவாயிற்று---வெளியிலே வந்ததும் அதை வெளியிட்டார் --- எதிர்பார்த்ததைவிட



அதிகமான வரவேற்புக் கிடைத்தது,'தி கால் ஆப் தி ஒய்ல்டு' (The call of the wild). என்ற அந்த நாவலுக்கு!

ஆறே ஆண்டுகள்--அமெரிக்க நாட்டு இலக்கிய உலகத்தின் உச்சிக்குச் சென்றுவிட்டார்!

பெரும் பெரும் பட முதலாளிகள், பதிப்பாசிரியர்கள், அவரைத் துளைத்தவண்ணமிருந்தனர், கதை வேண்டுமென்று! அவரைக் கண்டு பிடிப்பதே அரிதாகிவிட்டது!

அவருடைய முதல் நாவல் வெளியிடப்பட்டது 1898ல்---அதன்பிறகு 18 ஆண்டுகள்தான் உயிரோடு இருந்தார்---எனினும் ஆண்டொன்றுக்கு 3 நாவல்கள் வீதம் எழுதிக் குவித்தார்---எண்ணிறந்த சிறு கதைகளும் எழுதப்பட்டன!

அவர் இறந்த நேரத்தில் அவருடைய வருட வருமானம், அமெரிக்க நாட்டு ஜனாதிபதியின் வருமானத்தைப்போல், இரண்டு மடங்கு இருந்ததாம்!!

* * *

புகழ்பெற்ற, இந்த எழுத்தாளரது பெயர் ஜாக் லண்டன் (Jack London) என்பது! சிறை வாழ்க்கை, அவரைப் பொறுத்தவரை ஒரு திருப்புமுனை! இல்லையா?

இவ்விதமான பேச்சு உல்லாச விடுதிகளில், தங்கு மிடங்களில், உணவு விடுதிகளில், கேளிக்கைக் கூடங்களில்.

துரைத்தனத்தாரின் ஒற்றர்கள் இதுபோன்ற செய்திகளைத் திரட்டிக்கொடுத்தனர் ஆட்சிக்குழுவின ரிடம். அவர்கள் அந்தத்தகவல்களை நெப்போலிய னிடமே கொடுத்தனர்—அவ்வளவு நம்பிக்கை அவனிடம், அவன் அக்ரமம் ஏதும் செய்யமாட்டான், மக்களாட்சி முறையைக் கெடுக்கமாட்டான், ஆதிக்கம் பெற அலையமாட்டான் என்பதிலே! நெப்போலியனும், இந்தத் தகவல்கள் தரப்பட்டபோது பதறவுமில்லை, மறுக்கவுமில்லை புருவத்தைநெறிக்கவில்லை பொறிபறக்கப்பேசவில்லை, புன்னகைமட்டும் செய்தான்.

ஆல்ப்ஸ் மலையைக் கடந்துசென்று ஆஸ்ட்ரியப் படைகளை முறியடித்து இத்தாலியை அடிபணியவைத்தவன் எத்தனை காலத்துக்கு பாரிஸ் பட்டினத்திலே, காட்சிப் பொருளாக இருந்துகொண்டிருக்க முடியும், வேறு புதிய வீரச்செயலில் ஈடுபடாமல். கஞ்சன் கரத்தில் சிக்கிய தங்கக் கட்டிபோல, இத்தனை ஆற்றல் மிக்கவன் கிடைத்தான் பயன்படுத்திக்கொள்ளத் தெரியாத ஆட்சிக்குழுவினரிடம். வானத்திலே வட்டமிட வேண்டிய வானம்பாடி இவன், பட்டுநூலால் கட்டப்பட்டு சிறுர்கள் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்திடும் பொன்வண்டு அல்ல! சந்தனம் கிடைத்தும், அதை அறைத்தெடுக்கத் தெரியாமல், குளிர்போக்கிக்கொள்ள மூட்டப்படும் நெருப்புக்கு விறகாக்கப்பார்க்கிருர்கள், விவரமறியாதவர்கள் — என்று பலவிதமாக எண்ணத் தலைப்பட்டனர். வீரத்தலைவனுக்கு ஏற்றவேலை தரப்படவில்லை என்ற பழிக்கு அஞ்சி, ஆட்சிக்குழுவினர், நெப்போலியனை, இங்கிலாந்து நாட்டைத் தாக்கத் தளபதி ஆக்கினர்.

நெடுங்காலமாக இருந்துவரும் ஆவல் இது—கடலிலே கட்டப்பட்ட கோட்டை என விளங்கிவரும் இங்கிலாந்தைப் பிடித்தாளவேண்டும் என்பது. அளவிலே சிறியது என்ருலும், புகழ்மிக்க வரலாறு பெற்றிருந்த இங்கிலாந்து, வாணிபத்தில் சிறந்து, பொருள்மிக ஈட்டி, வீழ்ச்சியறியாத கப்பற்படையுடன், வீரக்கோட்டமாக விளங்கிவருவதுடன், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலேயும் செல்வாக்கு பெற்றுத்திகழ்கிறது. இது ஒழிக்கப்பட்டாகவேண்டும், இங்கிலாந்து வீழ்த்தப்பட்டால், அதன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கும், கீழைப்பக்க நாடுகள்பலவும், பொன்விளையும் பூமி நமது கரம் சிக்கும். சிக்கினல்......!

இந்த இன்பக் கனவு காணுத பிரன்ச்சுக்காரன் இல்லை. எனவே நெப்போலியன், இங்கிலாந்தைத் தாக்கும் படைக்குத் தலைவனுக்கப்பட்டது வரவேற்கப்பட்டது. நெப்போலியனும், தன்னிடம் ஒப்படைக்கப்படும் வேலையை வெற்றியுடன் முடித்திட யாது செய்திட வேண்டும் என்பதற்கான எண்ணங்களை ஆராய்ந்தான். ஒரு பேருண்மையைக் கண்டறிந்தான் — கப்பற் படை வலிவுடன் அமைந்திருந்தாலொழிய, இங்கிலாந்து நாட்டை வீழ்த்த முடியாது என்ற பேருண்மையை. மறுக்கமுடியாத மற்ருேர் உண்மை அனைவருக்கும் தெரியும், பிரான்சிடம், தரமான கப்பற்படை இல்லை!

எனவே நிலைமை முற்றிலும் திருத்தி அமைக்கப்பட்டாலொழிய, இங்கிலாந்தைத் தாக்கும் திட்டத்தை மேற்கொள்வதற்கில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

பெரும் பறவை கணைகளால் வீழாது—முதலில் பறவையின் பெரும் சிறகுகளை வெட்டிச் சாய்த்திட வேண்டும். சிறகு வெட்டுண்ட நிலையில், பறவை, விண் நோக்கிப் பறந்து, கணைக்குத் தப்பவும் முடியாது, மின்னல் வேகத்தில் பாய்ந்துவந்து தாக்கவும் முடியாது. இங்கிலாந்து நாட்டை வீழ்த்த, இங்கிலாந்தை உடனடியாகத் தாக்கிப் பயனில்லை, கீழை நாடுகளைக் கைப்பற்றி எங்கிருந்து இங்கிலாந்து வலிவுகளைப் பெறுகிறதோ அந்த இடங்களைத் தகர்த்துவிடவேண்டும், முதலில்! அப்போது சிறகிழந்த பெரும் பறவையாகிவிடும் இங்கிலாந்து. இந்த நோக்கத்துடன், நெப்போலியன், புதிய திட்டம் எடுத்துரைத்தான்—எகிப்து நாட்டின் மீது பாய்வது என்ற போர்த் திட்டத்தை!

எகிப்து! பரோவா மன்னர்கள்—கடவுளின் பிம்பங்கள்—ஆண்ட எழில்மிகு நாடு—நைல் நதியால் வளர்க்கப்பட்டு, நானிலத்தின் நளினமிகு நாரீமணி என்று புகழப்பட்டு விளங்கும் நாடு! காவியமும் கலையும் கட்டடச் சிறப்பும் மிகுதியும் கொண்டது. உலகிலே வேறு எங்கும் காணமுடியாத, பிரமிட் கோபுரங்கள் கொண்ட நாடு. பாலைவனமும் நீர் ஊற்றும் ஆங்கு உண்டு—எகிப்து காட்டும் கோபம், பாலைவன வெப்பம்—எகிப்து காட்டும் நேசம், குளிர்ந்த இனிய நீர் ஊற்று!! எத்தனையோ, வீரச் செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன, அந்த நாட்டில். கடவுள்களை கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வரச் செய்ய வல்லவர்கள் என்று விருதுபெற்ற மாந்தீரீகர்கள், மன்னனை மகேசனுக்க முடியும் என்று கூறி வந்த இடம்! சல்லாபிகள் புடைசூழ உல்லாசப் படகேறி ஓய்வுச் சுவை பெற்று வந்த செல்வர்கள், அங்கு ஆதிக்கம் பெற்றிருந்தனர். அடிமைகள், கூட்டம் கூட்டமாக—உழைக்க உயிர்விட, பிரமிட் எழுப்ப, உழுது பயிரிட்டு கோதுமை அறுத்தெடுத்துக் களஞ்சியத்தில் கொண்டுவந்து சேர்த்திட. விண்ணகத்தில் ஏதுமில்லை, யாவற்றையும் இந்த மண்ணகத்தே கொண்டுவந்து சேர்த்துவிட்டோம், என்று கூறி இறுமாந்து கிடந்தனர் எகிப்தில். பொன்னும் பொருளும் மிகுதியாக. மணியும் நவநிதியும் ஏராளம். காதலும் கவிதையும் கைகோர்த்து விளையாடிய பூங்கா! அதேபோது, வீரமறியா நாடு அல்ல, வெற்றி காணு நாடும் அல்ல. எகிப்திலே, பல சிற்றரசர்கள் அரசிகள், பேரரசுக்குக் கட்டுப்பட்டு இருந்து வந்தனர். விந்தைப் பூமி, எகிப்து! அழகும் ஆற்றலும் ஒன்றை ஒன்று தழுவிக்கொள்ளும், அதுவே விரும்பத்தக்க முறை என்று உலகுக்கு உரைத்திடுவது போல, இங்குதானே வெற்றி வீரன் ஜுலியஸ் சீசரும், கண்ணாலே கொல்லும் கட்டழகி கிளியோ பாட்ராவும் காதற்களியாட்டம் நடத்தி, காலத்தை வெல்லும் காவியமும் ஓவியமும் உலகு பெற்றிடச் செய்தனர். ஆற்றலிலே, வெற்றி பல பெறுவதிலே அவனுக்கு நிகர் இல்லை, என்ற விருது, சீசருக்கு! அவள் விரும்பி, அதரத்தைச் சிறிதளவு பிரித்து, பவளமும் முத்தும் இந்தப் பொற்கொடியில் பார்! என்று காட்டி, கணவலை வீசினால், சிக்காதவன் இல்லை—மேகமண்டலங்களால் தம்மை மறைத்துக் கொண்டதால் விண்ணகத்து வீராதி வீரர்கள் தப்பி



நெப்போலியன்—எகிப்து படை எடுப்பின்போது.

ஞர்கள் போலும், இந்த மண்ணகத்திலே அவளுடைய பார்வை பெற்று வீழாதார் இருக்க முடியாது என்று கற்பனை மிகுதியுடன், ஆனால் கருப்பொருளாக உண்மையை அமைத்துக்கொண்டு கவிகள் களிப்புடன் பாடியது, கிளியோபாட்ரா பற்றி!! அழகும் ஆற்றலும்—அவளும் அவனும்—கொடியும் தருவும்—குழைவும் குலைவும்—தாக்குதலும் தளர்வும்!

அந்த எகிப்திலே, சீசருக்கும் முன்னாலே, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, மற்றோர் மாவீரன், கிரேக்கத்தில் பிறந்து அந்த நாட்களிலே குறிப்பிடத்தக்க நாடுகளிலே எல்லாம் நுழைந்து வெற்றிக்கொடி நாட்டிய மாவீரன் அலெக்சாண்டர் உலவி இருக்கிறான். அவன் அமைத்துச் சென்ற அரசில், கிரேக்க வீரமும் எகிப்திய எழிலும் இணைந்ததால் விளைந்த பொலிவுமிகு மலரானே, கிளியோபாட்ரா!

நாலாயிரம் ஆண்டுகளாக நானிலம் வியந்து பேசிக்கொண்டு வருகிறது, எகிப்துபற்றி.

அங்கு செல்கிறான் நெப்போலியன் — கப்பல்களிலே படை வீரர்களை ஏற்றிக்கொண்டு.

சென்றேன் — கண்டேன் — வென்றேன் என்று கூறினவனல்லவா, ஜுலியஸ் சீசர் — ஆனால் பாவம்,

அந்த வரலாற்றை, வந்தான் — வீழ்ந்தான் — என்று முடித்துவிட்டாள், வடிவழகி கிளியோபாட்ரா!

நல்லவேளையாக, நெப்போலியன் செல்லும் நாட்களில், மான்விழி மாதர் மையலூட்டி வீரர்களை வீழ்த்தும் நிலை இல்லை—ஆனால் பாய்ந்து தாக்கிப் பயங்கரப் போரிடும் மறவர் கூட்டம் மிகுந்திருந்தது. சீசருக்கு ஏற்பட்ட விசித்திர அனுபவம் நெப்போலியனுக்கு ஏற்பட்டிருந்தால்...! அவனை மயக்க ஒரு கிளியோபாட்ரா அங்கு இருந்தி நந்தால்......!

அங்கு இல்லை, ஆனால்அவன் சென்ற கப்பலிலேயே கிளியோபாட்ரா ஆகவேண்டும் என்ற நினைப்புடன் ஒரு மங்கை இருந்தாள் — ஆண் உடையில். அவள், கிளியோபாட்ரா அல்ல ஆகையினாலே, கன்னம் கிள்ளி விளையாட, அன்னம் சொர்னம் என்று உரையாட மட்டுமே அவளை நெப்போலியன் பயன்படுத்திக் கொண்டான். எப்படியும் நெப்போலியனுடைய நேசத்தைப் பெறவேண்டும் என்ற நினைப்பு, இந்தப் பெண்ணை ஒருவருக்கும் தெரியாமல், ஒயிலை ஆணுடையால் மறைத்துக்கொண்டு, கப்பலேறச் செய்தது. இரகசியம் வெளிப்பட்டது; நெப்போலியன், கடற்பயணத்தின் போது குளிர்காற்றைப் பெற்று இன்புறுதல்போல, இவள் நேசம் பெற்று மகிழ்ந்தான்.

வீரப் போரிடக் கிளம்பியபோதா, விளையாட்டு! அவ்வளவு சபலமா, என்று கேட்கத் தோன்றும். அந்தக் காலத்திலே அவ்விதமான 'விளையாட்டு'களில், மேல் மட்டத்தவர் ஈடுபடுவது, சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையாகிக் கிடந்தது. அனைவருமே அப்படித்தான் என்ற நிலையும் அல்ல; அந்த நிலை, மேன்மைக்குச் சான்று என்ற கருத்தும் நிலைத்துவிட வில்லை; ஆனால் கண்டு கண் சிமிட்டுவர், இவனுக்கு இப்படி ஒரு பழக்கம்! என்று கோபம் குறைவாகவும் வேடிக்கை மிகுதியாகவும் கலந்த குரலொலியில்.

முறையா, சரியா என்பதுகூட இருக்கட்டும், பழம் பெரும் நாட்டின்மீது படை எடுக்கச் செல்லும்போது, உல்லாசியை உடனழைத்துச் செல்வதா? என்று கேட்கத் தோன்றும். நெப்போலியன், தன் உடன் அழைத்துச் சென்றவர்கள், கேளிக்கை மூட்டிடும் கோல மயில்களை அல்ல; பொறியியலார், வான நூலறிவினர், மருத்துவர் புலவர், மண்வள ஆராய்ச்சியாளர் புதை பொருள் நுணுக்கம் உணர்வோர், அச்சுப்பொறி இயக்குவோர் ஆடை அணிமுறை அறிவோர், வரலாற்றுத் துறை ஆய்வாளர்கள், கலைஞர்கள் கவிஞர்கள், இவர்கள் உடன் வருகின்றனர். படிப்பகம்கூட உண்டு. ஒரு பல்கலைக் கழகமே இந்த படைத் தலைவனுடன் பயணமாகிறது. உல்லாசி ஒருவள் வந்திருந்தாளே அவளுடனே ஆடிப்பாடியபடிதான் இருந்தான்போலும் வழிநெடுக என்று எண்ணத் தோன்றும். அவ்விதம் இல்லை. எப்போதுமே, மெல்லியலாரிடம் நெப்போலியன் தன்னைப் பறிகொடுத்துவிடுவதில்லை. தேன், துளிகள்தானே தேவை—குடம் குடமாகவா!!

கப்பலில் மேல்தட்டிலே படுத்துக்கொள்கிறான் நெப்போலியன் இரவுக் காலங்களில் — விண்மீன்கள் மேலே மின்னுகின்றன—அவனைச் சூழ விற்பன்னர்கள் அமர்ந்துகொண்டு உரையாடுகின்றனர், உலக அமைப்புபற்றிய விஷயத்திலிருந்து ஊராளும் முறை வரையில்!

மேலே காணப்படும் கோள்களின் தன்மை எப்படிப்பட்டது, ஆங்கு உயிரினங்கள் இருக்கமுடியுமா? ஆங்கெல்லாம் சென்றுவரும் அறிவாற்றலை மக்கள் பெறமுடியுமா என்பதுபற்றிக்கூடப் பேசுகின்றனர்.

போரிடச் செல்கிறோம், வெற்றியோ தோல்வியோ, யார்கண்டார்கள் என்று எண்ணம் எழவில்லை, ஆற்றலில் அளவற்ற நம்பிக்கை நெப்போலியனுக்கு. வெற்றி பெறப்போகிறோம், நிச்சயமாக, ஆனால் வெற்றிக்குப் பிறகு......! அதுபற்றித் திட்டமிடுகிறான். எகிப்து பழம் பெரும் நாடு—நாலுஆயிரம் ஆண்டுகளாக அங்கு பல துறைகளிலே வெற்றிகண்டுள்ளனர், ஆகவே அங்கு கண்டறிந்து திரட்டி எடுத்துச் செல்லவேண்டிய கருத்துக் கருவூலங்கள் நிரம்ப இருக்கும், நாட்டை அடிமை கொண்டு, இவற்றை இழந்து என்னபயன்? என்று எண்ணித்தான், வெற்றிக்குப் பிறகு, எகிப்துநாட்டிலே பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சி நடத்திப் பயன்பெற ஒரு பல்கலைக் கழகத்தையே உடன் அழைத்துச் செல்கிறான்.

எகிப்து போகும் வழியிலேயே, மால்ட்டா தீவு சிக்குகிறது அவன் கரத்தில், தொல்லை அதிகம் இல்லாமலேயே!

அங்கு சில நாள் தங்கி, அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துகிறான்.

நெப்போலியன் அழைத்துச்செல்லும் கப்பற் படையை வழியிலேயே மடக்கி அழித்திட, பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி நெல்சன், காத்துக்கொண்டிருக்கிறான்—நெப்போலியன் சிக்கவில்லை—காற்றைத்துரத்திப்பிடித்துக் கைக்குள் அடக்க முடிகிறதா! எகிப்து செல்கிறது எதிர்ப்போரை முறியடிக்கும் ஆற்றல்படை. வீரமிக்க எதிர்ப்பு—பயங்கரச்சண்டை—இரத்தம் பொங்கி வழிகிறது — நெப்போலியன் வெற்றிபெறுகிறான்—எகிப்து பிரான்சுக்குப் பணிகிறது.

அடிமைகொள்ளவரவில்லை, அக்ரமக்காரர்களிடமிருந்து மக்களை விடுவிக்க வந்திருக்கிறேன். நாடுபிடிக்கும் எண்ணத்துடன் வரவில்லை, நாட்டைத் தமது களி நடனக் காடாக்கிக்கொண்டுள்ள மாமூலாக்குகளின்—செருக்கு மிக்க சீமான்களின்—கொட்டத்தை அடக்கி—மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வந்திருக்கிறேன்—என்று அராபிய மொழியில் அச்சடித்த அறிக்கைகளை எகிப்திலே பரப்பி, பாமர மக்களிடமிருந்து எதிர்ப்பு எழாதபடி பார்த்துக்கொள்கிறான். மதநம்பிக்கை கொண்ட மக்களை தன்வயப்படுத்துவதற்காக, எகிப்து நாட்டிலே உள்ள முசுலீம் மார்க்கத்தைப் போற்றுகிறான்—நெப்போலியன் முசுலீமாக மாறிவிட்டான் என்று வதந்தியே பரவுமளவுக்கு; பிறகோர் சமயம் நெப்போலியன் இந்தப் போக்கை விளக்கினான், எந்த நாட்டிலே நான் ஆதிக்கம்பெற நடமாடுகிறேனே, அந்த நாட்டுமக்கள் எந்த மதத்தை மேற்கொண்டிருக்கிறார்களோ, அந்த மதம் அந்தச்சமயம், என் மதம், என்று.

அலெக்சாண்டிரியா பிடிபட்டது, கெய்ரோவுக்குள் நுழைந்தாயிற்று, நெப்போலியன் கொண்டிருந்த நீண்ட காலத்துக் கனவு நிறைவேறிவிட்டது.



எகிப்தில் நெப்போலியன்

போர் என்ற முறைக்கு ஏற்ப, சிரியாமீது போர் தொடுத்தான். வேலை வந்தது விசாரம் தொலைந்தது என்று எண்ணிப் படையினர் கிளம்பினர். ஆனல், சிரியாவின் கோட்டை நகரை முற்றுகையிட்டு மும்முரமாகப் போரிட்டும் வெற்றி கிட்டவில்லை—பிரிட்டிஷ் தளபதி ஒருவன் பீரங்கிப் படையை அமைத்துக்கொடுத்ததால், சிரியா, தாக்குப் பிடித்தது மட்டுமல்ல, நெப்போலியன் படையை விரட்டித் தாக்கவும் முடிந்தது.

சிரியாக்காரரின் தாக்கு தலைவிடக் கொடுமையாக பிளேக் காய்ச்சல் நோய் தாக்கிற்று. பலர் மாண்டனர், பலர் குற்றுயிராயினர். படை முற்றுகையிட்டுப் பலன் காணமல் திரும்பிற்று—வழியெல்லாம் பிணம்! நடந்துகொண்டே இருப்பர், கீழே விழுவர், ஒரு முனகல், ஒரு இழுப்பு, பிணமாவர். பிளேக் தொத்து நோய் என்பதால், அந்தக் காய்ச்சல் கொண்டவர்களை, உடனழைத்துச் செல்லப் பயந்துகொண்டு, அங்கங்கே விட்டுவிட்டுப் போக நேரிட்டது, குற்றுயிராகிக் கிடந்தவர்களை வெட்டிவீழ்த்திக் கொக்கரித்தது வெறிகொண்ட கும்பல். எங்கும் பீதி, அவதி. நெப்போலியன் கூடுமான மட்டும் அவர்களுக்கு ஆறுதல் அளித்துப் பார்த்தான், முடியவில்லை, அழிவைத் தடுத்திட இயலவில்லை. எகிப்திலே பெற்ற வெற்றியால் கிடைத்த களிப்பு கருகியே போய் விட்டது. பாலைவனத்துக்குப் பலியாகிறோம் பாரிசில் உலவிக்கொண்டிருந்த நாங்கள் — என்று கூறிக் கதறினர்.

பலப்பல நூற்றுக்கணக்கானவர்கள், நோயினல் வேதனைப்பட்டபோது, மருந்து கொடுத்து குணப்படுத்தாமல், அதிக அளவு அபினி கொடுத்து அவர்களை நெப்போலியன் சாகடித்தான் என்று ஓர் குற்றம் சாட்டப்படுகிறது—முற்றிலும் ஆதாரமற்றது அல்ல.

செயின்ட் எலின தீவிலே நெப்போலியன் அடைபட்டுக் கிடந்தபோது, இப்படி நடைபெற்றது என்று ஒப்புக்கொண்டான், ஆனல் வேறு வழியில்லை என்று வாதாடினன். மருந்து இல்லை, அவர்களின் வேதனை வளர்ந்தது, சித்திரவதைக்கு ஆளாகிச் சாவதைவிட, எதிரிகளிடம் சிக்கிச் சிதைக்கப்படுவதைவிட, நிம்மதியான முறையிலே சாவு தேடிக்கொள்ளட்டும் என்பதனல்தான், அபின் கொடுக்கச் செய்தேன் என்று விளக்கம் அளித்தான். விளக்கம், நிலைமை என்ன என்பதனைத் தெரிந்துகொள்ளப் பயன்படுகிறது என்ருலும், நெப்போலியன்மீது படரும் குற்றம் நீங்கிவிட்டது என்று கூறமுடியாது.

என்போன்ற படைத் தலைவர்கள், பலர் கொல்லப்படுவது குறித்து மிகுதியாகக் கவலைப்படுவதற்கில்லை, பலிபல தந்துதான் வெற்றிபெற்ருக வேண்டி இருக்கிறது, என்று வேருேர் முறை நெப்போலியன் கருத்தறிவித்தான்,

இதற்கிடையில், நெப்போலியனுடைய கப்பல்கள் பிரிட்டிஷ் தாக்குதலால், சிதறிச் சின்னபின்னமாயின. எனவே, பிரான்சுக்கும், நெப்போலியனுக்கும் தொடர்பு அறுபட்டுப் போய்விட்டது. ஐந்து திங்களாகச் செய்தியே கிடைக்கவில்லை, பாரிசிலிருந்து. நெப்போலியனுக்கு சங்கடமும் சலிப்பும் ஏற்பட்டுவிட்டது. தவறி, அவனிடம் கிடைத்த ஒரு தகவல், அவன் நெஞ்சிலே தீ மூட்டிவிட்டது — ஆடிப்பாடிக் களிக்கிருள் புதுக் காதலனேடு, உன்னுடைய ஜோசபைன், என்பது சேதி.

> வெற்றியாம்! விருதுகளாம்! விழாவாம்,
> மகிழ்வாம்! புகழாரமாம் எனக்கு! செ! என்ன
> இருக்கிறது இவைகளில். வீண் ஆரவாரம்!
> நான் தனிமையை விரும்புகிறேன். கீர்த்
> தியே எனக்குச் சுமையாகிவிட்டது.

—என்று சலிப்புடன் பேசுகிருன் நெப்போலியன். வயது முப்பதுக்கு ஓராண்டு குறைவு.

தனக்குச் சலிப்பு ஏற்படலாம், ஆனல் போர் வீரர்களுக்கு ஏற்படக்கூடாதே. ஏக்கம் வளர்ந்தால், வீடு திரும்பும் துடிப்பு எழும், அதற்கு வழி இல்லை என்று தெரிந்தால், திகைப்பு ஏற்படும், எதிர்ப்புக் குணம் ஏற்படும்; பிறகு?...புரட்சி!—படைத் தலைமையை எதிர்த்து. மாவீரன் அலெக்சாண்டருக்கே இந்தத் தொல்லை ஏற்பட்டிருக்கிறதே. இதை அறிந்திருந்ததால், நெப்போலியன் தனக்கு ஏற்பட்டிருந்த சங்கடத்தையும் தாங்கிக்கொண்டு, போர் வீரர்களுக்குக் கவலை மேலெழாதிருக்க என்னென்ன செய்வது என்று திட்டமிட்டான். கேளிக்கைக் கூடங்கள் — சூதாடும் அரங்குகள் — நாடக மன்றங்கள்—நாட்டியக் கொட்டகைகள் — உல்லாசத் தோட்டங்கள்—இவைகளை அமைத்து, வீரர்கள் மகிழ்ச்சிபெறச் செய்தான்.

படமெடுத்தாடும் பாம்பு முன் குழலூதி ஆடவைப்போன், பாம்பென நெளிந்தாடும் பாவையர், மேனி அழகை முற்றிலும் மறைத்திடாத முறையில் இருந்த நேர்த்திமிகு மேலாடைகளையும் பந்தயப் பொருளாக ஏற்றுக்கொள்ளும் கழலாடுமிடங்கள், இசைபாடி மகிழ்விப்போர், இப்படிப் பலவகை.

இதுமட்டும் போதாது என்பதை உணர்ந்த நெப்போலியன், வீரருக்கு விருப்பமான பொழுதுபோக்கு,

இங்கு இது; அங்கு பாரிசில், நெப்போலியனுக்கு எதிராக ஒரு சதி உருவாகிறது, அது வளருமுன் வெளிப்பட்டு விடுகிறது, அதில் ஈடுபட்டோர், சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

எகிப்துப் படை எடுப்பு பேரிழப்பாகிவிட்டது என்ற செய்தி, பிரான்சிலே பரவி, தன் மதிப்பு மங்கி, வெறுப்பும் எதிர்ப்பும் மூண்டுவிடா முன்பு, தானே நேரிலே சென்று அந்த நிலைமையைச் சீர்படுத்தியாக வேண்டும் என்று தோன்றிற்று. எனவே, படையினரை எகிப்தில் விட்டு விட்டு, பாரிஸ் பயணமானான் நெப்போலியன். வழியிலே பிரிட்டிஷ கடற்படை வீசிய வலையிலே விழாமல் தப்பினான்—பாரிஸ் வந்தடைந்தான்—கண்டதும் மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர். சிரியாவிலே நேரிட்ட சீரழிவு பற்றிய செய்தி எட்டவில்லை அதுவரையில்—எகிப்து பிடிபட்டது — பிரான்சுக்கு அடிபணிந்தது — என்ற செய்தி மட்டுமே எட்டி இருந்தது. எனவே, இதோ எமது அலெக்சாண்டர், இவர் எமது சீசர்—என்று களிப்புடன் கூவினர், கொண்டாடினர், கோலாகல விழா நடாத்தினர் பாரிஸ் மக்கள்.

நெப்போலியன் எகிப்து சென்று திரும்புவதற்குள், இத்தாலிய களத்திலும் ஆஸ்ட்ரியப் போரிலும் நெப்போலியன் ஈட்டிய பெருமைகள் அத்தனையும் பாழ்படும் படியான தோல்விகள் பிரன்ச்சுப் படைகளுக்கு அங்கெல்லாம் ஏற்பட்டு, பிரான்சின் மதிப்பு குன்றிக் கிடந்தது. வெற்றிமேல் வெற்றி பெற்றுத்தர அந்த ஒரு நெப்போலியனால் மட்டுந்தான் முடியும் மற்றவர்கள் வெறும் ஆடம்பர உருவாரங்கள் என்று மக்கள் மனம் நொந்து பேசிக் கொண்டனர். இந்தச் சூழ்நிலையைப் பக்குவமாகப் பயன்படுத்திக்கொண்டு, சய்யீஸ், டுகோஸ், பாராஸ், கோசியர், மோலீன் எனும் ஐவர் பொறுப்பாளர்களாக இருந்து நடத்திவந்த ஆட்சிக் குழுவை உருட்டி மிரட்டி, இடம் தனக்குக் கிடைக்கும்படியாகவும், குழுவை ஆட்டிப்படைக்கும் நிலை தனக்கு ஏற்படும்படியாகவும் நெப்போலியன் செய்துகொண்டான்.

ஐந்நூறு உறுப்பினர்கள் கொண்ட ஆட்சி மன்றத்தில், நெப்போலியனுடைய உடன்பிறந்தான் லூசியன் அவைத்தலைவராக இருந்தது, வாய்ப்பாகிவிட்டது.

இரத்தம் சிந்தாத முறையில், காற்றடித்துக் கனி காலடி வீழ்வதுபோல, ஆட்சி செய்யும் அதிகாரம் தன்னிடம் வந்து சேரத்தக்க சூழ்நிலையை உண்டாக்கினான்.

சர்வாதிகாரத்துக்குப் பணியமாட்டோம்! அரசியல் சட்டத்துக்கு வேட்டுவைப்பதைச் சகித்துக்கொள்ள மாட்டோம்! என்றெல்லாம், இலட்சிய முழக்கம் எழுப்பிப் பார்த்தனர் ஆட்சிமன்றத்தினர். நெப்போலியன் நடத்திய நேர்த்தியான நாடகம் அனைவர் மனதையும் கவர்ந்துவிட்டது.

படை வீரர்களும் ஆர்வம் கொந்தளிக்கும் மனதினரான மக்களும் நெப்போலியன் பக்கம். பொறுப்பாளர் பாராஸ் தமது செயலாளரை அனுப்பி இருந்தார் நிலைமைக்கான விளக்கத்தைக் கேட்டுவரும்படி, நெப்போலியனிடம். எதிரே கூடி இருந்தோர் உள்ளம் புல்லரித்துப்போயிற்று, நெப்போலியன் அப்போது நிகழ்த்திய உரை. பாராஸ் அனுப்பிய ஆசாமியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, மிகவும் உருக்கமான குரலில்,

"கீர்த்திமிக்க நிலையில் உங்களிடம் நான் ஒப்புவித்துவிட்டுப் போன பிரான்சு நாட்டை என்ன செய்தீர்கள்? அமைதியை ஏற்படுத்தி விட்டுச் சென்றேன், வந்து காண்கிறேன், அமளியை! வெற்றி வீரர்களாக்கிவிட்டுச் சென்றேன், இப்போது தோல்வி தாக்குகிறது, இத்தாலியிலிருந்துகொண்டு வந்த பெரும் பொருளைத் தந்துவிட்டுச் சென்றேன், இப்போது தவிப்பு, பிற்போக்குத்தனம், தொல்லைகளைக் காண்கிறேன். கீர்த்திமிக்க போர்களிலே என் உடனிருந்த ஆயிரமாயிரம் ஆற்றல் மறவர்கள்—இத்தாலிய களங்களிலே வெற்றி தேடித்தந்த வீரப் புதல்வர்கள் எங்கே? கொல்லப்பட்டுப் போயினர்"

என்று நெப்போலியன் பேசினான்—அந்தப் பேச்சு, பிரான்சு நாட்டை ஆளும் பொறுப்பினை அவனுக்குப் பெற்றுத் தந்துவிட்டது என்றுகூறலாம். உயர்தரமான கருப்புக் குதிரைமீது அமர்ந்தபடி நெப்போலியன் ஆற்றிய இந்த வீர உரை கேட்டவர்கள் நாடு நெப்போலியனிடம் ஒப்படைக்கப்பட்டாலன்றி இழிவு துடைக்கப்பட முடியாது என்ற முடிவுக்கு வந்தனர். இழிவு துடைக்கப்பட வேண்டும், இரத்தம் கொண்டு கழுவினால் மட்டுமே, இழிவு போகும் என்றான் நெப்போலியன். சரி! தயார்! என்றனர் வீரர்கள், இரத்தம் பொங்கிற்று, மேலும் மேலும்; வெற்றிகள் கிடைத்தன ஒன்றன்பின் ஒன்றாக.



[லூசியன்-நெப்போலியன் உடன்பிறந்தான்]

கிளம்பியஎதிர்ப்புணர்ச்சிகளை முறியடிக்க, படை, நெப்போலியன் பக்கம் திரண்டுவிட்டது. ஆட்சிமன்றத்தின் அவைத்தலைவராகஇருந்த லூசியன் உடன்பிறந்தானுக்காக உன்னதமான நாடகம் வேறு நடத்தினான். நெப்போலியன் ஆட்சி நடத்தும் பொறுப்பு ஏற்க வேண்டியதுதான், ஆனால்... என்றுகூறியபடி, வாளைஉருவினான் லூசியன், நெப்போலியனுடைய மார்புக்கு நேராக அதை வைத்தபடி பேசினான், "ஆனால், மக்களின் உரிமையை அழிக்க இந்த நெப்போலியன் முயன்றால், கூர்வாளைப் பாய்ச்சுவேன் கொடியோன் மார்பில், கொன்று போடுவேன், உடன் பிறந்தவன் என்ற எண்ணம் துளியுமின்றி" என்று பேசினான். இதனைக்கண்ட மக்களின் கண்களிலே நீர் துளிர்த்தது.

லூசியனும் நெப்போலியனும் நடாத்திய நாடகம் வெற்றி பெற்றது, சய்யீஸ், டுகோஸ், நெப்போலியன் எனும் மூவரிடம் ஆட்சிப் பொறுப்பு தரப்பட்டது—அதிலே முதலிடம் நெப்போலினுக்கு. பிறகு செய்து முடித்த அரசியல் திட்டங்களின் பயனாக முதலிடம், முழு இடமாகிவிட்டது. நெப்போலியன், ஈடு எதிர்ப்பற்ற நிலை பெற்றான்.

ஆட்சிமன்றங்கள் எதற்கும் நெப்போலியனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கிடையாது—ஆட்சிமன்றங்களுக்குஉறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், மறைமுக வாக்கெடுப்பின்மூலம்! இப்படிப்பட்ட மாறுதல் புகுத்தப்பட்டது. அரண்மனையிலே அடைபட்டுக் கிடக்கும் அதிகாரங்களை மக்களிடம் கொண்டுவந்து சேர்த்திடத்தான் மாபெரும் புரட்சி நடந்தது; ஆனால் இப்போது, மாமன்னரிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரம் அனைத்தும் மாவீரனிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. பட்டம் சூட்டிக்கொள்ளவில்லையே தவிர, பட்டத்தரசர்களுக்கெல்லாம் கிட்டாத அதிகார பலமும், மக்கள் ஒப்புதலும் நெப்போலியனுக்குக் கிடைத்தது.

புதிய மாறுதலுக்கு இசைவு தந்து 3,011,007 மக்கள் வாக்களித்தனர்; மறுத்தவர் தொகை 1,562.

பத்துஆண்டுகள் பதவிக் காலம் என்று அறிவிக்கப்பட்டது.

1799ம் ஆண்டு இந்த நிலை கிடைத்தது' நெப்போலியனுக்கு.

1800ம் ஆண்டு, ஆல்ப்ஸ் மலையைக் கடக்கிறான், ஆஸ்ட்ரியாவைச் செம்மையாகப் புடைத்து மாராங்கோ எனும் களத்தில் வெற்றி பெறுகிறான்.

இழிவு துடைக்கப்பட்டது என்ற எக்களிப்பு, மக்களுக்கு. இத்தகைய வெற்றி பெற்றளிக்கத்தக்கவனை பத்து ஆண்டுகளா, அவன் உயிருள்ள மட்டும், அதிபனாகக் கொள்ளலாமே! என்றனர் மக்கள் ஆர்வத்துடன்.

தோற்கடிக்கப்பட்ட ஆஸ்ட்ரியாவுடன் தொடர்ந்து பகைகொண்டால், மற்ற களங்களிலே கவனம் செலுத்த இயலாது என்பதால், 1801-ல் ஆஸ்ட்ரியாவுடன் சமாதானம் செய்துகொண்டான். போப்பாண்டவருடன் மூண்டுகிடந்த பூசலையும் விட்டொழித்து, சமரசம் ஏற்படுத்திக்கொண்டான். 1802-ம் ஆண்டு இங்கிலாந்துடன் நேச ஒப்பந்தம் செய்துகொண்டது நீடிக்கவில்லை, மறு ஆண்டே போரிடவேண்டி நேரிட்டது.

இதற்கிடையில், விரண்டோடிய போர்போன் வம்ச மன்னர் குடும்பத்தினரும், இங்கிலாந்து போன்ற பகை நாடுகளும் மூட்டிவிட்ட கூட்டுச் சதியால், நெப்போலியனைக்கொல்ல முயற்சி செய்யப்பட்டது. தப்பித்துக் கொண்டான். ஆபத்து நீங்கியது மட்டுமல்ல அதே ஆபத்தைக் காரணம் காட்டி, நெப்போலியனுடைய நிலையை மேலும் பாதுகாப்புள்ளதாக உயர்த்திவிட வேண்டும் என்ற திட்டமும் ஏற்பட்டது.

1804-ம் ஆண்டு ஏழாவது பயஸ் எனும் போப்பாண்டவர், நெபோலியனுக்கு முடிசூட்டுவிழா நடத்தினர்; ஆற்றலால் அதிபனானுன், இப்போது அருளும் கிடைத்துவிட்டது. எட்டுக் குழந்தைகள்கொண்ட எளிய குடும்பத்தில் பிறந்து, கடினமாக உழைத்து களம் பல சுற்றிப் போரிட்ட நெப்போலியன் அரசர்க்கரசன் ஆனான்—ஆக்கப்பட்டான். மன்னன் வேண்டாம், அப்படி ஒருவனை உயர்த்திவிடுவது மக்களின் உரிமைக்கு உலை வைக்கிறது என்று கூறி புரட்சி நடத்திய பிரான்சு நாட்டிலே மன்னனுக்குப் பதிலாக மாமன்னன் அரசோச்சலானான்!



[ அரசாளும் நிலைபெற்ற நெப்போலியன் ]

1805-ம் ஆண்டு, இத்தாலி நாட்டுக்கு மன்னன் ஆனான்—அதற்கும் ஒரு தனி முடிசூட்டு விழா.

நெப்போலியனுடன் ஜோசபைனுக்கும் முடிசூட்டு விழா நடந்தது. முதற் கணவன், சீமான் என்பதற்காக வெட்டிக் கொல்லப்பட்டான், புரட்சி அரசினல். மூன்று மாதம் ஜோசபைனையும் சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள், இப்போது அவள் மணிமுடி தரித்துக் கொண்ட மகாராணி! எச்சிற்கலம் என்று ஏளனம்

பேசினோர் என்ன ஆயினர்? மகாராணிமுன் மண்டியிடுகிறார்கள்!! உடன் பிறந்தார்கள், உற்றார் உறவினர் அனைவருக்கும், மணிமுடிகள்.

பிற்காலத்திலே நெப்போலியன், தனக்குற்ற நண்பர்களுக்கு, தங்கத்தாலானதும் தந்தத்தாலானதுமான பொடி டப்பாக்களைப் பரிசளித்தான் — மாமன்னனான காலத்தில், வேண்டியவர்களுக்கெல்லாம் மணிமுடிகளைப் பரிசளித்தான்.

ஆலந்துக்கு அதிபன் ஜோசப், நேப்பிள்ஸ் நாட்டு மன்னன் லூயி, வெஸ்ட்பேலியா வேந்தனானான் ஜெரோம்! —இரண்டு ஆண்டுகளானதும் ஜோசப், ஸ்பெயின் நாட்டுக்கு மன்னனாக்கப்பட்டான். மணிமுடிகள், நெப்போலியனிடம் பூப்பந்துகளாயின!

ஆஸ்ட்ரியா, பிரஷ்யா, ரஷ்யா, இந்த மூன்று நாடுகளும், நெப்போலியனுடைய கண்களை உறுத்திக் கொண்டிருந்தன, கருத்தை மருட்டிக்கொண்டிருந்தன. தனித்தனியாக இவைகளைத் தீர்த்துக்கட்ட முனைவான் ஒருமுறை; இவைகளுக்குள் கிலேசம் ஏற்படுத்தி வலிவைப் பிளந்திட நினைக்கிறான் ஒருமுறை! ஒவ்வொரு முறையிலும் வெற்றி கிட்டுகிறது, ஆனால் நிலைக்கவில்லை; நிலைகுலைந்துக் கீழே வீழ்ந்துவிட்டதுபோலத் தெரிகிறது ஆனால் மீண்டும் தலைதூக்கிப் போரிட முனைகின்றன இந்த நாடுகள்.

பேரரசு அமைக்க நான் எண்ணியதற்குக் காரணமே, அப்போதுதான் அமைதி ஏற்பட்டு, ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு, மக்கள் வளம் நிரம்பிய வாழ்வு பெறுவர் என்று நெப்போலியன் தத்துவம் பேசினான்— ஓரரசு—பேரரசு—ஆற்றலரசு—என் அரசு—என்று எழுச்சியுடன் முழக்கமிட்டான். ஆனால், ஒவ்வோர் இடத்து இன, தேசீய உணர்ச்சிகளை அழித்து ஒழித்துத்தான் இப்படி ஒரு பேரரசு அமைக்கமுடியும்; தத்தமது இன, தேசீய உணர்ச்சிகளை மாய்த்துக்கொள்ள, மன்னர்கள் மட்டுமல்ல, எந்த நாட்டு மக்களும் ஒப்புவதில்லை. சில வேளைகளிலே தாங்கமுடியாத தாக்குதல் காரணமாக, தமது உணர்ச்சிகளை மறைத்துக்கொள்ளக் கூடும், ஆனால் அவை அடியோடு மாய்ந்துவிடுவதில்லை — ஏனெனில் அந்த உணர்ச்சி ஊனில் உயிரில் கலந்துவிட்டிருக்கிறது. தலைமுறை தலைமுறையாகப் பையப் பைய வளர்ந்தது அந்த உணர்ச்சி. காவியத்திலும் ஓவியத்திலும் கலந்து நிற்கிறது. மொழி அதற்கான வழி காட்டுகிறது. இத்தகைய உணர்ச்சியை உருக்குலைக்க முனைவானேன்? பல தனித்தனி வடிவங்களைப் பொடிப் பொடியாக்கி, புதிய கலவை முறை கண்டுபிடித்து, பேருரு அமைப்பானேன்? நெப்போலியன் இதற்கான விளக்கம் தரவில்லை. பேரரசு அமைக்கவேண்டும் என்று கூறினான் — தக்க பொருள் அமைந்த காரணம் காட்ட முடியவில்லை.

ஐரோப்பாவிலே அமளியற்ற நிலை ஏற்பட்டுவிட்டால், பிறகு, இங்கிலாந்தை ஒழித்துக்கட்ட எளிதாக முடியும் என்பது அவன் எண்ணம்.

இங்கிலாந்து பிற்போக்காளர்களின் பிறப்பிடம், பிரபுக்களின் கொலுக்கூடம், என்பது நெப்போலியன் கொண்ட கருத்து. சுரண்டிப் பிழைப்பதும் சுகபோகம் அனுபவிப்பதும், இதற்குச் சூதுமுறைகளை மேற்கொள்வதும் இங்கிலாந்து நாட்டுப் பரம்பரைக் குணம் என்று கண்டிப்பது வாடிக்கை.


[ ஜெரோம் ]

வீரதீர மிக்கவர்கள் அல்ல, இங்கிலாந்து நாட்டவர், பெட்டிக் கடைக்காரர்கள் அந்நாட்டு மக்கள் என்று ஏளனம் செய்வான்.

அங்கிருந்து கிளம்பிய வெலிங்டன்தான், தன்னை இறுதியாக வீழ்த்தப் போகிறான் என்று நெப்போலியன் துளிகூட எண்ணவில்லை.

இங்கிலாந்திடம் ரஷியாவோ, ஆஸ்ட்ரியாவோ, தன்னைப்போலவே பகை கொண்டுவிட்டால், திட்டம் எளிதாக வெற்றி பெறும் என்ற எண்ணம்கொண்டு, ஒவ்வோர் சமயம் ஒவ்வொரு நாட்டுடன் நேச உறவு ஏற்படுத்திக்கொள்ள முனைந்தான்.

ரஷியா, பிரஷ்யா, ஆஸ்ட்ரியா, எனும் இம்மூன்று அரசுகளும் கூட்டுச் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அதேபோது இவை ஒவ்வொன்றும், பிரான்சு நாட்டின் ஆதிக்கத்தை மறுக்கக்கூடாது, இங்கிலாந்திடம் நேசத் தொடர்பு கொள்ளக்கூடாது — இது நெப்போலியன் நடத்திக்காட்ட விரும்பிய திட்டம்.

கூட்டாகிப் பணியாற்றினால் மட்டுமே, நெப்போலியனைச் சமாளிக்க முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணம், அச்சமூட்டத்தக்க விதமான வெற்றிகளை, நெப்போலியன் பெற்றதுதான். 1805 — 1806 — 1807-ஆண்டுகளில், நெப்போலியன், இந்த மூன்று நாடுகளையும், ஆஸ்ட்டர் லிட்ஸ், ஜீனா, பிரயிட்லாண்டு எனும் களங்களில் திட்டமிட்டு முறியடித்தான். ஏராளமான இரத்தம் பொங்கிற்று, ஆனால் நெப்போலியனுடைய புகழ் உலகெங்கும் எதிரொலித்தது.

டில்சிட் என்ற இடத்தில் ரஷிய அதிபருடன் நெப்போலியன் நேச உறவு கொண்டான்; அது ஒரு விழாவாக, வெற்றி வைபவமாகக் கொண்டாடப்பட்டது. "ஐரோப்பாவின் இப்புறத்தில் நான், அப்புறத்தில் தாங்கள். ரஷிய அதிபரே! நமக்குள் நேசக் கூட்டுறவு நிலைத்துவிடுகிறது. இங்கிலாந்து நாடு இனி என்ன செய்யும்! தீர்த்துக்கட்டி விடுகிறேன். உலகிலே கீழை நாடுகளிலே இங்கிலாந்து பெற்றுள்ள பூபாகங்களை நமக்குள் பங்கிட்டுக் கொள்வோம்.'' என்று பூரிப்புடன் நெப்போலியன் கூறினான். புகை வெளியே தெரியவிடாமல் நெருப்பை மூட்டத்தக்க தந்திரம்கொண்ட ரஷிய அதிபர், அலெக்சாண்டர், சொல்லவேண்டுமா! தெரியாதா! என்பன போன்ற இருபொருள், மறைபொருள் பேச்சுப்பேசி, நெப்போலியனை ஏமாளியாக்கினான்.

ஆற்றல் அளவு கடந்தது, கட்டுக்கடங்காத ஆவல் —எனவே நெப்போலியன் மனதிலே, அலை அலையாக எண்ணங்கள், விதவிதமான திட்டங்கள் குமுறி எழுந்த வண்ணம் இருந்தன.



[ திட்டம் வகுக்கும் நெப்போலியன் ]

இங்கிலாந்தைத் தாக்கவேண்டும் என்ற திட்டம் வெற்றி பெறுவதற்கே வெகு பாடுபடவேண்டும், ஆற்றல் அனைத்தையும் செலவிடவேண்டும். இங்கிலாந்திலே என் படை இறங்கினால், சிலமணி நேரம் போதும், அந்நாட்டவரை நையப் புடைத்து வீழ்த்த என்று இறுமாந்து பேசினான் நெப்போலியன் — வீரன், ஐயமில்லை, வெற்றி பெற்றுமிருப்பான், மறுத்திட இயலாதுதான். ஆனால் இங்கிலாந்து நாட்டிலே படைகள் இறங்க வேண்டுமே! இடையே உள்ள கடலில், பிரிட்டிஷ் கப்பற் படை விழிப்புடன் இருக்கிறது. எத்தனையோ களங்களில் வெற்றிபெற்ற பிரான்சு, கடற்போரில் இங்கிலாந்திடம் டிரபால்கர் எனும் போரில் தோற்றுத்தானே இருக்கிறது.

இதனை எண்ணும்போது நெப்போலியனுக்கு எரிச்சல் மேலிட்டது, அச்சம் எழவில்லை.

சரி, இங்கிலாந்தைத் தாக்குவதையே ஒரே குறிக்கோளாகவாவது கொண்டு செயலாற்ற முடிந்ததா என்றால், இல்லை—இடையில் பல இடங்களில் பகை மூள்கிறது.

1807ல் போர்ச்சுகல்மீது படை எடுப்பு.

1808ல் ஸ்பெயினைத் தாக்கிப் பிடிக்கிறது பிரன்ச்சுப் படை; ஜோசப் மன்னனாக்கப்படுகிறான்.

ஸ்பெயின், இங்கிலாந்தின் துணைநாடிப் பெறுகிறது; அங்கு இருந்துகொண்டு, வெலிங்டன் ஆறு ஆண்டுகள் போர் நடத்துகிறான் — வாடர்லூவுக்கு ஒத்திகை நடத்துவதுபோல. 1808 முதல் 1814 வரையில், ஸ்பெயினுக்காக நடைபெற்ற போரில், பிரான்சு மிக அதிக அளவிலே இரத்தம் கொட்டி, தோற்றது.

நேச உறவு கொண்டிருந்த அலெக்சாண்டர், கெக்கலி செய்யாதிருப்பாரா? நையப் புடைத்த பிறகு தானே, நெப்போலியன் அவரிடம் நேசக்கரம் நீட்டினான். இப்போது பிரான்சின் புகழ் பாழ்படும்படி ஸ்பெயினிலே தோல்வி ஏற்பட்டது கண்டதால், இனி நெப்போலியனுக்கு இறங்குமுகம் கண்டுவிட்டது என்று எண்ணி, எதிர்ப்புக் காட்டலானான் ரஷிய அதிபன். நேச உறவு கெடாதபடி பார்த்துக்கொள்ள, ரஷிய அதிபருடன் நெப்போலியன் எர்பர்ட் எனும் இடத்தில் பேசுகிறான்— —பாவனைதான் அதிகம், உண்மைப் பாசம் எழவில்லை.

1809ல், வாக்ராம் எனும் களத்தில், மறுபடியும் ஆஸ்ட்ரியாவை முறியடித்து நெப்போலியன் தன் புகழை நிலை நாட்டுகிறான்.

ஒரு இடத்திலே தோல்வி ஏற்பட்டால், இழிவு உண்டாகிறது, உடனே அதனைத் துடைத்தாகவேண்டும், இல்லையென்றால், உள் நாட்டிலே மதிப்பு மங்கிவிடும், எனவே, வேறு ஓர் களம் ஏற்படுத்திக் கொண்டாகிலும் வெற்றி பெற்றுக் காட்டித் தீரவேண்டி ஏற்படுகிறது.

நெப்போலியன் சிலநிலைமைகளை உண்டாக்கி விட்டான் முதலில்; பிறகு அந்த நிலைமைகள் அவனை ஆட்டிப்படைக்கலாயின.

பரம்பரை மன்னர்கள் பலமுறை தோற்கலாம் பாதகமில்லை; மக்கள் மன்னனிடம் கொண்டுள்ளமதிப்பைக் குறைத்துக்கொள்ள மாட்டார்கள்; அந்த மதிப்பு, 'பக்தி'யாகி விட்டிருக்கிறது; என் நிலை அப்படிப்பட்டது அல்ல; 'ராஜ பக்தி' எனும் அடிப்படைமீது நான் நின்றுகொண்டில்லை; ஆற்றலால் அரசாளும் நிலை பெற்றேன்; அந்த ஆற்றல் குறைகிறது, குலைகிறது என்றால், களத்திலே தோல்விகள் கண்டால், போற்றுவோர் தூற்றத் தொடங்குவர், வாழ்த்தி நிற்போர் வசை பாடுவர், அடங்கிக் கிடப்போர் ஆர்ப்பரிப்பர்; ஆபத்து ஏற்படும் என் பதவிக்கு"

என்று நெப்போலியன் ஒருமுறை கூறினான். முற்றிலும் உண்மைதான்! ஆனால், பல இலட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்து, இரத்தம் பொங்கச்செய்து வெற்றிகளைப் பெற்று ஒரு தனிமனிதனின் நிலையை, பதவியைக் காப்பாற்றிக்கொள்வதால், அவனைத் தாங்கிநிற்கும் நாட்டுக்கும், பின்பற்றும் மக்களுக்கும் என்னபலன் கிடைக்கிறது, வெற்றி! வெற்றி! மகத்தானவெற்றி! என்ற முழக்கம்தானே அவர்கள் கண்டபலன். உரிமைகள் அழிகின்றன; வாழ்வு ஆபத்துச் சூழ்ந்ததாகிறது, பொருள் பாழாகிறது; மக்களிடம் மிருககுணம் மேலோங்கிவிடுகிறது; தேவைதானா?

களங்களிலே இந்தநிலை எனில், பிரான்சுநாட்டு அரசியலிலேயும் பல, புதியசிக்கல்கள்!

நெப்போலியனைக் கொல்லச் சதிகள்! எதிர்க்க ஏற்பாடுகள்! விரட்ட திட்டங்கள், அவ்வப்போது எழுகின்றன. திறமைமிக்க போலீசுப்படையும் உளவாளரும் இருப்பதாலும், அவர்களைவிடத் திறமையாக நெப்போலியன் எந்தக் காரியத்தையும் கவனித்துக்கொள்வதாலும், சதிகாரர் வெற்றிபெறவில்லை.

நண்பர்கள் கூறுகிறார்கள், வாரிசு இல்லாதவராகத் தாங்கள் இருப்பதால்தான், சதிகாரர்கள் தங்களைத் தீர்த்துக்கட்டிவிட்டால் பழைய மன்னர் ஆட்சியை ஏற்படுத்தலாம் என்று எண்ணுகிறார்கள். ஆகையால்,.....

"என்ன செய்யவேண்டும்?"

"நாட்டுக்கு ஒரு இளவரசன் வேண்டும், மகன் வேண்டும்"

"ஜோசபைன், தாயாகவேண்டும்"

"ஆககாமே, அறிகுறியும் இல்லையே......"

"அவள் அழகும் என் ஆற்றலும் கலந்து ஒரு குழந்தை பிறந்தால்......"

'நாடே கொண்டாடும், ஆனல், எதிர் பார்த்து ஏமாற்றம்தான் காண்கிறேம். ஆகவே......"

"ஆகவே......?'

"தாங்கள் வேரூர் திருமணம் செய்து கொள்ளவேண்டும்......"

"ஜோசபைன் இருக்கும்போதா' என் காதலரசி இருக்கும்போதா?"

"இன்றுபோல் என்றும் ஜோசபைன், காதல் அரசியாக இருக்கட்டும், பட்டத்தரசியாக வேரூர் பாவையைத் தேடித் திருமணம் முடித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் நாட்டுக்கு ஒரு இளவரசனைப் பெற்றளித்தால், பேராபத்து யாவும் மடிந்தொழியும்."

துவக்கத்தில் துளியும் இணங்கவில்லை நெப்போலியன். இறுதியில் பெண் தேடு படலம் ஆரம்பமாயிற்று ஜோசபைன் விவாக விடுதலைக்கு இணங்கவேண்டி நேரிட்டது, கண்ணீர் பொழிந்து, காலடி வீழ்ந்து பார்த்துப் பலன் ஏற்படாததால்.

1810ல், ஆஸ்ட்ரிய நாட்டு அரசிளங்குமரி, மேரி லூயியை மணம் செய்துகொள்கிருன்-அரச வம்சத்துடன் கலப்பு!!

அடுத்த ஆண்டு மகன் பிறக்கிருன்! குழந்தை ரோமாபுரி அரசன் என்ற பட்டம் பெற்றுவிடுகிறது, பரம்பரை ஏற்பட்டுவிட்டது!!

கணக்குப்பாடத்திலே வல்லவன் நெப்போலியன் — ஆனல் ரஷிய நாட்டைப்பற்றிச் சரியான கணக்குப்போட மட்டும் தெரியாமலே போய்விட்டது.

பகை கக்கியபடி இருந்த ஆஸ்ட்ரியா, சம்பந்தி நாடாகி விட்டது. புதிய பலம் என்று தப்புக் கணக்குப் போட்டான் நெப்போலியன். ரஷியாவுடன் போர் தொடுக்க முனைந்தான்-மிகத் தவருன திட்டம் —மிகத் திறமை கெட்டமுறையிலே திட்டத்தை நடத்த முற்பட்டான்.



மேரி லூயி

ரஷியா, விரிந்து பரந்து கிடக்கும் பூபாகம்—அந்த ஒரு இடத்திலே எல்லாவிதமான தட்ப வெப்ப நிலைகளும் உள்ளன—அதுபோலவே, எல்லாவிதமான போர்த்திறன் படைத்தவர்களும் இருக்கின்றனர். தாக்கிடும் போர் நடாத்துவோரும், மறைந்திருந்து தாக்குவோரும், உளர், இதுமட்டுமல்லாமல், ஓரிரு களங்களிலே வெற்றி பெற்று விடுவதால் மட்டும் ரஷியாவைச் சரண் அடையச் செய்ய முடியாது — களம் மாறிக்கொண்டே போகும், மேலே மேலே, ரஷியாவுக்கு உள்ளே உள்ளே பாயும் படை புக வேண்டும்.

எந்த இடத்திலே நின்று போரிட்டால், நல்லது என்பது ரஷியாவில் உள்ளவர்களுக்குத்தான் தெரியும்—படை எடுப்பு நடத்தும் பிரன்ச்சுக்காரருக்குத் தெரியாது.

எல்லாவற்றையும்விட மேலாக மற்ருென்று இருந்தது—ரஷிய அதிபர் அலெக்சாண்டர் போரிட மறுக்கிருர்!

சரண் அடையவும் முடியாது, போரிடவும் போவதில்லை, பாய்ந்து பாய்ந்து ஓயட்டும். மாயட்டும் பிரன்ச்சுப் படை என்கிருர் அலெக்சாண்டர். உள்ளே பாய்வார்களே—என்கிருர்கள் தளபதிகள், பாயட்டும், அவர்கள் நுழையும் இடத்தைவிட்டு நாம் வெளியேறிவிடுவோம், வேறு இடம் சென்று முகாமிடுவோம் என்கிருர் ரஷிய அதிபர். அங்கும்தானே வரும் எதிரிப்படை? என்கிருர்கள். வரட்டும்! நாம் அவர்கள் வருகிறபோது அங்கு இருக்க மாட்டோம். முகாம் மாறும் என்கிருர் அலெக்சாண்டர். எதுவரையில்? என்று கேட்கிருர்கள் தளபதிகள். நாம் பின் வாங்கிச் செல்ல இடம் இருக்கும்வரையில் என்கிருர் அவர். இடையில் சிக்கிய இடங்களை எல்லாம் எதிரிகள் அழிப்பார்களே என்று கலக்கத்துடன் கேட்கிருர்கள்; அழிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை? நாமே அழிப்போம், நாசமாக்குவோம், அவர்கள் நுழையும் இடத்தை, நாம் வெளி ஏறி வேறிடம் செல்லுமுன்பு என்று போர்முறை கூறுகிருர் அலெக்சாண்டர். திகைக்கிருர்கள் தளபதிகள், விளக்கமளிக்கிருர் அதிபர்.

நமது நாட்டிலே நுழையும் எதிரிப் படை, பொன்னும் பொருளும் கிடைக்கும், உணவும் உரையுளும் கிடைக்கும், போரிட்ட அலுப்புத் தீரும், புதிய வலிவு பெற்றுக் கொண்டு மேலும் தாக்குதலை நடத்தலாம் என்று எண்ணுவார்கள். அதுபோலத்தான் போரிலே நடைபெற்று வருகிறது. நாம் புதுமை முறை மேற்கொள்வோம். தாக்கத்

துடிப்பார்கள், சிக்கமாட்டோம்! உள்ளே நுழைவார்கள், வெற்றிடமாகிவிட்டிருக்கும் செல்வத் திருநகர்கள். பாதைகள் இடிபாடுகளாகிவிடும்! பாலங்கள் தகர்க்கப்பட்டிருக்கும்! வீடுகள் தங்குமிடமாக இரா! களஞ்சியம் கருகிக் கிடக்கும்! கடைகள் சாம்பலாகிக் கிடக்கும். ஆறு குளம் குட்டைகள் சேறும் சகதியுமாகிவிடும், வயல்கள் வெடித்துக் கிடக்கும், ஆடு மாடு கோழி பன்றி மருந்துக்கும் கிடைக்காது. புல் பூண்டுகூடக் கிடைக்காது அவர்களுக்கு. அந்த விதத்தில் எல்லாவற்றையும் பொசுக்கி விடுவோம். எதிரியிடம் எதுவும் சிக்கலாகாது!!

கடைசியில், எதிரிகளைத் தாக்குவதுதான் யார்? என்று கேட்கிருர்கள் தளபதிகள். ரஷிய அதிபர் கூறுகிருர், "நாம் போரிடத் தேவையில்லை! கடுங்குளிரும் பனி மழையும் அவர்களைத் தாக்கி அழிக்கும். நமது பலமிக்க படை, அஸ்வ!" என்று கூறுகிருர்.

ரஷிய அதிபர் கூறியது போலத்தான் நடைபெறுகிறது.

1812-ம் துவக்கப்பட்ட ரஷியப் படை எடுப்பு, நெப்போலியனைத் திகைக்கச் செய்துவிட்டது. தேடித் தேடிப் பார்க்கிருன், ரஷியப் படையைக் காணும். ஊருராகப் பாய்கிறது பிரன்ச்சுப் படை, போரிடத் துடிக்கிறது; ரஷியப் படை இல்லை.

வில்ஞ பிடிபட்டது; விட்பெஸ்க் பிடிபட்டது; ஸ்மலான்ஸ்க் பிடிபட்டது! என்று பாரிசுக்குச் செய்திகள் செல்கின்றன. ஆனால் ஒரு இடத்திலாவது எதிரியைத் தாக்கி அல்ல!' எதிரி இருப்பதில்லை; எதுவும் இருப்பதில்லை.

இடையிடையே, ரஷிய காசாக் குதிரை வீரர்கள், பிரன்ச்சுப் படையை, பக்கவாட்டத்தில் தாக்கிவிட்டு, முகாம்களை அழித்துவிட்டு, பாய்ந்தோடி விடுவார்கள்.

அலையும் அலையும் மோதுதல்போல், மலையும் மலையும் தாக்குதல் நடத்திக் கொள்வதுபோல, இரு பெரும் படைகள் ஒன்றை ஒன்று எதிர்த்து நின்று போரிடுவதுதான்

## "இவரைக் கொல்பவருக்கு இருபதாயிரம் பவுன்கள்!"

இவருடைய புகைப்படத்தைப் போட்டு, மேலே குறிப்பிட்டபடி விளம்பரங்கள் செய்யப்பட்டன, ஐரோப்பாவிலுள்ள சில நாடுகளில்!

காரணம், அவர் செய்த 'பணி', 'கைங்கர்யம்', பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் குடிப்பதற்குப் பயன்பட்டது!

துருக்கியில், ஏழ்மையில், பிறந்து வளர்ந்த இவர், தன்னுடைய இருபத்தாருவது வயதில், தொழில் துறையில் இறங்கினுர், கிரேக்க நாட்டில்! அவருடைய தொழில் துப்பாக்கிகளையும், குண்டுகளையும் செய்தல்! சமாதான காலத்தில் அவற்றிற்கு 'மார்க்கெட்' கிடைக்குமா?



எனவே கிரேக்கத்தின் மீது அண்டை நாடுகள் படையெடுக்கத் திட்டம் தீட்டுவதாகப் பெரியதொரு புரளியைப் பரப்பினுர் --- திட்டம் பலனளித்தது.

உடனே துருக்கிக்குப் பயணமானுர். தூபமிட்டார் ஆயுதங்களைப் பெருக்கி வரும் கிரேக்கத்தை ஆதாரமாகக் காட்டி! நல்ல பலன் கிடைத்தது.

சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற போர்களின்போதும், முதல் உலகப் பெரும் போரிலும் இவருடைய ஆயுதங்கள் ஏராளமாக விற்பனையாயின.

முதல் தடவையாக இங்கிலாந்துக்குச் சென்றபோது அவரைத் திருடன் என்று சந்தேகப்பட்டுக் கைது செய்தனர் போலீசார்---அடுத்த தடவையோ அந்த நாட்டு அரசரே விருந்து கொடுத்தார்!

ஐந்தாம் வகுப்புவரைதான் படித்தார்---என்ருலும் 14 மொழிகளில் நன்ருகப் பேசுவாராம்!

சாகராப் (Zaharaff) என்பதுஇவர்தம் பெயர்.

தன்னைப் போன்றே உருவம் கொண்டே இருவரை இவர் பணிக்கு அமர்த்தியிருந்தாராம் இவர். அவர்களுடைய பணி, சாகராப் வெளி நாடுகளுக்குச் செல்லுகின்ற நேரத்தில், பெர்லினிலோ அல்லது ஜெர்மனியின் வேறு நகரத்திலோ, பொதுவிடங்களில், சிறப்பாகச் செய்தியாளர் கண்களில் படுமாறு உலாவுவதுதான்!

✲

தனது இருபத்தாரும் வயதில் ஒரு பெண்ணைக்காதலித்தார், இவர் --- அவளோ, ஸ்பெயின் இளவரசர் ஒருவரின் மனைவி! இளவரசருக்கு அரைப்பைத்தியம்--- என்ருலும், விவாக ரத்து செய்துகொள்ள அவள் விரும்பவில்லை --- எனவே காதலர்களாகவே இருந்தார்கள் இருவரும்!

கடைசியில் காதல் கைகூடியது 1924ல்---அப்போது சாகராபின் வயது 74!---அவளுடைய வயது 65! திருமணமாகிப் பதினெட்டு மாதங்களிலேயே அவள் இறந்துவிட்டாளாம்!

அதுவரை நெப்போலியன் கண்ட போர் முறை. இது! விந்தையாக இருக்கிறது!!

பிரன்ச்சு நாட்டை விட்டு நெடுந்தொலைவு வந்தாகிவிட்டது; இனி அங்கிருந்து படைக்குத் தேவைப்படும் பொருள் ஏதும் பெற முடியாது; எல்லாம் ரஷியாவிலேதான் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனல் இங்குதான் ஏதும் இல்லையே! எல்லாம் கருகிக் கிடக்கின்றன; சாம்பலாகிக் கிடக்கின்றன. உணவுத் தட்டுப்பாடு; நோய் வேறு பரவுகிறது; படை படாதபாடுபடுகிறது.

**குடோவ்** எனும் ரஷியத் தளபதி, ஒற்றைக்கண்ணன்' **பொரோடினே** எனும் இடத்தில் படையுடன் இருந்தான் —போரிட்டாகவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. பெருத்த மகிழ்ச்சி, பிரன்ச்சுப் படையினருக்கு,

> "வந்தது வீரர்களே! நீங்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வாய்ப்பு. வல்லமையைக் காட்டும் வாய்ப்பு. உமது வீரத்தைப் பொறுத்திருக்கிறது வெற்றி. வெற்றி பெற்ருல், எல்லாம் நமக்கு — மாரி காலத் தங்குமிடம்— வாழ்க்கை வசதிகள்—விருதுடன் வீடுதிரும்பும் வழிவகை......"

வழக்கப்படி உற்சாகமூட்டுகிருன் நெப்போலியன். பயங்கரமான போர் மூண்டுவிடுகிறது. இருதரப்பிலும் பலத்த சேதம். நிலைமை, மணிக்கு மணி மாறியபடி இருக்கிறது, பிணத்தின்மீது நடக்கவேண்டி இருக்கிறது — ரஷியப் படை விரட்டப்படுகிறது!!

**மாஸ்கோ!** அதோ பொன்மயமாகவிளங்கும் கட்டடம் நிறைந்த ரஷிய தலைநகரம்.

ஒரு முகடுமீதேறி, பிரன்சுப்படை, தொலைவிலே தெரியும், மாஸ்கோ நகரைக் கண்டு களிக்கிறது.

உள்ளே செல்கிறது படை, போரிடுவாரும் இல்லை, சரணடைந்தோம் என்று கூறுவாரும் இல்லை, ஆள் அரவமே இல்லை. மாஸ்கோ காலிசெய்யப்பட்டுவிட்டிருக்கிறது, கடுங்கோபம் பிரன்ச்சுப்படையினருக்கு. ஆனல் யார்மீதுகாட்டுவது. கட்டடங்கள்மீது; அங்குகிடந்த விலையுயர்ந்த பொருட்களின்மீது! போரிடவந்தபடை கொள்ளை அடிக்கிறது—வேறு வேலை? மாளிகைகளிலும் மாதா கோயில்களிலும் பொன்னும் பொருளும் விலையுயர்ந்த கலைக் கருவூலங்களும் கிடைக்கின்றன. பத்திரப்படுத்திக் கொள்கிருர்கள், பாரிசுக்கு எடுத்துச்செல்ல. பளிங்காலான கோப்பைகள், பட்டாலான அங்கிகள், வைரம் இழைத்த சிலுவைகள், வண்ணம் நிறைந்த கிண்ணங்கள், தங்கநகைகள், கண்கவரும் வனப்புள்ள ஓவியங்கள்!!

காலமெல்லாம் காட்டிக் காட்டி மகிழலாம்–தலைமுறை தலைமுறையாக இல்லத்தில் இருக்கும், பெருமை தரும் பொருளாக என்று எண்ணி எடுத்துவைத்துக்கொள்கிருர்கள். எத்தனை விருப்பத்துடன் ரஷியர்கள் இந்தப் பொருட்களைச் சேர்த்துவைத்திருந்தனரோ, பாவம். அவ்வளவும் பிரான்சுக்கு! மாஸ்கோவுக்குப் பொலிவளித்த பொருள் அத்தனையும் பாரிசுக்கு!—என்று நினைக்கின்றனர். முன்பு எடுத்துச் செல்லவில்லையா; இத்தாலியிலிருந்து, அதுபோலத்தான் என்ற எண்ணம். ஆனல், இத்தாலியா, ரஷியா!! ஒரு பொருளும் போய்ச் சேரவில்லை பாரிசுக்கு! பொருளைக் களவாடிய வீரர்களிலேயே மிகப் பெரும்பாலோர் வீடு திரும்பவில்லையே, பொருள் எப்படிப் பாரிஸ் போகும். பொருள் மாஸ்கோவுக்குச் சொந்தம், அதனைச் சூறையாடியவன் உடல் மாஸ்கோ மண்ணுக்கு உரம் என்ருகிவிட்டது.

எந்த இடத்தை இழக்கச் சம்மதித்தாலும் மாஸ்கோவை இழக்க மனம் வராதே, எப்படியும் படையுடன் வருவார் ரஷிய அதிபர் என்றெண்ணினர் — ரஷியப் படையைக் காணவில்லை, ஆனல் அவர்கள் மூட்டிவிட்டுச் சென்ற தீ மாஸ்கோவில் பரவிவிட்டது—நகரம் நெருப்பு மயம்— நாசம் நர்த்தனமாடுகிறது! ரஷியப் படையுடன் போரிடலாம். வாய்ப்புக் கிடைத்தால்; நெருப்புடன் எப்படிப் போரிடுவது! கட்டடங்கள் சரிகின்றன, பொருள்கள் சாம்பலாகின்றன. மாஸ்கோ அழிகிறது. வளையை அழித்தால் அதிலே பதுங்கி இருக்கும் பாம்பு என்ன செய்யமுடியும்– நெளியும் சில நேரம்—பிறகு? வேறு இடம் தேடும். அதுபோலத்தான், பொறுத்திருந்து பார்த்தாகிவிட்டது, இனி ஊர்போய்ச் சேரலாம், என்று பிரன்ச்சுப் படை பின் வாங்கத் தொடங்கிற்று. ரஷியப் படை பக்கவாட்டத்திலே தாக்கும் முறையை மேற்கொண்டது; பாதைகளும் பாலங்களும் பாழாக்கப்பட்டதால், படை நடைபோட இயலவில்லை. இந்தச் சமயம் பார்த்துத்தான் புதிய பகைவன், கிளம்பினன்—மாரி! பனி பெய்யத் தொடங்கிற்று. கடுங்குளிர்! ஊர்களே உறைந்துபோகின்றன! நடக்கக் கால் வரவில்லை! நின்ருல் பனி கொல்லுகிறது! உண்ண உணவில்லை, போகும் வழி அடைபட்டுவிடுகிறது; கண் பூத்துப் போகிறது, எப்பக்கம் நோக்கினலும் வெள்ளை வெளேரென்ற பனிக்கட்டிகள்!! பிரன்ச்சுப் படையினரில் பல்லாயிரவர் செத்துக் கீழே சுருண்டு சுருண்டு விழுந்தனர். எவ்வளவு பயங்கரச் சண்டையென்ருலும், இத்துணை கோரமான பிணக்குவியலைக் காணமுடியாது. அழைத்துச் சென்ற வீரர்களில் மிகப் பெரும்பகுதியை இழந்து, துக்கம் துளைத்திட, வெட்கம் வேலாகிக் குத்த, நெப்போலியன் பாரிசு திரும்பினன். பயத்தால் வெளுத்த முகம், பனியால் ஏற்பட்ட வெடிப்புகள், நடமாடும் வேதனையானன் நாடுபல பிடித்து, விருதுகளுடன் வீடு திரும்பி விழா காண்பவன். ரஷியர்கள் பழி தீர்த்துக்கொண்டனர். எந்தப் பகைவனுலும் சாதிக்கமுடியாததை, ரஷியப் பனி மழை சாதித்துவிட்டது. விரண்டோடாத நெப்போலியன் படை சுருண்டு வீழ்ந்தது. நெப்போலியனுக்கு இனிப் புகழ் தரும் எதிர்காலம் இல்லை; அது உறைபனியிலே புதையுண்டுவிட்டது!!

**மின்ஸ்க், ஸ்மாலன்ஸ்க், மாஸ்கோ** ஆகிய நகர்களில், நாற்றமடித்துக்கொண்டிருந்த பிணக் குவியலைக் கொளுத்திக்கொண்டிருந்தார்கள்—142,000 பிணங்கள்!!

இந்த அழிவைத் தொடர்ந்து, ரஷியா, பிரஷ்யா,

ஆஸ்ட்ரியா, இங்கிலாந்து, ஸ்வீடன், இத்தாலி எனும் நாடுகள் கூட்டுக் கழகம் அமைத்துக்கொண்டு, லிப்சிக் எனும் களத்தில் நெப்போலியன் படைகளை முறியடித்தன. இனி நேச நாட்டுப் படைகள், பாரிஸ் நோக்கிச் செல்லவேண்டியதுதான்!

இழந்த கீர்த்தியை திரும்பப் பெற ஏதேதோ முயற்சிகள்—ஆட்சிமன்ற உறுப்பினர்களிடம் மன்றாடுகிறான்—புள்ளி விவரம் காட்டுகிறான்—புதிய போர்த் திட்டம் கூறுகிறான்—ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். படமுடியாதினித் துயரம், பட்டதெல்லாம் போதும் என்று கூறிவிடுகிறார்கள்—பட்டம் துறந்துவிடத்தான் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

**டோவ்லான், ரிவோலி, ஆஸ்ட்டர்லிட்ஸ், ஜீனா**—எத்தனை எத்தனை வியப்பூட்டும் வெற்றிகள்! எத்தனை நாடுகள் அடிபணிந்தன! எத்தனை மன்னர்கள் மண்டியிட்டனர்! அப்படிப்பட்ட நெப்போலியனுக்கு என்ன நிலை நேரிட்டது! 1814-ல் முடி பறிபோகிறது, நாடு நெப்போலியனுடைய பிடியில் இருக்க மறுக்கிறது; பழய மன்னர் வம்சத்துக்கு அரசாள அழைப்பு செல்கிறது—எல்பா தீவுக்கு அழைத்துச் செல்லப்படுகிறான்; எதிர்ப்புக்களைக் கண்டதுண்டமாக்கிய மாவீரன்.

**எல்பா தீவு!** ஈட்டியாலும் வேலாலும் குத்தி அடக்கி, வேங்கையைக் கூண்டிலிட்டு வைப்பதுபோல, நெப்போலியனை எல்பா தீவிலே சிறை வைத்தனர். ஐரோப்பாவிலே பல அரண்மனைகளிலே உலவியவன், எல்பா தீவிலே அடைபட்டுக் கிடக்கிறான்.

எத்தனை ஆண்டுகளாகப் போரிடுவது! எவ்வளவு இரத்தம் கொட்டுவது! எங்கெங்கிருந்தெல்லாம் பகை மூண்டுவிடுவது! போதுமப்பா, போதும், புகழ் நாடி அழிவினைத் தேடிக்கொண்டது போதும், இனியேனும், புண்களுக்கு மருந்திட்டு, புகையைப் போக்கி, வாழ்வைக் கவனிக்கலாம், இத்தனை ஆண்டுகளாக இரத்தம் பொங்கியது போதும், இனியாவது நிம்மதி பெறலாம் என்று எண்ணினர், பிரன்ச்சு மக்கள். விடவில்லை நெப்போலியன்! கூண்டுக் கம்பிகளைப் பெயர்த்துக்கொண்டு, புறப்பட்டுவிட்டது புலி. எல்பாவிலிருந்து தப்பித்துக்கொண்டு கிளம்பிவிட்டான் நெப்போலியன்.

நாசம் கண்டு நடுநடுங்கி இனித் தாங்கிக்கொள்ள முடியாது என்று திகிலடைந்து, நெப்போலியனை விரட்டினார்கள்; ஆனால் இலட்சக்கணக்கான பிரன்ச்சுக்காரர் நெஞ்சிலே அவனைப்பற்றிய நினைவு இருந்தபடி இருந்தது அவன் வீரன், வீரன்தான்! என்று உள்ளம் உருகிப் பாராட்டப் பலப்பலர் இருந்தனர். அவர்களெல்லாம், திரண்டெழுந்து நின்றனர் நெப்போலியனுக்கு ஆதரவு காட்ட.

மன்னன் ஓடோடிப்போய் ஒளிந்துகொண்டான், பழையபடி, பாரிசில் நெப்போலியன்! படை சேர்த்தான்; பகைவர்களைச் சந்தித்தான். அதுதான் கடைசி சந்திப்பாகிவிட்டது.

நேச நாடுகளின் படைகளின் தலைமை, **வெலிங்டனிடம்.**

போர் முறையிலும், திறத்திலும் **வெலிங்டன்** யாருக்கும் இளைத்தவனல்ல; களம் நின்று காரியமாற்றவும் சளைக்கவில்லை.

நெப்போலியன் எப்போதும்போல் வீரம் காட்டினான், ஆனால் ஏற்கனவே ஏற்பட்ட வடுக்கள், செயலிலே ஒரு தரக்குறைவைத் தன்னாலே ஏற்படுத்திவிட்டது. தயக்கம், குழப்பம், திகைப்பு மேலிட்டது செயலாற்றுகையில். கணக்குத் தவறுவதில்லை, களம் பற்றிய திட்டமிடும்போது. **வாடர்லூ** களத்திலே, கணக்கிடுவதிலும் தவறு நேரிட்டுவிட்டது. தன் படையின் ஒரு பலமான பிரிவு உடன் இல்லாதிருந்த சமயத்தில், எதிரிப் படைகள் யாவும் ஓரணி யாகிவிட்ட நிலையில், போரைத் துவக்கினான்—தாக்குதல் திகில் கொள்ளத்தக்க வகையில். ரஷியாவில் பேரிழப்பு. லிப்சிக்கில் பெருந்தோல்வி, இப்போது மட்டும் என்ன



பிடிபட்ட நெப்போலியன்

என்ற எக்களிப்புடன் நேச நாட்டுப் படைகள் போரிட்டன. இறுதி முயற்சி! என்ற நினைப்புடன் நெப்போலியன். வாடர்லூவிலே வெலிங்டன் வாகை சூடினான்—நெப்போலியன் நொந்த நிலையில், வெந்த உள்ளத்துடன் களம்விட்டுச் சென்றான், மீண்டும் முடிதுறந்திட என் கதை முடிந்து விட்டது; என் முயற்சி தோற்றுவிட்டது! என்று கூறவேண்டியதாகி விட்டது. நெப்போலியனை, நேச நாட்டினர், செயின்ட். எலினா தீவிலே சிறை வைத்தனர்.



எலினாவில் நெப்போலியன்

இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிற்று இணையில்லா இந்த வீரன் நடாத்திய போர்களினால்.

பலன் என்ன கண்டான்? தாயும் இல்லை, மனைவி மகனும் இல்லை, தத்தளித்தான் எலினா தீவில்!

நாடு கண்டபலனாவது உண்டா? இல்லை! பூத்த புரட்சி பொசுங்கிக்கிடந்தது. போரிட்டதாலே நாட்டுவளம், பொருளியல் பாழானது.

எல்லைகளை அழித்தான் போரிட்டுப் போரிட்டு—ஆனால் இயற்கையான எல்லைக்கோடு மீண்டும் அமைந்துவிட்டது.

மண்டிலங்களை அடிமைகொண்டான்—ஆனால் அவை மண்டியிட்டனவேயன்றி மடிந்துபோய்விடவில்லை; சமயம் கிடைத்ததும், சரிந்தது சீரமைப்பு பெற்றது. சாய்ந்தது. நிமிர்ந்தது.

நாட்டுப்பற்று, இனப்பற்று, தேசிய உணர்ச்சி இவைகளை அழித்தொழிக்க, படைகளால் இயலாது, பயங்கரச் சண்டைகளால் இயலாது, பார்மெச்சும் போர்த்திறன் கொண்ட நெப்போலியன் போன்றவர்கள், இருபதாண்டுகள் இரத்தம் பொங்கிடும் போர் நடாத்தினாலும், இயற்கை நீதியை அழித்திடமுடியாது என்பது விளக்கப்படுகிறது.

நாடுகளுக்குள்ளே நேசம் இருக்கலாம் — இருக்க வேண்டும்—ஆனால் ஒன்றுக்கு மற்றொன்று அடிமை என்ற நிலை இருத்தல் ஆகாது. அந்த நிலையை எவர் புகுத்தினாலும், வெற்றி கிட்டாது என்பதனை, இருபது ஆண்டுகள் இரத்தம் பொங்கிட நெப்போலியன் நடாத்திய போர் காட்டுகிறது.

அளவிலே, வளத்திலே, வரலாற்றுச் சிறப்பிலே, வெவ்வேறு அளவுள்ள அரசுகள் பல இருக்கலாம்—இருக்கின்றன—அவைகளை, வலிவுமிக்க ஒருநாடோ வல்லமைமிக்க ஒரு நெப்போலியனோ, தாக்கித் தழுவி, ஒரு பேரரசு காண விரும்பினால், அது சிலகாலம் வெற்றியாகத் தெரியுமே தவிர, இறுதியில் இயற்கை எல்லையும் தேசியமுமே வெற்றிபெறும் என்ற பாடம் கிடைத்திருக்கிறது.

கொள்வன கொண்டு, கொடுப்பன கொடுத்து, கூட்டுப்பணியாற்றி, மனிதகுல ஏற்றத்துக்குப் பல நாடுகள் பணியாற்றவேண்டுமேயன்றி, ஓரரசு, பேரரசு, வல்லரசு, என் அரசு, என்ற கொள்கைகொண்டு போரிடுவது, இரத்தம் பொங்கிடத்தான் வழிகாட்டுமே அல்லாமல், சுவையும் பயனும் உள்ள பலனைத் தாராது. வையகம் இவனைப்போல ஆற்றல் மிக்கவனைக் கண்டதுமில்லை, அவன் நடத்திய இருபதாண்டுப் போரில் பொங்கிய அளவு இரத்தம் எப்போதும் பொங்கியதுமில்லை, அவனுடைய வீரம் பயனற்றுப் போனதுபோல வேறெதுவும் இல்லை, மாவீரன் நெப்போலியன், நடாத்திக்காட்டிய வாழ்க்கை. மனிதகுலத்துக்குக் காலம் காட்டும் ஒரு பயங்கர எச்சரிக்கை. நடமாடும் எரிமலையாக இருந்துவந்தான் நெப்போலியன். தீவிலே பிறந்தான் தீவிலே இறந்தான், இடையிலே திக்கெட்டும் புகழ் முழக்கினான் — ஆனால் அந்த முழக்கம், நாடுபலவற்றிலே இரத்தம் பொங்கவும், எலும்புக் கூடுகள் நிறப்பிடவும்தான் பயன்பட்டது.

வாழ்த்த முடியவில்லை, வசைபாட மனம் இடம் கொடுக்கவில்லை, நீர் துளிர்க்கும் கண்களுடன், அவன் கல்லறைமுன் வியப்புடன் நிற்கத் தோன்றுகிறது.

அவன் கல்லறை புகுந்தான், ஆனால் அவன் கொண்டிருந்த ஓரரசு, பேரரசு, வல்லரசு, என் அரசு, எனும் விபரீத எண்ணம் கல்லறைக்கு அனுப்பப்படவில்லை. அனுப்பிவிட வேண்டும் என்று பாடம் புகட்டத்தான், அந்தமாவீரனின் கல்லறை காட்சிப் பொருளாகிநிற்கிறது.





# சூடாமணி

**எம்.எஸ். வெங்கடாசலம், எம். ஏ.**

## ஆனந்தன்

ஷேக்ஸ்பியர் தீட்டிய 'ஒதெல்லோ' நாடகத்தின் உச்சக் கட்டம் அது!

மனைவி டெஸ்டிமோனாவின் நடத்தையிலே சந்தேகம் கொண்ட ஒதெல்லோ, எப்படியும் அவளைக் கொன்றுவிடுவது என்ற எண்ணத்தோடு படுக்கையறைக்குள்ளே நுழைகின்றான், உருவிய வாளுடன்! அவளோ, ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறாள்!

உருவிய வாள் — ஓங்கிய கரம் — உள்ளத்திலோ போராட்டம்!

தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுகின்றான், ஒளி தரும் விளக்கையும் உறக்கத்திலாழ்ந்திருக்கிற மனைவியையும் மாறிமாறிப் பார்த்த வண்ணம்!

"ஒளி தரும் விளக்கே, உன்னை அணைத்துவிட்டால் மீண்டும் ஏற்றிக்கொள்ளலாம்—ஆனால் இந்த விளக்கு, ஒருமுறை அணைக்கப்பட்டால், உலகின் எந்தச் சக்தியாலும் மீண்டும் ஏற்றி வைத்திட முடியாது! இந்தப் பளிங்குச் சிலைக்குப் பழுது ஏதும் ஏற்படக்கூடாது! ஆனாலும் அவள் இறந்தாக வேண்டும்—இல்லையெனில் இனியும் துரோகங்கள் புரிந்துகொண்டே இருப்பாள்..." என்று ஏதேதோ சொல்லிக் கொள்ளுகின்றான்!

இந்தப் பகுதியை வகுப்பறையில் நான் நடத்திக் கொண்டிருந்தபோது, அளவுக்கு மீறி உணர்ச்சிவசப் பட்டுவிட்டேன்!

சாதாரணமாக, ஷேக்ஸ்பியரின் நாடகங்களை நடத்துகின்ற நேரத்தில், ஏறக்குறைய நடித்தேவிடுவேன் —ஆனால் அன்றோ, உணர்ச்சிகளின் எல்லைக்கே சென்றுவிட்டேன்—ஏறக்குறையக் கண்ணீர் ததும்புகின்ற நிலை! மாணவர்கள் கேலி செய்திடக்கூடாதே என்பதற்காக, மெள்ளக் கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு வகுப்பறையிலிருந்த மாணவர்களை ஒருமுறை சுற்றிப் பார்த்தேன்! எனக்கு ஒரே திகைப்பு!

அனைவருடைய கண்களுமே, மாணவி லில்லியை நோக்கித் திரும்பின—அவளுடைய கண்கள், குளமாகிவிட்டிருந்தன! ஏன்? எனக்கு ஒன்றும் புரியவில்லை!

அதற்குள், மணியடித்துவிடவே, வகுப்புக் கலைந்தது — நான் ஆசிரியர்கள் அறைக்குச் சென்றுவிட்டேன்!

பழைய நினைவுகள், என் உள்ளத்திலே ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி மறைந்தன.

சென்னை மாநிலக் கல்லூரியில் நான் எம். ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தநேரத்தில் எனது உள்ளத்தில் எப்படியோ புகுந்து இடம் பெற்றுவிட்ட அந்தக் காரிகை — அவளும் நானும் சேர்ந்து எழுப்பிய எண்ணக் கோட்டைகள் — கண்ட கற்பனைக் கனவுகள் — அவையனைத்தும் ஒருசேர வந்து, எனது உள்ளத்தைப் பிழிந்து எடுத்தன!

அவள் பெயரும் டெஸ்டிமோனாதான்–ஷேக்ஸ்பியர் வர்ணிப்பதைப் போன்ற பளிங்கு மேனிதான் அவளுக்கும்— அப்பழுக்கு அற்றவள்தான்!

உள்ளத்தால் ஒன்றானோம்—என்றாலும் எங்களுக்கு இடையே இருந்த இடைவெளி, மதமென்னும் தடை, எங்களை வாழ்க்கைத் துணைவர்களாக ஆகவிடவில்லை.

ஒருநாள், கடற்கரை மணற் பரப்பில் அமர்ந்தபடி கேட்டாள் "ஆனந்தன்! நீங்கள் எங்கள் மதத்திலே சேர்ந்து விடுங்களேன்! நம்முடைய காதலுக்கு எந்தவித இடையூறும் இருக்காது" என்று!

மெள்ளச் சிரித்தேன் நான், ஒன்றும் பேசாமல்!

மீண்டும் சொன்னாள், "என்னுடைய அண்ணன் ஒரே பிடிவாதமாக இருக்கிறார். நீங்கள் மதம் மாறினால்தான் நம் திருமணத்திற்கு ஒப்புவாராம்."

"டெஸ்டி! மதம் என்ன வாடகை வீடா, இந்த வீடு பிடிக்கவில்லையென்றால், வேறு வீட்டுக்குச் செல்வோம் என்று மாற்றிக்கொள்ள?" என்றேன் நான்!

"அப்படியானல் உங்கள் முடிவுதான் என்ன?''

"டெஸ்டி! மதம் மனிதனுக்காகவே தவிர, மனிதன் மதத்துக்காக அல்ல! அது வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டுமே தவிர, தடைக்கல்லாக இருக்கக்கூடாது''–



"நம் திருமணம்...?''

"ஏன்? மாதாகோவிலும் வேண்டாம்—மாரியம்மன் கோயிலும் வேண்டாம்—இருக்கவே இருக்கிறது, பதிவு அலுவலகம்''

"அதுதான் உங்கள் முடிவென்றல், நாம் ஒருவரை யொருவர் மறந்துவிடவேண்டியதுதான்''–அழுகையை அடக்கிக்கொண்டேதான் பேசினுள் அவள்!

"டெஸ்டி, நன்ருக யோசித்துப்பார்! அவசரப்பட்டு முடிவுக்கு வரவேண்டிய பிரச்சினையல்ல, இது! கிறிஸ்தவ மதமென்பது என்ன, அதிலிருக்கும் கொள்கைகள் தானே!''

"ஆம்!''

"நான் மாதா கோவிலுக்கு வராமலிருக்கலாம்—ஆனல் உங்கள் மதத்திலுள்ள மாட்சிமைமிக்க கொள்கைகளை மதித்து நடப்பவன். உண்மையாக நட—பிறருக்குத் தீங்கிழைக்காதே—அன்போடு பழகு—அறநெறியையே கடைப்பிடி—என்பனபோன்ற நல்ல கொள்கைகளைக் கடைப்பிடிப்பதுதான் கிறித்தவ தர்மம் என்றல், நானும் ஒரு உண்மையான கிறித்தவன்தான்! ஆனந்தன், 'ஆரோக்கியசாமி'யாகவோ, 'அற்புதராஜ்' ஆகவோ, ஆனல்தான் கிறிஸ்தவன் என்று அர்த்தமல்ல!''

"உங்கள் வாதங்கள் எனக்குப் புரிகின்றன. ஆனல் உலகம் ஏற்றுக்கொள்ளவேண்டுமே, ஆனந்த்!''

"உலகம்! டெஸ்டி, நீ சொல்லும் உலகத்தைச் சேர்ந்தவர்கள்—உண்மையான மதவாதிகள் தாங்கள் தான் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள்தான்—தங்களுடைய பிடிவாதத்தாலே மதத்திற்கு மாசு தேடுகிருர்கள், அதன் மாண்பை அழிக்கிருர்கள். உனக்காக நான் மதத்தின் போர்வைக்குள்ளே புகுந்துகொண்டால், உனக்கு வேண்டுமானல் அது பெருமை தரலாம்—நன்ருக யோசித்துப்பார், நீ போற்றும் மதத்திற்கு அது பெருமை தேடுவதாக ஆகுமா?''

டெஸ்டி ஒன்றும் பேசவில்லை—கண்ணீர் மட்டும் வடிந்துகொண்டு இருந்தது!

"மீண்டும் யோசித்துப்பார்'' என்று சொல்லிவிட்டு அவளை வழியனுப்பினேன். பிரிந்தோம்—மீண்டும் கூடுவோம், காலம் கனியும், என்ற எண்ணத்தில்!

ஆனல், காலம் கனியவில்லை— பிரிந்தவர்கள் கூடவில்லை! இன்று அவளெங்கோ—நானெங்கோ!

"இந்தப் பளிங்குச் சிலை'' என்று ஒதெல்லோ பேசுகிருனே, அந்தக் கட்டத்தில், எனது பளிங்குச் சிலை என் நினைவுக்கு வந்தது — கண்கள் என்னைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்று அஞ்சிட வேண்டிய நிலை ஏற்பட்டது; வகுப்பறையில்!

ஆனல் அவள்—லில்லி—ஏன் அழவேண்டும் அப்போது? 'ஒதெல்லோ' நாடகக் கதாநாயகிக்கு ஏற்பட்ட நிலை அவளுக்கோ, அவளது நெருங்கிய உறவினர்களுக்கோ ஏற்பட்டிருக்கக்கூடுமா? இல்லையென்ருல், அவள், தன்னையும் மறந்து கண்ணீர் வடித்திடக் காரணம் என்ன?

## டேவிட்

"டெஸ்டி! 'ஆனந்தன்' 'ஆல்பர்ட்' ஆகவேண்டும்! அப்போதுதான் நான் இந்தத் திருமணத்திற்கு இடந்தருவேன்'' என்று கண்டிப்பாகக் கூறினேன், அன்று!

அழுதாள்— புலம்பினுள்— வேறு மாக்கமில்லையா என்ருள்–தலையசைத்தேன், இல்லை என்கிற பாணியில்!

பாவம், என்ன பாடுபட்டிருக்கும் அவளுடைய நெஞ்சம் — எவ்வளவு சபித்துக் கொட்டியிருப்பாள் என்னை!

அவளுடைய வேதனை விரக்தியாயிற்று–வாழ்க்கையில் எதிலும் பற்றற்ற நிலை ஏற்பட்டது—கன்னி மாடத்திலே தஞ்சம் புகுந்தாள்!

புகுவதற்குமுன், நானும் கேடடேன், "இதுதான் உன் முடிவா?'' என்று!

"ஆம்'' என்ருள், அழுத்தந்திருத்தமாக — சற்றேனும் சலனமில்லா முகத்தோடு புறப்பட்டுவிட்டாள்!

என் முன்னர் அப்போது இருந்தது, இரண்டு கேள்விகள்! டெஸ்டியை ஆனந்தனைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிப்பதா, அல்லது, கன்னிமடத்துக்கே செல்லட்டும் என்று விட்டுவிடுவதா — இரண்டுமே வேதனை நிரம்பிய முடிவுகள்தான்.

எனினும் ஏதாவதொன்றிற்கு நான் வழி விட்டுத்தான் தீரவேண்டும் என்கின்ற நிலையில், கன்னி மடத்திற்கு அனுப்புவதே சிறந்தது என்று முடிவு கட்டிவிட்டேன்!

பூத்துக் குலுங்கும் எழில்—தளதளக்கும் மேனி—வாழ்க்கையின் சுகங்களை அனுபவிக்கவேண்டிய பருவம்—ஆனல் அவையெல்லாம் காட்டினில் காய்கின்ற நிலவாகிவிட்டது, அவளைப் பொறுத்தவரை!

அந்த மணி, ஆரமாகத் தொடுக்கப்படவுமில்லை—யாரும் அணியவுமில்லை — சூடாமணியாகவே இருக்கிறது!

அதற்குக் காரணம் நான், என்று நினைக்கின்ற போது என்னை நானே சபித்துக் கொள்கிறேன். அந்த அளவுக்கு மதத்திலே, பற்று, பிடிப்பு, அப்போது! ஆனல், அவையெல்லாம் இப்போது எங்கே? ஏன் என்னைவிட்டுப் பறந்துவிட்டன?

சுயநலம் காரணமா? அல்லது புதிய சூழ்நிலை காரணமா?

என்னுடைய இப்போதைய நிலையை என்னருமைத் தங்கை டெஸ்டியிடம் எப்படி நான் விளக்குவேன்?

மதத்தைக் காரணம் காட்டி, என் திருமணத்திற்குத் தடை விதித்தீர்களே, இப்போது நீங்கள் செய்வது மட்டும் நியாயமா, என்று கேட்டால் என்ன பதில் சொல்வேன்?

ஆனந்தன்—டெஸ்டி திருமணத்திற்குத் தடையாக நின்ற, மதம், டேவிட்—மணிமேகலை திருமணத்திற்குத் தடையாக ஏனில்லை என்று கேட்டால், என்ன காரணம் சொல்லி அவளைச் சமாதானப்படுத்துவேன்?

பத்து நாட்களுக்கு முன்னர்தான், இதே பூங்காவில் மணிமேகலையைச சந்தித்தேன், பிச்சைக்காரியாக!

"ஆதரிஞ்சண்டிபாபு," என்று சிட்டாகப் பறந்தவண்ணம், குயிலினும் இனிய குரலில் பாடினுள்—பிச்சை எடுத்தாள்!

பாட்டு வந்த திசை நோக்கிப் பார்த்தேன்—பாட்டு மாறியது, ஆனுல் அதே இசை!

"ஆதரிப்பீரே, ஐயா, ஆதரிப்பீரே!" — பாடிக் கொண்டே என்னை நெருங்கிவிட்டாள்.

பாலைவனத்திலோர் பசுஞ்சோலைபோல், இந்தப் பம்பாய் நகரில் அழகு தமிழில் ஒரு மங்கை பாடும்போது, நான் வேண்டாமென்று சொல்லுவேன்?



சுவைத்துக்கொண்டே இருந்தேன். திடீரென்று ஒரு எண்ணம். "அம்மா! நீ எந்த மொழியில் வேண்டுமானுலும் பாடு! ஆனுல் தமிழில் மட்டும் பாடாதே" என்றேன்!

அவளோ, "ஏன்?" என்ருள், திகைப்புடன்!

"இங்கே யாராவது பிச்சையெடுப்பதைப் பார்த்தால் 'மதராஸ் வாலா' என்று சொல்கிருர்கள்—மானம் போகிறது" என்றேன்.

"என்ன செய்வதுங்க! வயிற்றைக் கழுவியாக வேண்டுமே!"

"ஏனம்மா, உனக்கு உற்ருர் உறவினர் யாருமே இல்லையா?" இந்தக் கேள்வி அவளுடைய இதயத்தில் எத்தகைய எண்ணங்களை ஏற்படுத்தியதோ நானறியேன்!

அவள் ஏதும் பதில்சொல்லவில்லை—குனிந்த தலை நிமிரவில்லை!

நானும் அவளையே பார்த்தவண்ணமிருந்தேன் — கண்ணீர் அவளுடைய பாதங்களை நனைத்தன!

அவள் சோகக்கதை என் உள்ளத்தை உலுக்கிவிட்டது! "சரி! நீ எங்கும் போகத்தேவையில்லை —என் வீட்டிலே இரு. உன் விருப்பப்படி இருக்கலாம்" என்றேன். அவளும் ஒப்பினுள்.

பஞ்சும் தீயும் பக்கத்திலேயிருந்தால் விளைவு என்ன ஆகும்?

அவளில்லையென்ருல் நானில்லை—எனக்கு வாழ்வில்லை—என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது இப்போது! இருதலைக்கொள்ளி எறும்பாகிவிட்டேன். இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்தநிலை, குழப்பம்? எப்போது விடிவுகாலம்?

## மணிமேகலை

இளமையிலேயே தாய் தந்தையரை இழந்த எனக்கு, இருந்த ஆதரவு, என் அண்ணன்தான்!

எனக்குப் பத்துவயதாக இருந்தபோது பம்பாய்க்கு வந்தோம்—வயிற்றைக் கழுவப்படாதபாடு!

பாவம், அண்ணன் நாள்முழுவதும் மூட்டை சுமந்தார்—பிறகு, மெள்ள ஒரு சேட்டிடம் கணக்கப்பிள்ளையாக ஆனுர்.

அந்தச் 'சேட்'டை நாங்கள் மனதாரப் புகழ்ந்தோம் —அவர்தான் எங்கள் கண்கண்ட தெய்வமாகத் தோன்றினுர்.

ஆனுல், பாவி அவன், இந்தக் கெட்ட எண்ணம் வைத்திருப்பான் என்று எங்களுக்கு எப்படித்தெரியும்?

அண்ணனுக்கு அவன் கொடுத்துவந்த சலுகைகள், செலுத்திய அன்பு, எல்லாவற்றையும் பார்த்து எனக்கே ஆச்சரியமாக இருந்தது! அவன் செலுத்திய அன்பு உண்மையான அன்பு அல்ல, என்பது சமீபத்தில்தான் புரிந்தது, எங்களுக்கு!

அன்று, என் அண்ணனை எங்கோ ஓரிடத்திற்கு அனுப்பிவிட்டு, நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்தான், அந்தச் சேட்!

முதலாளி ஆயிற்றே என்று முகமலர்ச்சியோடு வரவேற்று, பாயை விரித்து அமரச் செய்துவிட்டு, 'காபி' தயாரித்துக்கொண்டிருந்தேன்.

அவன் நேராக சமையல் கட்டுக்கே வந்துவிட்டான் –வந்து எதுவும் பேசாமல் என்னைத் தொட்டிழுத்துப் பலவந்தப்படுத்த ஆரம்பித்தான்!

எனக்கு வியர்த்துக் கொட்டியது — எதிர்பாராத இந்தத் தாக்குதலைச் சமாளிக்க என்னுலானவரை முயன்றேன். வெளியில் தெரிந்தால் மானம் போய்விடுமே என்ற பயம் எனக்கு! ஆனுலும் அவனுடைய முரட்டுப் பிடியிலிருந்து தப்புவது அவ்வளவு சுலபமாக இல்லை.

எனவே கூச்சல்போட ஆரம்பித்தேன் — கூட்டம் கூடிவிட்டது—அதற்குள் எங்கிருந்தோ என் அண்ணனும் வந்துவிட்டார்.

உழைத்து உரமேறிய கைகள் அவனைப் பதம் பார்த்தன — அப்படியும் ஆத்திரம் அடங்கவில்லை அவருக்கு! அருகிலிருந்த அரிவாளை எடுத்து ஓங்கினுர்!

அதற்குள் கூடியிருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள்—தப்பினேன், பிழைத்தேன் என்று 'சேட்' ஓடிவிட்டான்!

அடிபட்ட நாகம் சும்மாயிருக்கவில்லை — என் அண்ணன்மீது திருட்டுக் குற்றம் சாட்டியிருக்கிறது!

பணம் பாதாளம் வரை பாயும் என்பார்களே, அது சரியாகிவிட்டது!

என் அண்ணன் சிறையில் தள்ளப்பட்டார் — நான் நடுத்தெருவில் விடப்பட்டேன்.

அந்த நேரத்தில்தான் டேவிட் அவர்களைச் சந்தித்தேன்—இப்போது அவர்களுடைய வீட்டில், அவர்களுடைய குடும்பத்தில் ஒருத்தியாக இருக்கின்றேன்.

அவருடைய தங்கை லில்லியும் நல்ல பெண்—வாஞ்சையோடுதான் என்னிடம் நடந்துகொள்ளுகிறாள்!



ஆனால் லில்லி. அவரைப் பொறுத்த வரை முன்போல நடந்துகொள்வதில்லையாம்—அவரே சொல்லுகிறார்! அவரைப் பொறுத்த காரியங்களை என்னிடமே விட்டு ஒதுங்கி விடுகின்றாள்!

ஜாடை மாடையாக ஏதேதோ கிண்டல் செய்கின்றாள்—என்னதான் அவள் எண்ணம்?

அவருக்கும், எனக்கும் ......... சே,சே! எனக்கே இந்த எண்ணம் ஏற்படக்கூடாது! அவரெங்கே, நானெங்கே!

அவர் ஒரு எஞ்சினீயர்—நானோ பிச்சைக்காரி!

அவர் கிறிஸ்தவர்—நான் இந்து!

எப்படி இருவருக்கும் பொருந்தும்? ஒன்றாகவே கொஞ்ச நாள் வாழ்ந்துவிட்டோம்! இனியும் வாழ முடியும்! ஆனாலும், எனக்கு ஏன் அந்தப் பேராசை?

என்னதான் என் மனம் அவரையே சுற்றிச் சுற்றி வந்தாலும், அந்த எண்ணத்தை விரட்ட எப்படியெப்படியோ முயலுகிறேன்.

முடிவு என்ன ஆகுமோ, காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

## இராசன்

பழி வாங்கத் துடித்தான்—பழி சுமத்தினான், என் முதலாளி உருவத்திலேயிருக்கிற அந்த முதலை, பணத் திமிங்கிலம்!

ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை என்று மாஜிஸ்டிரேட் அறிவித்ததும், நீதிமன்றத்திலேயே கதறிவிட்டேன்; சிறைத் தண்டனையைக் கண்டு நான் அஞ்சவில்லை—சித்திரவதையானாலும் தாங்கிக்கொள்ள முடியும் என்னால்!

ஆனால் என்னருமைத் தங்கை மணிமேகலை என்னைத் தவிர வேறு நாதியற்ற அவள், பாவம் என்ன செய்வாள்—எப்படிக் காலம் தள்ளுவாள்—என்னைச் சிறைக்குள்ளே தள்ளிய அந்தச் 'சேட்'டும், அவன் போன்றவர்களும் இன்னும் என்னென்ன செய்யக் காத்திருக்கின்றார்களோ—அவர்களது கழுகுக் கண்களிலிருந்து அவள் தப்புகின்றாளோ, அல்லது பாவம் இரையாகிவிடுகின்றாளோ—என்று, சிறைக் கதவுகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்ட பிறகு, பலவாறாக எண்ணியெண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தேன், கண்ணீர் வடித்தேன்!

ஆனால், நல்ல வேளையாக நான் பயந்தது ஏதும் நடக்கவில்லை! ஒரு நல்ல குடும்பத்தில் இப்போது அண்டியிருக்கிறாள்!

அவளைக் காப்பாற்றிய, காப்பாற்றி வருகின்ற அந்தப் புண்ணியவான், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்போல் தோன்றுகிறது—இல்லையெனில் இந்த நல்ல எண்ணம் வருமா?

அவருடைய தங்கைக்குத்தான் என்ன! ஆடம்பரம் இருக்கிற இடத்தில் அகம்பாவம் இருக்குமென்கிறார்கள்—ஆனால் அகம்பாவம் ஒரு சிறிதும் இல்லையே! மூவரும் சேர்ந்து என்னைச் சிறையில் பார்க்கவந்த நேரத்தில், மிகவும் வாஞ்சையாக, ஏதோ நீண்ட நாள் என்னோடு பழகியவர்களைப் போலல்லவா பேசினார்கள்.

கங்காராம் சேட்டைப்போல் கல் நெஞ்சர்களும், சூதுமதி படைத்தோரும் வாழ்கின்ற உலகில், டேவிட்டையும் லில்லியையும் போன்ற நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்! இல்லையெனில் என் தங்கை மணிமேகலை இந்நேரம் என்ன ஆகியிருப்பாள்!

அவர்களுக்கு நான் சிரம் வணங்கக் காத்திருந்தேன்—அதே சமயத்தில் விடுதலை நாளை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன், என்னைக் காராக்கிரகத்தில் தள்ளிய அந்தக் கொடுமையாளனை எப்படியாவது பழி வாங்குவது என்ற திட்டத்துடன்!

விடுதலை நாளும் வந்தது—என்னருமைத் தங்கை மணிமேகலையோடுடேவிட்டும்,லில்லியும் சிறைவாயிலுக்கு வந்திருந்தனர், என்னை வரவேற்க!

நால்வரும் காரில் சென்றுகொண்டிருந்தோம். சற்று நேரம் அமைதி நிலவியது எங்களிடையே! நானோ, பழி வாங்கிடத் திட்டம் தீட்டியபடி இருந்தேன்!

அப்போது டேவிட் அன்றைய செய்தித்தாளை நீட்டி



''பார்த்தீர்களா இராசன், உங்கள் சேட்டின் கதியை!!' என்றார்.

ஆவலோடு நான் செய்தியை வாசித்தேன் ''வட்டிக் கடை வைத்திருக்கும் கங்காராம் சேட் என்பவர் நேற்று மாலை, அவரது வீட்டில் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து சுமார் ஏழு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கள்ளத்

தங்கம் கைப்பற்றப்பட்டிருக்கிறது'' என்று பார்த்ததும் எனக்கு ஒரு வகையில் அதிர்ச்சி—ஆனாலும் மகிழ்ச்சி! அவன் பழிவாங்கப்பட்டான், என்று முணுமுணுத்தன என் உதடுகள்!

''நல்ல வேளை நீங்கள் இப்போது அவருக்குக் கணக்கப் பிள்ளையாக இல்லை'' என்றார் டேவிட்.

''ஆம்'' என்றேன் நான், கைது ஆகியதும் நன்மைக்குத்தான் என்ற எண்ணத்துடன்!

## லில்லி

மணிமேகலை, இடையிலே வந்தாள், எப்படியோ எனது அண்ணன் இதயத்திலே இடம் பெற்றுவிட்டாள் அதுவும் நன்மைக்குத்தான்!

அதுவரை என் உள்ளத்திலேயிருந்த போராட்டம், அச்சம், தயக்கம், இப்போதுதான் குறைந்திருக்கிறது!

போன வாரம் துணிவை வரவழைத்துக்கொண்டு, என் ஆவலை வெளியிட்டேன், எனது அண்ணனிடம். அவரும் அமைதியோடு கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு, ''சரி, லில்லி! அவருடைய பெயரென்ன?'' என்றார்.

''ஆனந்தன்'' என்றேன் நான்!

''ஆனந்தனா?......''—என்று அவர் கேட்ட கேள்வியில் திகைப்பு நிரம்பியிருந்தது.

''ஏன் அண்ணா! கிறிஸ்தவர் அல்லவே என்று பார்க்கிறீர்களா?'' என்றேன் நான்!

''இல்லை, லில்லி! என்னுடைய கண்கள் திறந்துவிட்டன. ஒருமுறை செய்த தவறை மீண்டும் செய்யமாட்டேன். அது இருக்கட்டும். உன் விருப்பம் அப்படியென்றால் மிகவும் மகிழ்ச்சி. அது நிறைவேற வேண்டும் என்று மனதார விரும்புகிறேன். ஆனால் ஒன்று. அவரிடம் மிக எச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும், மதம் மாறித்தான் ஆகவேண்டும் என்று கேட்டு வைக்காதே''



''இல்லை அண்ணா. நான் கேட்கமாட்டேன். அக்காவுக்குக்கூட கடிதம் எழுதியிருக்கிறேன்—விரைவில் பதில் வரும்'' என்றேன்.

''உம், நல்ல வேளை நீயே எழுதிவிட்டாய்!'' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டார்!

ஆனால் அதன் பிறகு அவருள்ளத்தில் என்றுமிருக்கிற குதூகலம் இல்லை. ஏனோ, எதையோ பறி கொடுத்தவர்போல் காணப்பட்டார்!

ஆனந்தனுக்கும் எனக்கும் திருமணம் நடைபெறுவதை உதட்டளவில் ஒப்புக்கொண்டாரே தவிர, உள்ளம் அதற்கு இடந்தரவில்லை, என்றுதான் நான் எண்ணுகின்றேன்,

இல்லையென்றால் மகிழ்ச்சி அடையவேண்டிய நேரத்தில் மருட்சி ஏன்?

இந்த நேரத்தில் என் இதயத்தைப் பிளக்கின்ற கோடரியாக அந்தக் கடிதம் வந்தது, ஆனந்தனிடமிருந்து!

அவர் என்னைக் காதலிக்கிறார், ஏற்றுக்கொள்வார் என்ற எண்ணத்தில்தானே, இத்தனைத் திட்டங்கள் தீட்டினேன், கோட்டைகள் கட்டினேன்! அடித்தளமே இடிந்து விழுந்தால் கோட்டை என்ன ஆகும்?

என்னை ஏற்றுக்கொள்ள அவருக்குத் தயக்கம் ஏன்?

இந்த முடிவு தெரிந்தால் என் தமக்கை டெஸ்டிமோனாவும், அண்ணன் டேவிட்டும் என்ன எண்ணுவார்கள் என்னைப்பற்றி?

ஒரு சமயம் இது அண்ணனுடைய கைங்கரியமாக இருக்குமோ? அதனால்தான் கடந்த நான்கு நாட்களாக அவர் எதையோ சிந்தித்தவண்ணம் திட்டம் தீட்டிக் கொண்டு இருந்தாரா?

என் இதயமே வெடித்துவிடும்போல் இருக்கிறது! இந்த ஆண்களுக்குத்தான் எவ்வளவு சுயநலம்! தங்களைப் பொறுத்தவரை எந்தக் கட்டுப்பாட்டையும் தளர்த்திக் கொள்கிறார்கள்—ஆனால் பெண்களை அந்தக் கோரப் பிடிகளுக்குப் பலியாக்கியவண்ணமிருக்கிறார்கள்!

அதற்கு முதல் பலி டெஸ்டிமோனா—அடுத்த பலி நானா?

அன்று, வகுப்பறையில் நாடகக் கதாநயகி டெஸ்டிமோனாவின் பரிதாபத்துக்குரிய நிலை கண்டு, கண் கலங்கினேன்—என் தமக்கை நிலையும் அதுவும் ஏறக்குறைய ஒன்றாக இருப்பது கண்டு!

இன்று என் நிலை? நினைக்கவே நடுங்குகிறது நெஞ்சம்!

## டேவிட்

''ஆனந்தன்''—இந்தப் பெயரை லில்லியின் வாயிலிருந்து கேட்டதும் அதிர்ச்சி எனக்கு!

டெஸ்டிமோனாவைக் காதலித்தவர் பெயரும் ஆனந்தன்தான் — ஒரு சமயம், அதே ஆனந்தன்தானா லில்லி கூறுவதும், என்ற சந்தேகம் எழுந்தது எனக்கு!

கடைசியில் நான் சந்தேகப்பட்டது உண்மையாகிவிட்டது—ஆம், அதே ஆனந்தன்தான், லில்லியினுடைய உள்ளத்தில் இடம்பெற்றிருப்பதும்!

ஆனந்தன்—டெஸ்டி திருமணம் நடைபெறவில்லை, நடைபெற நான் அனுமதிக்கவில்லை! ஆனால், ஆனந்தன்—லில்லி திருமணத்தை அனுமதித்துவிட்டேன்! ஒரு கண்ணுக்கு வெண்ணெய், ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பா, என்ற கேள்வி என் உள்ளத்தை அரித்தெடுத்தது.

உண்மையை அறிந்தால் டெஸ்டி என்ன எண்ணுவாள்? என்மீது எத்தகைய எண்ணம் பிறக்கும்? அவளுடைய போக்கு எப்படி இருக்கும்? தனக்குக் கிட்டாத ஒருவரைத் தன் தங்கை மணந்துகொள்ளப்போகிறாள் என்

ருல், அதுகண்டு பொருமைப்படுவாளா, அல்லது பெரு மகிழ்வுகொள்வாளா, என்கிற சந்தேகம் எனக்கு!

பிரச்சினை பெரியது — சகோதரிகளுக்குள்ளே போட்டி! எப்படி இதைத் தீர்ப்பது நான்?

எனவே டெஸ்டி மோனுவுக்குத் தந்திகொடுத்தேன்—உடனடியாகப் புறப்பட்டு வரும்படி! அவளே தீர்க்கட்டுமே அந்தப் பிரச்சினையை—அதுதானே நல்லது, என்ற எண்ணத்தில்!

அவளும் வந்தாள், கன்னிமாடத்து உடையோடு!

அவள் வந்த பிறகு, இன்னும் பெரிய அதிர்ச்சிகள், குழப்பங்கள் காத்திருந்தன, எனக்காக!

உடனடியாகப் புறப்பட்டு வருமாறு லில்லியும் தந்தி கொடுத்திருந்தாளாம் — ஆனந்தன் அவளைத் திருமணம் செய்துகொள்ள மறுத்துவிட்டாராம், கடிதத்தின்மூலம்.

இவற்றையெல்லாம் இவள் ஏன் என்னிடம் கூற வில்லை—தயக்கமா, அச்சமா?

"எப்படியோ, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியது—தங்கை லில்லியை வாழவைக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது டெஸ்டி! நான் செய்த தவறுகளை மன்னித்துவிடு" என்றேன், நான்!

"நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை—எல்லாவற்றிற்கும் காரணம் சூழ்நிலைதான். நானும் பம்பாய்க்கு வந்திருந்து, இதுபோன்ற சூழ்நிலையில் என் உள்ளத்திலே காதல் அரும்பியிருந்தால் எனக்கும் அனுமதி தந்திருப்பீர்கள். இங்கு, புதிய இடத்தில், மொழி நம்மை இணைக்கிறது—தாயகத்தில் பிரித்து வைக்கின்ற சாதி மத பேதங்கள் நம்மைவிட்டு மறைகின்றன இந்த இடத்தில்" என்று, அருமையானதொரு விளக்கத்தைத் தந்தாள்!

"சரி! இதோ வருகிறேன்" என்று எங்கோ வெளியே புறப்பட்டுவிட்டாள்.

## டெஸ்டிமோனு

காதலில் தோல்வி, அதனுல் ஏற்பட்ட விரக்தி, இவற்றின் விளைவாகக் கன்னி மாடத்திலே தஞ்சம் புகுந்தேன்!

இனி எனக்கு வாழ்வில் என்ன சுகம் இருக்கப்போகிறது, என்ற எண்ணம் எனக்கு!

ஆனுலும் ஒரு சபலம்—எப்போதாவது என் ஆனந்தன் வருவார், அவருடைய மனம் மாறும், கன்னி மாடத்திலேயிருக்கிற நான் வாழ்க்கைப் பூங்காவிலே உலவுவேன்—என்று உள்ளத்திலே கோட்டை எழுப்பிக்கொண்டிருந்தேன்.

ஆனுல் அந்த நம்பிக்கைத் தீயையும் அணைத்துவிட்டது, லில்லியின் கடிதம்! எனது உள்ளத்திலே நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிற அதே ஆனந்தனைத்தான் லில்லியும் காதலிக்கிருளாம்!

முதலில் பெரும் அதிர்ச்சியாக இருந்தது எனக்கு—என்ருலும் என்னை நானே தேற்றிக்கொண்டேன்!

காதல் தோல்வி என்னைக்கன்னிமாடத்துக்கு அனுப்பியது—அவளுக்கும் அதுபோன்ற தோல்வி ஏற்பட்டால் அவளை எங்கே அனுப்பும் என்று யார் கண்டது?

இந்த எண்ணங்களோடு ஒரு முடிவுக்கு வந்தேன். ஆனந்தனைக் காணச் சென்றேன்.

என்னைக் கண்டதும்அவருடைய முகத்திலே மலர்ச்சி ஆச்சரியம் அனைத்தும் வெளியாயின!

"டெஸ்டி! எங்கே இப்படி? எப்போது வந்தாய்? இப்போது எங்கிருக்கிருய்?" என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக்கொண்டே போனுர்— அணைந்த விளக்கு எரிவதுபோன்று இருந்தது, அவருடைய முகம்!

"உங்களிடம் ஒரு பெரிய உதவி நாடி வந்திருக்கிறேன்"

"உதவியா? டெஸ்டி! நீ ஆணையிட்டாலே நான் எதையும் செய்யக் காத்திருக்கிறேன். சொல் டெஸ்டி!" என்ருர் பரபரப்போடு!

"உங்கள் வகுப்பில் லில்லி என்ற ஒரு பெண் படிக்கிருளல்லவா, அவள்......?"

"ஆம், அவளுக்கென்ன? யார் அவள்?"

"அதிருக்கட்டும்; அவளைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"நல்ல, அடக்கமான பெண்—நல்ல குடும்பத்துப் பெண்ணுகவே தெரிகிறது."

"அவளுக்கும்—உங்களுக்கும்......"

"என்ன டெஸ்டி, என்னைப்பார்த்துச் சந்தேகப்படுகிருய்? என்று நீ எனக்குக் கிடைக்கவில்லையோ, அன்றே நான் நடைப்பிணமாகிவிட்டேன். அவள்கூட ஒரு கடிதத்தில், நேரில் பேசக் கூச்சப்பட்டுக்கொண்டு ஏதேதோ எழுதியிருந்தாள். நான் கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டேன், என்னை மறந்துவிடு, என்று"

"அவசரப்படுகிறீர்களே! நான் உங்களைச் சந்தேகிக்கவில்லை. அவள் வேறுயாருமல்ல, என் தங்கை!

"உன் தங்கையா...?" அதிர்ச்சியும், ஆச்சரியமும் கலந்த குரலில் கேட்டார்!

"ஆம்! என் தங்கைதான்! அவளுக்காக வாதாடவே இப்போது வந்திருக்கிறேன். என்னை மறந்துவிடுங்கள்—கன்னிமாடத்தில் புகுந்த நான் கன்னிமாடத்திலேயே வாழ்ந்துவிடுகிறேன். அவளை ஏற்றுக்கொள்ளுங்கள்"

சற்றுநேரம் அமைதி நிலவியது. "எனக்காகவாவது ஏற்றுக்கொள்ளமாட்டீர்களா ஆனந்த்!" என்றேன்.

"டெஸ்டி, நீ என்னைக் குழப்புகிருய்! நீ நிறைந்திருந்த உள்ளத்தில் வேருெருத்தியின் நிழல்கூடப் படாமல் பார்த்துக்கொண்டு வருகின்றேன். அந்த எண்ணத்தை இப்போது கைவிடச் சொல்லுகிருயே, டெஸ்டி!"

"எனக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது! ஆனுல், வேறு வழியில்லை. பாவம் அந்தப் பளிங்கு உள்ளத்தின் கனவுகளை உடைத்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் இந்த முடிவுக்கு உங்களை அழைக்கின்றேன்—எனக்காக........"

"சரி, டெஸ்டி! இந்த ஆனந்தன் இப்போது 'ஆல்பர்ட்' ஆகவும் தயார்! மதத்தின் பிடிப்பு, சொந்த மண்ணைவிட்டு இங்கு வந்ததும் மறைந்துவிட்டது"

"தேவையில்லை, ஆனந்த்! அன்று நீங்கள் சொன்னீர்களே, மதம் ஒரு வாடகை வீடல்ல, என்று, அது இன்னமும் என் உள்ளத்தைவிட்டு மறையவில்லை! என் அண்ணனும் மாறிவிட்டார்—அவர் திருமணம் செய்துகொள்ளப் போவது உங்கள் மதத்தைச் சேர்ந்த பெண்ணை........."

"அப்படியா...?" என்ருர் அகலக் கண்களை விரித்தபடி!

என் வேண்டுகோள் நிறைவேறியது. ஆனந்தன்—லில்லி திருமணம், டேவிட்—மணிமேகலை திருமணமும் ஒரே நாளிலே நிறைவேறியது, பதிவு நிலையத்தில். சாட்சிகள் நானும், மணிமேகலையின் அண்ணன் இராசனும்!

பிறகு, எனக்கு அங்கென்ன வேலை—புறப்பட்டுவிட்டேன், மீண்டும் கன்னிமாடத்திற்கு!

*

# அந்திக்கலம்பகம்

வத்சலா:- நாங்க எல்லோருமே இன்றைக்கு உன் வீட்டைத் தேடி வந்திருக்கிறோமே, பொன்னி! ஏன், என்ன காரணம் என்று சொல்லு, பார்ப்போம்.

பட்டு:- நான் சொல்லட்டுமா, பொன்னி என்ன எண்ணிக்கொண்டிருக்கா, என்பதை......

வத்சலா:- பாரேண்டி, ஏமா! பட்டு சொல்றுளாம், பொன்னி சொல்ல வேண்டியதை......

ஏமலதா:- வக்கீலாச்சே! கட்சிக்காரர் என்ன நினைக்கிறார் என்பதை எடுத்துச் சொல்கிற வேலைதானே... அதே பழக்கம், இங்கேயும்..

வத்:- சொல்லவேண்டிய இடத்திலே சொல்ல சந்தர்ப்பம் கிடைக்காததாலே, இப்படி பட்டு, தன்னோட வக்கீல் வேலையை நம்மிடம் காட்டிண்டிருக்கா......

பட்டு:- வக்கீல் வேலையிலே நான் மக்கு என்றுதானே கேலி செய்கிறே, செய்யம்மா, செய். ஆனா எத்தனை காலம் கேலி பேசுவே. நல்லதா ஒரு கேஸ் கிடைத்துதானா, பிரமாதமான 'பேர்' வரும், அதுவரையிலே பேசுவே, பேசு......

ஏமலதா:- ஏண்டி, பாபா, அவ மனதைச் சங்கடப்படுத்தறே, வக்கீலுக்குப் படித்துவிட்டு வெறும் வாயை மெல்லவேண்டி இருக்

## அண்ணாதுரை

கேன்னு, பட்டு ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கா— நீ வேறே கேலி பேசினா, வத்சலா! பட்டுவோட மனதிலே வேதனை அதிகமாகுமேல்லோ . ...

பட்டு:- எனக்கொண்ணும் வேதனையுமில்லே, கோபமுமில்லை......



**மனோன்மணி:-** முகமே செவந்துபோய் இருக்கு......கண்களெல்லாம்கூடச் சிகப்பாயிண்டு வர்ரது......

**பொன்னி:-** செ! சே! கோபத்தாலே சிகப்பாகவில்லே; பட்டுவுக்கு கண்களே அப்படித்தான்......செவ்வரி படர்ந்த கண்கள்......

**ஏமலதா:-** அது என்னடி பொன்னி, செவ்வரிக் கண்கள்! நீலோற் பலம் போன்ற கண்கள், கமலம் போன்ற கண்கள்னு சொல்லுவா கேட்டதுண்டு....நீ ஏதோ புதுசா சொல்றியே, செவ்வரின்னு......

**பொன்னி:-** நீங்க சொல்கிற நீலோற் பலம் போன்ற கண்கள் புராணத்திலே நிறைய உண்டு. நான் சொல்ற செவ்வரி படர்ந்த கண்கள் என்பது, தமிழ் இலக்கியத்திலே, சங்க இலக்கியத்திலே பார்க்கலாம்......

**பட்டு:-** என் கண்கள் புராணக் கண்ணுஇருக்கட்டும், பொன்னி சொல்கிற கண்ணுஇருக்கட்டும்...

**மனோன்மணி:-** எந்தக் கண்ணு இருந்தாலும், நல்ல கண்; அதிலே சந்தேகமில்லே......ஒளி நிரம்ப இருக்கிறதாலே, ஒரு தனி அழகே ஏற்பட்டிருக்கு......

**ஏமலதா:-** அழகுக்காகவே இப்பத்தான், வயது பத்து தாண்டிய உடனே, போட்டுக்கொள்ருளே, மூக்குக் கண்ணுடி......

**மனோன்மணி:-** அழகுக்காக, மூக்குக் கண்ணுடி போட்டுக் கொள்ளக் கூடாதே, ஆபத்தல்லவா — நல்ல நிலேயிலே இருக்கிற கண்கள்கூடக், கண்ட கண்ணுடி போட்டுக் கொள்றதாலே கெட்டே போய்விடுமே...

**பொன்னி:-** அழகுக்காக, இந்தக் காலத்திலே, எதையும் செய்துகொள்கிற பழக்கம் நிறைய......

**வத்சலா:-** அதுதான் சரியில்லே என்கிரு மனோன்மணி —டாக்டரல்லவா...... அவளுக்குத் தெரியாதா...

**பட்டு:-** மூக்குக் கண்ணுடி போட்டுக்கொண்டிருக்கிற லேடி டாக்டர்கள் எவ்வளவு பேரைக் காட்டணும், சொல்லுங்கோ. இப்ப இழுத்துண்டு வரரேன், டஜன் டஜனு......

**ஏமலதா:-** நீ செய்வடி, பட்டு! நீ நூத்துக் கணக்கில்கூட இழுத்துண்டு வருவே, அதிலே எங்களிலே யாருக்கும் சந்தேகமே கிடையாது......

**பட்டு:-** இதைப்போல, இரண்டு அர்த்தம் மூணு அர்த்தம் இருக்கிற விதமாப் பேசக்கூடாது, ஆமாம். இதே போலத்தான், சீனுக்காரன் பேசிப் பேசி குட்டையைக் குழப்பிண்டிருக்கான்......

**பொன்னி:-** சீனன்னு பட்டு சொல்லவே, கவனம் வந்தது, ஜப்பான் இருக்கே, அங்கே இப்ப, அழகுக்காக, என்ன செய்துகொள்கிருர்கள் தெரியுமா......... பேப்பர்லே வந்திருக்கே......

**பட்டு:-** ஜப்பான் நாட்டுப் பெண்கள் சிலவேளை, அவர்களுடைய நாட்டு உடையும், சில வேளைகளிலே அமெரிக்க நாட்டு உடை போலவும் போட்டுக் கொண்டு, அழகா இருக்கா......

**ஏமலதா:-** எந்த உடையும், அழகா இருப்பவா போட்டுக் கொண்டாதான், அழகா இருக்கும்....பொருத்தமா இருக்கும்......

**பட்டு:-** நான் ஒண்ணும் அழகுப் போட்டியிலே எனக்கு மெடல் தந்ததாச் சொல்லலியே......

**ஏமலதா:-** பாரேன், வத்சலா! எதைச் சொன்னலும், ஏதாவது ஒரு தப்பர்த்தம் கண்டு பிடிக்கத் துடிக்கிரு இந்தப் பட்டு. நான் இப்ப, இவளோட அழகைப் பத்தி ஒரு வார்த்தை சொன்னனு?

**மனோன்மணி:-** பேசவந்த விஷயத்தைவிட்டு விட்டு வேறே எதை எதையோ கிளப்பிவிட்டா, குழப்பம்தான் ஏற்படும். ஜப்பான் நாட்டு முறை ஏதோ இருப்பதாக பொன்னி பேச ஆரம்பித்ததை அந்த இடத்திலேயே விட்டுவிட்டீர்களே......

**பொன்னி:-** இப்ப இவர்கள் பேசிக்கொண்டிருக்கிற விஷயத்தைவிட, நான் சொல்ல வந்தது அதிக முக்கியமானது அல்ல......

**மனோன்மணி:-** அப்படிக்கொடு சாட்டை......

**ஏமலதா:-** ஏண்டி, பொன்னி! கோபமா......

**வத்சலா:-** தப்பா இருந்தா மன்னிச்சிக்கடிம்மா......

**பட்டு:-** நான் ரொம்ப வருத்தப்படறேன்......

**பொன்னி:-** நீங்களாகவே, துரும்பைத் தூணுக்கிக் கொண்டு போனு, நான் என்ன செய்ய. எனக்குக் கோபமும் இல்லே, வருத்தமும் இல்லே......

**மனோன்மணி:-** என்னமோ சொல்ல வந்தயே, ஜப்பான் விஷயமா......

**பொன்னி:-** ஜப்பானிலே இப்ப, புதுசா, அழகுக்காக, பல்லுக்கு விதவிதமான சாயம் போட்டுக்கொள்கிற 'வித்தை' நடப்பதாகப் படித்தேன்......

**ஏமலதா:-** இது என்னடி பைத்யக்காரத்தனமா இருக்கே ...முத்துப்போல பல் இருக்கவேண்டும். பெரியவா சொன்னது அது. புராணத்திலேயும் இருக்கு, நம்ம பொன்னி சொல்கிற தமிழிலேயும் இருப்பதா, அவளே முன்னே ஒருமுறை சொல்லி இருக்கா. இது புதுசா இருக்கே......பல்லுக்குச் சாயம் பூசிக் கொள்றது......

**பொன்னி:-** எல்லாப் பல்லுக்குமா? சில பற்களுக்கு...... நீலம், பச்சை, வெளிர் சிகப்பு, இப்படிச் சாயம்.....

**ஏமலதா:-** ஏனும்...?

**பொன்னி:-** அப்படிச் சாயம் பூசிக்கொண்டவர்களெல்லாம் சிரிக்கும்போது, தனி அழகு இருப்பதாகச் சொல்கிருர்கள்......

வத்சலா:- பணம் பெருத்துப் போனு, இப்படி எல்லாம் எண்ணம் தோனுது போலிருக்கு......பல்லுக்குப் போய்ச் சாயம்.........!

பட்டு:- தலைக்குப் போட்டுக் கொள்றதில்லையோ, கருப்புச் சாயம், நரைத்துப் போனவா.........

வத்சலா:- ஏண்டிம்மா, வக்கீலு! அதோடு விட்டுவிட்டே. புருவத்துக்கு மை தடவறதில்லையான்னு கேளு... நெத்திக்குப் பொட்டு வைத்துக்கொள்ருளேன்னு பாயின்ட் பேசு......சாயம், பல்லுக்கு மட்டும் என்னடிம்மா, முகம்பூரா போட்டுக் கொள்ளலாம்னு பேசு......பூட்டா சாவியா, வாய்க்கு.........

பட்டு:- எல்லோருடைய வாய்க்கும்தான் அது...... எனக்கு மட்டுமா.........?

பொன்னி:- சாயம் பூசிக்கொள்வது அளவும், இடமும் தெரிந்து செய்தா அழகாத்தான் இருக்கும். தமிழ் நாட்டிலே பழைய காலத்திலே, பெண்கள் செம்பஞ்சுக் குழம்பைப் பாதத்திலே இலேசாகத் தடவிக் கொள்வார்களாம். படித்திருக்கிறேன். தண்ணீரிலே பத்து வகையான துவர்களும், ஐந்து வகையான வாசனைப் பொருள்களும், முப்பத்துஇரண்டு வகையான கூட்டுப் பொருள்களும் ஊற வைத்து, பிறகு தண்ணீரைக் காய்ச்சி வைப்பார்கள் குளிக்க! கூந்தலுக்கு மணம் பொருந்திய நெய் பூசிக் கொள்வார்கள். நீராடிய பிறகு வாசனை தருகிற புகை எழுப்பி உலர்த்துவார்கள். பிறகு அதிலே ஐந்து வகையான கஸ்தூரிக் குழம்பு தடவுவார்கள். பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பு தடவிக் கொள்வார்கள்.

வத்சலா:- அவ்வளவு நிம்மதி இருந்தது அந்தக் காலத்திலேன்னு சொல்லு.

பொன்னி:- நிம்மதி இருந்ததோடு நேர்த்தியான வாழ்க்கை முறைகளும் இருந்தன. அழகுபடுத்திக்கொள்வதை ஒரு கலையாகவே கருதி வந்தார்கள்.

ஏமலதா:- ஜப்பான்காரர் பல்லுக்குச் சாயம் போட்டுக் கொள்வதாகச் சொல்கிறயே, அதுவும் அழகுக் கலைதானு?

பட்டு:- அது கொஞ்சம் 'ஓவர்'தான். அளவு அதிகம் தான்.

ஏமலதா:- நம்ம நாட்டிலே இதுபோல ஆபாசமெல்லாம் இருக்காது.........

பொன்னி:- ஒரே அடியாகப் பேசி விடலாமா......நம்ம நாட்டிலே, பல்லுக்குத் தங்கமுலாம் பூசிக்கொள்வதில்லையா.........

பட்டு:- ஆமாம்......நான் மறந்தே போய்விட்டனே அதை......தங்கப்பல் சிங்கப்பன்னு ஒருத்தன் காலேஜிலே நான் படிக்கிறபோது, இருந்தான்...

பொன்னி:- நம்ம நாட்டிலே வேறே சில இடத்திலே இருக்கிற சிலர், வெற்றிலை பாக்கோடு சேர்த்து அதிகமாக 'காசிகட்டி' போட்டுக் கொள்வதாலே, பல்லும் ஈரும், ஒரே கருப்பா இருக்கும்—சாயம் அடித்த மாதிரியாகவே.........

மனோன்மணி:- பல்லிலே அழுக்குச் சேர்ந்தா, என்னென்ன ஆபத்தான வியாதிகளெல்லாம் ஏற்படும் என்பது தெரியாமலே, இப்படி எல்லாம் செய்து கொள்கிரு பலபேர்.........

ஏமலதா:- அதனலேதான், பல பேருக்குப் பல் சின்ன வயசிலேயே விழுந்து போறது.........அப்பாலே ஓடரு, பல்லு கட்டிக் கொள்ள.........

பட்டு:- ஒரு விஷயம் தெரியுமோ உங்களுக்கெல்லாம், நம்ம நாட்டிலே, பல் டாக்டர்னு சொல்லிக் கொண்டு, சீனக்காரன் இருந்துகொண்டு, அவனுடைய நாட்டுக்கு, உளவு வேலை பார்ப்பதாகத் தகவல் வந்து, அப்படிப்பட்டவர்களைச் சர்க்கார் பிடித்துப் பூட்டிவிட்டா... .......

வத்சலா:- சும்மா கிடடி, ரொம்ப பழைய சேதி—கர்நாடகம்.

மனோன்மணி:- புத்தம் புதுசா ஒரு சேதி கூறவா......

வத்சலா:- சொல்லு, மனோன்மணி! அடி, அம்மா, பட்டு, நீ குறுக்காலே நுழையாதே......உனக்குப் பேச நிறையச் சந்தர்ப்பம் கிடைக்கும் தன்னலே, பின்னலே.........

பட்டு:- என்னலே உங்க பேச்சோட சுவராஸ்யம் கெட்டுப் போறதா இருந்தா, சொல்லுங்கோ, நான் போறேன். போய் என் வேலையைக் கவனிக்கறேன்......கேஸ் விஷயமா......எங்க சீனியர் ஒரு

## கை தட்டலா...!

ஆங்கில நாட்டு மேயர் ஒருவர் பாரிசில், ஒரு மாநாட்டில் கலந்துகொண்டு, அழகாக உரையாற்றினர். உரையை முடிக்கின்ற நேரத்தில், பலத்த கையொலியை எதிர்பார்த்தார்---ஆனல் பாவம் கிடைக்கவில்லை!

அடுத்து ஒரு பிரெஞ்சுகாரர் எழுந்து, கனல் தெறிக்கப் பேசினர்---வார்த்தைக்கு வார்த்தை, கையொலி!

அவர் பேசியது மேயருக்குப் புரியவில்லை---என்ருலும், பேசாமலிருப்பது அழகல்லவே! அவரும் கைதட்டினர்!

பக்கத்திலேயிருந்தவர், மேயரிடம் மெதுவாகக் கூறினர் "என்ன சார், நீங்களே கைதட்டுகிறீர்கள்? அவர் உங்கள் பேச்சைத்தானே மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிருர்!" என்று!

கேசுக்குத் தேவையானதைத் தயாரிக்கச் சொல்லி யிருக்கார்.........

வத்சலா:- அப்ப, நீ இங்கேயே இருடிம்மா, கண்ணு, அந்தக் கட்சிக்காரன் பொழைச்சுப் போகட்டும் பாவம்.........

பட்டு:- எனக்கு வர்ர ஆத்திரத்துக்கு, உன்னை என்ன செய்யணும்னு தோணுது தெரியுமா...

வத்சலா:- அடக்கணும்டி, ஆசையை... அதிலும் இந்த வயதிலே...ஆத்திரம் கூடாது... கேளேன் மனோன் மணியை. ஆத்திரப்பட்டா, இருதயத்துக்குக் கெடுதல்தானே, சொல்லேன், மனோன்மணி.

மனோன்மணி:- நான் இருதய விஷயமாகத்தான் சொல்ல ஆரம்பிச்சேன், பட்டு குறுக்கிடுவதற்கு முன்னாலே. புத்தம் புதுச் சேதி என்றேனே, அதுதான். இருதயம் நின்னுபோச்சு — அடியோடு நின்னே போச்சு—ஒரு டாக்டர், ஆபரேஷன் செய்து,— அற்புதமான ஆபரேஷன் — நின்றுபோன இருத யத்தை மறுபடியும் ஓடச் செய்திருக்கார்.

ஏமலதா:- இது அதிசயமான—வேலைதான்—செத்தவன் பிழைத்துக்கொண்டான்னு சொல்லு...

பொன்னி:- நான்கூடப் பார்த்தேன் அந்தச் செய்தியை. இருதயம் மறுபடியும் ஓட வழி செய்துவிட்டாலும், இருதயம் நின்றுவிட்ட நேரத்திலே, மூளைக்கு ஏதா வது கெடுதல் ஏற்பட்டுவிட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மனோன்மணி:- ஆமாம். பொன்னி முழு விவரத்தையும் தெரிந்துவைத்துக்கொண்டிருக்கா...

வத்சலா:- எப்பவுமே அவ அப்படித்தான். எதிலேயும் அப்படித்தான். நிறையத் தெரியும், அதிகம் பேச மாட்டா. ஏண்டி, ஏமு! நான் இதைச் சொல்ற போது, நீ பட்டுவைப் பார்க்கறே, அவ, நான் அவளைச் சாக்கிட்டுப் பேசறதாக நினைச்சு என் மேலே பாயப்போருடிம்மா...

பட்டு:- பொன்னியைப் பாராட்டிப் பேசினு, எனக்குத் துளிகூடக் கசப்பு வராது. இவ்வளவு புத்தி உள்ளவ மட்டும், வக்கீல் வேலைக்குப் படித்திருந்தா, மாதம் மூணு ஆயிரம் சுலபமாகக் கிடைக்கும்.

ஏமலதா:- பொன்னிதான், குடத்து விளக்காக இருக்காளே...

வத்சலா:- அது என்னடிம்மா அர்த்தம், குடத்துவிளக்கு — விளக்கை ஏற்றிவைத்து மேலே குடத்தைப் போட்டு மூடினு, அணைந்துதானேபோகும்...

மனோன்மணி:- சும்மா, ஒரு பேச்சுக்குச்சொல்றதுதானே! அதுபோல, பழமொழி...

வத்சலா:- பழமொழி என்கிற பேராலே, அர்த்தம் இல்லாததை எல்லாம் சொல்லிவைக்கலாமா?

பொன்னி:- அர்த்தம் இல்லாத பழமொழி கிடையாது; நமக்குத் தெரியாமலிருக்கலாம், சரியாக. சில பழமொழிகளைப் பொருள் தெரிந்து கொள்ளாமலே பேச்சிலே சேர்த்துக்கொள்கிறோம். பொருள் தெரிந்து, பொருத்தம் பார்த்துப், பழமொழிகளைப் பயன்படுத்தினுல் சுவையாகத்தான் இருக்கும்.

ஏமலதா:- நெருப்புக்கோழி தன் தலையைத் தானே மண லிலே சொருகிக்கொள்ளுமாம், பயத்தாலே. தான் எதையும் பார்க்காமலிருந்தால், தன்னையும் யாரும் பார்க்கமாட்டார்கள் என்ற நினைப்பு. அப்படி ஒரு பழமொழி இருக்கு. பொன்னி! ஏன் ஒரு மாதிரி யாகச் சிரிக்கறே...

பொன்னி:- நீங்க சொல்வதுபோலத்தான் அநேகமாக எல்லோரும் சொல்லக் கேட்டிருக்கிறேன், நெருப் புக் கோழி விஷயமா...

பட்டு:- இலக்கியத்திலே எல்லாம்கூட வந்துவிட்டிருக்கு, ஆங்கில இலக்கியத்திலே...

பொன்னி:- இலக்கியம்னு பட்டு சொன்னுலே, அது ஆங்கில இலக்கியமாத்தான் இருக்கும் என்று எனக்குத் தெரியுமே! தமிழ் இலக்கியத்தைப் படிக்கவா போகிருர்கள், எத்தனையோ ஆங்கில இலக்கியம் இருக்கும்போது.

பட்டு:- எனக்குத் தமிழிலே அக்கரை இல்லை என்று குற்றம் சொல்லத்தானே இந்தக் குத்தல் பேச்சு. நான் சொல்வதற்காக வருத்தப்பட்டுக்கொள்ளக் கூடாது. தமிழிலேயே காலேஜுகளிலே பாடம் சொல்லித்தரப் போட்ட திட்டம் என்ன ஆச்சு? அதிலே இருந்தே தெரியலையா, தமிழாலே எவ்வ ளவு ஆகும் என்கிற உண்மை.

பொன்னி:- பலே! பலே! பட்டு இப்படி அடித்துப் பேசு வது கேட்டா, அமைச்சர் பக்தவத்சலம், ஓடோடி வருவார், பாராட்ட—அவரும் இதே கருத்துத்தான் கொண்டவர்.

பட்டு:- அவர் சொல்வது தப்பு என்கிறயா, நீ...

பொன்னி:- சொல்லலாமா? அவர் அமைச்சர். அமைச் சர் என்ருல் என்ன? எந்த விஷயத்தைப்பற்றியும் தைரியமாக, தாராளமாகப் பேசலாம், அமைச்ச ராக இருக்கிறவரையில். மறுப்புச் சொல்ல, பலருக்குப் பயம்... இந்த அமைச்சர், கல்லூரி களிலே தமிழ்மொழியிலே பாடம் கற்பிக்க முடிய வில்லை என்ருர். இவர் அமைச்சராக இருப்பதாலே, எதிர்த்துப்பேச முடிவதில்லை. சரி. இவரைப் போலவே முன்னாலே இங்கே கல்வி அமைச்சரா இருந்தாரே தெரியுமா...?

பட்டு:- யாரு? உலகம் சுற்றின சுப்ரமணியமா?

ஏமலதா:- இப்ப, ஊருக்கு மந்திரியாமே டில்லியிலே...

பொன்னி:- ஆமாம், அவரேதான். அவர் என்ன சொன் ஞர் தமிழ்பற்றி...கல்லூரிகளிலே பாடமொழியாக

இருக்கலாம் என்று அழுத்தந் திருத்தமாகத்தான் சொன்னார். புதிய புத்தகமே எழுதினார் போயேன், தமிழால் முடியும்! என்று.

ஏமலதா:- இது வேடிக்கையாத்தான் இருக்குடி, பொன்னி! ஒரு மந்திரி முடியும் என்று பேசறதும், இன்னொரு மந்திரி முடியலையே என்று கைபிசைய றதும், நாம இரண்டுபேர்களையும் மந்திரிகள்னு கொண்டாடறதும், விசித்திரமா இருக்கு...

பட்டு:- தமிழால்முடியும் என்று புத்தகமே எழுதின மந்திரி சுப்ரமணியம், தமிழாலே முடியலையே என்று பேசுகிற மந்திரி பக்தவத்சலத்தின் போக்கைக் கண்டிக்கணும்.

பொன்னி:- நேரம் இல்லையே...வேலை அதிகம். கொஞ்சம் ஓய்வு கிடைத்ததும், திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டித்துப் பேசுகிற வேலைவேறு ஏற்பட்டுப்போகுது.

வத்சலா:- இவருக்கு எதற்கு அந்தவேலை, இங்கே இருக்கிற மற்ற மந்திரிகள் அந்தக் காரியத்தைப் பார்த்துக்கொள்ளமாட்டாளா?

பொன்னி:- இருந்தாக்கூட, டில்லியிலே இருக்கிற பெரிய தலைவர்கள் கேட்பார்களே—தமிழ்நாட்டுக்குப் போய்விட்டு வந்தீர்களே, என்ன செய்தீர்கள், எப்படி இருக்கிறது தி. மு. க. என்று. தி. மு. காவா! போடுபோடுன்னு போட்டுவிட்டுத்தான் வந்தேன் என்று சொல்லவேண்டாமா.

மனோன்மணி:- புதுசா, சட்டம்போட்டு தி. மு. க. கொட்டத்தை அடக்கிவிடத்திட்டம் தயாராகிவிட்டதாமே......

பொன்னி:- திட்டப்படி, தி. மு. க. அழிக்கப்பட்டால் யாருக்கு நஷ்டம்? தி. மு. க. அழிக்கப்பட்டுவிட்டா, எல்லா அதிகாரமும் ஏன் ஒரே இடத்திலே இருக்கிறது, பரவலாக்கவேண்டும், தொழிலிலேவளர்ச்சி வேண்டும், என்றெல்லாம், வாதாடவும் போராடவும், யார் இருக்கிறார்கள். நாட்டுக்குத்தான் நஷ்டம். தி. மு. கழகத்தை நடத்துகிறவங்களுக்கு என்ன! நாட்டுமக்களைப் பார்த்துச் சொல்லமாட்டார்களா—நாங்கள் இன்னின்ன நோக்கத்துக்காக வாதாடி வருகிறோம், எங்களை அழிக்கத்திட்டம் அமுலுக்கு வருமாம். நீதி எது, நியாயம் எது என்று நீங்களே சொல்லுங்கள் என்று சொல்லமாட்டார்களா?

ஏமலதா:- நாட்டிலே, இப்ப, தி. மு. க. இல்லாத ஊரே இல்லே. எங்க பெரியப்பா வந்திருந்தார்டிம்மா, போனமாசம். அந்தஊர்தெரியுமேல்லோ, உனக்கு. இரயிலைவிட்டு இறங்கி ஏழுமைல் கட்டைவண்டியிலே போகவேண்டும். அங்கேகூடப் பறக்குதாம், தி. மு. கழகக்கொடி.

பட்டு:- வக்கீல்களிலே கூடப் பலபேர், தி. மு. க!

மனோன்மணி:- டாக்டர்கள் கூடத்தான். ஆனால், டாக்டர்கள் வக்கீல்கள் இவர்களெல்லாம் தி. மு. கழகம் நடத்துகிற கிளர்ச்சிகளிலே ஈடுபட முடியாது...

பொன்னி:- தி மு.கழகமே சொல்லியிருக்கிறதே. சமுதாயத்திலே, தேவைப்படுகிற பல அருமையான தொழில்களிலே ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள், தி. மு. கழகத்துக்கு வேலைசெய்யவேண்டும் என்பதற்காக, அவரவர்கள் ஈடுபட்டிருக்கிற தொழில்களைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது என்று. அது நாட்டுக்கே பெரிய நஷ்டம் என்று பேசி இருக்கிறது.

ஏமலதா:- கட்சி வளரவேண்டும் என்பதற்காக, எதை வேண்டுமானாலும் பலி வாங்கலாம் என்கிற தத்துவம் இல்லை, தி. மு. கவுக்கு.

பொன்னி: தத்துவமே அல்லவே அது. நாட்டிலே எல்லாத் தொழில்களும், பொது அறிவும் வளரத்தானே, கட்சிகள்! கட்சி வளர்ச்சிக்கு என்று சொல்லி, அந்தத் தொழில்களிலே உள்ளவர்களைத் தொழிலை நாசம் செய்து கொள்ளச் சொல்வது எப்படி தத்துவம் ஆகும்.

பட்டு:- பொறுப்போடு, தி. மு. க. நடந்து கொள்கிறது என்று எங்க சீனியர்கூட ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தார்.........

பொன்னி:- பொறுப்பு இருப்பதாலேதான், போர் அபாயம் இருக்கும்போது, கட்சிக் காரியத்தைக் கவனிப்பது, நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும் என்று தீர்மானித்து, எல்லா நடவடிக்கைகளையும்

## காரணம் என்ன?

கால்நடைக் கண்காட்சியிலே நின்ற காளைகளில், இரண்டு காளைகள் அழகாகவும், பருமனாகவும் இருந்தன. இவற்றில் எதற்குப் பரிசு தருவது என்று நீதிபதிகளுக்குச் சந்தேகம் வந்தது.

ஐந்து வயதுப் பையன் ஒருவன் வரவழைக்கப்பட்டான்---இரண்டு காளைகளையும் அவன் ஏற இறங்கப் பார்த்தான்---கடைசியில் முதல் பரிசுக்கான காளையையும் தேர்ந்தெடுத்தான்!

"தம்பி, இதற்குத்தான் முதல் பரிசு தர வேண்டுமென்று நீ எப்படிக் கண்டுபிடித்தாய்?" என்று, நீதிபதிகளிலே ஒருவர் கேட்டார்!

"பார்த்தாலே தெரியவில்லையா, 'இந்த மாடு தான் அதிகமாகப் பால் கொடுக்கும்'' என்று பளிச்சென்று பதில் வந்தது!

நிறுத்திவிட்டு, சர்க்காருடன், தி. மு. க. ஒத்துழைக்கிறது.

வத்சலா:- சிலபேர் இப்போதும் குறை சொல்லிக்கொண்டு இருப்பதாத் தெரியறதே.

பொன்னி:- பொருளும் பொருத்தமும் இல்லாமல் பலபேர் பலமாதிரி பேசிக்கொண்டிருப்பது உண்மை. அதனுலே என்ன? யோசித்துப் பார்ப்பவர்களுக்கு உண்மை தெரியாமலா போகும்? இதோ இப்ப தானே சொன்னுர்கள், நெருப்புக் கோழி, மணலிலே தலையைச் சொருகிக் கொள்கிறது என்று. உண்மையா அது! அப்பட்டமான பொய்! ஆனுலும் பழமொழி பழக்கத்திலே வந்துவிட்டது. பொருளும் பொருத்தமும் தெரியாமல் அந்தப் பழமொழியைப் பயன்படுத்துகிறேம்.

வத்சலா:- பயத்தாலே, நெருப்புக் கோழி அப்படிச் செய்கிறதாமே......

பொன்னி:- பயம் வந்தா, ஓடிவிட முடியாதா, நெருப்புக் கோழிக்கு. காலிலே வலிவு இல்லையா! குதிரையுடைய காலைவிட வலிவு! குதிரையைவிட வேகமாக ஓடமுடியும். சண்டையிடத்தான் வேண்டுமென்றுலும், முடியும். காலாலே உதைத்தே எதிரியை விரட்டமுடியும். இதெல்லாம், நெருப்புக் கோழியைப் பற்றிய புத்தகத்திலே விளக்கப்பட்டிருக்குது. இருந்தாலும், பழமொழியை விடாமல் பேசிக்கொண்டிருக்கிறதைக் கேட்கிறேம்.

வத்சலா:- உண்மைதான், பொன்னி சொல்றது. நெருப்புக் கோழியைப் பார்த்தா அப்படி ஒண்ணும் பயந்த மாதிரிகூடத் தெரியல்லே.

பொன்னி:- மணலுக்குள்ளே தலையைச் சொருகிக் கொண்டா, ஆபத்திலே இருந்து தப்பித்துக் கொள்ள முடியுமா? மூச்சுத் திணறிச் செத்துப் போகும்.

மனேன்மணி:- ஆமாமாம்! அதற்கு யார் அக்கரையோட ஆக்ஸிஜன் தரப்போரு?

ஏமலதா:- மனேன்மணி! இந்த ஆக்சிஜன் கொடுக்கறதாகச் சொல்ருளே, அதனுலே உயிர் பிழைத்துவிடுதா!

பொன்னி:- அப்படி இருந்தா, சாவதையே தடுத்துவிட்டிருக்கலாமே......

மனேன்மணி:- அதானே! ஆக்சிஜன், மூச்சுவிட முடியாமத் திணறிக்கொண்டிருக்கிறபோது, இருதயம் கொஞ்சம் பலகீனமாகிறபோதும் கொடுத்து ஆபத்து ஏற்படாதபடி அப்போதைக்குத் தடுக்கலாம்—ஆனு அதையும் மீறிப்போகிற அளவுக்கு, இருதயம் ஆகிப்போய்விட்டால், ஒன்றும் செய்வதற்கில்லே.

ஏமலதா:- என்னமோ போ! எல்லா அறிவும், வசதியும் சக்தியும் கொண்ட மனித ஜாதிக்குத்தான் ஏற்படுது, இந்த இருதயக் கோளாறு, இரத்த அழுத்தம், நீரழிவு இப்படி எத்தனையோ பொல்லாத வியாதிகள். மிருகங்கள் பாடே நிம்மதிபோல இருக்குது...

மனேன்மணி:- அப்படியா எண்ணிக்கொண்டிங்க. காட்டிலே இருக்கிற மிருகங்களையும், மனிதனுக்குப் பயன்படாத மிருகங்களையும் தள்ளிவிடுங்க. மனிதர்களிடம் வளர்ந்து வருகிற மிருகங்கள் இருக்கே, அவைகளுக்கு வியாதிகளா வருவதில்லே. நிறைய. அந்த வியாதிகளின் தன்மைகளைக் கண்டுபிடிச்சி நல்ல மருந்து கொடுக்காததாலே, எவ்வளவோ மிருகங்கள் செத்துப்போகிறதே. எத்தனை பெரிய நஷ்டம், நாட்டுக்கு.

பொன்னி:- உலக அறிவாளர்களிலே ஒருவர் சொன்னுரே, நான் அடுத்த ஜென்மத்திலே பசுவா, எருதா, பிறக்கறதாக ஏற்பட்டாலும், இந்தியாவிலே பிறக்க விரும்பமாட்டேன், மேல்நாடுகளிலேதான் பிறக்க விரும்புவேன் என்று.

ஏமலதா:- ரொம்ப நல்லா இருக்கே அந்த அறிவாளியோட பேச்சு! மேல் நாட்டிலேயா, பிறக்கணுமாம்! ஏனும்? அங்கேதான் பசு, மாடு, எல்லாவற்றையும் வெட்டித் தின்கிருளே, அங்கேதான் பிறக்கணுமா......!

பொன்னி:- அது தெரியாமலா அவர் பேசினுர் அது போல. அவருக்கு நம்ம நாட்டிலே பசுவை பூஜை செய்கிறேம் என்பதுகூடத்தான் தெரியும். செய்து? அவரே சொல்லி இருக்கிருரே, இந்தியாவிலே பசு எருதுகளை வத்தலும் தொத்தலுமாக்கி, சித்திரவதை செய்கிருர்கள்; மேல் நாடுகளிலே கொல்லுகிற வரையில், நிம்மதியாகவாவது வைத்துக்கொண்டிருக்கிருர்கள்; இந்தியாவிலே உள்ளவர்களுக்கு பசுவைப் பூஜை செய்யத்தான் தெரியுதே தவிர, அதைச் சரியானபடி வளர்க்கத் தெரியவில்லை என்று.

வத்சலா:- அதற்காகச் சொன்னுரா! அப்படிப் பார்த்தா அது உண்மைதான். பசு கறவை நின்றுவிட்ட உடனே, கிராமத்துக்கு ஓட்டிவிடறதுதா ன நம்ம வழக்கம்—நெடுநாளா. கிடைச்சதைத் தின்னு காலந் தள்ளட்டும்னு......

ஏமலதா:- சீர்வரிசை சரியாகச் செய்யவில்லேன்னு, மாட்டுப் பொண்ணை அவா வீட்டுக்கு அனுப்பிவிடுகிற அளவுக்குக் கொடுமை நடக்குது......தன் வீட்டுக்கு வந்த வரலட்சுமி ஆச்சே என்கிற எண்ணம் எங்கே ஏற்படுது......

பொன்னி:- எப்படி ஏற்படும்? இப்ப நீங்களே சொன்னிங்களே, மாட்டுப் பொண்ணுன்னு...மாட்டுக்கு என்ன கதியோ, அதேதான் அவளுக்கும் நடக்குது......

ஏமலதா:- சும்மா ஒரு பேச்சுக்கு—பழக்கத்திலே இருக்கிறபடி மாட்டுப் பொண்ணுன்னு சொன்னேன். மாட்டை நடத்தற மாதிரியாக அவளை நடத்த வேணும்னு அதற்கு அர்த்தம்......?

வத்சலா:- பொன்னி! மிருகங்கள் எவ்வளவு காலம் உயிர் வாழும்?

பொன்னி:- ஒவ்வொரு மிருகம் ஒவ்வொரு விதம். எனக்குத் தெரிந்தவரையிலே, ஆமைதான் அதிக காலம் உயிர் வாழ்கிறது. 350 வருஷம்கூட இருக்குமாம், ஆமை.

வத்சலா:- ஆமை என்ன இலேசானதா! ஆபத்து வரும் என்று தெரிந்தா போதுமே, தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு, ஓட்டுக்குள்ளே உடலைச் சுருக்கிக் கொள்கிறது. ஆபத்து நீங்கிய பிறகு, மெள்ளத் தலையை வெளியே காட்டுகிறது......

ஏமலதா:- அதைப்பற்றிச் சிலபேர் கேலி செய்கிருளே......

வத்சலா:- கேலிசெய்கிறவர்களுக்கா ஆபத்துவந்தது. ஆமைக்கு வரும்போது ஆமை அதற்கு இருக்கிற பாதுகாப்பு ஓடு, அதனுலே, அதிலே பதுங்கிக் கொள்கிறது ஆபத்து போகிறவரையிலே. கேலி பேசுகிறவர்கள் என்ன, ஆபத்து எங்கே இருக்கிறது என்று தேடித்தேடி அலைகிருர்களா, பலியாக!

பொன்னி:- அப்படியும் சிலஉண்டு, வத்சலா! விளக்கை நோக்கிப் பறந்துபோய் கருகிக் கீழேவிழவில்லையா, விட்டில் பூச்சி!

வத்சலா:- விட்டில் பூச்சிகள் விழுந்து சாவதாலே விளக்குக்கு என்ன நஷ்டம்...

மனேன்மணி:- ஜீவராசிகள், ஆபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனையோ விதவிதமான தந்திரங்களை எல்லாம் செய்கின்றன.

எமலதா:- மனிதனுக்குத்தான் எதையும் சிந்தித்துச் செய்யமுடியும் என்கிருர்கள்—நீ, ஜீவராசிகளுக்கு ஆபத்துக் காலத்தில் எப்படி நடந்துகொள்வது என்று தெரியும் என்கிருயே.

மனேன்மணி:- மனிதனுக்குத் தெரியவில்லை, இன்னமும், ஆபத்து ஏற்பட்டால், எப்படித் தப்பித்துக்கொள்வது என்பது. மற்ற ஜீவராசிகளுக்குத்தெரிகிறது; முடிகிறது. நிறத்தை மாற்றிக்கொள்கிறது, உடலைச் சுருக்கிக்கொள்கிறது, செத்துவிட்டது போலாகிக்காட்டுவது, என்று பலவிதமான தந்திரங்களைச் செய்வதற்குத் தக்கவிதமான உடல் அமைப்புச் சில ஜீவராசிகளுக்கு இருக்கிறதே.

பொன்னி:- ஜீவராசிகளுக்கு என்ருல், நடமாடும் ஜீவராசிகள் மட்டும்தான், மனேன்மணி சொல்வது.

## இரண்டாம் பரிசுதான்...!

சார்லி சாப்ளின், உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர். அவரைப்போல் நடித்துக் காண்பிப்பவருக்குப் பரிசுகள் தரப்படும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது, கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த ஒரு நகரில்!

அந்தப் போட்டியைக் காண்பதற்கு, சார்லி சாப்ளினும் சென்ருர்---திடீரென்று அவருக்கு ஒரு சபலம்!

மாற்றுடை தரித்துக்கொண்டு, அவரும் நடிக்க ஆரம்பித்தார்---நன்ருகத்தான் நடித்தார்!

ஆனல், அவருக்குக் கிடைத்தது இரண்டாம் பரிசுதான்!

ஜீவராசிகளிலே நடமாடாத ஆனுல் பிறந்து வளர்ந்து பின்சந்ததியை ஏற்படுத்திவிட்டு இறந்து போகிற ஜீவராசிகளும் உண்டு.

வத்சலா:- புரியவில்லையே, பிறந்து வளர்ந்து, பிள்ளை குட்டிகளைப் பெற்று இறந்துபோகிற ஜீவராசி, ஆனல் அவை நடமாடாது என்ருல், விளங்கவில்லையே......

பொன்னி:- செடிகொடிகள் பிறந்து, வளர்ந்து, பின் சந்ததியைப் பெற்று, பிறகு மடிந்துவிடுகின்றன—ஆனல் அவை நடமாடுவதில்லையே......

வத்சலா:- ஆமாம்டி, பொன்னி! இந்த விளக்கம் கொடுத்தபிறகு புரிகிறது......

பொன்னி:- அந்த நடமாடாத ஜீவராசிகளிலேயே மிகுந்த தந்திரசாலி எது?

வத்சலா:- எந்தவிதமான புத்திசாலித்தனத்தைக் கேட்கிருய்?

பொன்னி:- இப்போது டாக்டர் மனேன்மணி சொல்லிக் கொண்டு வரவில்லையா, எதிரிகளால் ஆபத்து மூட்டப்படும்போது, இக்கட்டான நிலை ஏற்படும்போது, தந்திரமாகத் தப்பித்துக்கொள்ளும் இயல்பு சில ஜீவராசிகளுக்கு இருக்கின்றன என்று......அது போன்ற நிலைமையில்......

வத்சலா:- பாவம், மரம் செடி கொடி, புல் பூண்டு, இவைதான் நடமாட முடியாதே, அவைகளால் எப்படித் தப்பித்துக்கொள்ளமுடியும்......

பொன்னி:- பெரிய புயல் அடிக்கிறபோது, நாணல் கவிழ்ந்துகொள்கிறது, புயலின் வேகம் தணிந்த பிறகு, பழயபடி நிமிர்ந்து நிற்கிறது. வேறு சில பெரிய மரங்களோ, புயல் அடிக்கும்போது அது

போலக் கவிழ்ந்துகொள்ள முடியாததால், புயலின் வேகத்தில், வேரோடு அறுந்து கீழே விழுந்து போகின்றன.

மனோன்மணி:- நாணல், நிலைமையை உணர்ந்து, யோசித்து, திட்டமிட்டா அப்படிச் செய்கிறது? ஜீவராசிகள் அப்படிச் செய்வது, யோசித்து திட்ட மிட்டு, என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பொன்னி:- நடமாடாத ஜீவராசிகள் விஷயமாக இன் னும் அதுபோன்ற ஆராய்ச்சி நடத்தப்படவில்லை, சரியாக, முறையாக. அதனால்தான், நடமாடாத ஜீவராசிகளின் போக்குப்பற்றிய விளக்கம் போது மான அளவு கிடைக்கவில்லை. செடி கொடிக ளெல்லாம்கூட ஜீவராசிகள்தான் என்பதை, வங்காள விற்பன்னர் ஜெகதீஸ் சந்திரபோஸ் கண் டறிந்து விளக்குவதற்கு முன்பு, இருட்டாகத்தானே இருந்தது, அந்த விஷயமாக.

மனோன்மணி:- உண்மைதான்! இன்னமும் கண்டு பிடிக்கப்படவேண்டிய உண்மைகள் எவ்வளவோ இருக்கின்றன...

ஏமலதா:- கண்டுபிடித்தான உண்மைகளைச் சரியாகத் தெரிந்துகொள்வதற்கே, நமக்கு நேரம் போத வில்லை, நினைப்பு வரவில்லை...

பட்டு:- இப்படி நாம் கூடிப் பேசுகிறோம், இதனாலே, பல விஷயங்களை, விளக்கங்களைப் பெறுகிறோமே.

வத்சலா:- அந்தக் காரணத்துக்காகத்தான், இந்தப் பொன்னியைத் தேடுவது. இவள்தான் அடிக்கடி காணாமற்போய்விடுகிறாளே...

பொன்னி:- இனி அப்படி இல்லை. வாரா வாரம் கூடிப் பேசலாம்.

வத்சலா:- ஆரம்பிச்ச விஷயத்தை விட்டுவிட்டோமே... நாங்களெல்லாம் இங்குவந்த காரணம் தெரிகிறதா? அதைச் சொல்லு பார்ப்போம்...

பட்டு:- நான் சொல்லக்கூடாது என்று வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டுவிட்டார்கள்...... நீயே சொல்லு பொன்னி...

பொன்னி:- நான் எதைச் சொன்னாலும், அது அல்ல, அதற்கு அல்ல என்று சொல்லிவிட்டால், நான் என்ன செய்வது...

மனோன்மணி:- இதை ஏன் ஒரு புதிர்போலாக்கவேண்டும் போர்க்களத்திலே உள்ளவர்களுக்குக் கம்பளிச் சட்டைகள் தேவை அல்லவா. கம்பளி நூல் வாங்கி வந்து நாம் கம்பளிச் சட்டைகள் தைத்துக் கொடுக்கலாம் என்று ஒரு யோசனை.

பொன்னி:- சிலாக்கியமான யோசனை... போர்க்களத் திலே நாட்டைக் காக்க இரத்தம் சிந்துகிறார்களே, அவர்களுக்கு நாம் இதைக்கூடச் செய்யாவிட் டால், நாம் இவ்வளவு விவரம் தெரிந்தவர்கள் என்பதிலேயே அர்த்தம் இல்லை.

ஏமலதா:- ஆனால் ஒன்று—அதுதான் உனக்குப் பிடிக் கிறதோ இல்லையோ என்று எங்களுக்கெல்லாம் சந்தேகம்... இதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சங்கத்துக்கு தலைமையாக இருப்பது கொண்டம்மா —காங்கிரஸ். மற்ற கட்சிக்காரர்களும் இருக்கிற. ஒரே காங்கிரஸ் மயம்னு எண்ணிக்கொள்ளாதே.

பொன்னி:- இருக்கட்டுமே, அதனால் என்ன? இப்போது சீனாக்காரனா, நாமா என்பது பிரச்சினை–காங்கிரஸ் —கழகம் இது அல்ல.

ஏமலதா:- நான்தான் அப்போதே சொன்னேனே — பொன்னி ஒரு தடையும் சொல்லமாட்டா என்று. எனக்குத் தெரியாதா! சரி, பொன்னி! நாங்கள் இப்போதே போய்ச் சொல்லுகிறோம் கொண்டம்மா விடம்.

பொன்னி:- எதைச் சொல்லப் போகிறீர்கள். நான், அந்த சங்கத்தில் சேரச் சம்மதிக்கிறேன் என் பதைத்தானே. இன்னேரம், என் சம்மதக் கடிதத் தைத்தான் கொண்டம்மா படித்துக் கொண்டிருப் பார்கள். நீங்கள் இங்கே வருவதற்குப் பத்து நிமி ஷங்களுக்கு முன்புதான் கொடுத்தனுப்பினேன், கடிதம்; அவரிடம்!

வத்சலா:- பாரேண்டி, இவ வேலையை.....சரி எப்படியோ ஒண்ணு காரியம் வெற்றியாச்சி. பொன்னி சேர்ந்த பிறகு நமக்கென்ன கவலை.

பட்டு:- அப்ப, புறப்படுவோம்......

வத்சலா:- ஆமாமாம், அவளுக்கு ஏகப்பட்ட வேலை இருக் கும், சீனியர் ஆபீசிலே.

ஏமலதா:- சீனியர் ஊரிலே இல்லேன்னு கேள்வி.

வத்சலா:- ஆமாம். அவர் ஊரிலே இல்லாதபோது தானே, இவளுக்கு இரண்டொரு கட்டாவது கிடைக்கும்; பார்க்க! வாங்க, போவோம். பொன்னி, வர்ரோம்......



# பன்னீர்ப் பூ

**எஸ். எஸ். தென்னரசு**

கண்ணன் சிறையிலிருந்து வெளியேறினன். சிறை வாயிலில் அவனுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு அவனைப் புகழ்ந்தார்கள். அவன் கழுத்துநோக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. கண்ணன் ஆண்டில் இளைஞன். அவன் கண்களில் இளமையின் துருதுருப்பு இருந்தது; பேச்சிலும், நடை உடையிலும் 'வாலிபத்தின் அடைக்கலம்' இடம் பிடித்துக்கொண்டிருந்தது. தும்பைப்பூ போன்ற வெண்மையான உடை உடுத்துவதில் கண்ணனுக்கு அளவு கடந்த விருப்பம். தனது உள்ளம் தூய்மையானது என்று மக்களுக்கு வெளிப்படையாகக் காட்டவேண்டும் என்பதற்காகவே அவன் நெடுநாட்களுக்கு முன்பிருந்தே வெள்ளுடை உடுத்தி வந்தான். ஆனல் அவனது தியாகத்தைப் புகழும் இதயங்கள், அவனது நடவடிக்கைகளைச் சந்தேகிக்காது என்பது என்ன நிச்சயம்?

* *

கனகம், கண்ணனுடைய தம்பியின் மனைவி. வயது இருபதுதானிருக்கும்...விதவை! அவள் விரும்பவில்லை. . ...ஆனல் குலதர்மம் அவளை வெள்ளைப் புடவை உடுத்தச்சொல்லி வற்புறுத்தியது.........பெண்களின் அழகை, வெள்ளைப்புடவை அதிகரித்துக்காட்டும் என்று உணர்ந்துதான் மதச்சட்டங்கள் விதவைகளுக்கு வெள்ளைப் புடவையை ஒதுக்கினவோ என்னவோ! கனகம் இயற்கையிலேயே அழகானவள். தங்க வாளுக்கு வைரத்தால் பிடிபோட்டதுபோல் இருந்தது, அவள் வெள்ளைப் புடவை உடுத்தியிருந்தது! வயிரவன் —கனகத்தின் கணவன்— ஒரு இரயில் விபத்தில் இறந்துவிட்டான். அவன் சாகும்போது திருமணமாகி ஒரு ஆண்டுகூட முற்றுப்பெறவில்லை. கனகம் சின்னவளாக இருந்தாலும் ஊருக்குப் பயந்தவள். திருமணத்தின் போதே பலர் பேசியது அவள் காதில் விழுந்தது — மூத்தவனிருக்கச் சின்னவனுக்குத் திருமணமா? பெண் வீட்டுக்காரர்கள் எப்படிச் சம்மதித்தார்கள்?......இந்தப் பேச்சுக் கனகத்தின் மலர் உள்ளத்தைப் புரட்டி எடுத்தது.

"பெரிய அத்தான் ஏன் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கிறார்?" என்று தன் கணவனிடம் பல முறை கனகம் கேட்டிருக்கிறாள்.

"அவருக்குக் குடும்பம் ஏது? நாடுதான் அவருக்கு மனைவி" என்று சிரித்துக்கொண்டே பதில்சொல்வான் வயிரவன்.

கனகம் இனி யாரிடம் கேட்பாள், இந்தக் கேள்வியை! முன்பு வயிரவனும், கண்ணனும் ஒன்றாகவே சாப்பிட உட்காருவார்கள், கனகம் பரிமாறுவாள். அண்ணனுக்கு வேண்டியதைக் கவனித்துப் பரிமாறு என்று வயிரவன் சாடையாகக் கனகத்திடம் சொல்லுவான். அவளும் முறுவலுடன் செய்வாள். இனி, யார் இருக்கிறார்கள் அவளுக்குச் சாடை காட்ட? அவள் திருமணமாகி வந்த புதிதில் வீட்டு முகப்பிலிருந்த பன்னீர் மரத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்திருக்கிறாள்! 'கம்'மென்று மணக்கும் அந்தப் பூவின் நறுமணம் அவளுடைய இள மனதைத் துள்ளவைத்திருக்கிறது; இல்லறத்தில் உற்சாகத்தைக் கூட்டியிருக்கிறது. தாவர உலோகத்தால் செய்யப்பட்ட நாதசுரக் குழலைப்போன்ற வடிவுள்ள அந்தப் பூக்கள், சின்னக் குழந்தைகள் அள்ளித் தெளித்த பொட்டுக் கடலைபோல் காலையில் சிதறிக் கிடக்கும் காட்சி, இளம் பெண்கள் சமுதாயக் கொடுமை தாளாமல் இறந்து கிடப்பதுபோல் கனகத்திற்குப் பட்டது. கற்பனை, வயதுக்கும், மனதுக்கும் ஏற்றாற்போல் பிறக்கிறது! அந்தக் கற்பனைதான் சுவையாகவும் அழகாகவும் இருக்கிறது.

* *

கண்ணன் குனிந்த தலை நிமிர்வதில்லை... சாப்பிடும் போது! கனகம் வைப்பதைச் சாப்பிடுவான். கறியில் உப்பில்லையென்றாலும் சொல்லுவதில்லை. இறுதியில் கனகம் சாப்பிடும்போதுதான் கறிக்கு உப்புப் போதாது என்று அவளுக்குத்தெரியவரும்! அசலுல்அவள் பெரிய அத்தானுக்கு உப்புக் குறைவாகத்தான் வேண்டும் போலிருக்கிறது என்று உப்புப் போடாமலே சமைக்க ஆரம்பித்தாள்.

வீடு எப்போதும் அமைதியாகவே இருக்கும்! குழந்தைகள் இல்லாத வீடு நரம்பில்லாத வீணை—பெண் குரலே கேட்காத வீடு காய்ந்து ஓடாகிப்போன சுரைக் கூட்டுக்கும் கேடானது. கண்ணன் பெரிய சீர்திருத்தவாதி. புரட்சி இளைஞன். மக்களுக்காக அடிக்கடி சிறைபுகக்கூடியவன். ஆனல், அவன் வீட்டில் கலகலப்பு இல்லை! குதூகலமில்லை. பணம் கொடுத்துவிட்டுச் சோற்றுக் கடையில் சாப்பிடுவதைப்போல் அவன் சாப்பிடுகிறான். அவளும் அப்படித்தான்! மாமியார் என்று ஒருத்தி இருந்தால் எவ்வளவோ உதவியாக இருக்குமே என்று கனகம் அடிக்கடி நினைப்பதுண்டு!

வீட்டு முகப்பில் கண்ணனின் படம் ஒன்று மாட்டப் பட்டிருந்தது. கண்ணன் அதைத் திடீரென்று ஒருநாள் அகற்றிவிட்டான். அந்த இடத்தில் காலஞ் சென்ற தன் தம்பியின் படத்தை நிரப்பினான். ஏன் அப்படிச் செய்தார் அத்தான்—என்று கனகம் அறியத் துடித் தாள். கேட்கவேண்டும் என்று ஆசைதான்; முன்பின் பேசிப் பழக்கமில்லையே, என்ன செய்வது!

வீட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும் வயிரவனின் படம்தான் தெரிந்தது. மணக்கோலத்தில், உத்தியோகத் தோரணையில், நண்பர் குழாத்தோடு — இப்படிப் பல படங்கள். அது கனகத்திற்கு இன்பமாகத்தானிருந் தது. என்ன பயன்? மல்லிகை மலர் சூட்டிக்கொள்ளத் துடிக்கும் உள்ளம், அது கிடைக்கவில்லையானால் செவ் வந்திப் பூவையாவது விரும்புவது இயல்பு! அதைப்போல் கணவனை நினைத்து ஏங்கும் கனகம், அவர்தான் இறந்து விட்டாரே என்று வேறு விபரீதமாகப் போய்விட்டால்? கனகமே அப்படி நினைத்தாள். கணவன் படத்தை அடிக்கடி பார்ப்பது அனர்த்தத்தை விளைவிக்கும்; மன தைக் கெடுக்கும் என்று அவள் அஞ்சினாள். மறுநாள் வயிரவன் படங்களையெல்லாம் கழற்றி மூட்டை கட்டி வைத்துவிட்டாள்.

* *

சென்னைக்குப் போய்வந்த கண்ணன் முகப்பில் தம்பியின் படத்தைக் காணாமல் திகைத்தான். கனகத் திடம் கேட்கத்தான் அவன் விரும்பினான். எதிர்பாராத பதில் ஏதாவது வந்துவிட்டால், ஏற்கனவே கெட்டிருக்கும் தன் மனம் மேலும் கெட்டுவிடுமே என்று அஞ்சினான்.

"கண்ணன் ஏன் திருமணம் செய்துகொள்ள வில்லை? எல்லாம் கனகம்போட்ட மைதான்! அவள் தான் சின்னஞ் சிறுசு! ஊருக்கு உபதேசியான கண்ண னுமா இப்படித் தம்பி மனைவியை வைத்துக்கொண் டிருப்பது! சேச்சே! கண்ணன் போக்கு இப்படியே நீடித் தால் நாளடைவில் அவரது செல்வாக்கே குன்றிப் போய்விடும்! இளமையில் பொதுவாழ்க்கை நெறியை பாழ்படுத்தினால் அடிப்படையே தகர்ந்துவிடும்"

ஊரில், தன்னைப்பற்றிப் பலர் இப்படிப் பேசிக் கொள்வதற்கும், கனகம் அவள் கணவரின் படத்தை அப்புறப்படுத்தியதற்கும் தொடர்பிருக்குமோ என்று கூடக் கண்ணன் நினைத்துவிட்டான். இதயம் பாதாம் பருப்பைப்போல் கூட்டுக்குள் இருக்கிறது. அதுகெட்டி ருக்கிறதா இல்லையா என்று பார்த்த மாத்திரத்தில் கூறி விட முடியுமா?

* *

கண்ணனுக்கு இதே சிந்தனையாகிவிட்டது. கன கத்தை அவளது ஊருக்கு அனுப்பிவிட்டால்கூட நல் லதுதான் என்று கண்ணன் நினைத்தான். அங்கே யார் இருக்கிறார்கள்! புகுந்த வீட்டில் கணவனுமில்லை. மாமியு மில்லை, பிறந்த வீட்டில் தாயுமில்லை, தந்தையுமில்லை. குடியிருந்த வீடுமட்டும் இருக்கிறது; அங்கேபோய் கன கம் என்ன செய்யப்போகிறாள்? முறுக்குச்சுட்டு விற்றுப் பிழைக்கவேண்டும்; அல்லது சுருக்குப் போட்டுக் கொண்டு செத்துவிடவேண்டும்!

கண்ணனுக்கு இன்னொரு எண்ணமும் தோன்றி யது, தான்மட்டும் வேறொரு வீட்டில் குடியேறிவிடுவது என்று! அப்படிச்செய்தால், ஊரார் பேச்சு உண்மை யென்று ஆகிவிடாதா? வதந்தி பரவாதா? உண்மைக்கு நூறுகால் என்றால் வதந்திக்கு நூறாயிரம் கால் அல் லவா?—கண்ணன் குழம்பினான். கிழவர்களுக்கு முதுமைதான் பெருநோய்; வாலிபர்களுககு மனக்குழப் பம்தான் பெருநோய்! கண்ணனுக்கு அந்தப் பெருநோய் தீராத நோயாகி, இரத்தத்தையே கெடுத்துவிட்டது!

* *

"கடமை நேசர் கண்ணனுக்கு இரத்தக்கொதிப்பு. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர் திரு மணமாகாதவர். நல்ல சொற்பொழிவாளர். பலமுறை சிறைசென்றவர்" என்று பத்திரிகையில் செய்திகள் வெளிவந்துவிட்டன. செய்திகளைப் பார்த்து அனுதாபப் டவர்கள் ஏராளம். ஆனால் கெட்ட பிரச்சாரம்தான் வெளியே தெரிந்தது.

"சின்ன வயதில் இவ்வளவு புகழ் இருந்தால் இப் படித்தான்! புகழில், புத்தி இழக்கும் பெண்கள் எத் தனையோ பேர் நாட்டில்! கண்ணன் வீட்டிலேயே இருக் கிறதே ஒரு கிருமி! கண்ணனும் கொஞ்சம் அடக்க மாகவே இருந்திருக்கவேண்டும்"—பத்துப்பேருக்கு ஒரு வர்தான் இப்படிப்பேசினார்கள். இந்த நச்சுத்துளி வீட் டுக்கு வீடு பரவிவிட்டது.

கண்ணன் எவ்வளவோ தியாகங்களைச் செய்திருக் கிறான்; எத்தனையோமுறை அடி உதைபட்டிருக்கிறான். ஊர், அவைகளை விழுங்கிவிட்டு, பழியை மட்டும் ஜீர ணிக்கமுடியாமல் கக்கியது.

## இருவருக்கும் இலாபம்...!

வரவேண்டிய கடன் $2\frac{1}{2}$ டாலர்தான்--ஆனால் தரவேண்டியவனுக்கும், கடன் கொடுத்த சீமானுக் கும் ஏதோ விரோதம்!

எனவே சீமான் வழக்கறிஞராகப் பணி யாற்றிய ஆப்ராகாம் லிங்கனை அணுகினார்---வழக் குத் தொடர்ந்தாக வேண்டும் என்று வற்புறுத் தினார்.

"அப்படியானால் வழக்கை நடத்துவதற்கு நீங் கள் 10 டாலர் தரவேண்டும்--அதுவும் உடனடி யாக" என்று நிபந்தனை விதித்தார், லிங்கன்! தொகையைக் கொடுத்துவிட்டுச் சீமான் சென்று விட்டார்.

பிறகு லிங்கன் கடன்காரனை வரவழைத்தார்-- சீமானுக்குத் தரவேண்டிய கடனைத் தந்துவிடச் சொல்லி அவனிடம் 5 டாலர் கொடுத்தார்!

கடன் தீர்க்கப்பட்டது---வழக்கும் தொடரப் படவில்லை---கடன்காரனுக்கு $2\frac{1}{2}$ டாலர்மீதம். ஆப் பிரகாம் லிங்கனுக்கு 5 டாலர் இலாபம்!

கண்ணன் கெட்டவன்!

கபட நெஞ்சுக்காரன்! — மருத்துவ மனைக்கும் இந்தக் கூக்குரல் எட்டியது. கண்ணன் வெட்கிப் போனான். வாய் வழியாகஇரத்தம் கொட்டவும் தொடங்கி விட்டது. மருத்துவர் அடிக்கடி வந்து பார்த்தார். கனகம், கண்ணன் தூங்கும்போது மட்டும் வந்து பார்த்துவிட்டுப் போவது பழக்கம். அவள் வரும்போ தெல்லாம் பன்னீர்ப் பூவைக்கொண்டு வருவாள். மருந்து நாற்றத்தை மலரின் மணம் மாற்றும் என்று அவள் எண்ணினாள். ஆனால் கண்ணன், "மழைத்துளிகளைப் போல் உதிரும் மணமுள்ள பன்னீர்ப்பூ எந்தப் பெண்ணுக்கும் பயன்படாமல் கருகிக்கொண்டு வருகிறது என்று என்னைக் கேலி செய்வதற்காகத்தான் கனகம் என் எதிரே இந்தப் பூவைக் காட்டுகிறாள்" என்று நினைத்தான்.

* *

கண்ணன் வாழ்க்கையைக் கரையான் அரிக்கத் தொடங்கிவிட்டது. மருத்துவர் கவலை தெரிவிக்க ஆரம்பித்துவிட்டார். கண்ணன் புகழ் பெற்ற தலைவனாகையால், அவனது உடல் நிலையை அரசாங்கத்திற்குத் தெரிவித்தார் மருத்துவர். அதிகாரிகள், சமூக சேவகர்கள், கண்ணன்மீது பழியையும், பாவத்தையும் சுமத்தியவர்கள் அத்தனை பேருமே மருத்துவ மனையில் சூழ்ந்துவிட்டார்கள். கார்களும், வண்டிகளும், வந்து வந்து திரும்பின. மருத்துவர் கடைசியாகத் தனது முடிவைத் தெரிவித்தார்.

"கண்ணன் இனனும் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் பெண்ணுறவு கொள்ளாவிட்டால் பிழைக்க மாட்டார்" என்றார்.

கூடியிருந்தவர்கள் திகைத்தார்கள். சிலர் மனதுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்கள். "ஊரில் தான் அப்படி! மருத்துவ மனையிலுமா இப்படி இருக்க வேண்டும்!" என்று கேலியாகப் பேசியவர்கள் பலபேர்.

மருத்துவர் மறுபடியும் பேசினார்.

"நீங்கள் மட்டுமல்ல; நானே பெருமூச்சு விடுகிறேன். கண்ணனின் இரத்தம், பிரமச்சரியத்தால் கெட்டுவிட்டது. வாலிபத்தின் எண்ணங்களை அடக்கியதால் அவரது இரத்தம் கெட்டு இருக்கிறது. கெட்டுப்போன அந்த இரத்தம் முறிவதற்கு இன்னும் சிலமணி நேரங்கள் இருக்கின்றன. அதற்கு நான் சொன்னது தான் மருந்து. என் மருந்தில் ஒன்றுமில்லை" என்றார்.

கண்ணன் இலேசாகச் சிரித்தான்.

## தண்டனை—யாருக்கு?

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது, அந்த ஒற்றனுக்கு. கோர்ட்டிலிருந்து, தூக்கிலிடப்படவேண்டிய இடத்திற்கு நான்கு மைல் தூரம்—பாதை முழுவதும் ஒரே சேறாக இருந்தது!

அதில் அவன் நடந்தே அழைத்துச் செல்லப் பட்டான்!

ஒற்றன்:— நான், தூக்கிலிடப்படுவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் இந்தப் பாதையில நான்கு மைல் நடக்க வைக்கிறார்களே, இது நியாயமா?"

கூடவந்த 'கார்டு' சொன்னார் "நீயாவது பரவாயில்லை—நான் இந்தப் பாதையில், நடந்தே வீடு திரும்பவேண்டுமே!"

"எனக்குப் பெண்ணும் வேண்டாம்; உறவும் வேண்டாம். 'நான் இந்த நற்சான்றிதழோடு கண்களை மூட விரும்புகிறேன். இதனால் எனக்கு மட்டும் பெருமையில்லை. தூற்றலுக்கு ஆளான கனகத்திற்கும் பெருமை!" என்று கண்ணன் சொல்ல நினைத்ததை அவனால் சொல்லமுடியவில்லை. அவன் நிலை தவறிவிட்டான்.

கனகம் பன்னீர்ப் பூக்களோடு உள்ளே நுழைந்தாள். அதற்குள் கண்ணன் கண்களை மூடிவிட்டான்.

ஊரார் கனகத்தைப் பார்த்தார்கள். அவள் தலையைக் குனிந்துகொண்டாள். அவள் ஏன் குனியவேண்டும்! குனியவேண்டியவர்கள் அவர்களல்லவா!

○ ○

மறுநாள்!

புதுப் புனல்போல் மக்கள் கூட்டம் வளைந்து வளைந்து சென்றது. அவர்கள் நடுவே ஒரு பல்லக்கு மிதப்பதுபோல் நகர்ந்தது. அந்தப் பல்லக்கில் இரண்டு பிணங்கள்! கன்கம் உயிரோடிருக்கும்போது பூச்சூட்ட அனுமதிக்காத ஊரார் அவள் செத்துப்போன பிறகு அவள்மீது கூடை கூடையாக மலர்களைக் கொட்டி ஒரு பக்கத்தில்—இரதத்தில் படுக்க வைத்திருந்தார்கள். புத்தம் புது மலர்போல் மற்றொரு பக்கத்தில் கண்ணன் மீளாத் துயில் கொண்டிருந்தான்.

*



# என் கதை

[சி. வி. இராசகோபால்]

நான் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் பயில்கிற பொழுதே அண்ணாவின் நண்பனானேன். பள்ளி, என் வீட்டிற்கும் அவர் வீட்டிற்கும் இரண்டு மைல்களுக்கு அப்பால்தான் இருக்கிறது — ஆகவே அவருடைய ஒற்றை மாட்டு வண்டியில் நானும் அவருமாகத் தான்செல்வோம். எங்கள் குடும்பமும் அவருடைய குடும்பமும் நெருங்கிப் பழகுவது மட்டுமல்லாமல், யோசனைகளையும் கேட்டுக்கொள்கிற பழக்கமுடையவர்களாக இருந்ததையும் நான் அறிவேன். உயர்நிலைப்பள்ளியோடு நான் நின்றுவிட்டேன். ஆனால், கல்லூரிபடிப்புக்கு அவர்சென்னை சென்றுவிட்டார். படித்தஅந்த இளமைக் காலத்தில் கொஞ்சம்வசதியிருந்த எனக்கு, என் பட்டுச் சேலை வியாபாரத்தையும் நிலத்தையும் கவனிக்கத்தான் எண்ணம் வந்தது—இதைப்போல அண்ணாவும் படித்து விட்டு வேலைக்குப்போவது என்ற எண்ணம் இருந்து வந்தது—ஆனால் அப்போது ஒரு நாளாவது இப்படிப் பொதுவாழ்வில் ஈடுபடுவோம் என்ற எண்ணம் அவருக்கு வந்ததேயில்லை—எனக்கும் தெரியாது. இப்படி ஒரு விஷயம் பேசுவோமோ என்றால், பேசினதும் இல்லை —வேடிக்கைப் பேச்சுத்தான் அதிகம்!

அவர் இயக்கத்திலே சேர்ந்து பணியாற்ற ஆரம்பித்த பிறகு, நான் எப்பொழுதும் கூடவே இருப்பேன். இரவிலும் பகலிலும் சுற்றுப்பயணங்களிலும் இருப்பவன். இயக்கத்தில் உள்ளவர்கள் எல்லோரையும் தெரியும். எந்த ஊர் அண்ணாவோடு நான் சென்றாலும், மிக அன்பாக ஆசையோடு வரவேற்பார்கள். என்னிடம் பேசுவதில் மகிழ்ச்சி கொள்வார்கள். இருந்தும் எனக்கு இயக்கத்தில் எந்தப் பதவியும் பொறுப்பும் தேவை என்கிற ஆசை வந்ததா என்றால் இல்லை. வராததற்குக் காரணம், அவரோடேயே இருக்கிறோமே என்ற எண்ணந்தான்! இயக்கத்திலே உள்ள பல முக்கியஸ்தர்கள் சில மணி நேரம் அரசியல் விவகாரங்களைப்பேசிவிட்டுப்போய்விடுவார்கள். கூட்டங்களில்பொதுமக்கள் அவருடைய கருத்துக்களைக்கேட்டு விட்டுப்போய்விடுகிறார்கள். ஆனால் நான் அப்படியல்ல. இரவு பகலெல்லாம் கூட இருப்பவன்.

எனவே, மிகப் பெருமையாகச் சொல்லிக்கொள்ள வேண்டியது அவரோடு இருந்ததால் பலப்பல விஷயங்கள், உலகநாடுகளினுடைய வரலாறு, மக்கள் வாழ்க்கை வளம், அந்நாட்டைக் கட்டிக் காக்கின்ற தலைவனுடைய திறமை அவர்களுடைய முயற்சி, சிந்தனை எல்லாம் கேட்டு மகிழ்வேன். மேல் நாட்டிலுள்ள பல பேரறிஞருடைய சாதனைகளைக் கூறுகிற பொழுது எனக்கே மயக்கம் வரும். இசையைப்பற்றியும் தாள வரிசைபற்றியும் அவரிடம் கேட்கிற பொழுது திக்பிரமை பிடித்தவன்போல் ஆய்விடுவேன். அவரோடுபேச வருகிற நண்பர்கள், அல்லது புதிதாகஅறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வருகிறார்களே அவர்களைப்பற்றி அவர்களுடைய தன்மை, நிலை, நடத்தை, இதையெல்லாம் அவர்கள் சென்றுவிட்ட பிறகு என்னிடம் சொல்லுகிற பொழுது நானே பயப்படுவேன் சிற்சில சமயங்களில். பல புத்தகங்கள்தான் எழுதினாரோ என்றால் இல்லை; பல நாடகங்களும் எழுதினார். அதில்தான் நான் கண்ட ஒரு வேடிக்கை. திரு. K. R. R. நாடகக்கம்பெனியில் அண்ணாதீட்டிய வேலைக்காரி என்ற நாடகம் ஒன்றே தஞ்சாவூர் இராமநாதன் செட்டியார் கொட்டகையில் ஓடிக்கொண்டிருந்தது. அடுத்த நாடகம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நேரம், அந்தப்பக்கம் சுற்றுப் பயணம் முடித்துத் தஞ்சை நாடகக் கம்பெனியில் தங்கச் சென்றபொழுது இந்தக் குறையைச் சொல்லி அடுத்த நாடகம் உடனடி தந்தால்தான் கம்பெனி நிற்கும். இல்லையேல் மிகக் கஷ்டமான நிலைக்கு வந்துவிடும் என்பதனை எடுத்துக் கூறி, எப்படியாவது ஒரு நாடகம் தேவை என்று கேட்டு, அவரிடம் உறுதி பெற்றுவிட்டார்கள். என்ன செய்வது? அதிகம் செலவு செய்து டிரஸ்கள் சீன்கள் தயாரிக்கும் வகையில் அவ்வளவு பணம் இல்லாத நேரம். குறைந்த செலவில் நாடகம் தயாரித்தாகவேண்டும். காஞ்சி வந்தோம். அவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. 'சொல்லிவிட்டோமே' என்னய்யா செய்வது, வாய்யா கண்ணன் டாக்கீஸ் போகலாம் (P. U. சின்னப்பா கண்ணாம்பா நடித்த)கண்ணகிக்கு, என்றார். படத்திற்குச் சென்றோம். ஏற்கனவே பல தடவை பார்த்து அவர் மகிழ்ந்த படம்அது. பாண்டியன்அவையிலே கண்ணகியின் ஆவேசமான உரை நடையைக் கேட்டுவிட்ட வுடனே திரும்பிவிட்டோம். அப்பொழுது அலுவலகம் எங்களூர் M. V. M. பச்சையப்ப முதலியார் மெத்தைக்

கட்டிடத்தில் இருந்தது. இரவு 1-மணிக்கு மேல் பேனு எடுத்தார். காலை 6 மணிக்குள் கதை உருவாகிவிட்டது. எழுந்து பார்த்தால் "ஓர் இரவு" என்ற நாடகம். வழக்கம்போல் 10-மணிக்குமேல் எழுந்த அண்ணு, 'தெரியுமாய்யா 'ஓர் இரவு' என்ற நாடகம் எழுதிவிட்டேன்' என்ருர். இதை நான் சொல்லி நீங்கள் கேட்பதைவிட, நேரிலே கண்டவனுயிற்றே எனக்கு மகிழ்ச்சியிருக்காதா?

தமிழ் நாட்டில் சந்திரோதயம், சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் போன்ற நாடகங்கள் நடந்திருப்பது நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தில் இல்லை. ஆனல் ஒன்று சொல்ல வேண்டுமே. ஈரோட்டில் பெரியார் ஈ. வே. ரா. தலைமையில் சந்திரமோகன் நடந்தது. அதில் பாலாஜி பகதூர் கட்டம் வருகிறது. பகதூர் காதலித்து ஆகவேண்டும். காதல் எப்படி என்பதனைக் கூறிப் பகதூரைத் தயார் செய்துஆகவேண்டும். பகதூராக நான்நடித்தேன். அப்பாவியாகவும் இருத்தல் வேண்டும். நாடகம் நடந்தது. அடுத்த நாள் காலை பெரியார் இல்லத்தில் பற்பலர் நாடகத்தினுடைய சிறப்பையும் நடிப்பைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் தருமாம்பாள் அம்மையார், பெரியாரிடம் "ராஜகோபால் பார்த்தீர்களா ஐயா, எந்த மாதிரி நடித்தது." என்ருர்கள். உடனே பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், "அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா? அண்ணுதுரை அதற்கு ஏற்ற ஆளைக் கண்டுபிடித்து எழுதினரம்மா?" என்றெல்லாம் பேசினதைக் கேட்ட எனக்கு மகிழ்ச்சி இல்லாமலா போகும்! இப்படிப் பலப்பல விஷயங்கள்.

இராஜகோபால் என்று குரல் எழுப்பும்போது நான் அருகில் இல்லை என்ருல், ஆள் அனுப்பித் தேடச் செய்வது, விருந்துக்குச் செல்கிறபொழுது உடன் அழைத்துச்செல்வது, வீட்டில்உணவருந்தினல் கூடவே இருந்து சாப்பிடுவது, இதையெல்லாம் நான் எண்ணுகிறபொழுது, எனக்கு நானே பெருமைப்படுகிறேன்.

நானும் வியாபாரத்தில் பணம் சம்பாதித்து இருக்க வேண்டும் என்று எண்ணி அக்கரையோடும் பொறுப்போடும் இருந்துஇருந்தால், நிறையப்பணம் சம்பாதித்து இருக்கமுடியும். அப்படிப் பணம் ஏராளமாகியிருந்திருந்தால் நிலபுலன்கள் வாங்குவதும், வீடு மாடுகள் வாங்குவதும் மேலும் மேலும் வியாபாரத்தைப் பலப்படுத்துவதும், ஆகஅப்படிப்பட்டநோக்கமாகவே போயிருக்கும். அப்பொழுது அண்ணுவின் உற்ற நண்பனுகியிருக்கமாட்டேன். காரணம் அவருடைய துறை வேறு, என் வழி வேறுமாகத்தான் இருந்திருக்கும். பணம் சம்பாதிக்கும் குறிக்கோள் இல்லாததால்தான், அவருடைய அரசியல் வாழ்வில் நானும் பங்கு கொண்டவனுகிச் சதா நேரம் அவருடன் இருக்கும் பெரும் வாய்ப்பினைப் பெற்றுவிட்டேன். பணம் இருந்திருந்தால், என் ஊருக்கு மட்டும் தெரிந்தவனுகத்தான் இருப்பேன்.

இப்பொழுதோ, தமிழ் நாடே என்னைத் தெரிந்து கொண்டு இருக்கிறது. அன்பாக வரவேற்கப் பலப் பல நகரத்தில் நண்பர்கள், சிற்றூர் பேரூர் போன்ற இடங்களிலெல்லாம் உயிர்த் தோழர்கள் இருக்கிருர்கள் என்பதை நான் மறந்துவிடவில்லை. இது எதனுல் கிடைத்தது, எத்தகைய வாய்ப்பு, எப்படிபட்ட உறவு, அண்ணுவுக்கு எனக்கும் என்பதனை நான் ஒருகணம் மறந்தாலும் நாடு மறக்கவில்லை, என்பதனை எண்ணுகிற பொழுது எவ்வளவுபூரிப்பு. அண்மையில் வேலூர் சிறையிலேயிருந்து திரும்பியபொழுது அண்ணுவுக்கும் எனக்கும் ஒரு பாராட்டு என் ஊரில். அதில்அண்ணு என்னைப் பாராட்டி பேசியபொழுது என் ஊரே மகிழ்ச்சிகொண்டது. அதைப் பார்க்கும்பொழுதும் கேட்டபொழுதும் எவ்வளவு பூரிப்பு எனக்கு. அவர் பற்பல இடங்களில் பாராட்டிய பாராட்டுதலையும், கூடவே இருந்து கேட்டதால் இந்தப்பாராட்டுதலுக்கு ஒருதனிச்சிறப்பு. மனதைத் திறந்து அவர் தன்னையும் மறந்து 'அன்புக்கண்ணீரைச் சொரிந்து நீண்டநேரம் அவர் ஆசைதீரப் பேசியதைக் கேட்டபொழுது எனக்கு எவ்வளவு கூச்சம். இவ்வளவு பெரிய பாராட்டுக்கு நான் அருகதை உள்ளவன்தானு என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன்.

அண்ணு அவர்கள் ஒரு பெரும் இயக்கத்தை நடத்துகின்ற முக்கிய பொறுப்பில் இருக்கிருர், என்பதனை நான் சொல்லி நீங்கள் அறிந்துகொள்ளுகின்ற நிலையில் இல்லை.

அவரோடு சுற்றுப்பயணம் செல்கின்ற நேரத்திலெல்லாம், வேடிக்கையாகவும், விதண்டாவாதமாகவும் பேசி அவரை உற்சாகப்படுத்துவேன். உற்சாகம் மிக, மிக, அவருடைய பேச்சில் உத்வேகம் அதிகம் இருக்கும். புதிய புதிய கருத்துக்கள் வெளிப்படும்; கூடியிருந்த மக்கள் வெள்ளம் பெரும் திருப்தியோடு செல்லும். இதைப் பார்க்கின்ற எனக்குப் பெருமிதம் ஏற்படுவது இயற்கைதானே! அண்ணுவின் அருகில் முதலிடம் எனக்குத்தான் என்றுகூட எண்ணுகிறேன்.

இயக்க வளர்ச்சிக்கு, என் பணியும் பயன்பட்டது என்று எதிர்காலம் ஏற்றுக்கொள்ளுமானல், அதைவிட வேறென்ன பெருமை வேண்டும் எனக்கு? ●

## படப்பிடிப்பு....எப்படி ?

ஒரு புகழ் பெற்ற எழுத்தாளரின் படப்பிடிப்பு இது:---

"பெண்களுக்குக் கணிதத்தில் விருப்பமும் தேர்ச்சியும் அதிகம்---தங்களுடைய வயதை இரண்டால் வகுத்துக் கொள்கிருர்கள்---தங்கள் உடைகளின் விலையை இரண்டால் பெருக்குகிருர்கள்---கணவன்மார்களுடைய வருமானத்தைக் கணக்கிடும்போது, முன்னல் பெருக்கிக் கொள்கிருர்கள் --- அடுத்த பெண்களின் வயதைச் சொல்லும்போது ஐந்து ஆண்டுகளைச் சேர்த்துக் கொள்ளுகிருர்கள்!"

# கண்டு கருத்தறிந்தேன்

பொங்கல் மலர் வேலை தொடங்கியது. அட்டைப் படம் என்னவாக இருக்கலாம், எப்படி இருக்கலாம் என்பதுபற்றி அண்ணாவின் சிந்தனை அலைந்தது. எதிரில் இரண்டொருவர் இருந்தோம். "நீ எதைப்பற்றி எழுதப் போகிறாய்?" என்று என்னிடம் கேட்டார். ஒரு கணம் எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. ஒரு கணம் என்ன, எப்பொழுதுமே எதுவும் சொல்லத் தோன்றுவது இல்லைதான். 'எதைச் சொன்னால், என்ன சொல்லுவாரோ' என்ற ஐயம் — அச்சம் என்றுகூடச் சொல்லலாம். வழக்கம்போலவே 'சும்மா' இருந்தேன்.



"ஒன்று செய்கிறாயா?" என்று கேட்டார். "சொல்லுங்கள்" என்றேன். "ஒரு நாலைந்து பேரை, பொதுவானவர்களாகப் பார்த்து அவர்கள் கருத்து அறிந்து வாயேன்" என்றார்.

"பேட்டிதானே, அண்ணா, சரி செய்கின்றேன்" என்று மகிழ்ச்சியோடு என் பணியைத் தொடங்கினேன்.

எத்தனையோ பேரைக் காணவேண்டும், கருத்தறிய வேண்டும் என்ற ஆவல்தான். ஆனால் கால நெருக்கடி, சிலரை மட்டுமே காண வாய்ப்பளித்தது. முதல் முயற்சி, எனவே இப்போதைக்கு இவ்வளவு போதும் என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக்கொண்டேன்.

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களை நாடு நன்கு அறியும். நாட்டுத் தொண்டுகள் பல ஆற்றிய நல்லார் அவர்; தமிழ்க்கலை தரணி எங்கும் தழைத்திடவேண்டும் என்ற தணியாத வேட்கை படைத்திட்டவர். மாணவர் உலகில் மனங்கவர் பேராசிரியராய் மாண்புடன் விளங்கிடுபவர்.

புலவர் அன்பு கணபதி அவர்களின் மொழிப் பற்றைப்பற்றிச் சொல்லித் தெரிய வேண்டுவது இல்லை. தமிழுக்கு ஆபத்து என்றபோது அது தனக்கு வந்ததாகப் பாவித்துப் போர்க்களத்தில் தம் ஆற்றல் காட்டிய வீரர் அவர். 'தமிழ் எனின் உயிரும் கொடுக்குநர்' வரிசையிலே சுலபமாகச் சேர்ந்திருப்பவர். எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்து பாடுபட்டவர்.

இவர்கள் இருவரேயன்றி, பேராசிரியர் இளஞ்செழியன், வழக்கறிஞர் கோகுல கிருட்டினன் ஆகியோரையும் கண்டு, கருத்தறிந்தேன். அறிந்ததை அளித்துள்ளேன்.

—மா. கி. தசரதன்.

பேராசிரியர் :

## அ. மு. பரமசிவானந்தம்

எத்தனையோ முறை சென்றுவந்த இடம்தான் பேராசிரியர் பரமசிவானந்தனார் அவர்கள் இல்லம். ஆனால் இம்முறை போகின்றபோது மட்டும் மனத்தில் ஒரு புதிய உணர்ச்சி. இத்தனை நாள் கண்டு பேசித் திரும்ப மட்டுமே போனவன்; இன்று கருத்துரை பெறவும் அல்லவா போகின்றேன்!

"வா! உட்கார்" என்றார் ஆசிரியர். வகுப்பறையில் அடக்க ஒடுக்கமாக இருந்ததைப்போலவே நாற்காலி விளிம்பில் உட்கார்ந்தேன். என்னென்னவோ பேசினோம். பேச்சின் இடையில் பேட்டி நினைவு வந்தது.

"வந்து......" என்று இழுத்தேன்.

"என்ன சொல்" என்று தொடர்ந்தார் ஆசிரியர்.

"சிலகேள்விகள் கேட்கலாம்என்று..."

எத்தனை முறை எத்தனைவிதமான கேள்விகள் கேட்டு எனக்குப் பாடம் புகட்டிய ஆசிரியர் அவர் — அவரையே இப்போது நான் கேள்விகள் கேட்கிறேனே என்று தயங்கினேன்.

"தாராளமாகக் கேளேன்" என்றார்.

"தங்கள் மாணவப் பருவத்தின்போது இருந்த சூழ்நிலைக்கும் இப்போதுள்ள சூழ்நிலைக்கும் மாறுபாடு ஏதாவது காணுகின்றீர்களா?"

"அடிப்படையில் பெரிய மாறுபாடு ஒன்றும் காணவில்லை. தமிழ் நாட்டில் தமிழ் மொழிபற்றிய உணர்வு சற்று அதிகம் எனலாம். அதுவும் பிறமொழியாளரை நோக்கப் பெருமைப்படும் வகையில் இருக்கவில்லை. மக்கள் தம்மைப்பற்றி அறிவதைவிட— தம் நிலையை உணர்ந்து ஒழுக்க நெறியில் நிற்பதைவிட மற்றவர் அறிவை — வாழ்வை — ஒழுக்கலாற்றினை உணர்ந்தவர்களாகக் கருதிக்கொண்டு பேசுகின்றனர். மக்கள் தம் உரிமையை உணரத் தொடங்கியுள்ளனர். கடமை உணர்சசி ஓரளவு தாழ்ந்துள்ளதென்றே கூறலாம். எதையும் எண்ணும் நிலையில் மக்கள் உள்ளம் செல்லுகிறது. 'கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக' விரும்புகின்றனர். உயர்வு தாழ்வு நீங்கும் நிலை மலர்ந்துள்ளது."

"அதாவது சில துறைகளில் முற்போக்கும் வேறு சில துறைகளில் குறையும் உள்ளது என்று......

"நிச்சயம் சொல்லலாம். அதோடு, புறவளர்ச்சி பெற்றுள்ள அளவிற்கு மக்கள் அகவளர்ச்சி பெறவில்லை என்பது கண்கூடு. அகத்தில் கண்கொண்டு நோக்கி உணர்ந்து வாழும் செம்மை நெறியே வாழ்வுக்குத் தேவை என்பதை உணரும் அறிவு முகிழ்க்கவேண்

டும். அந்த அறிவிலேயே வாழ்வின் அடிப்படையாய அன்பு மலரும்; அன்பு மலர அவனி செழிக்கும்; நாடு நாடாகும். நானிலம் செழிக்கும்''.

''புற வளர்ச்சி மட்டும் இருந்து அகவளர்ச்சி குறைந்துள்ளதற்கு இன்றைய கல்வி முறை காரணம் என்று சொல்லலாமா?'' என்று கேட்டேன்.



''கல்வி முறையைப்பற்றி நான் மிகுதியாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. பாரதி நாற்பதாண்டுகளுக்கு முன் சொன்ன அதேநிலையில்தான் இன்றைய கல்வி உள்ளது. 'தேவையற்ற, வேண்டாத, விளக்கமுறாத, பண்பும் பயனும் அற்ற கல்வி நாட்டுக்குத் தேவையா?' இந்தக் கேள்வியைத்தான் அன்று பாரதி கேட்டார். இன்று நாமும் கேட்கவேண்டிய நிலையில் உள்ளோம்!!''

கல்வி முறைபற்றிய பேச்சு வந்ததும் ஆசிரியரிடம் இலக்கியத் தொடர்பான செய்தி ஏதேனும் கேட்கவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. எதைப்பற்றிக் கேட்கலாம் என்று எண்ணியவாறு இருந்தேன். ''என்ன நினைக்கின்றாய்?'' என்று கேட்டார் ஆசிரியர். ''இலக்கியம்பற்றி ஏதாவது கேட்கலாமா?'' என்று நினைத்தேன்'' என்றேன்.

''கேளேன்'' என்றார்.

''தமிழ் இலக்கியங்களினால் அறியப்படும் வாழ்க்கை நெறி யாது? அந்நெறி இன்றைய வாழ்வில் எந்த அளவு, எவ்வகையில் பயன்படும் எனத் தாங்கள் கருதுகின்றீர்கள்?''

''இதைப்பற்றி எவ்வளவோ சொல்லலாம். ஆனாலும் சுருக்கமாகக்கூறுவதாயின், எவ்வுயிரும் தம் உயிர் போல் எண்ணி வாழ்வது, எந்த வகையிலும் வேறுபாடு காட்டாது உள்ளத்தால் ஒன்றி வாழ்வது பழந்தமிழர்தம் கொள்கை என்பதை அறிகின்றோம். அடுத்தது கேட்டாயே, இன்று அதுஎவ்வளவு பயன்படும் என்று; அது தான் கொஞ்சம் கவலை தருவது. அந்த உயர்ந்த நெறி இன்று நாட்டில் இல்லை; ஏட்டளவில்தான் இருக்கிறது.''

''இதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?''

''வேறு என்ன, சூழ்நிலைதான் காரணம். இன்றைய உலகச் சூழ்நிலைக்கு இந்த நெறி 'பொருந்தாதோ' என ஐயுறத் தக்கதாய் அமைந்துள்ளது. ஆனால் இறுதியில் இந்த நெறியால்தான் உலகம் வாழும். இந்த நெறி வாழ்வில் அமையும் வரையில் உலகில் அமைதி காண முடியாது.''

''இந்தநெறி உலகத்திற்குத் தெரியவேண்டுமாயின், தமிழ் இலக்கியம்பற்றி உலகம் தெரிந்துகொள்ளவேண்டும் அல்லவா?''

''ஆமாம், அதிலே என்ன ஐயம்?''

''அதற்குத் துணை ஆகும் வகையில், உலகத்திற்கு வழங்கத்தக்க தமிழ் இலக்கிய, அல்லது தமிழர் தம் மரபான கருத்துக்களில் சிலவற்றைக் குறிப்பிட்டால்.........''

''எல்லோர்க்கும் தெரிந்த கருத்துக்களே. புதிதாக நாம் சொல்வது ஒன்றும் இல்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஒன்றிய உணர்வு; 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும்' நல் உள்ளம்; 'யாமார்க்கும் குடியல்லோம்' என்ற வீறு; 'வாடிய பயிரைக் கண்டபோது வாடும்' இரக்கம்—இவை, தமிழர் தரணிக்குத் தரத்தக்க கருத்துக்கள்''

''தங்கள் வாயிலாக எத்தனையோ இலக்கியப் பகுதியை மாணவர் உலகம் சுவைத்துள்ளது. ஆனால் தங்கள் மனத்தை ஈர்த்துள்ள இலக்கிய இயற்கைக் காட்சி ஒன்றைப்பற்றிச் சொல்ல வேண்டுகின்றேன்'' என்று கேட்டுக்கொண்டேன்.

''இது என்ன வகுப்பு என்று நினைத்துக்கொண்டாயா? பேட்டிக்கு வந்த நினைப்பே இல்லையா?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''பேட்டி என்பது நினைவிருக்கிறது. என்றாலும் யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது உயர்ந்த கொள்கை அல்லவா? தங்களிடம் மாணவர்களாக இருந்து நாங்கள் பெற்ற இன்பத்தினைப் பொது மக்களும் பெறட்டும் என்றுதான் கேட்கின்றேன்'' என்றேன்.

என்பதிலைக் கேட்டு ஆசிரியர் சிரித்தார். எதைக் கண்டோ, தெரியாது!

ஆனால், அவர் சொன்ன விடை:

''இலக்கியங்களில் எத்தனையோ இயற்கைக் காட்சிகள் வந்துவந்து உணர்வூட்டிச் செல்லுகின்றன. இயற்கை நலத்தில் தோய்ந்து தன்னையும் தன் இன்பத்தையும் மறந்தும் துறந்தும் நின்ற தலைவனைப்பற்றிய அகநானூற்றுப் பாடலே என் உள்ளத்து நிலைத்து நிற்பது.

தன் உள்ளத்து வேட்கையினையும், கொடுத்த வாக்கையும், தலைவியின் எதிர்நோக்கும் கண்களையும் மறந்து பேதுற்ற வண்டுகளுக்காகத் தன் தேரை நிறுத்தி மணிஒலி அடக்கிச் சென்ற தலைவன் உள்ளத்தை எண்ணாத நாள் இல்லை. பணிமேற்சென்ற தலைவன் தலைவிக்குக் கொடுத்த வாக்கின்படி கார் காலத்துக்கு முன் வர விரைந்து வருகின்றான்; தேரின் மணி ஒலி எழுப்புகிறது. காட்டுவழியில் அவ்வொலி கேட்டு வண்டுகள் — பெண் வண்டுகளுடன் கலந்த பொன் வண்டுகள்—அலமருகின்றன; மருள்கின்றன—அஞ்சுகின்றன, அவற்றைக் கண்ட தலைவன் உள்ளம் அஞ்சுகின்றது—தன் வாழ்வையும் வாழ்க்கையையும் மறக்கின்றது. தேர்ப்பாகனை அழைத்துத் தேரை நிறுத்தச் சொல்லி ஒலி எழுப்பும் மணிகளைப் பிணிக்கப் பணிக்கிறது. பின் அக்காட்டு வண்டுகள் களித்து மகிழ்ந்திருக்காவோ! இவ்வாறு மனிதன் உள்ளத்தில் 'தனக்கென வாழாத்' தனித்த உணர்வை உண்டாக்கிடும் இயற்கை ஓவியத்தை—அதைப்பாடிய குறுங்குடி மருதனாரை மறக்கவும் முடியுமோ!?''

''பூத்த பொங்கர்த் துணையோடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்''

—அகம் 4.

ஆசிரியர் உரையும் பாட்டுமாகக் கலந்து இலக்கியத் தேனைப் பொழிந்துகொண்டிருக்கக் கேட்டுக்கொண்டிருந்த நான் என்னையும் மறந்தேன். சங்ககாலமும், அக்காலத்து வாழ்வும், தலைவனும், தலைவன் ஏறிவந்த தேருமே தெரிந்தேன்.

கணகண என மணிஒலி கேட்டது, திடுக்கிட்டுத் திரும்பினேன். தலைவன் ஏறிவந்த தேரின் ஒலி அல்ல—ஆசிரியர் வீட்டில் வரவேற்புக் கூடத்தில் இருந்த தொலைபேசியின் மணி ஒலிதான்! மீண்டும் அதன் அவசர அழைப்பு.

ஆசிரியர் எழுந்துசென்றுசெய்திகேட்டார். நானும் விடைகேட்டுக்கொண்டு வீடு திரும்பினேன்.

✲

## புலவர் அன்பு கணபதி

அதே தெருவில்தான் புலவர் அன்பு கணபதி அவர்களின் 'அன்பு மனை.' தமிழ்க்கலை இல்லத்தி லிருந்து அன்புமனைக்குள் சென்றேன்.

"வா! அய்யா!" என்ற வரவேற்பு, வாயிலைத் திறக் கும் போதே கிடைத்தது. பேராசிரியர் அன்பு கணபதி அவர்களின் வீடு ஒருவகையில் தமையனுர் வீடுபோல் எனக்கு. படிக்கும்போதிருந்து ஒருவகையான உடன் பிறப்பு எண்ணம் அவரைக் காணும்போதும், காணுது நினைக்கும்போதும் எழும். அந்த இன்ப நினைவில் திளைத்தவனுகி உள்ளே சென்று அமர்ந்தேன்.

நாவிற்கினிய நல்விருந்து சிற்றுண்டி என்ற பேரால் கிடைத்தது.

"என்னய்யா சங்கதி?" என்ருர் ஆசிரியர்.

வாயில் சிற்றுண்டியை இட்டு மென்ற நிலையில் பேசமுடியாத தவிப்பு எனக்கு. எனவே கையில் எழுதி வைத்திருந்த 'வினுத்தாளை' எடுத்து நீட்டினேன்.

ஒருமுறை பார்த்தார்; படித்தார்; மடித்துவைத்தார்.

என் கையில் இருந்த தட்டும் காலி ஆயிற்று.

"அதற்கு விடைகள் கேட்டுப்போக வந்திருக் கிறேன்" என்று சொல்லிக்கொண்டே தாளும் கோலும் எடுத்து வைத்துக்கொண்டேன்.

"நீ ஒன்றும் எழுதவேண்டாம். போய் படுத்துத் தூங்கு. காலையில் வா. நான் எழுதிவைக்கிறேன், வாங்கிக்கொண்டுபோ" என்ருர்.

நான் ஏன் மறுக்கப்போகிறேன்! அப்படியே அவர் கொடுத்த விடைகளை, நான் கேட்ட வினுக்கள் ஒவ் வொன்றின் கீழேயும் இணைத்துத் தந்துள்ளேன்:

**1. தமிழரின் ஆட்சிமுறையிலே காணக்கிடக்கும் ஜனநாயகப் பண்பு குறித்துத் தங்கள் கருத்து என்ன?**

தமிழரின் வாழ்க்கை முறையே ஜனநாயகப் பண்பு உடையது. உள்ளத்தால் ஒன்றுபட்ட ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்க்கை மேற்கொண்டனர். பெற் ரேரும் பிறரும் ஒப்பினர்; சமுதாயம் அதனை ஏற்றுப் போற்றியது. மனித உரிமையை மதிப்பது ஜனநாயகத் தின் அடிப்படை. இதனைத் தம் வாழ்விலேயே அமைத்து வாழ்ந்தவர் அன்றைய தமிழர்.

எண்ணவும் எழுதவும் சொல்லவும் செய்யவும் ஆன உரிமைகள் மக்கள் ஆட்சியில்தான் உண்டு. திருக்குறளுக்குப் பத்து உரைகள் எதற்கு? ஒன்று போதுமே! இனி, இப்பத்தும் போதா என்று, புதிய உரைகள் பல தோன்றக் காரணம் என்ன? சிந்தித்தால் தெளிவு பிறக்கும்; கருத்துக்கள் மோத வெளிச்சம் தோன்றும். ஜனநாயக நுட்பம் இதில் அமைந்துள்ளது.

இங்ஙனமாக, தமிழரின் ஆட்சிமுறையில் அமைந் துள்ள ஜனநாயகப் பண்பினைக் கேட்கவேண்டுமா? அன்று தமிழகத்தில் அமைந்திருந்தது கோன் ஆட்சி என்ருலும், அது குடிதழுவிய கோனுட்சியாக — குடிக் கோன் ஆட்சியாகவே—அமைந்திருந்தது. ஐம்பெருங் குழு, எண்பேராயம் என்ற அமைப்புக்கள் குடவோலை எடுத்தல், பஞ்சாயத்து என்ற நடைமுறைகள் ஆகிய இப்பெயர்களே வழிவழியாகத் தமிழர் ஜனநாயகப் பண் பில் கொண்டிருந்த ஈடுபாட்டினை நமக்கு நன்கு புலப் படுத்தும். மன்னன் 'இடிப்பாரைத்' தனக்குத் துணை யாகக் கொண்டிருக்கவேண்டும். அவ்வறிஞர் கூறும் இடிப்புரையை—தாக்குதலை—ஏற்றுத் தன் தவறுகளைத் திருத்திக்கொள்ளவேண்டும் என வள்ளுவர் கூறியுள் ளார். பழைய தமிழ் வரலாற்றில் இதற்கு எத்துணையோ உதாரணங்கள் காட்டலாம். தமிழரின் குருதியிலே கலந்து ஊறிவந்த இப்பண்பினைத் தளரவிடலாகாது. இதற்குக் கெடுதல் வர, நாம் பார்த்திருக்கலாகாது. ஜனநாயகம் வீழ்ந்தால் நாம் வீழ்வோம்; உலகம் வீழும். ஜனநாயகத்தின் வாழ்வே உலகத்தின் வாழ்வு.

**2. தமிழ்மொழி பிற எந்த மொழி ஆதிக்கத்தாலும் பாதிக்கப்படாமலிருக்க என்ன நிலைமை ஏற்பட்டாக வேண்டும்?**

தமிழ்மொழி அழிந்துவிடும் என இனி அஞ்சத் தேவையில்லை. அந்தக்காலம் போய்விட்டது. உயர் நிலைப் பள்ளிகளில் எல்லாம் பயிற்றுமொழியாகத் தமிழ் அமைந்து ஆண்டு பல ஆகின்றன.



தொழில் நுட்பத் துறை உள்பட எல் லாத் துறைகளி லும் கல்லூரிகள் அனைத்திலும் விரைந்து பயிற்று மொழியாகத் தமிழ் இடம் பெறுதல் வேண்டும். இடை யில் மாறுதல், காலத்தில் ஏற்படும் மொழித் தொல்லை கள் காலப்போக் கில் நீங்கும்; மொழி நடை தூய்மையும் எளிமையும் பெறும். வரும் தலைமுறையினராவது தமிழில் எண்ணுவர்; அவ்வெண்ணத்தை எழுத்தில் வடிப்பர். தமிழில் முதனூல் ஏராளமாகத் தோன்ற வழி ஏற்படும். ஆய்வு, அறிவுத்துறைகளில் பலரும் தாராள மாகப் புகலாம்.

இந்த நிலை ஏற்பட்டுவிட்டால் எந்த மொழி ஆதிக்க மும் தமிழ்மொழியைப் பாதிக்காது.

**3. இன்றைய தமிழரின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவிய ஏதேனும் ஒரு நிகழ்ச்சி பற்றிக் குறிப் பிடவும்.**

1938 செப்டம்பர் 17ம் நாள் மாலை திருவல்லிக் கேணி கடற்கரையில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். 'வெள்ளம்போல் தமிழர் கூட்டம்;' ஆனல் அவர்கள் உள்ளத்தால் ஒன்றுபட்டிருந்தனர். அவர்கள் ஒரே குரலில் எழுப்பிய உரத்த ஒலி 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பது. தமிழர் சமுதாய வாழ்வில் இந் நிகழ்ச்சி ஒரு திருப்புமுனை ஆகும். தமிழர் தம்மை உணர்ந்தனர்; தம் நாட்டை, தம் மொழியை, தம் நிலையை உணர்ந்தனர். வாடி நின்ற தமிழர் சமுதாய மாகிய பயிர், அன்று ஏற்பட்ட விழிப்புணர்ச்சி காரண மாகத் தளிர்விட்டு வளர்ந்தது. இந்தக் கால்நூற் ருண்டுக் கால எல்லையில் பல்கிப் படர்ந்து பூத்துக் காய்த்து நிற்கின்றது. அதனைக் காத்துக் கனி உண்ண வேண்டுவது தமிழர் கடன்.

**4. தமிழாசிரியர் கல்வித் துறையில் பெறவேண்டிய இடம் எது என்று தாங்கள் கருதுகிறீர்கள்?**

தமிழ், முதன்மொழியாக விளங்குகிறது. மாநில

அளவில் ஏறக்குறைய எல்லாத் துறையிலும் தமிழக ஆட்சி மொழியாக இன்று அமைந்துள்ளது. இந்த நிலையில் ஏனைய துறைகளி லில்லாவிட்டாலும் கல்வித் துறையில்கூட, பெறவேண்டிய இடத்தினை இன்னும் அவர்கள் பெறவில்லை. தமிழாசிரியர் நிலை இப்போது உயர்ந்திருக்கிறது. அதனை மறுக்கவில்லை; மகிழ்ச்சி; நன்றி என்றாலும் உரிய இடம் அவர்கட்கு இன்னும் தரப்பெறவில்லை. இதற்கு நான் விடையளிக்காது, சென்ற ஆண்டு மணவழகர் மன்ற விழாவில் தென்னகத்து அறிஞர் உரைத்த கீழ்க்கண்ட உரையினை நினைவூட்டி அமைகின்றேன்:

"தமிழ் நாட்டிலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், தமிழாசிரியர்களையும் தமிழ்ப் பேராசிரியர்களையும், தலைமையாசிரியர்களாகவும் முதல்வர்களாகவும் நியமிக்க வேண்டும்."

**5. தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழர் வளர்ச்சிக்கும் இதழ்கள் செய்யக்கூடிய தொண்டு என்ன?**

பத்திரிகைகளை 'இதழ்கள்' எனத் தங்கள் வினா குறிக்கின்றது. 'பத்திரிகை' எவ்வாறு இந்நாட்டுக்கு வந்தது? 'இதழ்'ாக ஏன் அது மாறியது? எழுத்துலகில் இம்மாற்றம் பெரிதும் எண்ணத் தக்கது. தமிழ் வளர்ச்சியும் தமிழர் வளர்ச்சியும் இதில் அடங்கியுள்ளது. பிற மொழிகளை நோக்க, தமிழ்ப் பத்திரிகையுலகம் இன்று மிகவும் வளர்ந்துள்ளது. இதழ்களின் எண்ணிக்கையும் அவற்றின் செலவீடும் வியக்கத்தக்க அளவில் உயர்ந்துள்ளன. எழுத்துக்களின் தரமும் போக்கும் பாராட்டத்தக்க வகையில் வளர்ந்துள்ளன. என்றாலும் கவர்ச்சி என்ற பேரில் சில இதழ்கள் கையாளும் நடை கண்டிக்கத்தக்கதாக உள்ளது.

மக்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்றையும் நல்ல எண்ணங்களையும் நாள்தோறும் உண்டாக்கி வரும் தொண்டினை இதழ்கள் விடாது செய்துவரவேண்டும். இதனால் தம்மையும் அறியாது மக்கள் நல்லவர் ஆவர். மாநிலம் தழைத்து வளரும்.

❀

## இளஞ்செழியன்

பேராசிரியர் இளஞ்செழியன் பகுத்தறிவு உலகில் நன்கு அறிமுகம் ஆனவர். வழிவழியாக அறிவுப் பணி ஆற்றிவரும் குடும்பம் என்றே அவருடைய குடும்பத்தைப் பற்றிக் கூறலாம். தியாகராயர் வழிநின்று அரசியல் தொண்டாற்றி, தியாகராயநகர்த் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக உள்ள காஞ்சி மணிமொழியாரை அறியாதார் யார்? அவருடைய மணிப் புதல்வராய் விளங்கிச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் துறையில் மாணவர் மனம் கவரும் வகையில் தொண்டாற்றிடும் இனிய நண்பர் இளஞ்செழியனைக் காணச் சென்றேன் அடுத்து.

"வாங்கள்" என்று அன்போடு வரவேற்றார் நண்பர் பேராசிரியர் இளஞ்செழியன்.

"பேட்டி காண வந்திருக்கின்றேன்" என்றேன். ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தார். நான் உடனே "உங்கள் பிறந்த ஊர், வயது இதெல்லாம் கேட்டுப் போகும் அந்தப் பேட்டி அல்ல—உங்கள் கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வந்திருக்கின்றேன்" என்றேன். புதிய பொலிவோடு நோக்கினார் நண்பர்.

வகுப்பறையில் மாணவர்களைப் பார்த்துக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்கும் அவரை, இதோ, அவர் அறையில், நான் கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டேன். அவரும் வகுப்பறையில் மாணவர்களின் ஐயங்களுக்கு விடையளிப்பதுபோல எனக்கு விளக்கங்களை அள்ளித் தருகின்றார்.

"போர்க்காலச்......"

"என்ன, எடுத்தவுடனே சண்டைஎன்று தொடங்குகின்றீர்கள்?" என்றார்.

"இப்போது அதுதானே நிலைமை" என்று தொடர்ந்தேன்.

"போர்க் காலத்தில் ஏற்படும் செலவினங்களைப் பிரிட்டனும் அமெரிக்காவும் எவ்வகையான முறைகளில் ஈடுகட்டின என்பதைச் சற்று சொன்னால் நல்லது.

"பிரிட்டனும் அமெரிக்காவும் மட்டும் அல்ல, பொதுவாக எந்நாடும் மேற்கொள்ளும் முறைகள் என்று சில இருக்கின்றன. அதேபோல்தான் அவையும் செய்திருக்கின்றன. பொதுவாகப் போர் நடக்கிறது என்றால் எல்லாருடைய மனமும் நாட்டின் மீதுதான் இருக்கும். எப்படியும் தங்கள் நாடு வெற்றிபெற வேண்டும் என்று நினைப்பார்கள். அதனால் அவர்கள் போர் முயற்சி எதுவாயினும் அதற்குத் தங்கள் ஒத்துழைப்பைத் தரத் தவறுவது இல்லை.

"ஆமாம். நாமும் இப்போது அந்தச் சூழ்நிலையில் தானே இருக்கிறோம்?"

"அரசினர் மூன்று வித வழிகளில் பணம் திரட்டலாம். ஒன்று வரிவிதிப்பு, இரண்டாவது கடன், மூன்றாவது பணவீக்கத்தை உருவாக்குவது."

"வரிதான் எப்போதும் இருக்கிறதே"

"எப்போதும் இருக்கிறதுதான்—என்றாலும் போர்க் காலத்தில் எவ்வளவு வரி ஏறினாலும் தாங்கும் மன வலிமை மக்களுக்குத் தானே ஏற்பட்டுவிடும். ஆனால் வரிபோடுகின்றவர்கள் அந்த வரிகளைத் தாங்கத்தக்கப் பணக்காரர்கள்மீது போடுவதுதான் நியாயமானது; முறையும் அதுதான். உதாரணமாக இங்கிலாந்தில், இரண்டாம் பெரும் போரின்போது அமிதலாப வரி என்று ஒன்று ஏற்படுத்தினார்கள். அந்த வரி குறிப்பிட்ட தொகைக்குமேல் வரும் லாபத்தில் 20ல் 19 பங்கைக் கொண்டதாக இருந்தது."

"அதாவது......"



"ஒரு பவுனுக்கு 20 ஷிலிங். இந்த இருபது ஷிலிங்கில் 19 ஷிலிங் வரியாகச் செலுத்த நேரிட்டது."

"ரூபாய்க்கு 95 புதிய காசு வரி என்று சொல்லுங்கள்..."

"ஆமாம். அது சாதாரண பக்களுக்கு அல்ல — ஏராளமான வருவாய் வந்துகொண்டிருந்தவர்களுக்கு மட்டுமே. 'எவ்வளவுக்கு முடியோ அவ்வளவுக்கு வரி போடு, மிகுதியைக் கடனாகப் பெற்றுக்கொள்' என்பது அவர்களுடைய கொள்கையாக இருந்தது என்றே சொல்லலாம்.

"அது சரி. கடன் வாங்குவது என்றால், உள்நாட்டிலேதானே?"

"உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் வாங்கியுள்ளனர். அளவற்ற தொகையை இங்கிலாந்து போர்க் கடனாக வாங்கியுள்ளது. போர் என்றால் அவ்வளவு செலவு இல்லையா? நாம் நினைப்பதுபோல் போர்ச் சாதனங்கள் சாதாரண விலையில் கிடைப்பது இல்லை. நம்ப இயலாத பெருந் தொகை போரிலே செலவாகிறது. எனவே அவர்கள் மிகுதியாகக் கடனும் வாங்கவேண்டியிருந்தது.

"பணவீக்கம் என்றீர்களே அது என்ன?"

"அது சாதாரண மொழியில் சொல்வதானால் நோட்டுகள் அச்சடிப்பது"

"அதாவது அரசாங்கம் அச்சடிப்பது"

"ஆமாம்! அளவில்லாமல் அச்சடித்துக் குவிப்பதைத்தான் பணவீக்கம் என்று சொல்லுவோம். பணம் என்பது பொன் வெள்ளி போன்ற உலோகம்தான். குறிப்பிட்ட அளவு பொன் கையிருப்பு இருந்தால் குறிப்பிட்ட அளவு நோட்டு அச்சிடலாம் என்று ஒரு நியதி இருக்கிறது. அதையும் மீறி ஒரு அரசாங்கம் செய்யுமானால் பணவீக்கம் வரும். அப்போது பணத்திற்கு உண்மையாக இருக்கவேண்டிய மதிப்பு இல்லாமல் போகும். ஆகவே அந்த மோசமான முறையை எந்த அரசும் சாதாரணமாகச் செய்வது இல்லை."

"குடும்பக் கட்டுப்பாடுபற்றி நீங்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறீர்கள்?"

"என்ன திடீரென்று குடும்பக் கட்டுப்பாடு என்று கேட்கிறீர்கள்.

"போர் என்றதும் போர்வீரன் நினைவு எழுந்தது. வீரனும் ஒரு நாள் குழந்தையாகத்தானே இருந்தான். அதனால்தான் குழந்தையைப்பற்றிக் கேட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்"

"இதிலே மறுக்க என்ன இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு வேண்டியதுதான். அதிலும் நம் நாட்டில் மக்கள் தொகை வளரும் விகிதம் மிக அதிகம் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். நம்முடைய பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைவிட மக்கள் தொகையின் பெருக்கம் மிகுந்த வேகம் உடையது என்று சொல்கிறார்கள். இந்த 'வளர்ச்சி' இருக்குமானால் எல்லாரும் வளமாக இருப்பது முடியாதல்லவா?

'ஆனால்'............

"என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. நம் மக்களின் மனம் அதற்கு இடம் தரவில்லையே என்கிறீர்கள். மக்களின் மனம் பல காரணங்களால் அப்படி இருக்கிறது. அந்த மனப்பான்மையை மாற்றினால்தான் குடும்பக் கட்டுப்பாடு ஏற்படும். ஸ்வீடன் நார்வே முதலிய நாடுகளில் மூன்று குழந்தைகள் இருந்தால் அது பெரிய குடும்பமாகக் கருதப்படுகிறது. ஆனால் நமது நாட்டில் மூன்று குழந்தைகள் ஒரு பொருட்டேயில்லை; நம்முடைய பொருளாதாரத்தில் முக்கியமான முதல் பிரச்சினை மக்கள் தொகைப் பெருக்கம்தானே!

"மக்கள் தொகை கட்டுப்பட்டால் பொருளாதார வளமும் கூடுதலாகும் என்கிறீர்கள், அல்லவா?"

"ஆமாம்"

"வளத்திற்குத்தான் திட்டங்கள் போடுகின்றோமே"

"திட்டங்கள் போடுகின்றோம். ஆனால் அதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரு அளவு இருக்கிறது அல்லவா?"

"இப்போது உள்ள முறையில் திட்டங்களின் பலன் பரவலாகியிருக்கிறதாக நீங்கள்—பொருளாதாரப் பேராசிரியர் என்ற முறையில்—நினைக்கிறீர்களா?"

"நான் சொல்வதைவிட மிகப் பெரியவர்கள் சொல்லியிருப்பதை நினைவு கூர்ந்தாலே போதும். 'திட்டத்திலே விளைந்த பலனில் மூன்றில் இரண்டு பங்கு மூன்றில் ஒரு பங்கு மக்களையே சேர்ந்துள்ளது' என்று அண்மையிலே ஒருவர் குறிப்பிட்டுள்ளார்."

"அதாவது திட்டத்தின் பலனாக ஏற்பட்ட தேசிய வருமானத்தை-எல்லாருக்கும் கிடைக்கவேண்டியதை-மிகச்சிலரே அனுபவிக்கின்றார்கள் என்கிறீர்களா!?

"எல்லோரும்தானே இதைஒப்புக்கொள்கிறார்கள்!"

"கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது"

"திட்டத்தின் பலன் ஏழை நடுத்தர மக்களை வந்தடையவில்லை என்பது வெளிப்படை. இதனால் அது வேறுயாருக்கோ போய்ச்சேர்ந்திருக்கிறது என்று தெரிகிறது.

"அப்படியானால் இதை மாற்ற — திருத்த — வழி இருக்கிறதா"

"ஏன் இல்லை? வரி விதிப்பு முறையில் மாறுதல் ஏற்படவேண்டும்."

நேர் முகவரிகளை—அதாவது பணம் படைத்தோருக்குப் போடும் வருமானவரி, சொத்து வரி, மரணவரி போன்ற இவற்றை—இவற்றின் அளவுகளை விகிதாசாரத்தை அதிகப்படுத்த வேண்டும். புதிய நேர் முக வரிகளை முடிந்த அளவு விதிக்கலாம். வரி கொடுக்காமல் ஏய்க்கின்றவர்களைக் கண்டு பிடித்து அந்த வரிகளை வசூலிக்கவேண்டும். சாதாரண மக்களைப் பாதிக்கும் வரிகளை—பொருள்களின்மீது போடும்—அவசியப் பொருள்களின்மீது போடும் வரிகளைக் குறைக்க வேண்டும்.

"இவ்வளவு செய்தால் போதுமா?"

"இன்னும் இருக்கிறது. இதெல்லாம் வரவைப் பற்றியது. வரும் தொகையைச் செலவு செய்வதிலும் சில முறைகள் இருக்கின்றன. அரசாங்கம் செய்யும் செலவுகளின் பலன் ஏழை மக்களைச் சென்றடையும்படிச் செய்யவேண்டும். படிப்பு, மருந்து, குடியிருப்பு முதலிய துறைகளில் மிகுதியாகச் செலவிட்டால் அதனால் ஏழைகள் பயன் அடைவர். இதைவிட முக்கியமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி வைக்கவேண்டும். மக்கள் எவ்வளவு சம்பாதித்தாலும் அதைப் பொருள்களின் விலையாகவே கொடுத்துக் கொண்டிருந்தால் கையில் ஒன்றும் மிஞ்சாது அல்லவா?

"விலைவாசியைக் கட்டுப்படுத்தினால் அதனால் உழவனுக்கு நஷ்டம் வரும் என்கிறார்களே?"

"அது அப்படி அல்ல. உழவனுக்கு நஷ்டம் வராத வகையில் விலையை அரசாங்கம் கட்டுப்படுத்தி வைக்கலாம்."

"எப்படி முடியும் அது?"

"முக்கிய பொருள்களை அரசாங்கமே குறிப்பிட்ட விலைக்கு விற்பதன் மூலம் இதைச் செய்யலாம்"

"அதிக விலைக்கு வாங்கிக் குறைந்த விலைக்கு விற்றால் நஷ்டம் அல்லவா வரும்?"

"அந்த நஷ்டத்தை அரசாங்கம்தான் தாங்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்யும் முறை எங்கும் இருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்திலே, இரண்டு ஆண்டுகளுக்குப்பின் தன் தானியம் என்ன விலைக்கு விற்பனை ஆகும் என்பது உழவனுக்கு முதலிலேயே தெரியும். விதைப்புக்கு முன்பே அரசாங்கம் இன்ன தானியம் இன்ன விலைக்கு வாங்கப்படும் என்று விலை உறுதி (விலை நிர்ணயம்) செய்துவிடுகின்றது. அதனால் உழவன் தனக்கு இவ்வளவு வரும் என்பதை அறிந்து

நம்பிக்கையோடும்—அளவு அறிந்தும் பாடுபடுகின்றான் சொன்னபடியே அரசாங்கம் அவனுடைய விளைவை விலைகொடுத்து வாங்குகின்றது. விற்கும்போது குறிப்பிட்ட விலைக்கு விற்கிறது. பொதுவாக எல்லாருக்கும் நல்லது கிடைக்கிறது.

"இது எனக்கு மிகவும் பிடிக்கிறது. நான் ஒரு உழவன் மகன். உழவன் நிலை எனக்கு நன்கு தெரியும். தன் உழைப்பைப் பெற்று வளர்ந்து விளைந்துள்ள விளைச்சல் என்ன விலைக்கு விற்குமோ என்று திண்டாடும் நிலையே பல உழவர்களுடைய நிலை. இப்படி ஒரு உறுதிப்பாடு இருந்தால் எவ்வளவோ நல்லதுதான் உழவு, உழவன் நிலை என்றதும் நினைவுக்கு வருகிறது. கூட்டுறவு, கூட்டுறவுப் பண்ணை இவைபற்றி ஏதாவது சொல்லுங்கள்"

"கூட்டுறவு வேண்டாம் என்பவர்கள் யாரும் இல்லை. நம் நாட்டுக்கு அது முக்கியமாகத் தேவைப்படுவதுதான். உழவர்களின் வருமானம் பெருக, வாழ்க்கைத்தரம் உயர, உணவுப் பொருள் உற்பத்தி மிக, நகர மக்களின் வாழ்க்கைத்தர அளவுக்குக் கிராமத்தினரும் உயர, புதுவகையான உழவுக் கருவிகள் முதலியன வாங்க, இன்னும் இதுபோன்ற பயனுள்ள பணிகளுக்குக் கூட்டுறவு முறை முக்கியமாகக் கிராமங்களுக்குத் தேவைதான்"

"ஆனால் நம் நாட்டில் கூட்டுறவினால் சிலர்தானே பயன் அடைய முடிகின்றது?

"அது முறையிலே உள்ள குறை. அதற்காக அந்தக் கொள்கையையே குறைகூறக்கூடாது — ஒதுக்கக்கூடாது. நாணயமின்மை, நம்பிக்கை இன்மை, சிலருடைய சுயநலம், மக்களின் அறியாமை ஆகிய எல்லாம் ஒன்று சேர்கிறது—கூட்டுறவு முறையில் குறை நேர்கிறது. இக்குறைகளைக் கண்டு தயங்கத் தேவையில்லை. ஏனென்றால், மேற்கு நாடுகளில் கூடச் சில சில நாடுகளில் சில சில துறைகளில்தான் கூட்டுறவு முறை வெற்றி பெற்றிருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்திலே பண்டகச் சாலைகள், ஜெர்மனி இத்தாலி ஆகிய நாடுகளில் கடன் லாவாதேவி, டென்மார்க்கில் பால் பண்ணை ஆகிய துறைகளிலே மட்டும் வெற்றி கிடைத்திருக்கின்றது."

"நம் நாட்டிலே எத்துறையில் கூட்டுறவு வளர்ந்துள்ளது?"

"குறிப்பாகச் சொல்வதானால் கடன் தரும் சங்கங்களின் வளர்ச்சியைச் சொல்லலாம். ஆனால் அதுவும் முழு வெற்றி என்று சொல்லமுடியாது. நம்நாட்டு உழவர்களுக்குத் தேவையான கடன் தொகையில் 3 சதவிகிதமே (100க்கு 3) கூட்டுறவு இயக்கம் தருகிறது என்றும், 75 சதவிகிதத் தொகை இன்னும் தனிப்பட்ட வட்டிக்கடைக்காரரே தருகின்றார்கள் என்றும் கோர்வாலா கமிட்டி அறிக்கை கூறுகிறது.

"அப்படியானால் கூட்டுறவு முறைக்கு வளர்ச்சியே இல்லையா?"

"ஏன் இல்லை? போராடித்தான் வளரவேண்டும். நாட்டு நிலைக்கு ஏற்ப வளரவேண்டும். உழவுத் துறையில் எவ்வளவோ வளரலாமே. கூட்டுறவுப் பண்ணைகள் அமையுமானால்..."

"கூட்டுப் பண்ணையா?"

"கூட்டுப்பண்ணை அல்ல — கூட்டுறவுப்பண்ணை. கூட்டுப்பண்ணை என்பது (Collective Farming) என்று அழைக்கப்படும். அதிலே நிலம் சங்கத்தின் சொத்து ஆகிவிடுகிறது. பொதுவாக உலகில் யாரும் இதற்கு எளிதில் இணங்குவது இல்லை. ரஷ்யாவில்கூட முதலில் இதற்கு எதிர்ப்பு இருந்தது. ஆனால் நான் சொல்வது கூட்டுறவுப்பண்ணை. (Co-op Farming) இதிலே உழவு செய்வது, பண்டங்களை வாங்குவது விற்பது இவைமட்டுமே சங்கம் செய்யும் வேலை.

"அதாவது நில நிர்வாகம்?"

"ஆமாம்"

"இதையும் நம் மக்கள் எளிதில் ஒப்புக்கொள்ள மாட்டார்களே?"

"ஆம். இதைவிட எளியமுறை ஒன்று இருக்கிறது. கூட்டுறவு முன்னேற்ற உழவுச் சங்கம் என்று சொல்லலாம். Co-op Better Farming Society' என்று இது அழைக்கப்படும். இதுபோன்ற அமைப்பில் கிராமங்களில் கூட்டுறவு முறை வளர வாய்ப்பு இருக்கிறது. நகரங்களில் விலையைக் கட்டுப்படுத்தும் நிறுவனமாக கூட்டுறவு இயக்கம் நன்கு பணியாற்றலாம்."

"இன்னும் ஒரே ஒரு கேள்வி" என்றேன்.

"கேளுங்கள்" என்றார் நண்பர்.

"கைத்தறித் தொழிலின் எதிர்காலம்பற்றி" என்று முடிப்பதற்குள் முந்திக்கொண்டார்.

"இது மிகவும் சிக்கலான கேள்வி. நீங்களும் ஆசிரியர். உங்கள் பழக்கத்தால் விடாமல் கேட்கிறீர்கள். நானும் ஆசிரியன் விடாமல் சொல்கிறேன். ஆனால் இந்தக் கேள்விக்கான பதில்மட்டும் தேர்வுத் தாள்கள் உள்ள பதில்போல் பாடபுத்தகப் பதில்போல இருக்கும் கேட்டுக்கொள்ளுங்கள்:

"இதிலே நீண்டகால நிவாரணம், இடைக்கால உதவி" என்று இரண்டு வகைகள் உள்ளன.

நீண்டகாலத்திற்குப் பிறகு, அதாவது 60, 70-வருஷங்களுக்குப்பிறகு இன்று உள்ள அதே எண்ணிக்கையினர் அத்தொழிலில் இருப்பார்கள் என்று நினைக்கக்கூடாது. இருக்கவும் கூடாது. மெல்லமெல்ல படிப்படியாக அவர்கள் வேறுவேறு தொழில்துறைகளில் ஈடுபாடுகொண்டுவிடவேண்டும்.

ஆனால் அடியோடு, அத்தனைபேரும் அந்தத் தொழிலை விட்டுவிடுவார்கள் என்று கூறமுடியாது. தொழில் மயமான நாடாகிய இங்கிலாந்திலும் இன்னும் கைத்தறித் தொழில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலை வரும்வரை—இன்றுள்ள நிலையில் உடனடியாகவும், கட்டாயமாகவும் நெசவாளிகளுக்கு எல்லா வகையான ஆதரவையும் அரசும் மக்களும் அளித்துத்தான் ஆகவேண்டும். அவர்களுக்கெனச் சிலபல சலுகைகள் அளித்தல், விற்பனைத் துறையில் உதவல் போன்ற உதவிகளைச் செய்யவேண்டும். அதேபோல் நெசவாளிகள் தாங்கள் நெய்யும் துணிகள் சுருங்காத வகைகளும், தரம் நிலைக்கத்தக்க முறைகளும் அறிந்து போற்றவேண்டும்."

கடிகார மணி ஒலித்தது.

"நெடுநேரம் ஆகிவிட்டது" என்று எழுந்தேன்.

"இல்லையே" என்று உபசாரமாகச் சொல்லிக்கொண்டே வழி கூட்டினார், நண்பர் இளஞ்செழியன் அவர்கள்.

❀

## கோகுலகிருட்டினன்

அடுத்து யாரைப் பார்ப்பது என்பதில் எனக்குச் சிரமம் இருக்கவில்லை. 'கோகுலகிருட்டினனைப் போய்

பார்' என்று குறிப்பிட்டுவிட்டதினுல் நேரே அங்கு போகத் தயாரானேன்.

கோகுல் அவர்களை பகுத்தறிவு உலகமும் வழக்கறிஞர் உலகமும் நன்கு அறியும். இளவயது எனினும் ஈட்டியுள்ள பெயரும் புகழும் யாருக்குமே பெருமை தரக்கூடியன அல்லவா?

"கோகுலகிருட்டினனைப் பார்த்துவா" என்று சொன்னுர் அண்ணு. எங்கே எப்படி எப்போது போய்ப் பார்ப்பது என்று அவரும் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை. முன்னர் பலமுறை பொதுக் கூட்ட இடங்களில் அவரைக்கண்டு நலம் கேட்டறிந்ததும் அறிவித்ததும் உண்டு. ஆனுல் தனிப்பட்ட முறையில் அவரைச் சந்தித்தது இல்லை. வழக்கறிஞரைச் சந்திக்க வேண்டிய தேவை இன்னும் வரவில்லை. அதனுல் அவரைக் காணுவது என்றதும் கொஞ்சம் தயக்கம்தான்.

'எங்கேபோய்த் தேடுவது?' என்று எண்ணினேன். வழக்கறிஞரைக் காண இடமா தெரியாது வழக்கு மன்றம் சென்றுல்கண்டு விடலாமே என்கிறீர்களா? அப்படிச் சொல்வீர்களாயின் இதுவரை நீங்கள் வழக்கு மன்றத்திற்கே போனதில்லை என்றுதான் சொல்லவேண்டும் நீதிமன்றத்தின் அந்த நெடுவழிகளில் கருப்புஅங்கியால் உடல் மறைத்துக்கொண்டு 'விடு விடு' என்று விரைந்து செல்லும்அவர்களின் பின்னுலே சென்று அங்கே என்னத்தைப் பேசுவது? அது முடியாத காரியம். ஆகவே கோகுலகிருட்டினனை வீட்டிலேயே பார்ப்பது என்று தீர்மானித்துக்கொண்டேன்.



இரவு 9-மணிக்கு வருவதாக முதலில் செய்தி சொல்லிவிட்டு அங்குச் சென்றேன். நண்பர் கோகுலகிருட்டினன் அவர்கள் "வாங்கள் மேலே போகலாம்" என்று அழைத்துச் சென்றுர். 'வாங்க பழநிச்சாமி' என்று ஒரு இளைஞரையும் உடன் அழைத்துவந்தார். பழநிச்சாமியை ஏன் உடன் அழைத்தார் என்பது எனக்குப் பின்னுல்தான் தெரிந்தது.

மாடியில் ஒரு அறை. சுற்றிலும் பெரியபெரிய புத்தகங்கள். அறையின் நடுவே பெரிய மேஜை. அதன் மீது கனமான சட்டபுத்தகங்கள், வழக்குச் சம்பந்த கட்டுகள்.

"என்ன கேட்கப்போகிறீர்கள்?" என்ற தோரணையில் என்னைப்பார்த்தார்.

சாட்சியை விசாரிக்கும் வழக்கறிஞரைப்போல் நான் அவரைநோக்கிக் ;கேட்டேன். சட்டத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? இருக்க வேண்டிய தொடர்பு யாது?

உடனே நண்பர் கோகுல் அவர்கள் "என்ன பழநிச்சாமி என்ன சொல்லனுங்கள்" என்றுர்.

ஆனுல் பழநிச்சாமி ஒன்றும் சொல்லவில்லை, சொல்லாவிட்டாலும் அவருடைய பார்வையிலிருந்து எதையோ கோகுல் தெரிந்துகொண்டார் போலிருக்கிறது.

ஒருகணம் இருவரும் பார்த்துக்கொண்ட உடன் என்னைப் பார்த்துப் பேசத் தொடங்கிவிட்டார்.

சட்டம் என்பது சமுதாய முன்னேற்றத்திற்காகத் தேவைதான். வளர்ந்த சமுதாயத்திற்கும் சரி, வளர்ந்து வரும் சமுதாயத்திற்கும் சரி சட்டங்கள் தேவைதான். சட்டம் என்பது தனிப்பட்டவரின் ஆசைக்காகச் செய்யப்பட்டு உள்ளவை அல்ல. நாட்டின் எல்லோருடைய பொதுவான முன்னேற்றத்தையும் நடத்திச் செல்லும் ஒரு அமைப்பு அது. அந்தத் தகுதி பெற்றதாக அது இருக்கவேண்டும். அத்தகைய சட்டங்களே சமுதாயத்தில் நீண்டநாள் இருக்கும். அரசியல் கட்சிகள் தங்கள் சுயநலத்தின் காரணமாக இயற்றும் சட்டங்கள் அடிக்கடி நீதிமன்றங்களில் ரத்து செல்யப்படுவதைக் காணுகின்றேம். இம்மாதிரி ஆவதினுல் சட்டத்தின் பெருமையும் அதற்குத் தரும் மரியாதையும் குறைகிறது.ஆகவே ஆட்சி பீடத்தில் இருக்கும் அரசியல் தன்னையும் நாட்டையும் காப்பாற்றச் சான்றேர் போற்றும் சட்டங்களை உருவாக்க முன்வரவேண்டும். சான்றேர் என்றுல், பொது அறிவும் சட்ட அறிவும் உடையவர்கள். உதாரணமாகப் பாருங்கள் 1800—1850 என்ற ஆண்டுகளில் இங்கிலாந்தில் தரப்பட்ட நீதிகள் இன்றும் அறுதியிட்டுத் தரப்பட்ட தீர்ப்புகளாகக் காட்சியளிக்கிற தென்றுல் அங்கு ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் அரசியல் பூசல்களுக்கு அப்பாற்பட்டவையாக இருந்ததே காரணம். அத்தகைய சட்டங்களை உருவாக்கினுல்தான் சமுதாயம் முன்னேறும்—

சொல்லிக்கொண்டே வந்தவர் சற்று மூச்சுவிட்டடதும் விரல்களைச் சொடுக்கிக்கொண்டேன். வகுப்பறையில் பாட்டின் பொருளைச் சொல்லி எழுதச்செய்து மாணவர்களின் விரல்களை ஒடிப்பவனுக்குத் தக்க தண்டனைதான் என்று எண்ணினேன்.

"என்ன யோசிக்கிறீர்கள் ஏதேனும் ஐயமா?" என்றுர்.

"சமுதாய முன்னேற்றத்திற்காகச் சட்டங்கள் என்கிறீர்கள். ஆனுல் சட்டம் என்பது குற்றவாளியைத் தண்டிக்கத்தானே பயன்படுகிறது? குற்றங்கள் பெருகாமலிருந்துவிட்டால் எவ்வளவோ மேல் அல்லவா? அதற்கு ஏதாவது வழி சொல்லுங்களேன்" என்றேன்.

"இது சிக்கலான விஷயம். குற்றம் செய்வதற்கான காரணத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்கின்றனர். சிலர் பொருளாதார நிலையே குற்றங்கள் மலியக் காரணம் என்கின்றனர். வேறு சிலர் சூழ்நிலைதான் எக் குற்றத்திற்கும் காரணமாகிறது என்கின்றனர். காரணம் எதுவாக வேண்டுமானுலும் இருக்கட்டும். குற்றங்கள் குறைய வேண்டுமானுல் வாழ்க்கையில் சோம்பலுக்கு இடமில்லாமல் ஏதேனும் ஒரு வேலையில் திருப்பிவிட்டால் குற்றங்கள் குறையும் என்றுதான் படுகிறது.

"மேலும் இப்போது உள்ள சட்டங்கள் குற்றங்களைத் தடுப்பதில் காட்டும் ஆர்வத்தைவிட குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதிலேயே மிக்க ஆர்வமாக இருக்கிறது. சட்டங்கள் செய்யப்படும்போது மக்கள் மனநிலையும் அறியப்படுவது இல்லை. இதனுல் எது சரி எது தவறு என்பதைச் சாதாரண மனிதன் உணரமுடிவது இல்லை. உதாரணமாக வருமான வரிச் சட்டம்,

மரண வரிச் சட்டம், நன்கொடை வரிச் சட்டம்—முதலியன தனி நபரை மிரட்டும் சட்டங்களாக உள்ளனவே யொழிய தனி மனிதனுக்கு அச்சட்டங்களின் பெருமையை உணர்த்துவனவாக இல்லை. சட்டங்கள் எளிதாகவும், இன்னலைத்தவிர்ப்பதாகவும், தனிப்பட்டவரின் உரிமையைப் பரிக்காதவையாகவும் இருக்குமானல் குற்றங்கள் பெருகுவதற்கு வழி இருக்காது.''

"குற்றங்கள் குறைய இவ்வழிகள் மட்டும்போதும் என்று கருதுகின்றீர்களா?'' என்று இடையிலே கேட்டு வைத்தேன். பின்னே, ஒன்றுமே கேட்காமல் உட்கார்ந்திருந்தால் சட்டத்தைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்றல்லவா அவர் நினைத்துவிடுவார்! அதனல் இடையில் ஒரு கேள்விக்கணை தொடுத்தேன்!!

"சொல்கிறேன். குறிப்பிட்ட ஒன்று குற்றம் என்ற நிலை இருக்குமானல் அதை யார் செய்தாலும் குற்றம் செய்ததாகவே கருதப்படவேண்டும். விதிவிலக்கு என்பது இருக்கக்கூடாது. குற்றத்திற்கான தண்டனையை அளிக்கும் சக்தி பாரபட்சம் இல்லாமல் இருந்தால்தான் குற்றங்களைக் குறைக்கமுடியும். அப்படி இல்லாமல் தண்டனை வழங்கும் சக்தி—அதாவது ஆட்சி—கண்டிப்புத் தன்மையிலே குறைவுபட்டோ பாரபட்சமாகவோ இருக்குமானல், குற்றம் செய்கின்ற ஒருவன் எப்படியாவது சலுகைபெற்று தண்டனையிலிருந்து தப்பிவிடலாம் என்ற நினைப்பில் குற்றம் செய்பவனுக ஆகிவிடுகின்ருன். ஒருவன் இவ்வாறு சலுகை பெறுவதைக் காணும் மற்றவர்களும் 'நாமும் ஏன் அக்குற்றத்தைச் செய்து சலுகை பெறக்கூடாது' என்ற சபலத்தாலும் குற்றங்கள் மிகுகின்றன." என்ருர்.

"வந்து......'' இடைமறித்தேன்.

"என்ன, சொல்லுங்கள்'' என்று தூண்டினுர் நண்பர் கோகுல்.

"குற்றங்கள் பெருகாதிருக்கச் சிறைச்சாலைகளும் ஓரளவு பயன்படுகின்றன அல்லவா?''

"ஆமாம். நிச்சயம் பயன்படுகின்றன. ஆனல் ஒன்று.''

"என்ன?''

"சிறைச்சாலைகள் குற்றம் செய்தவன் தண்டனை அனுபவிக்கும் இடங்களாக மட்டும் இருப்பது கூடாது. குற்றம் செய்தோரைத் திருத்தும் திருத்தலங்களாகவும் அவை அமையவேண்டும். ஏனென்ருல் அடக்குமுறையைவிட அன்புமுறையே சிறந்தது. அடக்குமுறையால் சாதிக்க இயலாததையெல்லாம்அன்பால் சாதிக்க முடியும் அல்லவா? மேலும் தண்டனை என்று பயமுறுத்துவதைவிட, ஒருவனிடம் அவன் செய்யும் குற்றத்தினல் விளையும் கொடுமையை—பிறருக்கு ஏற்படும் இழப்புகளை கூறி அவன் குணத்தை மாற்றுவதுதான் சிறந்தது.''

"அப்படியானல் தண்டனையே வேண்டாம் என்கிறீர்களா?''

"இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லையே. தண்டிப்பது மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது. திருத்துவதும் செய்யப்படவேண்டும் என்கிறேன். மேலும் தண்டனை என்ருல் அதிலே ஒரு அளவும் இருக்கவேண்டும். இப்போது பாருங்கள், தூக்குதண்டனை என்று இருக்கிறதே அது அவ்வளவு சிறந்தது என்று சொல்வதற்கு இல்லை. உயிருக்கு உயிர் என்று பழிவாங்கும் நிலைதானே அது?''

"கொலை செய்த கொடியவனை பின் எப்படித்தான் தண்டிப்பது?''

"அவன் மனநிலையை ஆராய்ந்து தவறு செய்த் காரணத்தைக் கண்டறியலாம். அந்தக் காரணம் சமுதாயத்தில் இல்லாதிருக்குமாறு செய்ய முயல வேண்டும். சிறைச்சாலைகள் இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் செய்து நல்ல தொண்டாற்றலாம். சொல்லப்போனல் குற்றங்கள்; மனநிலைகள் முதலியன பற்றி ஆராயும் பல்கலைக் கழகங்களாகச் சிறைச்சாலைகள் விளங்கலாம். அவ்வாறு விளங்கும் சிறைச்சாலைகள் தரும் குறிப்புக்களைப் பின் அணியாக வைத்துக்கொண்டு சமுதாயத்தைச் சீர்திருத்தலாம். எதிர்காலத்தில் செய்யப்படும் சட்டங்களுக்கு அக்குறிப்புகள் வழிவகைகள் கூறக்கூடும்.

"சமுதாயத்தைச் சீர்திருத்தலாம், என்றதும் அது பற்றி ஒன்று கேட்க விரும்புகிறேன்'' என்றேன்.

"கேளுங்கள்''

"இந்து சட்டத்திலே என்னென்ன மாறுதல் தேவை என்று கருதுகின்றீர்கள்?''

"இது அரசியலும் கலந்த கேள்வி'' என்று சொல்லிவிட்டுப் பழனிச்சாமியைப் பார்த்தார். பழனிச்சாமியும் இவரைப் பார்த்தார். இதற்கிடையில் இன்னெரு இளைய நண்பரும் வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரிடம் என்ன திருத்தம் செய்யவேண்டும், சொல்லுங்களேன்' என்று கேட்டார். அவரும் இவரையே பார்த்துக்கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் கோகுலின் தொழில் இளவல்கள் என்றும், எதையும் அவர்களிடம் கலந்தே செய்கின்ருர் என்றும், அவர்கள் தாங்களே முந்திக்கொள்ளாமல் அவரையே பேசச் செய்து கேட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்பதையும் தெரிந்துகொண்டேன். கோகுலகிருட்டினனே தொடர்ந்தார். சுருக்கமாகச் சொல்வதானல் இந்து சட்டம் முன்னைக்கு இப்போது எவ்வளவோ மாறிவிட்டது. குழந்தைகளின் பாதுகாப்பாளர் யார் என்பதிலிருந்து செத்தபின் சொத்து யாருக்குச் சேரும் என்பதுவரை எவ்வளவோ மாறுதல்கள் வந்துவிட்டன. இப்போது பெண்கள்கூடப் பாதுகாப்பாளர்களாக — அதாவது கார்டியன்களாக—இருக்க இடம் இருக்கிறது''

"இதெல்லாம் நடைபெற்ற திருத்தம்; நடக்கவேண்டியது ஒன்றிரண்டு......''

"சொல்கிறேன்: ஒவ்வொரு திருமணமும் பதிவு செய்யப்படவேண்டும் என்ற கட்டாயம் இருக்கவேண்டும். ஏனென்ருல் இப்போதுள்ள முறைப்படி இந்துமதத் திருமணத்தை நீதி மன்றத்தில் நிரூபிப்பது என்பது சாட்சியைப் பொருத்தே இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். அதற்கான வழி பதிவுசெய்துகொள்வது தான்.'' என்று சொல்லி நிறுத்தினுர். வெளியில் இரண்டொருவர் தொழில் தொடர்பாகப் பேசுவதற்கு வந்து இருந்தனர். இனி நெடுநேரம் அவர்களைக் காக்கவைப்பது முறையன்று என்று நினைத்தேன். புறப்படத் தயாரானேன்.

"இன்னும் ஏதேனும் இருந்தால் கேளுங்கள்?'' என்ருர்.

"இப்போதைக்குப்போதும்'' என்று சொல்லி விடைபெற்றேன்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

பதிவு எண். எம். 4642
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

தொலை பேசி எண். { அலுவல
இல்லம் :

சென்னை
பிளாசா
கிரௌன்
மேகலா
மற்றும்
தென்னுலங்கும்





சரவணா
பிலிம்ஸ்

# பணத்தோட்டம்

கதை · B.S.ராமையா
திரைக்கதை வசனம் : பாசுமணி
பாடல்கள் · கவிஞர் கண்ணதாசன்
இசை விஸ்வநாதன் · ராமமூர்த்தி
ஒளிப்பதிவு · தம்பு · கலை · பாலு
எடிடிங் · K. நாராயணன்
ஸ்டில்ஸ் சாரதி · ஸ்டுடியோ · நெப்டியூன்



ELEGA

தயாரிப்பு. C.N.வேலுமணி டைரக்ஷன். K.சங்கர்

Cover Printed at The Ideal Printers, Madras-1.